TNLA Debates

IV

No. 2

1980

C

D
V2,1\,31' N80
N80.4.2.
123411

DIGITIZED

வெளியீடு—28-10-1980] [Issued—28-10-1980

8-4-87

1501

ARCHIVES OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
23 பிப் 1981

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை 1980 ஜூலை 16 Wednesday 16th July 1980
தொகுதி IV—எண் 2 — Volume IV—No.2.

©
தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort, St. George, Madras-600 009

விலை 3.15 காசுகள்] [Price 3.15 Paise

123411

# உள்ளடக்கம்

16–7–1980


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 275—295 |
| 2. அறிவிப்பு .. .. .. .. .. பேரவை அலுவலில் மாற்றம் .. .. | 296 |
| 3. தகவல் கோரல் .. .. .. .. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தினேஷ் பட்டாச்சாரியா மரணம்—விடுமுறை அளிப்பது .. .. .. .. | 296—298 |
| 4. உரிமைப் பிரச்சினை .. .. .. .. "இந்து" பத்திரிகை மீதும், திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் மீதும் .. | 298—304 |
| 5. ஒத்திவைப்புத் தீர்மானம் .. .. இடையாத்தூரில் அரிசனங்கள் கொடுமைப் படுத்தப்பெற்றது .. .. .. | 304—313 |
| 6. கவன ஈர்ப்புகள் .. ... .. .. | |
| (அ) புளியங்குடி கிராமத்தில் தீ விபத்து .. | 314—315 |
| (ஆ) திருப்பரங்குன்றத்தில் 'கதம்ப வண்டு' கடித்து மூன்று பேர்கள் இறந்துள்ளது | 315—317 |
| 7. அரசினர் சட்ட முன்வடிவு .. .. .. அடகுக் கடைக்காரர்கள்—கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு .. | 317 |
| 8. வரவு செலவுத் திட்டம் 1980–81 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) .. .. .. (அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை (ஆ) கோரிக்கை எண் 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 317—414 |

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. கா. காளிமுத்து | 317,318 406—414 |
| திரு. இரெ. இராசமாணிக்கம். | 319—329 |
| திரு. த. வீராசாமி. | 329—335 |
| திரு. ஆர். தியாகராசன். | 335—338 |
| திரு. சா. கிருட்டிணமூர்த்தி. | 338—341 |
| திரு. என். பழனிவேல். | 341—344 |
| திரு. சோ. அழகர்சாமி. | 344—353 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். | 353—358 |
| திரு. ச. அங்குசாமி. | 358—361 |
| திரு. த. மாரிமுத்து. | 361—363 |
| திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன். | 363—368 |
| திரு. சி. சபாபதி. | 368,369 |
| திரு. உ. சுப்பிரமணியன். | 369—375 |
| திரு. கே. ஆர். கணபதி. | 375—378 |
| திரு. கோவைத்தம்பி | 378—383 |
| திரு. கே. தனக்கோடித்தேவர். | 384—387 |
| திரு. இரா. முத்தையா. | 387—392 |
| திரு. அன்பில் தர்மலிங்கம். | 392—406 |
| மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு. | 399 |
| மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது. | 403,404 |
| 9. அறிக்கை அளித்தல் .. .. .. .. உயர் அழுத்த மின் இணைப்புகளுக்குள்ள மின் வெட்டு நீக்கப்பெறுதல் .. .. .. | 384 |
| 10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 414,415 |




## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### புதன் கிழமை, 1980 ஜூலை 16

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்''

இந்த வேலையை இந்த விதத்தினால் இவன் முடித்தல் கூடும் என்பதை ஆராய்ந்து, அறிந்து பிறகு அந்த வேலையை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சித்தாபுதூர் ஆரம்பப்பள்ளிக் கட்டடம்

* வினா எண். 6 திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகரம் முதல் வார்டு சித்தாபுதூர் ஆரம்பப் பள்ளிக்கென எட்டு புதிய வகுப்பறைகள் கட்ட சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு கல்வி அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்றும் நாளது வரை கட்டடப்பணிகள் மேற்கொள்ளப் படாததற்கான காரணம் யாது?

(ஆ) இதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) சித்தாபுதூர் ஆரம்பப்பள்ளிக்கு கூடுதலாக எட்டு வகுப்பறைகள் கட்ட ரூ. 2,65,000-க்கு மதிப்பீடு தயாரித்து தொழில் நுட்ப அனுமதி கோரப்பட்டது. அவ்வனுமதி பெறுமுன் அகவிலைப்பட்டியல் திருத்தப்பட்டதின் காரணமாக மதிப்பீடு திருத்தப்பட வேண்டியதாயிற்று. எனவே மதிப்பீடு ரூ. 3,00,000 என திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் தொழில் நுட்ப அனுமதியும் நிர்வாக அனுமதியும் பெற நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

(ஆ) மேற்கூறிய அனுமதிகள் பெற்று விரைவில் வகுப்பறைகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த 8 வகுப்பறைகள் கட்டுவதற்கு 1½ வருஷத்திற்கு முன்பே—அதற்குக் குறையாது என்று நினைக்கிறேன்—நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வந்து அஸ்திவாரக்கல் போட்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது அமைச்சர் தன்னுடைய பதிலில் அந்த ஒப்பந்தக் காரர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை, விலைவாசி ஏற்றத்தினால் அதிகப்பட்டிருக்கிறது என்பதனால் திருத்தியமைக்கப்படுவதற்காகக் காலதாமதம் ஆகிறது என்று கூறுகிறார்கள். மறுபடியும் திருத்தி அமைக்கப்பட்டது. மறுபடியும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லையென்றால், விலைவாசி ஏறிக்கொண்டே தானிருக்கும். விலைவாசி இரும்புக்கு, கல்லுக்கு, சிமெண்டுக்கு ஏறிக்கொண்டுதானிருக்கும். அப்படியானால், அந்தத் திட்டத்தை எப்படி நிறைவேற்றுவது? அதை மாற்றியமைத்திருந்தால் அது இதற்குள் நடந்திருக்க வேண்டாமா? அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அந்தக் கட்டடத்தைப் பொறுத்த அளவில் 19–6–1978 ஆம் தேதி அன்று அதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ரூ. 2,65,000–க்கு மதிப்பீடுகள் கொடுக்கப்பட்டன. அதற்கு பின்பு—அவைகளை எல்லாம் தயாரித்து—செயல்பட தொடங்கும்போது, மீண்டும் 'எஸ்கலேஷன்' என்ற முறையில் திருத்திய மதிப்பீடுகள் தயார் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அது மீண்டும் ரூ. 3 இலட்சமாக மதிப்பீடு செய்யப்பட்டு, அந்த வேலைகள் துவங்குகின்ற நிலையிலே இருக்கின்றன. ஆகவே கண்டிப்பாக இந்த முறை மீண்டும் திருத்தக்கூடிய அளவுக்குப் போகாது என்பதை அவர்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அந்தப் பள்ளிக்கூடம் தமிழ்நாட்டிலேயே அதிகப்படியான குழந்தைகள் படிக்கக்கூடிய ஆரம்பப்பள்ளிக்கூடம். 2,300 குழந்தைகளுக்கு மேல் படிக்கின்றனர் அதனால் குறிப்பிட்ட கால வரையறைக்குள்—8 வகுப்பறைகள் தான்—சாதாரண அறைகள் ஒரு மாதத்திற்குள்ளோ, இரண்டு மாதத்திற்குள்ளோ, அது கட்டி முடித்துத் தரப்படும் என்ற உறுதியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கட்டி முடிக்கப்படும்.



1501



திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கூறியது போல, 1978 ஆம் ஆண்டு டெண்டர் விட்டு, மறு எஸ்டிமேட் கேட்டு, ஆய்வு செய்ய இவ்வளவு காலதாமதம் ஆகி இருக்கிறது. அது அங்கு மாத்திரம் ஏற்படவில்லை. தமிழகத்திலே உள்ள அனைத்துப் பொறியாளர்களும் அப்படித் தான் செய்கிறார்கள். எனவே, அதை மாற்றுகிற வகையிலே அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டு, குறிப்பிட்டு, கோடிட்டுச் சொன்னால், நான் விவரமாகப் பதில் சொல்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பாப்பனாய்க்கன் பாளையத்திலுள்ள பள்ளிக்கு இருக்கிற நிலை, கோவை ஒப்பனக்கார வீதியிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அந்தக் கட்டடம் இடியும் நிலையிலிருக்கிறது என்பதையும் தெரிவித்து, அந்தக் கட்டடத்தைப் புதுப்பிக்கின்ற திட்டம் ஏதாவது உண்டா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மூலக்கேள்வி சித்தாபுதூர் ஆரம்பப்பள்ளியைப் பொறுத்த அளவில் இருந்தாலும், 3 நாட்களுக்கு முன்பாக நான் கோவைக்கு சென்றிருந்தேன். அந்த நிலையில் அங்கே இருக்கக்கூடிய பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் மோசமாக இருக்கிறது என்று சொன்னவுடனே, அதிகாரிகளைக் கூப்பிட்டு, வேலையைத் துவங்கச் சொல்லியிருக்கிறேன். எனவே, நேற்றைக்கே வேலையைத் துவங்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அது உடனடியாக கவனிக்கப்படும்.

## மேலக்கோட்டையூர் ஒன்றிய மருத்துவமனை.

* வினா எண் 7 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம் மேலக் கோட்டையூரில் உள்ள ஒன்றிய மருத்துவமனையை அரசு எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இல்லை.

[1980 ஜூலை 16

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்த மேலக்கோட்டையூரில் உள்ள ஒன்றிய மருத்துவ மனைக்கு நல்ல கட்டடங்கள் இருக்கின்றன, டாக்டர்கள் இருக்கிறார்கள் ஆனால் மருந்துகள் இல்லாமல் இருக்கின்றன, அதனால் செயல்படாமல் இருக்கின்றன. அங்கே மருந்துகள் இல்லாத காரணத்தினால் மக்கள் போவது கிடையாது. வாயில்லா ஜீவன்கள்தான் அதை ரெஸ்ட் அவுசாக உபயோகப்படுத்திக்கொண்டிருக்கின்றன. ஒரு ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை 5 வருடங்களுக்கு மேல் இருக்குமானால், அதை அரசாங்கமே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஜி. ஓ. இருக்கின்றது. அதன் அடிப்படையில் அரசு அதை எடுத்துக் கொள்ளுவதற்கு முயற்சி எடுக்குமா? மேலும் அங்கே மருந்துகளை கொடுக்க ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, தற்போது திருவில்லிப்புத்தூர் என்ற அந்த இடத்தில் ஒரு தாலூகா மருத்துவமனை—86 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும், அதுமட்டுமல்லாமல் திருவில்லிப்புத்தூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த ஆர். ரெட்டியார்பட்டியில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டரும், வத்திராயிருப்பில் 28 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையும் இருக்கின்றன. ஆகவே இந்த பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனையை அரசு ஏற்றுக் கொள்வதாக இல்லை. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னமாதிரி அதிலே தவறுகள் இருக்குமானால் சரியான முறையிலே நிர்வாகம் இல்லை என்று சொன்னால் அது கவனிக்கப் படும். மருந்துகள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். மருந்து கிடைக்கவில்லை என்ற அந்தக் குறைகளை நிச்சயமாக நீக்க அரசு ஏற்பாடு செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## குதிரையாறு அணைத்திட்டம்.

* வினா எண் 8 திரு. என். பழனிவேல் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் . கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி வட்டத்திலுள்ள குதிரையாறு அணைதிட்டப் பணிகள் எப்பொழுது முடிக்கப்படும்?

(ஆ) அத்திட்டத்திற்கான செலவு எவ்வளவு?

(இ) அதனால் பயன்பெறும் ரெவின்யூ கிராமங்கள் பழனி வட்டத்தில் எவை? எவை?



1980 ஜூலை 16]

மாண்புமிகு திரு. கே இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்தில் பழனியில் குதிரையாற்றின் குறுக்கே ரூ. 301 இலட்ச செலவில் ஒரு நீர்த்தேக்கம் கட்ட தலைமைப் பொறியாளர் (ஆய்வு) திட்ட அறிக்கையை அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இதனால் ஆண்டிப்பட்டி, வாடிப்பட்டி, சித்தரேவுப் புட்டி, காவல்பட்டி மற்றும் பாப்பாம்பட்டி ஆகிய கிராமங்கள் பயனடையும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குதிரை ஆறு திட்டம் என்பது நீண்ட நெடுங்காலமாக அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது. அதை சென்ற ஆண்டே ரூபாய் 3 கோடியே 1 லட்சம் செலவில் கட்டித் தருவதாக அமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே கூறினார்கள். ஆகவே இந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் வகையில் அவர்கள் இந்த ஆண்டே எதிர்பார்க்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே அரசு நிறைவேற்றித்தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, குதிரை ஆற்றின் குறுக்கே கட்டப்படுகின்ற இந்த அணை திட்டச் செலவு அதிகம் இல்லாமலும், பயனுள்ளதாகவும் இருக்கிற காரணத்தால், விரைவாக கட்டப் பெறுவதற்கு அரசு முயற்சிக்கும்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, விரைவாக என்று சொன்னால, இந்த ஆண்டே அணையைக் கட்ட அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பெயரே குதிரை ஆறு. அதனால்தான 'விரைவாக' என்று சொன்னேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, குதிரை ஆற்றின் மூலமாக இதுவரையில் பாசனம் பெற்று வந்த பகுதிகள், தொடர்ந்து பாசன வசதி பெற வாய்ப்பு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு அணைச் கட்டுவதற்கு முன்னால் அந்த ஆற்றின் காரணமாக பயன் பெற்று வருகின்ற—பாசன வசதி பெற்று வருகின்ற—எந்தப் பகுதியும் பாதிக்காத வகையில அணையைக் கட்டுவது அரசின் கடமை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகள் பாதிக்கும் என்று ஐயப் படுகின்றாரோ அதைக் குறிப்பாக தெளிவாகச் சொல்லவேண்டும்.

அப்படிப்பட்ட தகவல் கிடைக்குமானால் ஏற்கனவே பாசன வசதி பெற்ற பகுதிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் 3 கோடி ரூபாய் பணம் ஒதுக்கி இருப்பததாகச் சொன்னார்கள். அந்த அணையினால் எத்தனை ஆயிரம் ஏக்கர்கள் பயனடையும் என்பதை இந்த அவையில் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர் ஆய்வு நடத்தியப் பின்னர் 3 கோடியே 1 லட்சம் செலவாகும் என்று சொல்லியிருக் கிறார்கள். இன்னும் நிதி ஒதுக்கப்படவில்லை. அரசு இதை ஏற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பிருக்கிறது. எத்தனை ஆயிரம் ஏக்கர் பயனடையும் என்று கேட்டார்கள். 3,250 ஏக்கர் புஞ்சை 400 ஏக்கர் நஞ்சை இரண்டாவது சாகுபடிக்குப் பயன்படும். 200 எக்கர் பாசனப் பற்றாக்குறைக்குப் பயன்படும். 2500 ஏக்கர் நிலத்திற்கு பாசன உறுதிகிடைக்கும். இதன் மூலம் 5554 டன் உணவு உற்பத்திக் கிடைக்கும்.

## வரதமாநதி அணை.

* வினா எண் 9 திரு. என். பழனிவேல் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பழனி வட்டத்தில் உள்ள வரதமாநதி அணை அதன் தண்ணீர் வரவிற்குத் தக்க கொள்ளளவு இல்லாதது உண்மையா?

(ஆ) ஆமெனில் மேலும் ஒரு அணை கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) நீர்த் தேக்கத்திற்கு வரும் நீர்வரத்தின அளவு மற்றும் ஆயக்கட்டு நிலங்களுக்குத் தேவையான நீர் இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு வரதமாநதி நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ): இக்கேள்விகளுக்கு இடமில்லை.



[முற்பகல் 9–10]

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே. இந்த வரதமாநதி கட்டும்போது ஏற்கனவே பாசன வசதி பெற்று கொண்டு இருக்கும் நிலங்களுக்கு மட்டும் உத்தரவாதம் கொடுக்கக்கூடிய முறையில் அந்த அணை கட்டப்பட்டுள்ளது. அந்த அணையில் நீர் வரத்து அதிகமாக இருப்பதால் சில மணி நேரங்களில் அது நிரம்பி விடுகிறது. பின்னர் வரும் நீர் பூராவும் கீழே சென்று வீணாகிவிடுகிறது. அந்த அணைக்கு மேல் அணை ஒன்று கட்டுவதற்குச் சாத்தியக்கூறுகள் இருப்பதாகப் பொறியாளர்கள் கூறுகிறார்கள். வனத் துறை அனுமதித்தால் மேல் அணை கட்ட முடியும் என்றும், அதற்கான திட்டம் கூட பொறியாளர்கள் வைத்து இருக்கிறார்கள் என்றும், வனத் துறை அனுமதியைப் பெற்றுத் தாருங்கள் என்றும் என்னைக் கேட்டு வருகின்றனர். ஆகவே அந்த அணையின் மேல் பகுதியில் ஒரு அணையக் கட்டி, அதன் மூலம் மேலும் ஒரு 5,000 மற்றும் 10,000 ஏக்கர் நிலங்கள் பாசனம்பெறும் வகையில், வனத்துறையிடமிருந்து அனுமதி பெற்று அதை நிறைவேற்ற அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, சண்முகாநதியின உப நதியான வரதமா நதியின் நீரைத் தேக்கி அதைப் பாசனத்திற்கு பயன்படுத்தும் நோக்கத்தில் அந்த அணை கட்டப்பட்டது. 107 மில்லியன் கன அடி தண்ணீர் அந்த வரதமாநதியில் கிடைக்கிறது. 5,700 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதியளிக்கப்பட்டு இருக்கிறது. மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தை கவனத்தில் கொண்டு, ஒரு வேளை வனத்துறை அனுமதி கொடுத்தால், அந்தத் திட்டத்தைப் பற்றி அரசு மீண்டும் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## வாசுதேவநல்லூரில் சர்க்கரை ஆலை நிறுவுதல்.

* வினா எண் 10 திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாசுதேவநல்லூர் சர்க்கரை ஆலை நிறுவ வழங்கப் பெற்ற மத்திய அரசின் உரிமம் ரத்து செய்யப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் உரிமம் பெற்று சர்க்கரை ஆலை நிறுவ அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

(இ) ஏற்கனவே வசூல் செய்யப்பட்ட பங்குத்தொகைக்கு வட்டி வழங்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) உரிமம் ரத்து செய்யப்பட்டு விட்டபடியால் மீண்டும் நாள் ஒன்றுக்கு 1,250 டன் பிழிதிறன் உள்ள சர்க்கரை ஆலை நிறுவும் உத்தேசம் இல்லை. ஆயினும், நாள் ஒன்றுக்கு 350 டன் முதல் 400 டன் வரை கரும்பு பிழியும் திறன் கொண்ட சிறிய சர்க்கரை ஆலை ஒன்று அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமாவென்று ஆய்வு செய்யப்படும்.

(இ) வசூலிக்கப்பட்ட பங்குத்தொகைக்கு தனியாக வட்டி என்ற பெயரில் எதுவும் வழங்கும் உத்தேசம் இல்லை. ஆயினும், பங்குத்தொகையிலிருந்து கிடைத்த வருமானத்தில் செலவினங்கள் போக மீதியுள்ள வருமானத் தொகையை பங்குதாரர்களுக்கு சமமாக பங்கிட்டு வழங்கும் உத்தேசம் உள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இன்றைக்கு சுமார் 10,000 ஏக்கர் நிலங்களில் கரும்பு சாகுபடி செய்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் தான் ஏற்கனவே பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து, ஆய்வு செய்யப்பட்டு, அந்த சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம் உருவாக்கப்பட்டது. இருந்தும், விருப்பு, வெறுப்பு, காரணமாக அந்த சர்க்கரை ஆலை நிறுவப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, சர்க்கரை தட்டுப்பாடு இருக்கும் இந்த நேரத்தில், ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு இருக்கும் அந்த சர்க்கரை ஆலையை உடனடியாக நிறுவ அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருப்பு, வெறுப்பு, எதுவும் இல்லை. பங்குதாரர்களிடம் இருந்து வசூலிக்கப்பட இருந்த ஏறக்குறைய ரூ. 60 லட்சம், 70 லட்சம் பங்குத்தொகையில், தொடர்ந்து இருந்து வந்த சில சூழ்நிலைகள் காரணமாக, ஏறக்குறைய 3.15 லட்ச ரூபாய் மட்டும்தான் கரும்பு உற்பத்தியாளர்களிடமிருந்து பங்குத் தொகையாக பெறமுடிந்தது. அது மட்டுமல்லாமல், அந்த ஆலைக்கு வேண்டிய போதிய தண்ணீர் அங்கே கிடைக்காத காரணத்தாலும், அந்தத் திட்டம் அங்கே கைவிடப்பட்டு உள்ளது. இருப்பினும் குறைந்த அளவில் ஏறக்குறைய 350 டன் முதல் 400 டன் வரை கரும்பு பிழியும் திறன் கொண்ட சிறிய சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு அரசு உத்தேசித்து வருகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஏற்கனவே வறட்சி நேரத்தில் 3.75 இலட்சம் ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. வறட்சியாக இருந்ததாலும் போதுமான முயற்சி இல்லாததாலும் அந்த நேரத்தில் அதற்கு மேல் வசூலிக்க முடிய





வில்லை. ஏற்கனவே பங்குதாரர்கள் கொடுத்த தொகையை அந்த சர்க்கரை நிறுவனம் அல்லது அந்த கார்ப்பரேஷன் பாங்கிலே போட்டு அல்லது டிபாசிட் செய்து வட்டி வசூல் செய்துகொள்கிறது. அந்தப் பணத்தை ஏன் பங்குதாரர்களுக்கு கொடுக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். செலவினங்கள் போக அதிலே மீதம் இருக்கிற தொகைக்கு வட்டியாகக் கொடுக்கும் உத்தேசம் இல்லை. ஆனால், மீதமுள்ள வருமான பணத்தை பங்குதாரர்களுக்கு சமமாகப் பங்கிட்டு வழங்கும் உத்தேசம் இருக்கிறது.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, அந்தப் பகுதியில் சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு சாத்தியக்கூறு இல்லாவிட்டாலும் இராஜபாளையம், சாத்தூர், சிவகிரி போன்ற பகுதிகளில் நிறைய கரும்பு பயிர் செய்கிறார்கள். அதைப் பயன்படுத்திக் கொள்ள இராஜபாளையத்தில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனிக் கேள்வி போடவும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, சிவகங்கை தாலுகாவில் நிறைய கரும்பு பயிராகிறது. அங்கிருந்து கரும்பை 50 மைல் தூரத்தில் இருக்கிற கரும்பாலைக்குத்தான் எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதால் அந்தப் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே ஒரு சர்க்கரை ஆலை நிறுவ ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு, இப்போது மறுக்கப்பட்டிருக்கிற சர்க்கரை ஆலையை மீண்டும் வற்புறுத்தி வாங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வாசுதேவநல்லூர் சர்க்கரை ஆலையைப் பற்றியது. அதைவிட்டுவிட்டு எங்கெங்கோ போகிறீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, மொத்தமாக தமிழ்நாட்டில் எங்கெங்கே கரும்பாலை நிறுவ வேண்டுமென்று முடிவுசெய்து, மத்திய அரசுக்கு உரிமம் கேட்டு அனுப்பி, அது பெண்டிங்காக இருந்தால், அதை விரைவில் அனுப்ப வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மற்றுள்ள விவரங்களுக்கு தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, புதிதாக பல தொழில்கள் தொடங்க வேண்டுமென்ற முயற்சி செய்து கொண்டிருக்கும்போது, ஏற்கெனவே தொடங்குவதற்கு

[1980 ஜூலை 16

வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்ட சர்க்கரை ஆலை என்ன காரணத்தாலோ நின்றுவிட்டது என்று கேள்விப்பட வருத்தமாக இருக்கிறது. நின்றுவிட்டதற்கு தண்ணீர் இல்லை என்று அமைச்சர் ஒரு காரணத்தைச் சொன்னார். தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோட்டில் ஒரு கரும்பாலை இருக்கிறது. அங்கே தண்ணீர் வருவதற்கு ஆறு அல்லது மற்ற வசதிகள் ஒன்றும் இல்லை. இருந்தாலும் நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட இடத்தில் கரும்பாலைக்கு வேண்டிய தண்ணீர் இருக்கிறது. வறட்சியான நேரத்தில் பங்குத்தொகை வசூல் செய்யப்பட்ட காரணத்தாலும் போதுமான முயற்சிகள் எடுத்துக்கொள்ளாத காரணத்தாலும் எதிர்பார்த்த அளவுக்கு வசூல் செய்யமுடியவில்லை. ஆகையால் அரசு முயற்சி செய்து, சிட்கோ போன்ற நிதி உதவி செய்யும் நிறுவனங்கள் மூலம் நிதி பெற்று, அங்கே சர்க்கரை ஆலையை நிறுவினால் அந்த வட்டார விவசாயிகள் லாபகரமாக கரும்பு உற்பத்தி செய்ய சாதகமாக இருக்கும்; அதற்கு ஏற்பாடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல் 1250 டன் பிழி திறனுள்ள சர்க்கரை ஆலையை நிறுவ போதுமான தண்ணீர் வசதி இல்லை. அதோடு அங்கே பயிரிடப்படுகிற கரும்பு சர்க்கரை ஆலையை அரைவைப் பருவத்திற்குத் தகுந்ததாக இல்லை. இந்த இரண்டு காரணங்களால் அந்த முயற்சி கைவிடப்பட்டது. மேலும் பங்குத்தொகை 60 இலட்சம, 70 இலட்சம் ரூபாய் சேர்ந்திருக்க வேண்டும்; அதுவும் கிடைக்கவில்லை. அதனால் உரிமம் ரத்தாகி விட்டது. இருந்தாலும் 350 அல்லது 400 டன் பிழி திறனுள்ள சர்க்கரை ஆலை ஒன்றை அங்கே நிறுவ அரசு ஆலோசித்து வருகிறது என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறேன்.

திரு. பி. துரைராஜ் : தலைவரவர்களே, இந்த வாசுதேவ நல்லூர் பகுதியைச் சுற்றி பெரும்பாலும் அரிசன மக்களும் பிற்பட்ட மக்களும்தான் இருக்கிறார்கள். அந்த இடத்திலே எல்லா வசதிகளும் இருக்கின்றன என்று ஆய்வு செய்யப்பட்டு, தெரிந்த பிறகுதான் உரிமம் வழங்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் இப்போது கைவிடுவதற்கு காரணம் போதுமான தண்ணீர் இல்லை என்று சொல்கிறார்கள். இவ்வளவு செலவு செய்து ஆய்வு செய்தபிறகு இப்போது அனுமதி மறுப்பது என்பது சரியல்ல. ஆகவே, அமைச்சரவர்கள் சொன்னது போல், இந்தப் பணத்தை வாபஸ் செய்யாமல் புதிய கரும்பாலை ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் படுமா?



1980 ஜூலை 16]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே தொடக்க நிலையிலே ஓரளவு அங்கே இருக்கிற சூழ்நிலைகளை வைத்துப் பார்த்து ஆலையை நிறுவ உரிமம் கேட்டு எழுது கிறோம். முதலிலே 'தியரிட்டிக்கல் அப்ரோச்' செய்கிறார்கள். 'பிராக்டிக்கல்' லாகப் பார்க்கும்போது தண்ணீர் வசதி இல்லை; பயிரிடும் கரும்பு அரவை பருவத்திற்கு தகுந்ததாக இல்லை; பங்குத்தொகை போதுமான அளவுக்கு கிடைக்கவில்லை. இப்படிப் பட்ட பிராக்டிக்கல் டிஃபிகல்டீஸ் இருந்ததால் திட்டம் ரத்தானது. இருந்தாலும் இருக்கிற வசதிகளைக்கொண்டு, குறைந்த அளவில், 1250 டன் திறனுள்ள பெரிய ஆலை இல்லாவிட்டாலும் 350 அல்லது 400 டன் திறனுள்ள சர்க்கரை ஆலையை அங்கே நிறுவ அரசு உத்தேசித்திருக்கிறது என்று சொன்னேன்.

[முற்பகல் 9-50]

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே, உரிமம் பெறுவதற்கு முன்னால் மாநில அரசு அலுவலர்கள் அதனை ஆய்வு செய்திருக்கிறார்கள். அவ்வாறு ஆய்வு செய்யப் பட்ட பிறகு மத்திய அரசு உரிமம் தந்து, பின்னர் அந்த உரிமம் ரத்து செய்யப்படுகிறது என்றால் மாநில அரசு அலுவலர்களின் திறமைக் குறைவை இது காட்டுகிறதா? அல்லது அங்கிருக்கின்ற மக்களின் நம்பிக்கையை இழக்கின்ற அளவுக்கு இந்தப் பணி மேற் கொள்ளப்பட்டிருக்கின்றதா என்பதை அரசு அவைக்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இதிலே அரசு அதிகாரிகளின் கவனக் குறைவு ஏதும் இல்லை. கரும்பு உற்பத்தியாளர்களிடமிருந்து ஏறக்குறைய 70 இலட்சம் ரூபாய் வரைக்கும் பங்குத்தொகையாகப் பெற்றால்தான் கூட்டுத் துறையிலே அதை ஆரம்பிக்க முடியும். ஆனால் அப்போது தொடர்ந்து 3 ஆண்டுக்காலம் வறட்சியாக இருந்த காரணத் தினால் 3 இலட்சம் ரூபாய் தான் வசூல் ஆகி இருந்தது. எனவே தான் அதனைச் செயல்படுத்த முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலிலே சில சீரியஸ் மேட்டர்ஸ் வருகின்றன. அதாவது தண்ணீர் சரியாக வரவில்லை என்று சொன்னார்கள், இப்போது சொல்கிற போது சுகர் ரெக்கவரி சரியாக இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே இந்த மாதிரி சுகர் பேக்டரியை ஆரம்பிப்பதற்கு முன்பாக மினிமம் எலிமெண்டரி நெசசிட்டீஸ் என்னென்ன தேவையோ அவை அவ்வளவும் இல்லை என்று அமைச்சரவர்களுடைய பதிலிலே இருந்து தெரிகிறது. அப்படியானால் ஆரம்பத்திலே இன்வெஸ்டிகேஷன் பண்ணிய ஆஃபீஸர் யார்? அவர்பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா? இந்த மாதிரி நிலை இருப்பது அச்சத்தை விளைவிக்கின்ற அளவுக்கு இருக்கின்றதல்லவா!

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, அங்கு எதுவுமே இல்லை என்று நான் சொல்லவில்லை. ஒவ்வொரு கேள்விக்காக பதில் சொல்லிக்கொண்டு வருகின்றபோது முழுமையான விவரங்களையும் பதிலிலே சொல்லி இருக்கிறேன். தண்ணீர் இருக்கின்றது. ஆனால் 1250 டன் என்ற அளவுக்கு உற்பத்தி செய்யக்கூடிய ஆலை வைக்கின்ற அளவுக்கு தண்ணீர் போதிய அளவு இல்லை. இதையெல்லாம் கருத்திலே கொண்டு பெரிய அளவிலே அதாவது 1250 டன் என்ற அளவுக்கு உற்பத்தி செய்கின்ற ஆலை ஏற்படுத்த முடியாவிட்டாலும் 400 டன் என்ற அளவுக்காவது உற்பத்தி செய்கின்ற அளவுக்கு ஒரு ஆலையை ஆரம்பிப்பது பற்றி உத்தேசிக்கலாமா என்றுதான் சொன்னேன்.

## மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளை

**கு.கா.வி. 18 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. மி. வின்சென்ட்:** மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) மதுரையில் ஹைகோர்ட் பெஞ்ச் ஒன்று திறப்பது பற்றி அரசிடம் ஆலோசனை ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**—(அ) மற்றும் (ஆ) சென்னை உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை மதுரையில் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது இதற்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் வேண்டியுள்ளது. இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசுக்கு இம் மாநில அரசு கோரிக்கை விடுத்தது. இச்செயற் குறிப்பின் மீது அப்போதைய தலைமை நீதிபதியின் கருத்தினைப் பெற்று அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கோரினர். அதன்படி சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியின் கடிதம் வரப் பெற்றது. மத்திய அரசிற்கு இதுபற்றி அறிவித்து நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க இருக்கிறது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை நீண்ட நெடுங்காலமாக ஒத்திப் போடப்பட்டுக் கொண்டே வருகின்றது. ஆகவே உடனடியாக இந்தப் பிரச்சினையைத் தீர்ந்தால் அதன் மூலமாக தென் மாவட்டங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு பயனளிக்கக் கூடியதாக இருக்கும். இது குறித்து ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அதைத் துரிதப்படுத்தி சீக்கிரமாகத் தீர்ப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, மத்திய அரசோடு இது குறித்து தொடர்பு கொண்டிருக்கிறோம். அண்மையிலே சென்னை வந்திருக்கின்ற மத்திய சட்ட அமைச்சரவர்களிடம் கூட இதன் அவசியத்தை வலியுறுத்தி விரைவிலே அனுமதி பெறக்கூடிய அளவுக்கு ஒரு சூழ்நிலையை உருவாக்க இருக்கிறோம். நல்லதொரு முடிவு மத்திய அரசின் மூலம் கிடைக்கும் என நம்புகிறோம்.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, வட மாநிலங்களில் உள்ள மக்கள் நலம் பெரும் வகையில் பல சர்க்கியூட் பெஞ்சுகள் பல இடங்களில் அமைத்துள்ள மத்திய அரசு தென் மாநிலங்களுக்கு பாரபட்சம் காட்டுகிறது. இதை எதிர்த்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** வட மாநிலங்களில் பல இடங்களில் இத்தகைய சர்க்கியூட்டுகள் இருப்பது உண்மை தான். தமிழகத்திலே வேண்டுமென்ற அடிப்படையில் தான் நாம் கேட்டிருக்கிறோம். தென் மாநிலங்களில் சர்க்கியூட் பெஞ்சுகள் எங்குமே இல்லை. தமிழகத்தில் முதன் முதலாக கொண்டு வரவேண்டும் என்று நாம் நடவடிக்கையை தீவிரமாக எடுத்திருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு அதிகாரம் கூடுதலாக வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருக்கிற இந்த காலத்திலே. மதுரையில் சர்க்கியூட் பென்ஞ்ச் அமைப்பதற்கான கோரிக்கை, 10, 15 ஆண்டு காலமாக வைக்கப்பட்டும், இன்னும் மைய அரசு அனுமதி வழங்கவில்லையா ? எவ்வளவு காலமாக மாநில அரசு மத்திய அரசை இதற்காக கேட்டு வருகிறது ? தலைமை நீதிபதியின் கருத்து எப்போது பெறப்பட்டது ? மைய அரசின் அமைச்சரைப்பார்த்து எப்போது கேட்கப்பட்டது ? இதற்கான முனைப்பான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே 10, 15 ஆண்டு காலமாக இது சம்பந்தமாக மத்திய அரசுடன் மாநில அரசு தொடர்பு கொண்டிருக்கிறது, என்ற தகவல் சரியில்லை. 1973 ஆம் ஆண்டில் மைய அரசுக்கு மாநில அரசு சர்க்குயூட் பெஞ்ச் வேண்டும் என்று கோரி வலியுறுத்தியிருக்கிறது அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி வந்த பிறகு 1977 ஆம் ஆண்டு மைய அரசை தமிழக அரசு இது சம்பந்தமாக வலியுறுத்தியது. இப்போது மீண்டும் வந்த பிறகும் வலியுறுத்தியிருக்கிறோம், மைய சட்ட அமைச்சர்

அவர்களைக்கூட நான் சென்ற வாரம் அவர் இங்கு வந்திருந்த போது நேரிடையாக கேட்டு இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வை அரசு உணர்ந்திருக்கிறது. அதனால் இதை வலியுறுத்தி மைய அரசிடமிருந்து பெற இந்த அரசு நிச்சயமாக முயலும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் நமது மாநில அரசுகள் சர்க்யூட் பெஞ்சுக்கு அனுமதி கேட்டிருப்பதாக சொன்னார்கள். இருக்கிற நிலைமையைக் கருதி, உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் கேம்ப் கோர்ட் நடத்துவது போல, மைய அரசினுடைய அனுமதி இன்றி மதுரையில் அவ்வாறு கோர்ட் நடத்த முடியும் அதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி மையற் குறிப்பு இல்லை. ஆய்வு செய்து தான் முடிவு எடுக்க முடியும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் இம்மாதிரி சர்க்கியூட் பெஞ்சுகளை நிறுவ அனுமதி கோருகிற போதே, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் நிறுவுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் அரசுக்கு இல்லை.

திரு. ப. நெடுமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டிலிருந்து 1980 வரை 7 ஆண்டு காலமாக ஒரு கோரிக்கையை மாநில அரசு மைய அரசுக்கு வைத்தும், மத்திய அரசு இன்னும் முடிவு எடுக்காமல் இருப்பது மைய அரசு மாநில அரசை புறக்கணிக்கும் போக்கை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. மதுரையிலே இந்த சர்க்கியூட் பெஞ்சுகள் நிறுவப்பட வேண்டும். என்பதிலே உறுப்பினர்கள் மிக ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களின் இந்த உணர்வுகளை மைய அரசுக்கு மாநில அரசு தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை அரசு முழுமையாக உணர்ந்திருக்கிறது. அதற்காக மைய அரசை வலியுறுத்தி வருகிறோம். சென்ற வாரம் மைய சட்ட அமைச்சர் வந்திருந்தபோது அவரிடமும் இதைப்பற்றி பேசி வலியுறுத்தினேன். தேவை ஏற்பட்டால் டெல்லிக்கே சென்று கூட வற்புறுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள அரசு தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலும் இது போன்ற சர்க்கியூட் பெஞ்சு நிறுவும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவுமே அரசுக்கு இல்லை.

திரு. மி. வின்சென்ட : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக டெலலியிலும் அதற்கு அருகிலுள்ள மாநிலங்களும் தான் இந்திய தலைமை நீதி மன்றத்தில் வழக்குகளைத் தொடர்ந்து சீக்கிரம் முடித்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. தென் மாநிலங்களிலும், ஆந்திரம், கேரளம், கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்கும் சேர்த்து—ஒரு பெஞ்சு அமைக்க கோரி மைய அரசுக்கு, தமிழக அரசு கோரிக்கை விடுக்குமா என்று அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதி மன்றத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். உச்ச நீதி மன்றத்தினுடைய கிளை மையம் ஒன்றை தமிழ்நாட்டில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்கெனவே மைய அரசுக்கு எழுதி கேட்டிருக்கிறோம், வற்புறுத்தியும் வருகிறோம். அதுவும் குறிப்பாக தென் மாநிலங்களில் மத்திய பாகத்தில் அமைந்துள்ள சென்னையிலேயே அதை அமைக்க வேண்டுமென்று மைய அரசை கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் உயர்நீதி மன்றத்தினுடைய சர்க்கியூட் வேண்டுமென்ற வேண்டுகோள் விடுத்து 7 ஆண்டு காலம் கடந்திருக்கிற போதும், அதை நிறைவேற்றுவதற்கு தடையாக சென்னையிலே உயர்நீதி மன்ற வழக்கறிஞர்களில் சிலரும், சில நீதிபதிகளும் கூட அதற்கு இடையூறாக இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்தது? அதைத்தடுத்து மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிக திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினருடைய கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை. தேவையை உணர்ந்திருக்கிற காரணத்தினால் மைய அரசிடம் மாநில அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை கட்டாயம் எடுக்கும். அந்த அடிப்படையில் அதற்குத் தடையாக யார் இருந்தாலும், தன்னுடைய தேவையை வலியுறுத்தி மாநில அரசு நடவடிக்கை எடுக்கும். ஏற்கெனவே வலியுறுத்தி எழுதியிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.30]

திரு. ரா. கு. பெருமாள் : தலைவர் அவர்களே, மதுரையில் பெஞ்ச் கோர்ட் வேண்டுமென்று மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யும்போது நெல்லை, திருச்சி, கோவை போன்ற இடங்களிலும் கோர்ட் வைக்க சிபாரிசு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அத்தகைய பரிந்துரை செய்கிற எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. செ. சிவசாமி : மதுரையில் ஹைகோர்ட்டின் ஒரு பெஞ்ச் அமைக்கவேண்டும் என்று அரசாங்கம் மூன்று தடவை கேட்டும் கூட இன்றுவரை அனுமதி மறுக்கப்படுகிறது. இதே போல் சிவகங்கையில் ஒரு சர்க்கரை ஆலை வேண்டுமென்று கேட்டு அனுமதி மறுக்கப்படுகிறது. அதேபோல் கூட்டுறவு சம்பந்தமாக ஒரு ஆலை வேண்டுமென்று கேட்டாலும் மறுக்கப்படுகிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஹைக்கோர்ட்டுக்கும் கூட்டுறவுக்கும் என்ன சம்பந்தம் ? அடுத்த கேள்வி.

## வத்திராயிருப்பு அரசினர் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள்.

கு. கா. வி. 19. திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு அரசினர் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள் மீது புகார்மனு ஏதும் 8.6.80 அன்று அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) இம்மருத்துவமனையில் பணி சீராக நடைபெறுவதில்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) தவறு செய்த மருத்துவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :—(அ) 8-6-80 அன்று வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் நடந்த ஒரு சம்பவம் பற்றி அரசுக்கு ஒரு அறிக்கை வந்துள்ளது.



(ஆ) இந்த சம்பவத்தைத் தவிர இம்மருத்துவமனை சரியாக இயங்கவில்லையென்ற எந்தப் புகாரும் அரசுக்கு வரவில்லை.

(இ) தவறுசெய்த மருத்துவரை மருத்துவம் மற்றும் குடும்ப நல்இயக்குநர் தற்காலிகப் பணி நீக்கம் செய்திருக்கிறார். மேல் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது என்றும் அறிவித்துள்ளார்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள ஓர் தவறு செய்ததாகச் சொல்கிறார்கள் பதிலில். அது என்ன தவறு என்று அறிய விரும்புகிறேன். அந்தத் தவறு சிவப்பு ரோஜா என்ற சினிமாப் படத்தில் கதாநாயகன் தவறு செய்ததைப் போல் செய்திருப்பதாக அங்குள்ள பொது மக்கள் என்னிடம் சொல்கிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, சிவப்பு ரோஜா தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொல்கிறார்கள். அது என்ன என்று எனக்குத் தெரியாது. அவர், என்ன தவறு செய்திருக்கிறார் என்ற கேள்வியைப் பொறுத்தவரையில் நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அங்கே டாக்டர் ஞானசேகரன் என்ற ஒரு அஸிஸ்ட்டெண்ட் சர்ஜன் அந்த மருத்துவமனையில் இருக்கிறார். டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸ்-லிருந்து சாதாரணமாக ஒரு ஆடிட் பார்ட்டி அனுப்புவார்கள். டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸ் ஆடிட் பார்ட்டியை அனுப்பி மருத்துவமனைகளில் உள்ள கணக்குகளை ஆடிட் செய்ய அனுப்புவது வழக்கம்—என்னென்ன தவறுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று பார்க்க. அந்த அடிப்படையில் ஒரு ஆடிட் பார்ட்டியை அனுப்பினார் டி.எம்.எஸ். அந்த ஆடிட் பார்ட்டி அங்கே வந்தவுடன் உடனடியாக இவர், ஏன் வந்தீர்கள் என்று கேட்டார். டி.எம்.எஸ். அனுப்பினார், ஆகவே வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இங்கே வரக் கூடாது, வெளியே போங்கள், ஆடிட் செய்ய உங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னார். இல்லை, நாங்கள் ஆடிட்டில் ஈடுபட்டாகவேண்டும் என்று ஆடிட் பார்ட்டி அதிகாரிகள் சொன்னார்கள். உடனடியாக இந்த டாக்டர் ஞானசேகரன் வெளியே சென்று கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு ஒரு இருபத்தைந்து பேர்களைக் கொண்டு வந்து ஏன் இப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று மிரட்டி கலாட்டா செய்தார்கள். அதன் அடிப்படையில்தான் ஒரு அஸிஸ்டெண்ட் டயரக்டரை இந்த டி.எம்.எஸ். ஆபீஸிலிருந்து அனுப்பியிருக்கிறார்கள். விவர அறிக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

வைகையின் கால்வாய்கள் மராமத்து

குு. கா. வி. 20 திரு. செ. சிவசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;—

(அ) வைகையின் இருமருங்கிலும் உள்ள கால்வாய்களும் அதன் தொடர்பு கண்மாய்களும் கடந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது இன்னும் மராமத்து நடைபெறவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மராமத்து செய்ய என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) கடந்த வெள்ளத்தால் சேதமடைந்த கண்மாய்களை செப்பனிட சென்ற ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டது. வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த வெள்ளங்களில் வைகையின் இரு மருங்கிலுள்ள கால்வாய்களில் சில பகுதிகள் சேதமடைந்தன. இப்பகுதிகள் ஆற்றை ஒட்டி செல்வதால், இவைகளின் ஒழுங்கை (alignment) மாற்றியமைக்க உத்தேசித்துள்ளது. இதுபற்றிய குறிப்புரை அரசின் ஆய்வில் உள்ளது.

கு. கா. வி. 21. திரு. க. பாரமலை: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெருவெள்ளம் காரணமாக வைகை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வைகை ஆற்றின் இரு புறங்களிலும் அமைக்கப்பட்டிருந்த சேதமடைந்துள்ள கால்வாய்கள் மறுபடியும் புதுப்பிக்கும் வேலைகள் துவங்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் கால்வாய்களின் மூலம் தண்ணீர் பெற்று வந்த கண்மாய்களுக்கு மேற்படி கால்வாய்கள் சீர்படுத்தும் வரை மாற்று ஏற்பாடுகள் ஏதும் செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) சேதமடைந்த கால்வாய் பகுதிகளை சீரமைக்கும் வரை ஆற்றின் பிரதான மார்க்கம் வழியாக, பாசனத்திற்கு தேவையான நீர் வழங்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, வைகை மதுரை ஜில்லாவின் வடிகாலாக இருந்து கொண்டிருக்



கிறது. அந்த ஆற்றின் போக்குகளை மாற்றியமைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், நிலத்தடி நீரை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு கிழக்கே விரகனூர், மானா.

மதுரை ஆகிய இடங்களில் இரண்டு அணைகள் கட்டப்பட்டு அதன்மூலம் தண்ணீர் எல்லா கால்வாய்களுக்கும் செல்லுகிறது ஆனால், தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக பெய்த மழையின காரணமாக அதன் கரைகள் முழுவதும் அழிக்கப்பட்டு, வெள்ளப் பெருக்கினால் இந்த விரகனூர், மானாமதுரை ஆகிய இரண்டு கால்வாய்களும் இப்போது இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்தால்தான் அந்தக் கால்வாய்களையெல்லாம் செப்பனிடக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1977லேயும், 1978லேயும் இந்த இரண்டு ஆண்டுகளாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலை தொடர்ந்து இருக்காமல் இருக்க, இந்த வருஷமாவது அந்த நிலைமையை மாற்றுவதற்கு, அதன் கரைகளை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமா இந்த அரசாங்கம் என்பதை, விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே, வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட கால்வாய் பகுதிகளில் எங்கெங்கே நில ஆர்ஜிதம் தேவை இல்லையோ, அங்கே எல்லாம் இப்போது சீரமைப்பு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒட்டு மொத்தமாக இதற்கு 287 இலட்சம் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, கால்வாய்கள் சேதமடைந்த உடனேயே சில பகுதிகளை மாற்றியமைக்க வேண்டும், ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற அளவிலே நில ஆர்ஜிதப் பணிகளிலே ஈடுபட்டிருந்தாலும், நில ஆர்ஜிதம் தேவையில்லாத பகுதிகளிலே கரைகளை பலப்படுத்துகின்ற பணி இப்போது நடந்து கொண்டிருக்கிறது. விரைவிலே இந்தப் பணிகள் நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எஞ்சினியரிங் டிபார்ட்மென்ட் செய்த தவறின் காரணமாக, இந்த வைகையிலே மீண்டும் 2 கோடியே 87 லட்சம் ரூபாய் 4, 5 ஆண்டுகளுக்குள் செலவழிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை மாற்றியமைக்கும்போது, கரை வைகைக்குப் பக்கத்திலே இல்லாமல் தள்ளி கட்டுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய புகாரைப் போல, மற்றும் சில உறுப்பினர்களும் இதே மாதிரியான புகாரை

அரசுக்கு கொடுத்திருக்கிறார்கள். எனவே, இதிலே அதிகாரிகள் எந்த அளவுக்கு குறிப்பிட்ட பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியும் என்பதற்கு நாங்கள் தனியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். அந்த நடவடிக்கையின் காரணமாக, இந்தப் பணிகள் நின்று விடக்கூடாது என்பதற்காக நில ஆர்ஜிதப் பணி

களையும், நில ஆர்ஜிதம் செய்யாமல் இருக்கின்ற இடங்களில் கால்வாய்களை பலப்படுத்துகின்ற பணிகளையும் இப்போது நாங்கள் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் 1977,1978ஆம் ஆண்டுகளிலே வெள்ளம் வந்ததாகச் சொன்னார்கள். 1979-லேயும் வெள்ளம் வந்து மிகப் பெரிய அளவிற்கு சேதமடைந்திருக்கிறது. ஒவ்வொரு கால்வாயின் முகத்துவாரமும் அழிக்கப்பட்டு, மணல் மேடிட்டு இருக்கிறது. ஆகவே, அதை அப்புறப்படுத்துகின்ற வேலையைச் செய்யாவிட்டால், இந்த ஆண்டு பயிர் செய்வதற்கு தண்ணீர் கொண்டுவர முடியாது. ஆகவே, இதைப் பற்றி கவனம் செலுத்தி, உடனடியாக இதைக் கவனிக்க அரசு முன் வருமா? அடுத்து, ஆண்டுதோறும் வெள்ளம் வருகின்ற காரணத்தினால், இப்படி மணல் மேடிடாமல் இருப்பதற்கு நிரந்தரமான கட்டுமான வேலையைச் செய்து, பாசனத்தை ஒழுங்காக செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, கடந்த கால அனுபவங்களை மனதிலே கொண்டு, எந்தெந்தப் பகுதிகளிலே கரைகளை பலப்படுத்த வேண்டுமோ, அதற்கான கட்டுமானப் பணிகள் விரைவாக, இப்படி தொடர்ந்து சேதங்கள் ஏற்பட்டால் அதைத் தடுக்கின்ற அளவிலே இந்த அரசு தீவிரமான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. சென்ற முறை நான் கேள்விக்கு பதில் சொல்லும்போதே சொன்னேன். சூபர் ஸ்டான்டர்டு என்ற அளவிலே இந்தக் கரைகளை பலப்படுத்தி, எவ்வளவு வெள்ளம் வந்தாலும் உடைப்பு ஏற்படாத வகையிலே பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சேதம் அடைந்த பகுதிகளிலே இப்போது சீர் திருத்த வேலைகள் நடந்து கொண்டிருந்தாலும், எந்தெந்தப் பகுதிகளிலே நாம் இதற்கு முன்பு கால்வாய்கள் மூலமாக பாசனத்திற்கு நீர் வழங்கி வந்தோமோ, அந்த பகுதிகளுக்கு பாசனம் பாதிக்காத அளவுக்கு நேரடியாக இப்போ நீர் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். தற்காலிகமான சில நடைமுறைகளை மேற்கொண்டு இந்த வசதிகளை செய்து கொண்டிருக்கிறோம். கால்வாய்களின் சீரமைப்பு வேலைகள் விரைவிலே முடியும் என்று நம்புகிறேன்.



திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே ஏற்பட்ட பயலால் கால்வாய்களும், கண்மாய்களும் உடைப்பு ஏற்பட்டு உடைந்திருக்கின்றன. இதை அடுத்த வருஷம் வெள்ளம் வருவதற்குள்ளாக சீர்செய்ய வேண்டும் என்பதை மனதிலே கொண்டு, முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இதற்கு முன்பு நான் பதில் சொல்லுகின்ற போது இதை விளக்கியிருக்கிறேன். கால்வாய்கள் மட்டுமல்ல; கண்மாய்களையும் கூட கடந்த இரண்டாண்டுகளாக எங்கெங்கே உடைப்பு ஏற்பட்டிருக்கின்றதோ, அவைகளைத் தேர்ந்தெடுத்து பணிகள் நடைபெறுவதாக சொல்லியிருக்கிறேன். கடந்த காலத்தில் ஏற்பட்ட அனுபவம், இதற்கு முந்தி எந்த இடத்திலே உடைப்பு ஏற்பட்டதோ, அந்த இடத்திலேதான் இப்போதும் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, அப்பேர்ப்பட்ட தவறுகள் நடக்காமல் இருக்க அந்த இடத்தையும் பலப்படுத்தி, கரைகளை உயர்த்தி, வேண்டுமென்றால் ஆழப்படுத்தி இப்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வருமுன் காப்போம் என்ற அளவிலேஇப்படிப்பட்ட சேதங்கள் மீண்டும் ஏற்படாத வகையிலே இப்போது அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

[முற்பகல் 9-40]

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, வைகை நதி என்பது வரலாற்றில் மட்டுமல்ல, புராண காலங்களிலும் பெயர் பெற்றிருக்கிறது. மதுரை திருநகரத்தில் பிட்டுக்கு மண் சுமந்து சொக்கனே கரையைக் கட்டியதாகப் புராணத்தில் சொல்லப்படுகிறது. அதற்குப் பிறகும் இது முறையாக அரசாங்கத்தின் கவனத்தில் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, வைகைக் கரையை உடையாமல் இருக்கும் அளவுக்கு பலப்படுத்திக் கட்டுவதற்கு சிறப்புத் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் சொக்கநாதரையே தனக்கு சாட்சியாக இழுத்து வாதிக்கிறார். சொக்கநாதரே போட்ட அந்தக் கரை என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. கரைபுரண்டு வெள்ளம் ஓடும்போது கரை உடைகிறது. பெயரே வைகை— அடிக்கொரு முறை கை வைக்க வேண்டிய அளவில் உள்ள பெயராக இருப்பதால் தொடர்ந்து இப்படிப்பட்ட பணிகள் வந்து கொண்டுதான் இருக்குமென்று தெரிவித்துக் சொன்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

## 2. அறிவிப்பு

### அ. பேரவை அலுவலில் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே, பேரவைக்கு அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்படுகின்றன:—

(1) 28–7–1980 திங்கட்கிழமையன்று எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் 24–7–1980 வியாழக்கிழமையன்று எடுத்துக் கொள்ளப்படும்.

21—மீனளம்

35—நுகர்பொருள் வழங்கல்

(2) 24–7–1980 வியாழக்கிழமையன்று எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் 28–7–1980 திங்கட்கிழமையன்று எடுத்துக் கொள்ளப்படும்.

36 – பாசனம்

50—பாசனம் குறித்த மூலதனச் செலவு

## 3. தகவல் சோரல்

### நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தினேன் பட்டாச்சாரியா மரணம்—விடுமுறை அளிப்பது

திரு. மு அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சுதந்திரப் போராட்ட வீரர், தொழிற்சங்க முன்னணித் தலைவர், தினேன் பட்டாச்சாரி, எம். பி., இறந்திருக்கிறார்கள். சஞ்சய் காந்திக்கு விடுமுறை விட்டதுபோல் இவருக்கும் விடுமுறை விடப்படுமா? இவர் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இறந்தவருக்கு அஞ்சலி செலுத்துவதை மனதால் செலுத்த வேண்டும். ஒவ்வொருவருக்கும் விடுமுறை விட்டுக் கொண்டே இருந்தால் விடுமுறைவிட நாளே இருக்காது. தினேன் பட்டாச்சாரிக்கு உண்மையிலேயே மரியாதை செலுத்தவேண்டுமென்றால் அவர்கள் இறந்த நாளில் அதிகமான வேலை செய்ய வேண்டும். மறைந்த பட்டாச்சாரி அவர்கள் சாகிற வரை ஓயாது ஒழியாது உழைத்தவர்.

*குறிப்பு .—[ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டதிலே ஆழமான பொருள் இருக்கிறது. தினேன் பட்டாச்சாரியை உங்களுக்கும் தெரியும், எங்களுக்கும் தெரியும். ஏற்கனவே ஒரு பிரிசிடென்ட் இருக்கிறது—சஞ்சய் காந்தி எம். பி. இறந்ததற்கு ஹவுசை அட்ஜர்ன் பண்ணியிருக்கிறோம். இப்போது மறைந்துவிட்ட தினேன் பட்டாச்சாரி பொதுமக்களுக்காக உழைத்து இறந்தவர். அவர் இறந்ததற்கு மரியாதை செலுத்தும் வகையில் பேரவையை ஒத்தி வைப்பது நியாயம். தலைவர் சொல்லுகின்ற பதில் கன்வின்சிங்காக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதனை விவாதப்பொருள் ஆக்கக் கூடாது. திரு. தினேன் பட்டாச்சாரி நல்ல அளவில் நாட்டுக்காகச் சேவை செய்தவர். அவர்கள் செய்த சேவையை நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் மறைவுக்கு சபையை ஒத்திவைப்பது மரபாக இல்லை. திரு. சஞ்சய் காந்தியின் மரணம் எதிர்பாராமல் ஏற்பட்டதன் காரணமாக விடுமுறை அறிவிக்கப்பட்டது.

திரு. ரா. உமாநாத் : மரணம் எதிர்பாராமல்தான் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மரணம் எதிர்பாராமல் வருவதுதான். திருக்குறளிலேயே உலகின் பெருமையை அந்த வகையிலே எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. திரு. சஞ்சய் காந்தியைப் பொறுத்தவரை பிரதம மந்திரியின் மகன், எதிர்பாராது விமான விபத்தில் இறந்து விட்டார், நாடே துக்கத்தில் ஆழ்ந்தது. ஆக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறைவுக்கெல்லாம் சட்டசபையை ஒத்தி வைத்துக் கொண்டிருக்க முடியாது. அதே போன்று சட்டமன்ற உறுப்பினர்கள் மறைவுக்காக நாடாளுமன்றத்தை ஒத்தி வைக்க வேண்டுமென்றும் கேட்கவும் முடியாது. எவ்வளவு பெரிய முக்கியஸ்தராக இருந்தாலும் வருத்தத்தை நாம் தெரிவித்துக் கொள்கிறோம். அவ்வளவு தானே தவிர சபையை ஒத்தி வைக்க வேண்டும் அல்லது விடுமுறை விட வேண்டும் என்று சொல்வது சரியல்ல.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நாங்கள் இங்கே பிரதிபலிக்கின்ற எண்ணங்களை தயவு செய்து தாங்கள் முதலமைச்சரிடம் கன்வே பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உணர்வுகளை கட்டாயம் முதலமைச்சரிடம் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், சொல்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. உரிமைப் பிரச்சினை

## இந்துப் பத்திரிகை மீதும், திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் மீதும்.

அடுத்து, அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து 246 வது விதியின் கீழ் டாக்டர் கே. சௌரிராஜன் அவர்கள் இந்த அவையிலே எழுப்ப அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

டாக்டர் கே. சௌரிராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, I move the following motion of privilege for examination.

Where as in the Hindu dated 1st July 1980 in page 8, column 5, under the heading of Secretariat of the Legislature, one Mr. R.K. Balasubramaniam of Madras has alleged that as long as the veteran parliamentary authority. Mr. R. V.Krishna Ayyar etc.....

And Where as the statement published in the "Hindu" attempts to project the view that ofter 1955 till today the Madras Legislature has lost its independence, originality and is under the control of the Government.

Whereas this viewt is totally baseless, false and attempts to undermine the prestige of the House and derogate the authority of the House.

Whereas a prima facie case of privilege has been made out.

Whereas any other matters affecting the rights, powers and privileges shall have precedence over other business of the House.

I pray that this matter may be examined by a Committee of the House on Privileges and the Committee is directed to report to the House before the House adjourns before this budget session.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் ஏதாவது கருத்துக்கள் கூறுவதாக இருந்தால் கூறலாம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, "இந்து பத்திரிகையிலே ஒன்றாம் தேதி அன்று ஆசிரியருக்கு வந்த கடிதத்தில் திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் என்பவர் ஆர். வி. கிருஷ்ணய்யர் முன்னாலே லெஜிஸ்லேச்சர் செக்ரட்டரியாக இருந்த காலத்திலே-அதாவது 1924 முதல் 1955 வரை இருந்தவர். பெரியவர், சட்டமேதை—அவர் சட்டமன்ற செகரட்டரியாக பணிபுரிந்த நாட்களிலே மட்டுமே லெஜிஸ்லேச்சர் செக்ரடேரியட், அதாவது சட்டமன்றப் பேரவைத் துறை தனியாக இயங்கிக் கொண்டிருந்தது என்றும் சுதந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1955 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏதோ நமது மாமன்றச் செயலகம் அதாவது சட்டமன்றப் பேரவைச் செயலகம் அரசாங்கத்தினுடைய இன்டர்ஃபெரன்ஸ் அதாவது ஆதிக்கத்தின் கீழ் இருப்பதாகவும் தனியாகவும் சுதந்திரமாகவும் சுயேச்சையாகவும் செயல்படாதது போலவும் அந்த அளவுக்கு நம்முடைய மாமன்றத்தைப் பாதிக்கிற அளவுக்கு ஒரு குறிப்பிட்ட பத்திரிகையிலே செய்தி வெளியாகி இருப்பது. நம்முடைய மன்றத்தினுடைய கௌரவத்தையும் மன்ற உறுப்பினர்களுடைய உரிமைகளைப் பாதிப்பதாகவும் இருக்கிற காரணத்தினாலே அப்படி உரிமைகளைப் பாதிக்கக் கூடிய பப்ளிகேஷன் அதாவது பிரசுரம் செய்திருப்பதானது நிச்சயமாக இந்த மாமன்றத்தின் உரிமைகளையும் மற்ற உறுப்பினர்களின் உரிமைகளையும் பாதிக்கிறது என்பதால் அதைப் பிரசுரித்த பத்திரிகையின் மீதும் அந்தக் கடிதம் எழுதிய ஆர். கே பாலசுப்பிரமணியம் மீதும் உரிமைப் பிரச்சினையை இங்கே எழுப்ப வேண்டும் என்றும் அதற்குத் தகுந்த விளக்கம் கேட்டு உரிமைக் கமிட்டிக்கு இதை அனுப்பி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–50)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் தாள்களுக்குச் சில சுதந்திரங்கள் உண்டு. 'Fair comment' என்ற அளவில்தான் அவைகள் மற்றவர்களை விமர்சிக்கலாமேயன்றி அதைவிட அதிகமாக விமர்சித்தால் அவதூறு வழக்கிற்கான குற்றச் சாட்டிற்கு உள்ளாகிவிடும். இக்கடிதம் 'இந்து'ப் பத்திரிகையினால் எழுதப்படவில்லை. தனி நபர் ஒருவர் எழுதி பத்திரிகையில் பிரசுரித்து உள்ளது. எனவே அக்கடிதத்தில் கண்டுள்ள குறிப்புகளுக்கு பத்திரிக்கை பொறுப்பில்லை என்றாலும், அதைப் பிரசுரித்ததற்கான பொறுப்பை பத்திரிகைதான் எடுத்துக்

கொள்ள வேண்டும். அதில் கூறப்பட்டுள்ள பொருளின் மீதான பொறுப்பை அக்கடிதம் எழுதிய ஆசிரியர் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே, இங்கு இருவர் மீது பிரச்சினை எழுகிறது. ஒன்று, பத்திரிகை மீது வெளியிட்டதற்காகவும் மற்றொன்று திரு. ஆர். கே. பாலசுப்ரமணியம் மீது அக்கடிதத்தின் பொருள் பற்றியும் ஆகும். அக்கடிதத்தில் கீழ்க்காணும் மூன்று பகுதிகளை ஆய்வு செய்ய வேண்டும்.

1. "To call the House of the Legislature, as a Department of Government, is a breach of privilege."

2. "At the Conferenec of Presiding Officers of the Legislative Bodies in India on 6th Januarry, 1926, Prof. Ruthnaswamy, the then President of the Madras Legislative Council has assured the conference that 'the Secretariat of the Council is separate, the Secretary is tppointed by the Governor and the subordinate staff is appointed by ahe Presiding Officer."

3. "As long as the veteron parliamentery authority, Mr R V. Krishna Ayyar, was at the table of the Madras Legislature from 1924 till 1955, the Secretariat of the Legislature was separate, independent and there was no Government control."
என்ற இந்த மூன்று பகுதிகள் தான் அந்தக் கடிதத்திலே முக்கியமாக நம்முடைய ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவைகளாகும்.

பொதுவாக எந்த ஒரு செயலோ அல்லது செய்யப்படாது விடுபடும் செய்கையோ, அவை இயங்குவதற்கு தடங்கல் செய்யும் வகையிலோ அல்லது அவையின் உறுப்பினர் அல்லது அவையில் பணி புரியும் அலுவலகப் பணியாளர்கள் எவரையேனும் அவர் செவ்வனே பணிபுரிய விடாது அச்சுறுத்துவதாகவோ, நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ தடை செய்வதாக இருந்தாலோ அல்லது அந்த விளைவுகளை ஏற்படுத்துவதாக இருந்தாலோ, அவையெல்லாம் அவையை துச்சமாக (contempt) மதிக்கும் செயல்கள் என்று கருதப்பட்டு அவை தண்டிக்கப் படுவதற்கு அவைக்கு உரிமை உண்டு.

அம்மாதிரியான செயல்களுக்கு முன்மாதிரிகள் எதுவும் தேவையில்லை. எனவே, பத்திரிக்கையில் எழுதிய கடிதம் பொதுவாக படிப்பவர்களது மனதில் இப்பேரவை செயலகத்தைக் குறித்து ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்துகின்றதா அல்லது இந்த அலுவலகத்தில் ஒரு மாசு கற்பிக்கும் வகையில் அது அமைகின்றதா, அவ்வாறு அமைவதால், அந்த அலுவலகத்திற்கு அலுவலாளர்கள் செவ்வனே பணிபுரிவதற்கு எந்தவொருவிதத்திலேயேனும் தடங்கலாக அமைகின்றதா என்று ஆய்ந்து, அவ்வாறு



123471

ஏற்படுமென நிலையிருப்பின் அவைக்குக் களங்கம் கற்பிக்கப் படுமென எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இந்தக் கட்டத்தில் அது மேலெழுந்த வாரியாக 'prima facie' யாகத் தோன்றுகிறதா, இல்லையா என்பது தான் பிரச்சினை. இப்பொருளின் மீது இக்கண்டவற்றை நாம் கவனிக்கலாம்.

நமது அரசியல் சட்டத்தில் 187-வது விதியின் முதல் உட்பிரிவில் சட்டமன்ற அவைகள் ஒவ்வொன்றுக்கும் தனியே அலுவலகம் இருக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. தனியே, 'sepe ate' என்ற சொற்றொடர் 'separate' 'independent' என்று தற்போது கருதப்பட்டு அவ்வாறே வியாக்கியானமும் சில உயர் நீதிமன்ற தீர்ப்புகளில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

முதல் பகுதி, ஒன்று நடைபெறாதது.

"To call the House of the Legislature as a Department of Government, is a breach of privilege." என்று அந்தக் கடிதத்திலே கூறப்பட்டிருக்கிறது. அவ்வாறே அவை அரசின் ஒரு துறையென்று யாராலும், எங்கும், எப்போதும் சொல்லப்படுவதில்லை. எனவே இல்லாத ஒன்றை கற்பித்துக் கொண்டு, அதற்கு விமர்சனம் செய்வது அவதூறு ஆகும். ஆனால் இப்போதும் அரசாங்கத்தினுடைய ஒரு பிரிவாக சட்டமன்றத் துறையைக் குறிப்பிடுகின்ற தவறு அவதூறுதான். ஏனென்றால் அரசாங்கத்தினுடைய ஒரு துறையாக சட்டமன்றத் துறை இயங்கவில்லை. இங்கே இருக்கின்ற சட்டமன்றப் பேரவையும், சட்டமன்ற மேலவையும் தனித்தனியாக இயங்குகின்ற உரிமையோடுதான் இப்பொழுது இயங்கி வருகின்றன. ஆனால் எழுதப்பட்டிருப்பது அரசாங்கத்தினுடைய துறையாக இருப்பது என்பது உள்ளபடியே அவை உரிமையை மீறுகின்ற அவதூறு ஆகும்.

இரண்டாவது, 1926-ஆம் ஆண்டில் மேலவைத் தலைவர் திரு. இரத்தினசாமி கூறியதாகக் கூறப்படும் வாக்கியத்திற்கு ஆதாரம் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அதிலேயும் செயலாளர், ஆளுநரால் தான் நியமிக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. மற்றுமுள்ள அலுவலர்கள் தலைவரால் நியமிக்கப்பட்டது என்றும் கூறுகின்றார்கள். ஆனால் இதற்கும் ஒரு விதமான ஆதாரமும் இல்லை.

மூன்றாவதாக 1924 முதல் 1955 வரை திரு. ஆர். வீ கிருஷ்ணய்யர் இருந்தபோது செயலகம் சுதந்திரமாக, அரசு மேற்பார்வையின்றி, அரசின் கட்டுப்பாடின்றி இயங்கியதாகக் கூறுகின்றார்கள். திரு. ஆர், வி. கிருஷ்ணய்யர் அவர்களுடைய மகன்தான் இந்த ஆர். கே. பாலசுப்பிரமணியம். திரு. சுப்பிரமணியம் என்பவர்தான் அந்தக் கடிதத்தை எழுதி

யிருக்கிறார். ஆனால், திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்கள் 1937-லேயிருந்து, 1941-வது ஆண்டு வரை, பிறகு, 1952-ஆம் ஆண்டிலிருந்து 1955-வது ஆண்டு வரை இருந்திருக்கிறார். 1921-வது ஆண்டிலிருந்து, 1955—வது ஆண்டு வரை தொடர்ந்து அவரேதான் செயலாளராக இருந்தார் என்பதும் உண்மைக்கு மாறான ஒன்று.

அது மட்டுமல்லாமல், அதன்பின் அவைகளெல்லாம் இத்துறையினால் அழிக்கப்பட்டது என்று, அதாவது, அவர் சொல்வது 'மேற்பார்வையின்றி, அரசின் கட்டுப்பாடின்றி இந்தத் துறை அப்போது இயங்கி வந்தது என்று சொல்வதிலிருந்து இப்போழுது அப்படி இயங்க வில்லை என்ற பொருள் தானாகவே தொனிக்கிறது. அதுவும் உண்மைக்குப் புறம்பானது. ஏனென்றால், 1956-ஆம் ஆண்டு வரை இத்துறை, அரசுத் துறை ஒன்றின் கட்டுப்பாட்டின்கீழ் மட்டுமே இருந்து வந்தது. தற்போதுதான் இது சுதந்திரத்தோடு, 1956—க்குப் பிறகு சுதந்திரத்தோடு இயங்கி வருகிறதே தவிர, 1956—க்கு முன்னால்கூட அரசாங்கத்திற்கு ஓரளவுக்கு, இந்தத் துறை கட்டுப்பட்டு இருந்தது. அதற்குப் பிறகு சிலபல உரிமைகளும் மற்றவைகளும் வழங்கப்பட்டு, இந்தத் துறை, அதற்குப் பிறகுதான் அதிகச் சுதந்திரத்தோடு இயங்குகிற நிலைமை வருகிறது. ஆனால், அந்தக் குறிப்பிலே, கடிதத்திலே திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கருத்து, இதற்கு முன்னால் சுதந்திரமாக இருந்தது. இப்பொழுது சுதந்திரமாக இல்லை என்று அவர் நேர்முகமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

அரசியலமைப்புச் சட்டம் 1950-ம் ஆண்டே அமுலுக்கு வந்தபின் அதன் 187-வது விதியின் மூன்றாவது உட்பிரிவில் பேரவை செயலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கான தகுதிகள், நியமன முறைகள். இவைகள் எல்லாம் Legislature Service Rules என்று ஆளுநரால் பேரவைத் தலைவரைக் கலந்துக்கொண்டு இயற்றப்பட்டு அவ்விதிகளின்படி நியமிக்கப்படுகிறார்கள். இவற்றில் அரசின் நேரடிப் பொறுப்பு எதுவும் இல்லை. ஆனால் அரசின் மற்ற துறைகளுக்கான எல்லாவிதமான சுதந்திரங்கள், தகுதிகள் இருக்க வேண்டுமென்பதற்கான இந்தத் தனித்தன்மை, 1956-ல் பேரவைத் தலைவர் அவர்கள் அன்றிருந்த நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், இவர்கள் எல்லாம் ஒரு கூட்டத்தில் கலந்தாலோசித்து அது அரசாணையாக இயற்றப்பட்டது.

மேலும், பேரவைச் செயலகம் அரசுத்துறை என்று அழைக்கப்பட்டு, சுதந்திரத்தோடு இயங்கலாம். அவ்வாறு இயங்குவது எவ்விதத் தவறுமில்லை என்று திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்கள் 1954-ஆம் ஆண்டில் ஒரு கோப்பின்



எழுதியிருக்கிறார். ஆகவே, அதுவரையிலே அது சுதந்திரமாக இல்லை என்பதை திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது தனியாக இயங்கலாம் சுதந்திரத்தோடு இயங்கலாம் என்ற குறிப்பை ஒரு கோப்பிலே, திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்களே 1954—லே எழுதியிருப்பதிலிருந்தே 1954—க்கு முன்னால் அது சுதந்திரமற்று இருந்தது என்பதும், அதற்குப் பிறகு அது சுதந்திரத்தோடு இயங்கலாம் என்று 1954—ல் திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் எழுதி வைத்து 1956—ல் அப்பொழுது நிதியமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம் அவர்களும் பேரவைத் தலைவரும் கலந்து பேசி, மேலும் சுதந்திரம் உடையதாக ஆக்குவதற்கான விதிமுறைகளையெல்லாம் வகுத்து, நடைமுறைப் படுத்துகிறார்கள் என்பதும் நடைமுறையில் இருந்து வருகிற ஒன்றாகும்.

தற்போது இந்தத் துறையில், எல்லா விஷயங்களிலும், கோப்புகள் சம்பந்தப்பட்ட இலாக்காக்களைக் கலந்த பிறகு, கடைசியாக பேரவைச் செயலகத்தில், பேரவைத் தலைவர் மூலம் ஆளுநருக்கு அனுப்பப்படுகிறது. அவ்வாறு மற்ற விஷயங்களில், அரசுக்குக் சுற்றனுப்புமூலம் அனுப்பப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. பணிகளை இவ்வாறு செய்யாவிட்டால், மற்றொரு இலாகாவின்மூலம்தான் செய்யப்படவேண்டும். அவ்வாறு செய்யப்படுமேயானால்தான் சட்டமன்ற இலாக்காக்கள் தனித்தன்மை இழந்து இயங்க நேரிடும்.

நடைபெறுகின்ற காரியங்கள் அத்தனைக்கும் பேரவைத் தலைவர்தான் முழுப் பொறுப்புக் கொண்டவர். ஆளுநரோடு தொடர்பு வைத்துக் கொள்வது பேரவைத் தலைவர்தான். ஆளுநரோடு நேரடித் தொடர்பு வைத்து ஆணையைப் பெறுவது பேரவைத் தலைவர். ஆணை பேரவைத் தலைவருக்கு வந்து, பேரவைத் தலைவர் நேரடியாக அவைக்கு அறிவிக்கிறார். நேரடியாக உறுப்பினர்களுக்கு அறிவிக்கிறாரே தவிர, அது அரசாங்கத்தினுடைய எந்த ஒரு இலாக்காவுக்கும் சென்று, அதனுடைய கட்டுப்பாட்டின் கீழே, அரசாங்கத்தினுடைய இலாகாக்கள், வேறு இலாகாக்கள் திருத்தவோ, மாற்றவோ இருக்கிற நிலைமைகள் இல்லை.

மேலும், இவ்வாறு பெயரளவில் அரசுத்துறை என்றாலும், உண்மை நிலையில் சுதந்திரமாகவும், அரசுத் தலையீடு இன்றியும் நடைபெற்று வருகிறது. எனவே, இந்தச் செயலகத்திற்கு ஒரு மாசு கற்பிப்பது அல்லது அவர்களது சுதந்திரத்தில் ஒரு ஐயப்பாட்டை ஏற்படுத்துவது, அதில் பணிபுரியும் அலுவலர்களைப் பாதிக்கும். அங்கே சுதந்திரமாக இயங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று சொல்வது ஒன்று; ஆனால், தற்பொழுது சுதந்திரத்தோடு இயங்க

வில்லையென்று சொல்வது மற்றொன்று. அது இன்னும் அதிகமான சுதந்திரத்தோடு இயங்க வேண்டுமென்று ஒரு குறிப்பு இருக்குமேயானால் அதிலே தவறு இல்லை. ஆனால், இப்பொழுது சுதந்திரத்தோடு இயங்கவில்லை என்று சொல்வது மற்றொன்று. ஆகவே, சுதந்திரத்தோடு இயங்க வில்லையென்று சொல்வது உண்மைக்குப் புறம்பான ஒரு கூற்றாகும்.

இம்மாதிரி, முன்பு ஒருமுறை ''பிராட்வே டைம்ஸ்' பத்திரிகையில், அலுவலகத்தில் இருப்பவர்கள் எல்லாம் ஒரு கட்சியைச் சார்ந்து நடக்கிறார்கள் என்ற ஒரு குற்றச் சாட்டை வெளியிட்டதன் பேரில், அவை உரிமை குழுவுக்கு அனுப்பப்பட்டு, அவ்வாறு கூறுவது அவையை அவமதிப்பதாகும் என்றும் அவையை மீறிய செயலாகும் என்றும் அப்பத்திரிகையின் மீது அப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனவே, இதில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இது அவையை இழிவுபடுத்துவதாகும் என்று தோன்றுகிறது. எனவே தான் இந்தக் கூற்றுக்களைப் பொருத்த வரையிலும் இருக்கிற உண்மைகளை மாற்றி, அவையினுடைய உரிமைக்குப் பாதகம் ஏற்படுத்துகின்ற அளவுக்கு அந்தக் கடிதம் அமைந்து, அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை, அந்தக் கடிதத்தைப் படிக்கிறவர் உள்ளங்களிலே ஏற்படுகின்ற அளவுக்கு இருப்பதன் காரணமாக, இதில் அவையை மீறுகின்ற பகுதி இருக்கிறது. எனவே, இவை அவை உரிமைக் குழுவுக்கு அனுப்புகின்ற ஒரு சூழ்நிலை வருவதுதான் நல்லது. ஆகவே இது அவையை அவமதிக்கிறது என்கின்ற கட்டம் இருப்பதன் காரணமாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதன்மீது அளிக்கின்ற தீர்ப்பை ஒட்டி, நான் அதற்குப் பிறகு, இந்த அவையில் தீர்மானத்தின் வடிவிலே கொண்டு வந்து அவை உரிமைக் குழுவுக்கு விடலாம். ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதுபற்றி தீர்ப்பு வழங்க வேண்டும்.

(முற்பகல் 10.0 )

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையைக் குறித்த எனது தீர்ப்பினை பின்னர் அறிவிக்கிறேன்.

5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

இடையாத்தூரில் அரிசனங்கள் கொடுமைப்படுத்தப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம், 11-7-1980 அன்று செங்கல்பட்டு மாவட்ட இடையாத்தூரில் அரிசனங்கள் கொடுமைப் படுத்தப்பட்டும்



அரிசனப் பெண்கள் கற்பழிக்கப்பட்டு, அந்த மக்கள் ஊரை விட்டே விரட்டியடிக்கப்பட்டதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டு, திருவாளர்கள் எஸ். அழகர்சாமி, ஆர். கருப்பையா, எம். ஆறுமுகம், பி. உத்திராபதி, செ. சிவசாமி, கே. எம். தங்கமணி, நா. சுந்தரராஜ், ப. பொன்னுரங்கம், இல. பலராமன், என். பழனிவேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், செ. இராமலிங்கம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்று மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டம் இடையாத்தூரில் உள்ள மொத்த குடியிருப்பு 54. அதிலே 2 ஏக்கர் நிலப்பரப்பிலே வீடுகளைக் கட்டி 47 குடும்பங்கள் அங்கே குடியிருந்து கொண்டு வருகிறார்கள். 11-7-1980 அன்று ஜாதி இந்துக்கள் அந்த அரிசனக் குடியிருப்பிலே நுழைந்து மிகப் பெரிய தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். அப்படி தாக்குதலை நடத்தியது மட்டுமல்லாமல், இதற்குண்டான காரணங்களைப் பற்றி எல்லாம் சொல்லும்போது, ஏதோ ஒரு தோட்டத்திலே ஒரு பூசணிக்காய் களவு போய்விட்டதாகவும், அந்தப் பூசணிக் காயில் 750 விதைகள் இருக்கும். அதை நட்டால் அது விளைந்து 750 காய்களைக் கொடுக்கும். எனவே 750 ரூபாய் அபராதம் கட்டவேண்டும் என்று அந்த அரிசனக் குடியிருப்பிலே இருக்கின்றவர்களுக்கு அபராதம் விதித்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அந்தக் கிராமத்திலே அவர்கள் வெள்ளையாக வேட்டிக் கட்டிக் கொண்டு போகக்கூடாது. அங்குள்ள அரிசனப் பெண்களை மிகவும் மோசமான முறையிலே நடத்தி மானபங்கம் செய்திருக்கிறார்கள்.

அவர்களை அங்கே குடியிருக்கக்கூட விடாமல் அவர்கள் விரட்டப்பட்டு, அங்கே பக்கத்திலே இருக்கக்கூடிய அதே கிராமப் புறம்போக்கிலே குடிசைகளைப் போட்டுக் கொண்டு வசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது சம்பந்தமாக தொடர்ந்து அங்கே உள்ள அதிகாரிகளுக்கும் காவல் துறையினருக்கும் புகார்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த நிகழ்ச்சி அங்கே நடைபெறுகின்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கே பக்கத்தில் 10 மைல் தூரத்தில் உள்ள திருக்கழுக்குன்றத்தில் திருவிழா நடப்பதைப் பற்றி விவாதமே நடத்திக் கொண்டு இருந்திருக்கிறார்கள். அந்தச் சம்பந்தம் நடந்த சமயத்திலே அதைத் தடுப்பதற்கான விரைவான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. தொடர்ந்து பல தடவைகள் புகார்கள்

செய்யப்பட்டும் கூட, அந்த மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப் படவில்லை. எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. உத்திராபதி அவர்களும், தோழர் ஆறுமுகம் அவர்களும், விவசாயத் தொழிலாளர் சங்கத் தலைவர் நல்லக்கண்ணு அவர்களும் 4 தினங்களுக்கு முன்னால் அங்கே சென்று பார்த்து வந்தார்கள். இதுவரை அந்த ஊரை விட்டு வெளியேற்றப்பட்டவர்கள், அந்தக் காலனியைவிட்டு அப்புறப் படுத்தப்பட்டவர்கள், திரும்ப வந்து குடியேறவில்லை. ஆகவே இங்கே அரசாங்கம் நடக்கிறதா அரிசனங்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறதா என்பதை எல்லாம் சிந்திப்பதோடு மட்டும் அல்லாமல், அவர்கள் சொந்தப் பாதுகாப்புக்கு வேறு என்ன செய்வது? பாராளுமன்றத்தில் கூட விவாதம் நடக்கிறது. அவர்கள் பாதுகாப்பிற்கு அவர்கள் கையிலே துப்பாக்கியைக் கொடுக்கவேண்டும் என்று கூட விவாதங்கள் நடைபெறுகின்றன. இந்த நேரத்திலே அவர்கள் பாதுகாப்பிற்கு அரசாங்கமே உதவி செய்யவில்லை என்று சொன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர் போன்ற பெரிய அதிகாரிகள் எல்லாம் அவர்களுக்குப் பாது காப்புத் தர மறுக்கிறார்கள் என்று சொன்னால், போலீஸ் அதிகாரிகளிடம் எவ்வளவு புகார்கள் செய்தாலும் கூட, மேல் ஜாதிக்காரர்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள், என்று சொன்னால், அவர்கள் பாதுகாப்புக்கு அவர்கள் அரசாங்கத்தை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். வேறு என்ன பாதுகாப்பை அவர்களுக்குக் கொடுப்பது என்பதைப் பற்றியெல்லாம் நாம் யோசிக்க வேண்டும். ஜூன் மாதம் 11ஆம் தேதி நடந்திருக்கிறது. அதற்குப் பின்னாலே கூட ஒரு மாதத்திற்குப் பின்னாலே கூட இதுவரையில் அந்த மக்கள், 47 குடும்பங்கள் வெளியேதான் குடியிருக்கிறார்கள். இது சம்பந்தமாகப் புகார் கொடுக்கப்பட்டு அந்தச் சம்பவங்களுக்குக் காரணமாக இருந்தவர்கள். அந்தக் கொடுமையைச் செய்வதற்கு காரணமாக இருந்தவர்கள் கைது செய்யப்படுவதுபோல கைது செய்யப்பட்டு அந்த மோசமான ஆதிக்கக்காரர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, அவர்கள் வெளியே உலவிக் கொண்டிருக்கிறார்கள், ஜாமீனில் வந்திருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. யார் கொடுமைக்குக் காரணமாக இருந்தார்களோ, அவர்கள் வெளியே உலவிக் கொண்டிருக்கும்போது அங்கே யாருக்கும், குறிப்பாகப் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அவர்கள் எல்லாம் 1 ஏக்கர், 2 ஏக்கர் என்று சொந்தமாக நிலம் வைத்திருக்கக் கூடியவர்கள், இன்றைக்கு விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் பக்கத்தில் இருக்கும் ஊரில் கூட சாமான்கள் வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் பல்வேறு நிர்ப்பந்தங் உள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இத்தகைய நிலை பல்வேறு இடங்களில் இருக்கிறது. அரிசனங்களுக்கு இப்படிப்பட்ட கொடுமைகள் ஆங்காங்கு நடை பெற்றுக் கொண்டு இருக்கின்றன. இன்றைக்கு என்னுடைய



மாவட்டத்தில் கூட தேர்தல் காலத்தில ஏதோ காரணத்தை ஒட்டி ஓட்டுப் போடவில்லை என்ற காரணத்திற்காக குருவிக் குளம் என்ற இடத்தில் இரண்டு குடும்பங்களை மிகப் பெரிய துன்பத்திற்குள்ளாக்கி இருக்கிறார்கள். ஒருவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். மற்றொருவர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர். அவகளுக் கெல்லாம் சரியான முறையில் பாதுகாப்பு அளிக்கவேண்டும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவது விரும்பத்தக்கது அல்ல.

ஆகவே, வழக்கம்போல் இந்த அவையின் அலுவல்களை இதற்காக ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று தீர்ப்பளிக்காமல், அப்படி அளித்துவிட்டால் இதற்கான தீர்வு காண முடியாது, பல்வேறு இடங்களில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுவதை எப்படித் தடுக்கவேண்டும் என்ற முறையில் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒன்று கூடி, விவாதம் செய்து, அரசியல் உணர்வு இல்லாமல், தாழ்த்தப்பட்டோர் நலனில் அக்கரை கொண்டு ஒரு முடிவு எடுக்க வழிவகை செய்யும் வகையில், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடையாத்தூர் கிராமம் செங்கற்பட்டில் இருந்து 9 மைல் தூரத்தில் உள்ள பாலாற்றின் இடையே இருக்கிற காரணத்தால் இந்தக் கிராமத்திற்கு இடையாத்தூர் என்ற பெயர் வந்தது. அங்கே 47 அரிசனக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. 500—க்கும் மேற்பட்ட ஜாதி இந்துக்கள் பல்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள் அங்கே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களிடையே பல ஆண்டுகாலமாகத் தொடர்ந்து மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக அரிசன மக்களை அடக்குகின்ற முறையில் அங்கே பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அங்கே சிறு சச்சரவு இருந்தாலும் சரி, அந்த ஊர் பெரிய மனிதர்கள் எல்லாம் ஒன்று கூடி ஒரு கூட்டம் போட்டு, அவர்கள் அந்தச் சச்சரவுகளின் அடிப்படையில் அபராதம் போன்ற தீர்ப்புக்களை வழங்குவார்கள். அது போன்ற நிலைமையில்தான் அங்கு காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல், ஒருவன் ஒரு பூசணிக்காயைத் திருடிவிட்டான் என்ற காரணத்திற் காக அந்தப் பூசணிக்காயில் உள்ள விதைகளை எண்ணி, ரூ. 750 அபராதம் கட்டவேண்டும் என்று போட்டு இருக்கிறார்கள். அவர்கள் ரூ. 600 கட்டியும் இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அவர்கள் விடுவதாக இல்லை. இப்படிக் கொடுமைகள் அங்கே நடக்கின்றன.

அது மட்டுமல்ல, அந்த ஊரில் அரிசன மக்கள் வெள்ளை வேட்டி கட்டிக் கொண்டு போகக்கூடாது. செருப்பு போட்டுக்கொண்டு போகக்கூடாது. இப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இரண்டு மாதங்களுக்கு முன்பு சிறு பையன்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக அங்கேயுள்ள மற்றவர்களிடையே தகராறு ஏற்பட்டு அதில் ஒரு தாய் அடிபட்டு செங்கற்பட்டு மருத்துவர்மனையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். காலையில் சேக்கப்பட்ட அந்தத் தாயை மாலையில் டிஸ்சார்ஜ் செய்து இருக்கிறார்கள். இங்கே உங்களுக்குச் சிகிச்சை தர முடியாது என்று சொல்லி, அதன் பிறகு எங்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் இங்கே சென்னைக்கு அழைத்து வந்து ஜெனரல் ஆஸ்பிடலில் சேர்த்து இருக்கிறார்கள்.

இது மிகவும் மோசமான பிரச்சினையாக இருக்கிறது. அந்தப் பகுதிக்கு இரண்டு முறை சமாதானக் குழுக்கள் அனுப்பப்பட்டும் இதுவரையில் அங்கே சமாதானம் ஏற்பட வில்லை. அரிசனங்கள் அங்கே வாழ்வதற்குப் பயந்து கொண்டு இருக்கிறார்கள். ரைஸ் மில்லில் நெல் அரைக்க முடியவில்லை, கடையில் சாமான்கள், பொருள்கள் வாங்க முடியவில்லை.

இன்றையதினம் அவர்கள் மிகவும் பயங்கரமான இடத்தில் வசித்து வருகிறார்கள். ஆற்றில் வெள்ளம் வந்து விட்டால் 15 நாட்களுக்கு அவர்கள் வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ள முடியாது. அவர்கள் தற்போது எலுமிச்சம்பட்டி என்ற இடத்தில் குடிசை என்ற பெயரால் சிறு சிறு கீத்துக்களை வைத்துக்கொண்டு வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். மழை வந்து விட்டால் அவர்கள் நனைந்து விடுகிறார்கள். குளிர் தாங்காமல் நடுநடுங்கி விடுகிறார்கள். நாங்கள் நேரில் பார்த்தோம். நாங்கள் எத்தனை பேர் சொன்னாலும், அவர்கள் திரும்பவும் அந்தக் கிராமத்திற்குச் சென்று வாழப் பயப்படுகிறார்கள். சுமுகமாக வாழலாம் அங்கே செல்லுங்கள், நாங்களும் அதற்கு முயற்சி எடுக்கிறோம், அரசும் முயற்சி எடுக்கும் என்று சொன்னாலும், அவர்கள் அதை ஏற்க மறுக்கிறார்கள். நாங்கள் செத்தாலும் சாவோமே தவிர நாங்கள் ஊருக்குப் போகமாட்டோம் என்று சொல்கிறார்கள்.

இதைச் சாதாரண பிரச்சினைபோல் கருதி, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க இசைவு மறுக்கப்படுகிறது என்று சொல்லி விடக்கூடாது. தமிழகம் பூராவும் இத்தகைய பிரச்சனைகள் இருக்கின்றன. தமிழகம் அமைதிப்பூங்கா என்ற நிலை மாறி, இதுபோன்ற சம்பவங்கள் நாட்டில் தொடர்ந்து இருக்கின்றன.



(முற்பகல் 10-10)

இந்தத் தகராறுக்குக் காரணமாக அங்கே அரசியல் இல்லை. திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னதைப்போல ஏதோ ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்ற பேதம் இல்லாமல், அரசியல் விரோதம் இல்லாமல், அரிசனங்கள்—பிற மக்கள் என்ற நிலையில்தான் இருக்கிறது. உயர் அதிகாரிகள் மட்டத்தில் இதுவரையில் யாரும் அங்கே போய்ப் பார்த்து, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்யவில்லை. ஞாயிற்றுக்கிழமைதான் காலையில் துணை ஆட்சியர் சென்று அந்த மக்களைப் பார்த்திருக்கிறார். இரண்டு ஊர்களுக்கும் சென்றிருக்கிறார். ஆகவே, அதிகாரிகள் சரியான முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை. காவல் துறையைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் தான் அங்கே போய், விசாரித்து இரண்டு தரப்பிலுள்ளவர்களிலிருந்தும் சிலரைக் கைது செய்திருக்கிறார். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அல்லது டி.எஸ்.பி. அல்லது எஸ்.பி. லெவலில் உள்ள அதிகாரிகள் யாரும் அந்த மக்களைச் சந்திக்கவில்லை. அதனால் மக்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை மீண்டும் இடையாற்றுக்கு அழைத்துச் சென்று குடியமர்த்த வேண்டும். அதற்கு முதலமைச்சர் அவர்கள் அந்த மக்களைச் சந்தித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் அல்லது 'டீம் ஆஃப் மினிஸ்டர்ஸ்'— சில அமைச்சர்கள் சென்று அந்த பக்களைச் சந்தித்துப் பேசி, சமாதானம் செய்து, அவர்களை அங்கே அழைத்துசசென்று குடியமர்த்த வேண்டும். இதுபோன்ற பல்வேறு பிரச்சனைகள் பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதால் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் பூடையாற்றூரில் இப்படிப்பட்ட ஒரு கோர சம்பவம் நடைபெற்றிருப்பது உண்மையிலேயே வருந்தத் தக்கது. இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. அங்குள்ள அரிசன மக்களில் சிலர் எப்போதும் இல்லாது இப்போதுதான் நிலவுடைமைக்காரர்கள் ஆகியிருக்கிறார்கள். இது ஒரு காரணம். இன்னொரு காரணம், பம்புசெட்டுகள் வைத்திருக்கிறார்கள்; கல்வீடு கட்டியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, ஒரு தாழ்த்தப்பட்ட சிறுவன் குடித்துவிட்டு இரண்டு ஜாதி இந்துக்கள் மேல் விழுந்து, அந்த விவகாரம் பஞ்சாயத்துக்கு வராமல் முதலிலேயே போலீசுக்குப் போனதால் தங்களை மதிக்கவில்லையே என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்பதும் ஒரு காரணம். இதனால் சிறு சிறு சர்ச்சைகள் அவ்வப்போது நடந்த நிகழ்ச்சிகள் இப்போது முற்றியிருக்கிறது.

அவ்வப்போது சர்ச்சைகள் நடைபெறும்போது சம்பந்தப்பட்ட இலாகாவினர் உரிய நடவடிக்கைகளை முறையாக எடுத்திருந்தால் விழுப்புரம் போல் ஆகாமல் தடுக்க வாய்ப்பு இருக்கும். ஏனோதானோ என்று அதிகாரிகள் இருந்தால் மீண்டும் ஒரு விழுப்புரத்தை நாம் சந்திக்க வேண்டிய அவல நிலை ஏற்படும். இடையாற்றூரிலிருந்த மக்கள் இப்போது அங்கு இல்லை; எலுமிச்சம்பட்டியில் போய் குடியிருக்கிறார்கள். அவர்கள் வாழ வழியில்லாமல் அங்கே போகவில்லை; ஜாதி இந்துக்களுக்குப் பயந்து அங்கே போயிருக்கிறார்கள். சென்ற இடத்திலும் அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டா என்றால் இல்லை. அங்கே ஒரு அரசாங்க கிணறு இருக்கிறது. அதில் தண்ணீர் எடுக்கப் பயப்படுகிறார்கள். ஏனென்றால் ஜாதி இந்துக்கள் ஏதாவது செய்து விடுவார்களோ என்று அச்சப்படுகிறார்கள்.

இன்னொன்று. அவர்கள் இடையாற்றூரில் தங்களுக்குச் சொந்தமான உடைமைகளையும், நிலங்களையும் விட்டுவிட்டு வந்து இங்கே குடியேறியிருக்கிறார்கள். இப்போது எலுமிச்சம் பட்டியில் தங்களுக்கு நிலம் வேண்டும்; மற்ற வசதிகள் வேண்டும் என்று கோரிக்கை விடுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அச்சமான நிலையில், பீதியான சூழ்நிலையில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் அரசு முறையாக அவ்வப்போது நடவடிக்கை எடுக்கவில்லை என்பது தான்.

நான் இன்னொன்றும் சொல்வேன். மத்திய அரசு உள்துறை அமைச்சர் ஜெயில்சிங் அவர்கள் ஒரு விவரத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலே Atrocities towards Harijans and women' பெண்கள் விவகாரமாகவும், அரிசனங்கள் விவகாரமாகவும் நடைபெறுகின்ற கொடுமைகளைத் தடுத்து நிறுத்த ஜெயில் சிங் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள் நல்ல எண்ணத் தோடு. அது பாராட்டுக்குரிய முயற்சியாகும். அதைப் போன்று தமிழ்நாட்டில் விழுப்புரம் போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்து நிறுத்த இந்த அரசு முறையாக அணுகி, எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு, இதைப் போன்ற விரும்பத்தகாத, வெறுக்கத் தகுந்த நிகழ்ச்சிகளைத் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப் பல்வேறு பிரச்னைகள் பற்றி இந்தச் சம்பவத்தில் விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அரிசனங்களுக்குக் கொடுமை என்பது ஒன்று ஜாதி அடிப்படையில் நடக்கின்றது; இன்னொன்று என்னவென்றால்



இப்போது அரிசனங்களுக்கு அரசாங்கத்தின் மூலம் பல சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக விவசாயிகளுக்குக் கூலி கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு கூலி கொடுக்கின்ற விஷயத்தில் நிலப்பிரபுகளுக்கும் அவர்களுக்கும் இடையே தகராறு ஏற்படுகிறது. ஆனால் நிலப்பிரபுக்கள் ஜாதி துவேசத்தைக் கிளப்பிவிட்டு ஊர்க் கட்டுமானம் என்று சொல்லி அவர்களை அடக்கி விடுகிறார்கள்.

இந்த நிலைமை செங்கற்பட்டு மாவட்டம் இடையாத்தூர் கிராமத்தில் மட்டுந்தான் இருக்கின்றது என்பதல்ல. இன்று நாடு பூராவும் இந்த மாதிரி நிலைமைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கம் இதிலே ஒரு பொதுவான நிலை என்று பார்த்தால் அரிசனங்கள் நிச்சயமாக அங்கே புறக்கணிக்கப் படுவார்கள். ஆகவே அதற்குப் பதிலாக அவர்களுக்கென்று தனியாக விசேஷ கவனம் செலுத்தி லா அண்ட் ஆர்டர் என்ற முறைகளை எல்லாம் பார்க்காமல் அரிசனங்களுக்கு உதவி செய்கின்ற வகையில் ஒரு நடவடிக்கை எடுத்தாலொழிய இவர்களைப் பாதுகாக்க முடியாது. தேர்தல் வந்துவிட்டால் அவர்கள் சொல்லக்கூடிய வேட்பாளருக்கு ஓட்டுப் போடுவதாக இருந்தால் தான் அவர்களை ஓட்டுப் போட அனுமதிக்கிறார்கள். இல்லை என்று சொன்னால் அவர்களுக்கு சிலிப் கூட கொடுக்க மறுக்கப் பட்டு, ஓட்டுப்போட வாருங்கள் பார்க்கலாம் என்று சொல்லப் படுகின்ற நிலை இருக்கின்றது. மேலும் அரிசனங்கள் மீது மற்றவர்களுக்குப் பொறாமை ஏற்படுகின்ற நிலை இருக்கின்றது. துண்டு போட்டுக்கொண்டு அரிசனங்களால் செல்ல முடியவில்லை, செருப்பு போட்டுக்கொண்டு கூடச் செல்ல முடியவில்லை. அரிசன மக்கள் சிறிய தவறுகளைச் செய்தால் கூட அதைப் பெரிய தவறாக ஆக்கி அங்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் படுகின்றது. காவல் துறையினரும் உடனடியாக நடவடிக்கை எடுக்கின்ற நிலை இருக்கின்றது. இப்படியான ஒரு சூழ்நிலை இன்றையதினம் அங்கே இருந்து கொண்டிருக்கின்றது. இதற்கு அரசு ஒரு முடிவு கட்டியாகவேண்டும். 50 குடும்பங்களுக்கு மேற்பட்ட அரிசனக் குடும்பங்கள் அந்த ஊரை விட்டு வெளியே போய் நிர்க்கதியான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஊர் திரும்புவது எப்படி? அதற்கு என்ன உத்தரவாதம் ஏற்படுத்தப்போகிறது அரசு என்பதை விளக்குவதற்காகவும், அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காகவும் இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டம், இடையாத்தூர் கிராமத்தில் சாதி இந்துக்கள் சுமார் 870 பேர்களும், அரிசனங்கள் சுமார் 280 பேர்களும் வசித்து வருகிறார்கள்.

அரிசனக் காலனி கிராமத்தைவிட்டு, சுமார் 100 கெஜ தூரம் தள்ளி உள்ளது. 11-5-80 வரை இரு தரப்பினருக்கும் எவ்வித மனவேறுபாடுகளும் இல்லை. 11-5-80 அன்று இரவு அரிசனக் காலனியைச் சேர்ந்த திரு. கதிர்வேலு என்பவர் இடையாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. குமார் பிள்ளை என்பவர் மீது இருட்டில் மோதி விட்டார் என்ற காரணத்திற்காக, திரு. கதிர்வேலுவை திருவாளர்கள் குமார், சிவானந்தம் கண்ணன் ஆகியோர் தாக்கியும் தரக்குறைவாக பேசியும் இருக்கின்றனர். இச்சம்பவம் பற்றி திருக்கழுக்குன்றம் காவல் நிலையத்தில் 13-5-80 அன்று வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப் பட்டவர்கள் தலைமறைவாக இருந்தனர். 16–6–80 அன்று நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளனர்.

மேற்கண்ட சம்பவத்தை தொடர்ந்து, அரிசனங்கள் சாதி இந்துக்களின் வயல்களில் வேலை செய்ய மறுத்துவிட்டதால், இடையாத்தூர் சாதி இந்துக்கள் அருகிலுள்ள ஊர்களிலிருந்து வேலைக்கு ஆட்களை அமர்த்திக் கொண்டனர். 13–6–80 அன்று வயலில் இருந்து திரும்பி வந்து கொண்டிருந்த திரு. வரதப் பிள்ளை என்பவரை அரிசனக் காலனியைச் சேர்ந்த திரு. துரைக்கண்ணுவும், திரு. கதிர்வேலுவும் வழிமறித்துத் தாக்கியுள்ளனர். திரு. வரதப்பிள்ளைக்கு சிறு காயம் ஏற்பட்டது. இச்சம்பவத்தைப் பற்றி அறிந்ததும், இடையாத்தூரைச் சேர்ந்த சாதி இந்துக்கள் சுமார் 100 பேர் அரிசனக் காலனிக்குச் சென்று துரை, கிளியம்மாள், நாகம்மாள் ஆகியோரைத் தாக்கியுள்ளனர். அவர்களுக்குச் சிறு காயம் ஏற்பட்டுள்ளது. தகவல் அறிந்ததும், காவல் துறையினர் விரைந்து அமைதியை நிலைநாட்டினர். இருதரப்பினரும் கொடுத்த புகார்களின் பேரில், திருக்கழுக்குன்றம் காவல் நிலையத்தில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. காயம் அடைந்தவர்கள் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டது. அரிசன இனத்தவர் இருவரும் சாதி இந்துக்களில் மூவரும் 16–6–80 அன்று கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

18-6-80 அன்று திரு. செல்லப்ப நாயக்கர் என்பவர் 500 ரூபாய் மதிப்புள்ள தனது வைக்கோல்போர் யாரோ சிலரால் கொளுத்தப்பட்டு விட்டது என்று புகார் செய்த்தின் பேரில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் யார் மீதும் சந்தேகம் ஏற்படவில்லை.

19–6–80 அன்று இடையாத்தூர், வள்ளிபுரம், விளாகம், திம்மூர், நீலமங்கலம், இரும்புலிச்சேரி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அரிசனங்கள் மற்றும் சாதி இந்துக்களிடையே ஒரு



[முற்பகல் 10–20]

பஞ்சாயத்து நடத்தப்பட்டு இரு தரப்பினரும் சமரசம் செய்து வைக்கப்பட்டனர். இதற்கிடையில், அரிசனங்கள் வேலை செய்ய மறுத்ததாகவும் அதன் காரணமாக சாதி இந்துக்கள் அரிசனங்களை வயல்வேலைகளுக்கு அமர்த்தாததாலும் இடையாத்தூரைச் சேர்ந்த சுமார் 31 அரிசனக் குடும்பங்கள் அருகிலுள்ள ஊர்களுக்கு அஞ்சி சென்று தங்கிவிட்டனர். மீதமுள்ள சுமார் 21 அரிசனக் குடும்பங்கள் இடையாத்தூரில் இருந்து வருகின்றன.

11–7–1980 அன்று இடையாத்தூர் அரிசனக் காலனியைச் சேர்ந்த திரு. வேதகிரி என்பவர் தனது 15 வயதுள்ள மகள் சுசீலாவைக் காணவில்லை என்று புகார் செய்ததின் பேரில் திருக்கழுக்குன்றம் காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. விசாரணை செய்ததில் திரு. வேதகிரியின் மைத்துனர் வீட்டில் குழந்தைப் பிறந்திருப்பதால், உதவிக்காக அவரது மகளை அவரே அங்கு அழைத்துச் சென்று விட்டு வந்திருக்கிறார் என்று தெரிகிறது. இருப்பினும் செல்வி சுசீலாவை திரு. வேதகிரியிடம் கிராம அதிகாரி மற்றும் அவரது உறவினர்கள் முன்னிலையில் திரும்ப அழைத்து வந்து சேர்ப்பித்தாகிவிட்டது.

அரிசனப் பெண்கள் மானபங்கப்படுத்தப் பட்டார்கள் அல்லது கற்பழிக்கப்பட்டார்கள் என்ற புகார்கள் இதுவரை காவல் துறையினரிடமோ அல்லது மற்ற அதிகாரிகளிடமோ வரவில்லை. போலீஸ் பாதுகாப்பு தொடர்ந்து போடப்பட்டுள்ளது. இடையாத்தூர் கிராமத்தில் பதட்ட நிலை ஏதுமில்லை. நிலைமை அமைதியாக உள்ளது. எனவே, இச்சம்பவங்கள் குறித்து விவாதிக்க பேரவையில் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு விளக்கம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு எந்தவிதமான கிளாரிபிகேஷனும் கேட்க முடியாது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 6. கவன ஈர்ப்புகள்.

### அ. புளியங்குடி கிராமத்தில் தீ விபத்து.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடி ஒன்றியம் கூத்தாநல்லூர் நகர பஞ்சாயத்தைச் சேர்ந்த புளியங்குடி கிராமத்தில் 28-6-1980 அன்று தீ விபத்தின் காரணமாக அரிசனங்களுக்குச் சொந்தமான வீடுகள் சேதமடைந்தது பற்றிய'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 28—6—80 அன்று பகல் 3.30 மணியளவில் மன்னார்குடி தாலுக்காவிலுள்ள லட்சுமணன்குடி கிராமத்தில் அடங்கிய புளியங்குடியில் ஏற்பட்ட தீ விபத்தில் 22 குடியிருப்புகள் சேதமடைந்தன. உயிர்ச்சேதமோ, கால்நடைச்சேதமோ இல்லை. மொத்த சேத மதிப்பீடு சுமார் ரூ. 37 ஆயிரம். தீ விபத்து ஏற்பட்ட 28—6—80 அன்று இரவு பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடிசை ஒன்றுக்கு ரூ. 200 வீதம் நிவாரணத்தொகை வழங்கப்பட்டது. மேலும் குடும்பம் ஒன்றுக்கு 5 கிலோ அரிசியும், ஒரு வேட்டியும், ஒரு புடவையும் வழக்கம் போல் வழங்கப்பட்டது. அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பெற்றிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள புளியங்குடி கிராமத்தில் 24-க்கு மேல் குடிசைகள் எரிந்திருக்கின்றன. இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பார்த்துப் பேசினோம். அதே போல் ஹரிஜன் வெல்பேர் ஆபீஸரும் வந்து பார்த்தார். மன்னார்குடி பீ.டி.ஓ. வும் வந்து பார்த்தார்கள். அங்கே, இப்போது கொடுக்கப்படுகிற ரூ. 200 போதாது. நேற்றைய தினம் நான் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்தியதுபோல் இப்போது விலைவாசிகள் ஏறியிருப்பதால் அதன் அடிப்படையில் ரூ. 500 கொடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக உத்தரவு இடவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு புளியங்குடி, மேலவாசல், எம்பேத்தி, காரியக்கடி போன்ற கிராமங்களில் ஹரிஜன் நல இலாகா மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவு இடுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? முக்கியமாக இந்த ரூ. 500 கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இப்போது அரசாங்க ஆணைப்படி ரூ. 200 தான் கொடுக்கிறோம். ரூ. 500 என்பது நமது நிதி நிலைமைக்கு ஏற்றுவராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஹரிஜன் குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பது அங்கே மட்டுமல்ல, தமிழ்நாடு பூராவும் பரவலாக திட்டம் போட்டு அந்த வேலைகள் நடைபெறுகின்றன. அதே போல் தஞ்சை மாவட்டத்திற்கும் அதன் பகுதி கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஆ. திருப்பரங்குன்றத்தில் 'கதம்ப வண்டு' கடித்து மூன்று பேர்கள் இறந்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ''மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் 'கதம்ப வண்டு' கடித்து மூன்று பேர் இறந்ததினால் அங்குள்ள பொது மக்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22—5—80 அன்று திரு. முத்துசாமி தேவர் என்பவர் விறகு வெட்டுவதற்காக இம்மரத்தில் ஏற, அங்கு இப்பூச்சிகள் இவரை கடித்ததினால், மரத்தில் இருந்து இறங்கி அந்த பூச்சிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அருகிலுள்ள குளத்தில் இறங்கினார். அப்பகுதி மக்கள் அவரைக் காப்பாற்றி அப்பகுதியிலுள்ள ஒரு நாட்டு வைத்தியரிடம் சிகிச்சையளிக்கச் செய்தனர். சிகிச்சை பலனளிக்காது போகவே அவர் அன்றே இறந்துவிட்டார். இதன் காரணமாக அவ்வூர் மக்கள் அவ்வழியாகப் போவதைத் தவிர்த்தனர். அதற்குப்பின் நால்வர் அப்பூச்சியினால் கடிக்கப்பட்டனர். எவரும் இறக்க வில்லை.

திருப்பரங்குன்றம் நகராட்சி நிர்வாக அதிகாரி சுகாதார அலுவலரின் ஒத்துழைப்புடன் இம்மரத்தை எரிக்க நடவடிக்கை எடுத்தார். பெரும்பாலான பூச்சிகள் மடிந்துவிட்டன. சில பூச்சிகள் மட்டும் பறந்து அருகிலுள்ள மரத்தில் வசிக்கத் தொடங்கியுள்ளன. இம்மரத்திலுள்ள பூச்சிகளையும் அழிப்பதற்கு பூச்சிக்கொல்லி மருந்தை தெளிக்க மாவட்ட நல அலுவலர்கள் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள். இதனால் பெருமளவில் யாரும் மருத்துமனையில் அனுமதிக்கப்படவில்லை. நிலைமை அமைதியாக உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: 'ஸ்வார்ம்பீஸ்' என்ற ஆங்கிலப் படத்தில், வண்டுகள் வந்து அந்த ஊர் மக்களை எல்லாம் கொன்றுவிட்டு வண்டுகளை அழிக்கப்போன விஞ்ஞானியையும் கொன்றுவிட்டது. திருப்பரங்குன்றத்தில் காவடி தூக்கி ஆடிய பக்தர்களை எல்லாம் கடித்துவிட்டு அவர்களை முருகக் கடவுளும் காப்பாற்ற முடியவில்லை. இங்குள்ள அதிகாரிகள் போய் அவர்களைக் காப்பாற்ற முடியுமா? அல்லது அவர்களையும் கடித்துவிட்டதா? அங்கே திரு. முத்துசாமிதேவர் என்பவர் இறந்திருக்கிறார். அவருக்கு குழந்தைகள் கிடையாது. மனைவி ஒன்றுதான் இருக்கிறது. அந்த மனைவி ஏழையாக இருப்பதால் முதலமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து அந்தக் குடும்பத்திற்கு ரூபாய் கொடுக்க ஆவன செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அந்தப்பகுதியில் குறிப்பாக திருப்பரங்குன்றம் ஆலயப் பகுதியில் பல காலமாக கதம்பவண்டு என்ற பூச்சி இருக்கிறது. ஆனால் இவ்வளவு ஆண்டுகளாக எந்தவிதமான தொல்லையும் கொடுக்கவில்லை, இப்போதுதான் முதன்முதலாக இப்பேர்ப்பட்ட சேதம் ஏற்பட்டிருக்கிறது. அங்குள்ள அதிகாரிகளைப் பார்த்து அந்தப் பூச்சிகளையெல்லாம் கொல்ல ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். இன்னொன்றைச் சொன்னார்கள். முதல்வர் அவர்கள் ரிலீப் பண்டிலிருந்து ஏதாவது பணம் கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். நிச்சயமாக நம் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் அதற்காக ஒரு விண்ணப்பம் கொடுப்பார்களேயானால் அதை முதல் அமைச்சர் அவர்களிடம் வைத்து அதற்குப்பரிந்துரை செய்து எல்லாவிதமான ஒத்துழைப்பும் நடவடிக்கைகளும் என்னைப் பொறுத்தவரையில் நான் எடுக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.30]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுக்கு ஒரு மரம் நடவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை. ஆனால் அந்த மரத்தை இந்த அதிகாரிகள் வெட்டியிருக்கிறார்கள். பழையபடி அந்த வண்டுகள் அடுத்த மரங்களுக்கு போய் இருக்கின்றன. ஆதலால், அந்த மரங்களை வெட்டாமல், வண்டுகள் திரும்பத் திரும்ப வந்துவிடும். நம் கோட்டைக்கே வந்துவிடும், அப்படித் தாக்கினால் கோட்டையைத் தகர்க்க முடியுமா? ஆகவே, அந்த மரங்களை வெட்டாமல், எலிகாப்டர் மூலமாக பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளித்துக் கொல்ல அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மரங்களையும் வெட்டாமல், ஒன்றிரண்டு மரங்களை வெட்டி, அதற்கு எந்த அளவுக்கு



மரங்களை வெட்ட வேண்டுமோ, அந்த அளவில் குறைந்தபட்ச மரங்கள்தான் வெட்டப்பட்டிருக்கின்றன. அதே நேரத்திலே மரங்களை நடவேண்டுமென்பதற்கு ஆதரவாக, அதற்கு எந்த விதமான குந்தகமும் இல்லாமல் நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது.

7. அரசினர் சட்ட முன்வடிவு.

அடகுக் கடைக்காரர்கள்–கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள்—கடன் நிவாரணச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

8. வரவு-செலவுத் திட்டம், 1980–81 வாக்கெடுப்பு—
(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை

(ஆ) கோரிக்கை எண் 18—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

கோரிக்கை எண் 20

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 58,41,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

திரு. ப. சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 'விவசாயிகளுக்குத் தேவையான ஆயில் எஞ்சின்களுக்கு டீசல் கிடைக்காததைப் பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 20— வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 58,41,63,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, 'தரமான, நல்ல முனைப்புத் திறன் உள்ள விதைகளை மட்டுமே விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டுமென்பது பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 20— வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 58,41,63,000 -ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: பேரவைத் தலைவர் அவர்களே, 'பூச்சி கொல்லி மருந்துகளுக்கு மான்யம் வழங்காதது பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 20— வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 58,41,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 'வேளாண்மை பொருள்களை அதிக அளவில் உற்பத்தி செய்வது சம்பந்தமாக விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 20ப் வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 58,41,63,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, 'To discuss policy' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 20— வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 58,41,63,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்'',



திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் குமரி மாவட்டத்தில் ஒரு வேளாண்மை கல்லூரி அமைக்காதது குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 20— வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 58,41,63,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

## கோரிக்கை எண் 48

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,10,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

திரு. சு. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 48— வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,10,28,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. கே. எம். தங்கமணி: பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வேட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 48— வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,10,28,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசாங்கமே விதைப் பண்ணைகள் முழுவதையும் ஆரம்பிக்காதது பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 48— வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,10,28,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 48— வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,10,28,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

திரு. பொ. விஜயராகவன்: பேரவைத் தலைவர் அவர்களே, 'To discuss policy' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 48— வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,10,28,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, *விவர அறிக்கைகளை நான அவைமுன் வைத்திருக்கிறேன். அதை நான் படித்ததாக எடுத்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச்சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு நிறைய பேர்கள் பேசுவதற்கு பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். நேரம் 10½ ஆகிவிட்டது. ஆகவே உறுப்பினர்கள் தங்களுடைய பேச்சுக்களை சுருக்கமாக பேசி முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, திரு. இராசமாணிக்கத்தைப் பேச அழைக்கிறேன்.

*திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நான் பேசத் தொடங்குவதற்கு முன்னால் என்னை மீண்டும் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுத்த குத்தாலம் தொகுதி 44.254 வாக்காளர்களுக்கும், நான் சார்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இந்த வேளாண்மைத் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு முன்னால் உறுப்பினர்கள் படித்து புரிந்து கொள்ளக் கூடிய அளவில் கொடுக்கப்படுகிற கொள்கை விளக்கக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு குறைந்தது இரண்டு தினங்களுக்கு முன்பாக

---

@416 490, 50.3 ஆம் பக்கங்களில் இணைப்பு I, II, III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



வாவது அனுப்பவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அமைச்சர்களுக்கு அறிவுரை வழங்கியும், இந்த மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்புகள் எனக்கு நேற்று இரவு 11 மணிக்குத்தான் கிடைத்தன. பேரவைத் தலைவர் அவர்கள் அமைச்சர்களுக்கு வழங்கிய அறிவுரையை மதிக்காமல், எங்களையும் மதிக்காமல் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகள் தாமதமாக வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே, அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு எங்களுக்குப் பயன் படாத காரணத்தால் எங்களுக்குப் பயன்படாத கொள்கை விளக்கக் குறிப்பை நான் இந்த அவையில் கிழித்தெறிந்துவிட்டு அதற்குப் பின்னர் நான் பேச முற்படுகிறேன். (புத்தகத்தைக் கிழித்தெறிந்தார்).

விவசாயத் துறை பற்றி இரண்டு மானியக் கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கோரிக்கைகள் தமிழகத்தின் மிகச்சிறந்த வேளாண்மைத் துறை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் ஆகும். அதற்காகக் கோரப்பட்டிருக்கும் தொகை—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 58,41,63,000 ஆகும். அதைப்போல் வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் கோரப்பட்டிருக்கும் தொகை ரூ. 2,10,28,000 ஆகும். ஆக மொத்தமாக 60,51,91,000 ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. மிக முக்கியமான வேளாண்மைத் துறைக்கு இவ்வளவு குறைவான தொகை கோரப்பட்டிருப்பது வருந்தத்தக்கது. இது போதுமானது அல்ல என்பதை ஆரம்பத்திலேயே தெரிவித்துக் கொள்ளக்கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைய தினம் இந்த அவையில் வேளாண்மை துறை மானியத்தின்மீது நானும் சிறு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை]

1980–81-ல் இந்த ஆட்சியில் வெளிநாடுகளுக்கு கியூபா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு 50,000 டன் அரிசியை ஏற்றுமதி செய்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடிய மகிழ்ச்சிகரமான சேதியாகும். இந்தப்பெருமையெல்லாம் யாரைச் சாரும்? இப்படி வெளிநாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்கியது யாரோ அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்குத்தான் இந்தப் பெருமை சாரும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் உணவு உற்பத்தி பற்றாக்குறையாக இருந்த நேரத்தில் 1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப் பொறுப்பேற்றது. அன்றைய தினம் தமிழக முதலமைச்சராக பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்

கொண்டார்கள். அன்றைய தினம் அரிசி கிடைக்கவில்லை. அரிசி கிடைக்காத நேரத்தில் தமிழகத்தின் விவசாயப் பெருங்குடி மக்களைப் பார்த்து அண்ணா சொன்னார்-உங்களை நம்பித்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறேன். தமிழகம் பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது, உணவு உற்பத்தியைப் பெருக்கித் தாருங்கள் என்று சொன்னார்கள்.

அண்ணா அவர்களுடைய வாக்குறுதியை நம்பி அன்றைய தினம் விவசாயப் பெருங்குடி மக்கள் ஒரு போகத்தை இரு போகமாகவும், இரு போகத்தை முப்போகமாகவும் மாற்றினார்கள். அதன் காரணமாக தமிழகத்தின் உணவு நிலைமை திருப்திகரமாகி தன்னிறைவு பெற்றது என்பதை மறந்து விடக்கூடாது. அண்ணா அவர்கள் சொன்ன வாக்குறுதியை காபந்து செய்தார்கள். விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன்களைக் காலாகாலத்தில் தந்தார்கள். விவசாயிகளுக்கு பூச்சி மருந்து, உரம் போன்றவை எல்லாம் மலிவு விலையில், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையில் வழங்கினார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய நெல்லுக்கு நியாயமான விலை வழங்கவேண்டுமென்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது வண்டிச் சத்தம், போனஸ் போன்றவற்றைக் கொடுத்ததன் மூலம் மத்திய சர்க்கார் கொடுத்த விலையை விட 15 ரூபாய் அதிகமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டது என்பதை யாரும் மறந்து விடுவதற்கில்லை.

[முற்பகல் 10.40]

[மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை]

விவசாயிகளுக்குத் தேவையான நன்மைகளைச் செய்து கொடுத்ததன் காரணமாகத்தான் இன்றைய தினம் தமிழகம் உணவிலே தன்னிறைவு பெற்று வெளிநாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியை ஈட்டுத் தரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது நாம் திராவிட முன்னேற்றக் கழகத்தையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, உழவுத் தொழில் ஒரு சிறப்பான தொழில் ஆகும்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்."

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே வள்ளுவர்



இன்றையதினம் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? மிகச் சிறப்பான உழவுத் தொழிலைச் செய்துகொண்டிருக்கின்ற விவசாயிகள் இன்றையதினம் கையிலே கொடியோடு ஊர்வலமாக வந்து தங்களுடைய கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் புனிதமான தொழிலைச் செய்யக்கூடியவர்கள். நாட்டுக்கு உணவு உற்பத்தியைச் செய்யக் கூடியவர்கள். அவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக இந்த ஆட்சியிலே கேட்பாரற்றுக் கிடக்கும் அவர்கள் கையிலே கொடி பிடித்து ஊர்வலமாக வந்து எங்களுடைய கடன்களைத் தள்ளுபடி செய்யுங்கள், எங்களைக் கடன்காரர்களாக ஆக்காதீர்கள், எங்கள் கடன் சுமைகளை இறக்கிவையுங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமையை ஏற்படுத்திய பெருமை இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியைத்தான் சேரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த அளவிற்கு விவசாயிகளை ஆளாக்கியதற்கு என்ன காரணம் என்பதைத் தயவு செய்து நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கூட இரண்டு தினங்களுக்கு முன்னாலே சொன்னார்கள்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

என்று சொன்னார்கள். அந்த நல்லார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் தான் 1977 ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களிலே தமிழகத்திலே மிக அதிகமான அளவிற்கு மழையும், பெரு வெள்ளமும் புயலும் ஏற்பட்டு தமிழகமே ஒரு மாத காலம் துயரத்திலே இருந்தது என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. நூற்றுக்கணக்கானோர் அப்போது இறந்துவிட்டார்கள். அது வரலாறு ஆகும். தமிழகத்திற்கு அப்போது ஏற்பட்ட சேதம், விவசாயிகளுக்கு பயிர் மூலமாக கிட்டத்தட்ட 41.81 கோடி ரூபாய் இழப்பும், விவசாயிகள் ஆடுமாடுகள், கோழிகள், வீடுகள் போன்றவற்றிற்கு ஏற்பட்ட மொத்தச் சேதம் 83,37 கோடி இழப்பும் ஆகும். இப்படி ஒரு பெரிய இழப்புக்கு தமிழக மக்கள், குறிப்பாக விவசாயிகள் 1977ஆம் ஆண்டிலே அக்டோபர், நவம்பர் மாதங்களிலே பெய்த பெருமழையினால் ஏற்பட்ட இழப்பிற்கு ஆளானார்கள். இதைத்தவிர தனியார்களுக்கு ஏற்பட்ட சேதம் 150 கோடி ரூபாய் இருக்கும். இவ்வளவு பெரிய இழப்பிற்கு ஆளான காரணத்தினால்தான் அப்போது வாங்கிய கடன்களை, பட்ட கடன் சுமைகளை, வாங்கிய கூட்டுறவுக் கடன்களை தாங்கிக் கொள்ளமுடியாத நிலையில் அவர்கள் அதிலிருந்து விடுவித்துக் கொள்ளமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் ஏற்பட்ட வறட்சியாலும், மழையாலும் பாதிக்கப்படுகிற அளவுக்கு இருக்கின்ற விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பது நம்முடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

நம்முடைய முதலமைச்சர் தேர்தல் நேரத்திலே என்ன என்ன வாக்குறுதிகளைத் தந்தார்கள். மக்களை ஏமாற்றக்கூடிய முறையிலே பல வாக்குறுதிகளைத் தந்திருக்கிறார்கள். விவசாயிகளுடைய கடன்கள் அனைத்தையும் ரத்து செய்வேன் என்று சொன்னார்கள், விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு நியாயமான விலையைக் கொடுப்போம் என்றார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு வயதான காலத்திலே ஓய்வூதியம் தரப்படும் என்றார்கள். வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு வேலையில்லாத காலத்திலே நாளொன்றுக்கு ஒரு ரூபாய் கொடுப்பேன் என்றார்கள், 5 கிலோ அரிசி வாங்கினால் அவர்களுக்கு 1 கிலோ அரிசி இனாமாகத் தருவேன் என்றார்கள். இப்படி ஏராளமான வாக்குறுதிகளை அள்ளி வீசிய முதலமைச்சரைப் பார்த்து தான் இன்றைக்கு விவசாயிகள் கேட்கிறார்கள். முதலமைச்சரவர்களே, நீங்கள் சொன்ன வாக்குறுதிகளைக் காபந்து செய்யக் கூடியவராக இருந்தால், நீங்கள் சொன்னீர்களே விவசாயக் கடன்கள் அத்தனையையும் ரத்து செய்வோம் என்று, அந்த அடிப்படையில் நீங்கள் கடன்களை ரத்து செய்து தாருங்கள் என்று கேட்கிறார்கள்.

ஆனால் நம்முடைய அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், கூட்டுறவுக் கடனில் முழுவதையும் ரத்து செய்ய முடியாது, ஒரு பகுதியைத்தான் ரத்து செய்வோம் என்று இப்பொழுது சொல்கிறார்கள். மேட்டூர் அணை திறந்து விடப்பட்டு, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் காவிரியிலே வந்து தஞ்சை மாவட்டத்தில் உள்ளவர்கள் வேளாண்மை வேலையைத் துவங்கி ஒரு மாதம் ஆகிறது. கூட்டுறவுக் கடன்களை நம்பி அவர்கள் தங்கள் வேளாண்மையைத் துவங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கூட்டுறவுக் கடன்களை வழங்க இன்னும் எந்தவிதமான முன்னேற்பாடுகளும் அந்தப் பகுதியில் செய்யப்படவில்லை. இதற்கு என்ன காரணம்? அவர்களுக்குக் கூட்டுறவுக் கடன்களை வழங்க வேண்டிய கடமை இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தது. அதை ஏன் செய்யவில்லை என்று சொல்லும் பொழுது ஒன்றைச் சொல்கிறார்கள். விவசாயிகள் கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முன்வரவில்லை. கூட்டுறவுச் சங்கங்களிலே அதிகமான அளவிற்குக் கடன் நிலுவையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதற்கு யார் பொறுப்பு என்பதைத் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் பிரசாரத்தின் மூலம்தான் கூட்டுறவுக் கடன்கள் வசூலாகாமல் இருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் ஒரு வருஷத்திற்கு முன்னாலே வந்தார்கள். அப்பொழுது அவர்களிடத்தில் மக்கள் வீடு இனாமாக கட்டிக்



கொடுக்க கேட்டு மனுவைக் கொடுக்கிறார்கள். அந்த மனுவை தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் பார்த்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் இனாமாக வீடு கட்டிக் கொடுத்தார்கள், நாங்கள் அப்படிக கடன் கொடுப்பது என்றால் அது முடியாத காரியம், 5,000 ரூபாய் கடன் தருகிறோம், அதை வாங்கி வீட்டைக் கட்டிக்கொள்ளுங்கள் என்று மேடையிலே பேசுகிறார்கள். உடனே அங்கேயிருக்கின்ற மக்களில் சிலர் சிரிக்கிறார்கள். அதைக்கண்டதும் அமைச்சரவர்களுக்குக் கோபம் வந்து விடுகிறது. ஏன் சிரிக்கிறீர்கள் என்று கேட்டுவிட்டு, நாங்கள் கொடுப்பது கடன், அதை நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள், பிறகு அதை வசூல் செய்ய வருவார்கள், அப்படி வசூல் செய்ய வருகின்றபொழுது, உங்கள் எம்.எல்.ஏ.—வினிடத்தில் சொல்லி சட்டசபையில் பேசச்சொல்லுங்கள், அவர் சட்டசபையில் பேசுவார், பிறகு அது தள்ளுபடி செய்யப்படும் என்று சொல்லி, எங்களுடைய புரட்சித்தலைவரவர்கள் கொடுத்துப் பழக்கப்பட்டவரே தவிர, வாங்கிப் பழக்கப்பட்டவர்கள் அல்ல என்று மேடையிலே பேசுகிறார்கள். இவ்வாறு மக்கள் கை தட்ட வேண்டுமென்பதற்காகப் பேசுகிறார்கள்.

நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப் பேசுவதால் மற்றவர்களுடைய எண்ணத்தைத் தவறான முறையில் திசை திருப்புவதாக அமைந்து விடுகின்றது.

அது மட்டுமல்ல, இன்னும் பல்வேறு நிலைமைகளை நான் இந்த அவையிலே பேசியாக வேண்டும். இருந்தாலும், நேரம் ஆகிவிட்டது என்ற காரணத்தால் விவசாயிகளுக்குத் தேவையான சில காரியங்களைப் பற்றி மட்டும் சொல்லி என்னுடைய பேச்சை நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, விவசாயிகளுக்கு டிராக்டர்களைக் குறைந்த வாடகையில் வழங்க வேண்டும்.

திரு. கோவைத்தம்பி: தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினரவர்கள் விவசாயி விவசாயி என்று குறிப்பிடுகின்றார்கள். விவசாயி என்று சொன்னால் அவர்கள் பூண்டி வாண்டையாரா, நெடும்பலத்தாரா, பர்சுத்தாரா அல்லது வடபாதி மங்கலத்தாரா? எப்படிப்பட்ட விவசாயிகளின் பிரச்னைகளைக் குறிப்பிடுகிறார்கள் என்று அறிவிக்க வேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, நான் குறிப்பிடுவது சினிமாவிலே நடித்த விவசாயியை அல்ல; என்னைப் போல விவசாய வேலையிலே ஈடுபட்டு உழைக்க கூடிய விவசாயியைத்தான் விவசாயி என்று குறிப்பிடுகிறேன். இதற்கெல்லாம் நேரம் அதிகமாகக் கொடுத்தால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சினிமாவில் நடித்த விவசாயியைப்பற்றிக் கவலையில்லை. அவருக்கு இந்த அரசு எந்த மானியமும் வழங்கவில்லை. ஆனால் மாரீஸ் ஹோட்டலிலும், சோழா ஹோட்டலிலும் தங்கிக்கொண்டு பென்ஸ் காரிலே வரக்கூடிய விவசாயிகளுக்கு வக்காலத்து வாங்குகிறார்களா? இந்த வரவு—செலவுத் திட்டத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவரவர்கள் ஏழை விவசாயிகளுக்குச் சலுகைகள் வழங்கியிருக்கிறார். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது எந்த விவசாயிகள் என்பதைத் தெரிவிக்கும்படி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு.க.அன்பழகன்: தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ற பெயரில் இப்படியொரு கேள்வி வருமானால், உறுப்பினரவர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டு வருவது, இரண்டு ஆயிரம், மூன்றாயிரம், நான்காயிரம் ரூபாய் கடன் வாங்கிய ஏழை விவசாயிகளைப்பற்றித்தான் அவர்களுடைய முழுப்பேச்சையும் விட்டுவிட்டு, விவசாயி என்ற ஒரு சொல்லை மட்டும் தனியாக வைத்துக்கொண்டு வாதத்தைக் கிளப்புவதாக இருந்தால், இந்த அரசாங்கக எந்த விவசாயிகளுக்காக அறிக்கை தந்திருக்கிறதோ அந்த விவசாயிகளைப்பற்றித்தான்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, விவசாயிகள் உழுவதற்கு இன்றையதினம் டிராக்டர்களைக் குறைந்த வாடகைக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் டிராக்டர்கள் வழங்க வேண்டுமென்று தான் வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுப் பணி மையங்கள் தொடங்கப்பட்டன. அதை யார் எங்கே பயன்படுத்துகிறார்கள் என்று தெரியவில்லை. இதைக் கண்காணித்து ஏழை எளிய விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் அவைகளைப் பயன்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.50]

அடுத்து, தென்னை வளர்ப்பது. தென்னை வளர்ப்பது என்பது ஒரு லாபகரமான தொழிலாகும். முன்னாலிருந்த ஆட்சிக் காலத்தில் தென்னை வளர்ப்பதற்கு, சாலைகளில் தென்னை வைக்க, மூன்றில் இரண்டு பங்கு மானியம் கொடுத்து அந்தத் திட்டத்தை உருவாக்கினார்கள். அந்தத் திட்டம் இன்றையதினம் செயல்படாமல் இருக்கிறது. ஆகையினாலே, ஊராட்சிமன்றங்கள் மூலமாக, ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக, சாலை ஓரங்களில், தென்னை வளர்க்க மூன்றில் இரண்டு பங்கு மானியம் கொடுத்து, அவைகளை ஊக்குவிக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல், பசுந்தாள் உரம். பசுந்தாள் உரம் என்பது மிக முக்கியமான ஒரு உரமாகும். அந்த உரத்தை உற்பத்தி செய்வதற்குக் கூட, முன்னாலிருந்த அரசாங்கங்கள் மூன்றில் இரண்டு பங்கு மானியம் கொடுத்தன. இன்றையதினம் அது நிறுத்தி வைக்கப்பட்டது. அந்த முக்கியமான பசுந்தாள் உரத்தை உற்பத்தி செய்ய, அந்த மானியத்தை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்னை. குத்தகை விவசாயிகளுக்கு ஆயில் இன்ஜின் வாங்குவதற்கு, மோட்டார் அமைப்பதற்கு, ஆழ் கிணறு தோண்டுவதற்குக் கடன் வழங்கப்படுவதில்லை. குத்தகை விவசாயிகளுக்கும் அரசாங்கத்தின் மூலமாகக் கடன் வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டம் விவசாயிகள் அதிகமாக உள்ள மாவட்டம். அங்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு 6 மாதத்திற்குத்தான் வேலை. 6 மாதகாலம் அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லா நாட்களும் வேலை கிடைக்கும் வகையில் ஒரு சிறு தொழிற்சாலையை குத்தாலம் ஒன்றியம் குடவாசலில் துவங்க வேண்டியது அவசியமாகும். அதை அரசு உடனடியாகத் துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உங்கள் மூலமாக, விவசாயிகளுக்காக, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, கூட்டுறவுக் கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும். நிலவரி பாக்கி அனைத்தையும் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உபரிநிலம் அடமானம் பெற்றவர்கள் ஏழை விவசாயிகள்; அவர்கள் இரண்டு ஆண்டுக்காலமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் செலுத்த வேண்டிய தொகையை அரசுக்கு செலுத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களிடத்திலே ஜப்தி செய்து வசூல் செய்கிறார்கள். ஆகவே, அந்த ஏழை விவசாயிகள் அடமானம் பெற்ற நிலத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூச்சிக்கொல்லி மருந்து, இரசாயன உரங்களை, மானிய விலையில், அரசின் மூலமாக, ஏழை விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, அண்ணா அவர்கள் சொன்னார்கள். உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்று. அந்த அடிப்படையில் உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்கித் தர வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் வேளாண்மை நிறைந்த மாவட்டம். அந்த மாவட்டத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தை-பெரிய மாவட்டமாக இருப்பதால்-இரண்டாகப் பிரித்து, கீழத் தஞ்சைக்குப் பூம்புகார் மாவட்டம் என்று பெயர் சூட்ட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

என்னுடைய குத்தாலம் தொகுதிக்குத் தேவையான காரியங்களைச் செய்ய வேண்டுமாய், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அமைச்சரை கேட்டுக்கொண்டு, இந்த வேளாண்மை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, ஆளுங்கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்களை, பொதுமக்கள் மத்தியில் கேவலப்படுத்துகின்ற முறையில், மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் என்றோ ஒரு நாள் பேசும் பொழுது, நீங்கள் கிணறு வெட்டுவதற்கோ, அல்லது வேறு எந்த காரியத்திற்கோ, வீடு கட்டுவதற்கோ, கடன் வேண்டுமானால் சர்க்காரிடம் ரூ.5,000 பெற்றுக் கொள்ளுங்கள், முந்தைய அரசு மாதிரி கிடையாது. இது கொடுத்துச் சிவந்த கரத்தை உடைய அரசு, ரூ.5000 நீங்கள் கடனைப் பெற்றுக்கொண்டு, திருப்பிக் கேட்டால் உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களிடம் சொல்லி, அந்தப் பணத்தை நீங்கள் கட்டாமலிருக்க சட்டமன்றத்தில் வாதாடுவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று பேசி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த எல்லா கடன்களுமே வசூல் ஆகாமல் இருப்பதற்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் காரணம் என்று சொல்கிறார்கள் என்றால், அப்படிப்பட்ட ஆதாரத்தை, அவர் மற்றவர்கள் மூலமாகக் கேட்டுச் சொல்கிறார்களா, அல்லது அவர் நேரடியாக ஏதாவது ஒரு ஆதாரத்தோடு பேசுகிறாரா என்பதைத் தயவுசெய்து விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு.ப.பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர் எந்த விதியின் கீழ் பேசுகிறார்?

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா): நீங்கள் உட்காருங்கள், அவர் பதில் சொல்ல, தயாராக இருக்கிறார்,



திரு. இரெ. இராசமாணிக்கம்: நான் சொல்வது ஆதாரத்தின் அடிப்படையில்தான் சொல்லுகிறேன். அந்த விழாவில் நானும் கலந்து கொண்டேன். என்னை வைத்துக் கொண்டு தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆதாரம் இருக்கிறது. வேண்டுமானால் ஒரு விசாரணைக் கமிஷன் வைத்து விசாரித்தால் அதன் மூலம் உண்மையைப் புரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. து. புருஷோத்தமன்: தலைவர் அவர்களே, அவர் பேசிக்கொண்டிருக்கிறார், அவரைப் பேசவிடுங்கள்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா): அவர் விளக்கம் கொடுத்து உட்கார்ந்துவிட்டார். நான் நிரூபிக்கத் தயார் என்று சொல்லி உட்கார்ந்துவிட்டார். அடுத்து திரு. வீராசாமி அவர்கள்.

திரு. த. வீராசாமி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1980-81ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு முன்பு என்னை அரசியலில் ஆளாக்கி வங்கக் கடலோரத்தில் மீளாத் துயில் கொள்ளும் திராவிடத் தலைவன், அறிவின் பெட்டகம், பகுத்தறிவுப் பகலவன், தென்னாட்டுப் பெர்னாட்சா, இந்நாட்டு இங்கர்சால், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என் இதயத்தை காணிக்கையாக்கி, 1977 ஆம் ஆண்டு தேர்தலில் கார் விபத்துக்கு உள்ளாகி வாய்ப்பினை இழந்தாலும், தியாகத்தை மறவாது இம் மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முடியாத நிலையிலும் முறையாகக் கடமையை ஆற்றுவேன் என்ற நம்பிக்கையோடு வாக்களித்து வெற்றி பெறச் செய்த ஓரத்தநாடு தொகுதி வாக்காளப் பெருமக்களை இருகரம் கூப்பி வணங்கி, என் கன்னிப் பேச்சைத் துவக்குகின்றேன்.

'' சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை'' என்று வள்ளுவர் கூறினார்,

உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி என்றும் உழுகின்ற விவசாய பெருமக்களைப் பற்றி வள்ளுவர் கூறி இருக்கிறார். ''வரப்புயர்க'' என்று ஔவைப் பிராட்டியார் வாழ்த்தியதிலிருந்து ஒரு நாட்டினுடைய பொருளாதார உயர்வுக்கும், முன்னேற்றத்திற்கும் வேளாண்மைத் தொழில் இன்றியமையாதது என்பதை நம்முடைய தமிழகத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறோம். அப்படிப்பட்ட வேளாண்மைத் தொழிலின் உண்மையை உணர்ந்து தமிழகத்திலே இன்று விஞ்ஞான ரீதியாக நம்முடைய விவசாய

உற்பத்தியைப் பெருக்கச் செய்யவேண்டும் என்பதற்காக சுதந்திரத்திற்குப் பிறகு நம்முடைய நாட்டை ஆண்டவர்கள் பல முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

Land, Labour, Capital and Organisation என்ற நிலையை முழுமையாக நம்பி, நிலம்தான் பிரதான உற்பத்தி உபகரணமாகும் என்பது உண்மையாகும். அப்படி ஒரு பொருளை உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தியைப் பெருக்கி, வறுமையைப் போக்கவேண்டும் என்றால், உற்பத்தி உபகரணங்களைச் சீரமைத்தால்தான் விவசாய உற்பத்தி பெருகும் என்ற அளவிலே நிலச் சீர்த்திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள், பெருகி வருகிற இந்த மக்கள் பெருக்கத்தில் ஒரு சிலருடைய கையிலே மட்டும் நிலப் பெருக்கம் இருக்கக் கூடாது என்ற அடிப்படையிலே நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள்.

The man behind the plough must be the owner-Tiller must be the owner என்ற அடிப்படையிலே, நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து உழுகின்றவனுக்கு நிலம் கொடுத்து உதவி புரிகின்ற வகையில் அந்தச் சட்டத்தை இயற்றினார்கள். அது மட்டுமல்ல, விவசாயத்திற்கு வேண்டிய பணம், உரம், விதைகள் போன்றவற்றை கூட்டுறவுத் துறையின் மூலமாக வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அடுத்து விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீர் வசதி, கிணறுகளுக்குப் பம்பு செட்டுகள் போன்றவைகளை நிலவள வங்கிகள் மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய உதவியைப் பெருக்கி. வறுமையைப் போக்கிட வேண்டுமென்றால் உற்பத்தி உபகரணங்களை சீரமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் இத்தனை காரியங்களும் செய்யப்பட்டது என்பது நாம் அறிந்த உண்மையாகும்.

[முற்பகல் 11.00]

நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு இருந்த போதிலும், அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்கள் சிலரைப் பாதுகாக்க வேண்டும் என்ற காரணத்திற்காக அதிலே சில ஓட்டை உடைசல்களை ஏற்படுத்தினார்கள். அதன் காரணமாக உழுபவனுக்கு நிலம் சேராத காரணத்தால், உற்பத்தி அதிகரிக்கவில்லை என்பதையும் நாம் அறிவோம். அதன் காரணமாக, பசி, பட்டினி, பிணி போன்றவைகள் தலைவிரித்தாடின.

அதற்குப் பிறகு நம்முடைய நாட்டிலே புரட்சித் தலைவர் ஆட்சி அமைந்த பிறகு, உழுபவனுக்கு நிலம் கொடுக்கும் வகையிலும், குத்தகைதாரர்களைப் பாதுகாக்கின்ற முறையிலும் பல்வேறு சட்டங்கள் கொண்டு வந்தார்கள். முதலிலே நிலச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்து, அந்த நிலத்தை நிலம் இல்லாதவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வகையில் சட்டத்தை



இயற்றி, நிலத்தைப் பகிர்ந்தளித்ததின் மூலம் புரட்சித்தலைவர் அவர்கள் தன்னுடைய ஆட்சி காலத்தில் இந்த நாட்டில் இருந்த உணவுப் பற்றாக்குறையைப் போக்கி, இன்றைக்கு தன்னிறைவு பெற்ற தமிழகமாக மாற்றி க்யூபா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். தமிழகத்தை ஒரு சர்ப்ளஸ் ஸ்டேட் என்ற வகையில் மாற்றியிருப்பதற்காக நான் புரட்சித் தலைவர் அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன்.

இன்றைக்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தமிழக அரசு அதுவும் புரட்சித் தலைவர் அரசு—விவசாயப் பெருங்குடி மக்களுக்கு என்னென்ன காரியங்களைச் செய்தார்கள் என்கிற வகையில் குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். நான் இந்தச் சபையில் ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன்.

புயல் வெள்ளத்தால் இந்த நாட்டில் உள்ள மக்கள் அல்லல் உறுவது மண் தோன்றிய காலத்தில் இருந்து, மனிதன் தோன்றிய காலம் வரையில் இருந்து வருகிற ஒன்றாகும். விவசாயத்தைப் பற்றிச் சொன்னால் ''அக்ரிகல்சர் ஈஸ் எ காம்பிளிங் இன் தி மான்சூன்—அல்லது—வாகரீஸ் ஆப் மான்சூன்'' என்று சொல்லுவார்கள். இயற்கை சூழலுக்கு ஏற்ற வகையில், இயற்கையின் நிலைமைகளுக்கு ஒட்டி செய்யப்படுகிற தொழில்தான் விவசாயம் என்று சொல்வார்கள். விவசாயிகளைப் பொறுத்தவரையில், புயல், வெள்ளம் ஆகியவற்றின் கோரப் பிடியில் இருந்து தப்பிக்க வைத்த பெருமை புரட்சித் தலைவர் அவர்களையே சாரும். புரட்சித் தலைவர் செய்தது போல் எந்த ஆட்சியாளரும் செய்திடவில்லை. அப்படிப்பட்ட முறையில் நல்ல பல வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுத்து இருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் 1952—ம் ஆண்டில் முதல் அமைச்சராக இருந்தபோது, வெள்ளம், புயல் ஏற்பட்டது. 1954—ம் ஆண்டில் பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது வெள்ளம் புயல் ஏற்பட்டது. தமிழகத்தில் உள்ள தென் மாவட்டங்களில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பெருத்த நஷ்டத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். அவர்களுடைய பயிர்கள் எல்லாம் நாசமாக்கப்பட்டன. பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஆடுகள் கடலில் இழுத்துச் செல்லப்பட்டன என்பதை நாடு அறியும். அப்படிப்பட்ட நேரத்தில்—புரட்சித் தலைவர் ஆட்சி 1977–78—ல் செய்ததைப் போல்—அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக, 1966- ஆம் ஆண்டு என்று கருதுகிறேன்; பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தார்கள். அப்போதும் இந்த நாட்டின்

வரலாற்றிலே காணாத அளவிற்கு பெருத்த வறட்சி ஏற்பட்டது. கிராமத்தில் உள்ள பெண்கள் எல்லாம் அன்று பிரேதத்தைப் போல் பொம்மையைச் செய்து சுடுகாட்டிற்கு எடுத்துச்சென்று, ஒப்பாரி வைத்து அழுது, மழையை வரவழைக்கும் நிலை எல்லாம் நாம் பார்த்தோம். அப்படிப்பட்ட நேரத்தில் கூட—புரட்சித்தலைவர் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டது போல்—பெரியவர் பக்தவச்சலம் ஆட்சியில் காரியங்கள், விவசாயிகளுக்கு உதவிகள் செய்யப்படவில்லை என்பதை மெத்தப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், 1972–ம் ஆண்டில் மாண்புமிகு கலைஞர் ஆட்சியில் பெரிய வறட்சி ஏற்பட்டது. அந்த வறட்சியின் போது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பல காரியங்களைச் செய்தார்கள். அப்படிப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவிகரமான காரியங்கள் ஒட்டு மொத்தமாக எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கிற வகையில் செய்யவேண்டும். ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், அவர்கள் கட்சிக்காரர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ அவர்களுக்கு உதவும் வகையில் செய்தார்கள். இந்தக் கிராமத்திற்குச் செய்தால், வரும் காலத்தில் நமக்கு இந்த நன்மைகள் கிடைக்கும் என்ற வகையில் கணக்குப் போட்டு அவர்கள் வரி தள்ளுபடி செய்தல், கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்தல் போன்றவற்றைச் செய்தார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு ஒன்றுதான் 1977 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு தமிழ்நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டபோது அண்டை மாநிலமான கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு தேவராஜ் அர்சு அவர்களுடன் சுமுகமாகப் பேச்சுவார்த்தை நடத்தி, தமிழ்நாட்டில் வறட்சியைப் போக்க தண்ணீர் கொண்டுவந்தார்கள். அதற்குப் பின்னாலே தண்ணீர்ப் பஞ்சம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு 1977, 1978–ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வெள்ளம் வந்தது, புயல் வந்தது. அப்போது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்தார், ஏழை எளிய மக்களைப் பார்த்தார், விவசாயப் பெருங்குடி மக்களைப் பார்த்தார். அதற்கு முன்னால் இருந்த அரசு செய்ததைப்போல செய்யாமல், கட்சிக் கண்ணோட்டம் பாராது, அரசியல் பாராது, பாதிக்கப்பட்ட மக்களைப்பார்த்து, அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு தண்ணீர் தீர்வை போன்ற வரிகளை தள்ளுபடி செய்தார். அதற்கு மேலாக, அரசுக் கடனை, கூட்டுறவுக் கடன்களை ஒத்திவைத்து, விவசாயப்



பெருங்குடி மக்கள், ஏழை எளிய மக்கள் திருப்பிச் செலுத்தக் கூடிய வகையில் 3 ஆண்டு, 5 ஆண்டு காலத்தில் திருப்பிச் செலுத்த வழிவகைகளைச் செய்தார் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி இங்கே பேசியவர்கள் ஏதோ கொடிபிடிக்க வேண்டும்; அரசியலுக்கு ஆதாயம் தேடவேண்டும் என்ற நோக்கத்தோடு சில வற்றை அறிவித்திருக்கிறார் என்று சொன்னார்கள். புரட்சித் தலைவர் எம்,ஜி.ஆர். அவர்கள் இந்த நாட்டில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்; இந்த நாட்டு மக்களின் வறுமையைப் போக்க வேண்டும்; இந்த நாட்டிலே பட்டினிச் சாவைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்; இன்றைக்கு நல்ல பல காரியங்களை விவசாயப் பெருங்குடி. மக்களுக்கு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இதுவரையில் எந்த அரசும் செய்யாத அளவுக்கு, தமிழகத்தின் வரலாற்றிலே இல்லாத அளவுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உழைத்து, உழைத்து ஒட்டாண்டியான விவசாயப் பெருங்குடி மக்களின் குறைகளை ஆராய்ந்து அறிந்து கொள்ள ‘ஹை பவர் கமிட்டி, என்று சொல்லக்கூடிய உயர் மட்டக் குழுவை அமைத்தார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அந்த உயர்மட்டக் குழு அறிக்கை தந்த பிறகு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 40 கோடி ரூபாய்க்கு சலுகை அளித்த ஒரே அரசு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசுதான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, 5 ஏக்கர் நிலத்திற்கு உட்பட்டுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் கடனால் கட்டுண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கஷ்டத்தைப் போக்குகின்ற வகையிலே மத்திய அரசுக்கு பல தடவை தெரிவித்தும் போர் தொடுத்தும் அந்த அரசு செவிசாய்க்கவில்லை, இருந்தாலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு இன்றைக்கு ஏறத்தாழ 42 கோடி ரூபாய் அளவுக்கு ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களின் கடனை தள்ளுபடி செயதிருக்கிறது.

அது மட்டுமல்ல. 16 கோடி ரூபாய் அளவுக்கு தக்காவிக் கடனை தள்ளுபடி செய்திருக்கிறார். இந்த அளவுக்கு விவசாயப் பெருங்குடி மக்களின் கடனை தள்ளுபடி செய்தது இந்த புரட்சித் தலைவா எம்.ஜி,ஆர். அரசு ஒன்றுதான் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. த. வீராசாமி] [1980 ஜூலை 16

இங்கே இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். கிராமப்புறங்களில் இருக்கின்ற கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிலே தலைவர்களாக இருக்கின்றவர்கள் இன்று இந்த சலுகைகளை தவறான முறையிலே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். அங்கே இருக்கிற தலைவர்கள் ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களின் கையெழுத்தை வாங்கி அவர்கள் பெயரால் பணத்தை வாங்கி, அதை தங்களுடைய சொந்த செலவுக்காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இந்த கிராமக் கூட்டுறவு கடன் சங்கத் தலைவர்கள் ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் ரூபாய் அளவுக்கு அரசுக் கடனை பினாமி என்ற முறையில் கையாண்டிருக்கிறார்கள். இப்போது இந்த சலுகை காரணமாக ஏழை எளிய விவசாயிகள் கடன் தள்ளுபடி என்ற பெயரால் அந்த பெரிய விவசாயிகள், பினாமி முறையில் பணத்தை சொந்த செலவுக்கு எடுத்துக்கொண்டவர்கள் பயனடைகிறார்கள். நம்முடைய அரசு இதைக் கண்காணித்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

இது என்னுடைய கன்னிப்பேச்சு என்பதால் என்னுடைய தொகுதி பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தை தமிழகத்தின், ஏன் தென்னகத்தின், நெற்களஞ்சியம் என்று சொல்வார்கள். இன்றைக்கு தமிழகம் தன்னிறைவு பெற்றிருந்தாலும், மற்ற பல மாவட்டங்களில் உற்பத்திப் பெருகி, தன்னிறைவு பெற்றிருந்தாலும் கூட தென்னகத்தை பட்டினியிலிருந்து காப்பாற்றிய பெருமை தஞ்சை மாவட்டத்திற்கு உண்டு. அப்படிப்பட்ட தஞ்சை மாவட்டத்தில் நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. விவசாயத்தை நம்பியே வாழ்க்கை நடத்தும் விவசாயப் பெருங்குடி மக்கள், இயற்கை சூழல்களால் பாதிக்கப்படுகிற விவசாயப் பெருங்குடி மக்கள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். அவர்களுக்கு அத்தகைய நஷ்டம் ஏற்படாமல் இருக்க 'கிராப் இன்சூரன்ஸ்' திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கொண்டு வர இருக்கிறது. அந்த திட்டத்தை விரைவில் தமிழ்நாடு முழுவதற்கும் விரிவுபடுத்தவேண்டும். அதன் மூலம் கூட்டுறவுத் துறையிலே அனைத்து விவசாயப் பெருங்குடி மக்களும் கடன் பெற்று, நல்லமுறையிலே உற்பத்தியைப் பெருக்கி, பயனடைய தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நம்முடைய விவசாயத் துறை அமைச்சரவர்களையும், முதலமைச்சர் புரட்சித் தலைவரவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 16] [திரு. த. வீராசாமி]

(முற்பகல் 11.10]

அதற்கு மேலாக ஒன்றை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகத்தின் கீழ் 1969ஆம் ஆண்டு பசுமைப் புரட்சி என்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தத் திட்டம் 1969 முதல் 1976 வரை இலாபகரமாக இயங்கியது பல விவசாயிகளுக்கு டிராக்டர்கள் கொடுக்கப்பட்டது. அந்த வாடகை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் இன்று நட்டத்தில் இயங்குவதால் அதைத் தமிழக அரசு மூடிவிடுகின்ற அளவுக்கு பரிந்துரைகள் வந்ததாக கேள்விப்படுகிறேன். அந்த இணையகத்தை மூடிவிட்டு அங்கிருக்கின்ற அலுவலர்களை வேறு இடத்திற்கு மாற்ற இருப்பதாக அறிகிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள்.. (மணியடிக்கப்பட்டது)

*திரு. ஆர். தியாகராசன் : மரியாதைக்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே முதல்கட்டமாகப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த விருத்தாசலம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அளவுக்கு அரசியலிலே என்னை ஆளாக்கி இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கும் பாரத அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் சொல்லி இந்த விவசாய மானியக் கோரிக்கையின் மீது....

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்தச் சபையில் இல்லை. ஆகவே சபையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசலாமா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா): சபையில் இல்லாதவர்களைப் பற்றிக் குற்றச்சாட்டுகள்தான் சொல்லக்கூடாதே தவிர யாருடைய பெயரையும் உச்சரிக்கக் கூட கூடாது என்பதல்ல. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவரவர்களே, இந்த விவசாய மானியக் கோரிக்கையின் மீது எதிர்க்கட்சிக்காரர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற அந்த வார்த்தையை உறுதிப்படுத்தி இருக்கிறார்களே தவிர விவசாயிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கோரிக்கை வருகின்ற போது அவர்கள் பெரிய விவசாயிகள் என்றும் சிறிய விவசாயிகள் என்றும் வேறுபடுத்தி உழவுத் தொழிலுக்கு ஒருமித்த அளவில் இருக்கின்ற அவர்களின் கடன்களை தள்ளுபடி செய்வதற்குரிய முயற்சிகளைச் செய்வதை விட்டுவிட்டு--பாதிப்பு ஏற்படுகின்ற வகையில் அவர்களைப் பிரிக்கிறார்கள். விவசாயிகளின் உழைப்புக்கு

முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றே கருதுகிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே தமிழக விவசாயத்தை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு ஒரு பெரிய திட்டத்தைத் தீட்டி விவசாயிகளுக்கு நல்ல தரமுள்ள விதைகளையும் விவசாயக் கருவிகளையும் கொடுத்து அதையும் மானிய அடிப்படையிலே கொடுக்கின்ற அளவிலே ஒரு பெரிய திட்டத்தைத் தீட்டி விவசாயிகளுக்கு உதவி செய்தார்கள். அத்தனை உதவிகளையும் செய்த காரணத்தினால்தான் விவசாயம் நல்ல நிலையை அடைந்து விளை பொருட்கள் விளைந்து தமிழகம் தன்னிறைவு பெற்று மற்ற மாநிலங்களை விட, மற்ற நாடுகளை விட உயர்ந்து நின்றது என்பதை இந்த நாடு அறியும்.

அதற்குப் பின்னர், விவசாயிகளுக்கு ஏற்பட்ட பொருளாதார சூழ்நிலையின் காரணத்தினாலும், அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு தேவையான தண்ணீர் சரியான முறையில் கிடைக்காத காரணத்தினாலும், ஆழ் கிணறு தோண்டியதாலும் வருஷா வருஷம் நிலத்தடி நீர் கீழேயே போய்க் கொண்டிருக்கிற காரணத்தினாலும், அவர்களுக்கு சரியான விதைகள், விவசாயக் கருவிகள் எல்லாம் குறித்த காலத்திற்குள் கிடைக்காத காரணத்தினாலும், விவசாயிகளின் விளை பொருள்களுக்கு சரியான விலை நிர்ணயம் செய்யப்பெறாத காரணத்தினாலும், விவசாயிகள் இன்றைக்கு அவர்களுடைய தொழிலிலே மிகவும் பிற்பட்ட நிலையில் தள்ளப்பட்டு, கடன்பட்டு நிற்கிறார்கள் என்பதை இந்த நாடு மிகவும் நன்றாக அறியும்.

அவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் நோக்கத்தோடு இந்த அரசு சிறு விவசாயிகளுக்கு கடன்களைத் தள்ளுபடி செய்தது போலவே, எல்லா நடுத்தர, பெரிய விவசாயிகளுக்கும் தள்ளுபடி செய்ய வேண்டும். சாதாரணமாக கிராமங்களிலே உள்ள விவசாயிகள் அனைவருக்கும் அரசு குறிப்பிட்டிருக்கும் 2½ ஏக்கர் நன்செய் அல்லது 5 ஏக்கர் புன்செய் என்று பிரிக்காமல் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அடிப்படையில் மட்டுமே அவர்களின் கடன்கள் ரத்து செய்யப்படுமானால், விவசாயிகள் திறமையோடு தம் தொழிலில் ஈடுபட அது உதவி செய்யும் என்று நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

2½ ஏக்கர் நன்செய் அல்லது 5 ஏக்கர் புன்செய் என்று குறிப்பிட்டிருப்பதிலும் அது எத்தகைய நிலங்களுக்கு என்று திட்டவட்டமாக குறிப்பிடப்பெறவில்லை. ஏனென்றால், ஒரு ஏக்கரில் 200 ரூபாய் லாபம் வரக்கூடிய அளவுக்கு விளையக் கூடிய நிலம் இருக்கிறது, 500 ரூபாய் லாபம் வரக்கூடிய அளவுக்கு விளையக்கூடிய நிலம் இருக்கிறது, 10,000 ரூபாய் வரக்கூடிய அளவுக்கும் விளையக்கூடிய நிலம் இருக்கிறது.



நஞ்சை நிலங்களிலும் சரி, புஞ்சை நிலங்களிலும் சரி அப்படிப்பட்ட பிரிவுகள் இருக்கின்றன. ஆகையினால் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்கிறபோது அது எத்தகைய நிலம் என்று குறிப்பிடப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனவே விவசாயிகளுக்கு எந்த அளவில் கடன்களை ரத்து செய்தும், வசதிகளை ஏற்படுத்தியும் கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு அவர்கள் விவசாயத்தை உற்சாகத்துடன் முன்னேற்றத் தயாராக இருப்பார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். அரசு நிறுவனங்களிலே தொழிற்சாலைகளிலே விவசாயப் பண்ணைகளிலே நஷ்டம் ஏற்பட்டால், அந்த நஷ்டத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது. ஏன் ஏற்றுக் கொள்கிறது? அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற காரணத்திற்காக அந்த நஷ்டத்தை அரசு ஏற்க முன் வருகிறது. அதேபோல் விவசாயிகளின் கடனையும் அரசு ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு கடன்களை முழுமையாகத்தள்ளுபடி செய்ய முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மணிமுத்தாறு ஆற்றிலே விருத்தாசலம் அணை, மேமாத்தூர் அணை ஆகிய இரண்டு அணைக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதி விவசாயிகளுக்கு அது நல்ல முறையிலே இரு போக விவசாயம் செய்ய வசதியாக இருந்தது. அந்த ஆற்றுக்கு மேற்கில் கோமுகி, மணிமுத்தாறு, மயூரா என்ற மூன்று அணைக்கட்டுகளை கட்டி தண்ணீரைத்தடுத்து நிறுத்தி விட்டார்கள். இதனால் கீழே உள்ள மேற்படி அணைகளில் உள்ள விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய தண்ணீர் கிடைப்பதில்லை. பரம்பரையாக அந்த நீரை அனுபவித்து வந்த விவசாயிகள் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு மேலேயிருந்து சட்டப்படி ஒரு போகத்திற்காவது தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் ஊமங்கலம், கம்மாபுரம் பகுதியில் உள்ள விவசாயிகள் தாமே தோன்றிய தன்னூற்றிலிருந்து தண்ணீர் பெற்று முப்போகம் விவசாயம் செய்து வந்தார்கள். ஆனால் நெய்வேலியில் சுரங்க வேலை கட்டும்போது: ஆழ் குழாய் வைத்து நிலத்தடியின் கீழ் இருந்த தண்ணீரை கண்ணூற்றுக் குழாய் மூலம் இழுத்து விட்டார்கள். தண்ணீர் மிகவும் கீழ் நோக்கிச் சென்று விட்டது. குடிப்பதற்குக் கூட அவர்களுக்கு தண்ணீரே இல்லாத நிலை ஏற்பட்டு விட்டது. இந்த நிலையில் இரண்டாவது சுரங்கம் வேறு ஆரம்பிக்கப் போகிறார்கள். நெய்வேலியிலிருந்து 20,30 மைல் சுற்றுப்புறத்தில் குடிப்பதற்குக் கூட தண்ணீரே இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். எனவே இந்த

[திரு. ஆர். தியாகராசன்] [1980 ஜூலை 16

சுரங்கத்தில் உபயோகப்படுத்தும் தண்ணீரை எந்த விதத்திலாவது அப்பகுதி விவசாயத்திற்கும் குடிநீருக்கும் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.20]

இரண்டாவதாக அங்கே வரக்கூடிய தண்ணீரை விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டும். அதற்காக ஆகும் செலவை நெய்வேலி நிறுவனத்தாரிடம் ஒரு பகுதி ஏற்று தமிழக அரசு அந்தப் பெரிய திட்டத்தை ஏற்படுத்தி அந்த விவசாயிகளுக்கு ஆவன செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த விவசாயிகள் பிரச்னையில் இந்த அரசு விவசாயக் கடன்களை ரத்து செய்யாவிட்டால் விவசாய உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும்: விவசாயத் தொழில் மிகவும் பாதிக்கப்படும். எனவே விவசாயிகள்பால் கொஞ்சம் கருணை காட்டி ஒன்றுபட்ட முறையில் எல்லா விவசாயிகளுக்கும் உதவி செய்து விவசாய உற்பத்தியைப் பெருக்கும் விதத்தில் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் குடிக்கக்கூட தண்ணீர் கிடைப்பதில்லை. கை பம்ப்புகள் போட்டால் 100 அடி ஆழத்தில் கூட தண்ணீர் கிடைப்பதில்லை. 200, 300 அடி ஆழத்தில் வெட்ட வேண்டி இருக்கிறது. ஆகவே இயந்திர சக்தி மூலம் ஆழ் குழாய் கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்க வேண்டிய ஏற்பாட்டினைச் செய்து எங்களுக்கு பகுதியில் உள்ள மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாடு விடுதலை பெற்று 33 ஆண்டுகள் ஆன பிறகும் கூட இன்னும் மக்களுக்கு குடிநீர் கிடைக்கவில்லை என்றால் அது எந்த அரசாக இருந்தாலும்—— தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாரதியார் சொன்னதுபோல் இன்று குடிக்கத் தண்ணீர் இல்லை என்று சொன்னால் ஜகத்தினை ஏன் அழிக்கக்கூடாது என்று உங்களிடம் கேட்கிறேன். இந்த அரசு எல்லா மக்களுக்கும் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்வதோடு இந்தக் குடிநீர் பொறுத்தவரையிலும் தன்னிறைவு பெறவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. சா. கிருட்டிணமூர்த்தி: மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கட்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு வேளாண்மைத்துறை மீது எனது பேச்சினைத் துவக்குகிறேன்.



1980 ஜூலை 16] [திரு. சா. கிருட்டிணமூர்த்தி]

இந்த அரசு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கீடுகள், அடுக்கடுக்கான பல அற்புத எதிர்காலத் திட்டங்களைத் தீட்டி இருப்பதன்மூலம் இவைகள் நடைமுறைக்கு வந்தால் வேளாண்மைத் தொழில் சிறப்பெய்தும் என்பதில் ஐயமில்லை.

என்னுடைய தொகுதியாகிய ஆண்டிமடம் பகுதியில் நீர்நிலை மிகவும் ஆழமாக உள்ளதால் அங்கு விவசாயம்செய்ய அவதிப்படும் விவசாயிகட்கு சமுதாய நலக் கிணறுகள் அமைப்பதன் மூலம் பாசனவசதி உண்டாகி விவசாயம் நல்லமுறையில் நடைபெற ஆவன செய்யவேண்டுகிறேன்.

தற்போது ஒரு ஒன்றியத்திற்கு இரு சமுதாயக் கிணறுகள் அமைப்பது என்ற முறையை விரிவுபடுத்தி ஒரு ஒன்றியத்திற்கு ஒரு ஆண்டுக்கு ஐந்து கிணறுகள் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

எங்கள் பகுதியில் உள்ள சிறு விவசாயிகள், குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் பெறக்கூடிய உழவுக் கருவிகள், தரமான பொறுக்குவிதைகள் இவற்றைக் கணிசமான அளவிற்கு நல்கிட வேண்டுகிறேன்.

சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தோடு உருக்குலைய உழைக்கும் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு மார்க்கட்டில் நியாய விலை கிடைக்கவில்லை. இதற்கு பெரிய வியாபாரிகள் பல தடங்கல்களைச் செய்கிறார்கள். உதாரணமாக, உள்ளூர் வியாபாரிகள் வெளி மாநிலங்களில் இருந்து வரும் வியாபாரிகளை தன்வயப்படுத்தி பொருட்களைக் குறைந்த விலைக்கு வாங்கி வெளி வியாபாரிகளிடம் நிறைந்த விலைக்கு விற்கிறார்கள் வெளியிடங்களில் இருந்து வியாபாரிகள் வராத நேரங்களில் விவசாயிகளின் விளைபொருட்களை விலைக்கு வாங்கி அவர்களுக்கு ஒரு வாரம் கழித்து பணம் தரப்படுகிறது.

விவசாயிகளின் விளைபொருட்களை எடுத்துச் சென்று அதைக் கொடுத்து அதற்குரிய பணத்தைப் பெற்று மீண்டும் விவசாயிகட்கு லேட்டாக பணம் வருகின்ற செயலை செயங்கொண்டம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தொடர்ந்து செய்து வருகிறது. இதனால் விவசாயிகளின் நோக்கம் உடனடி தேவை பூர்த்தி செய்யப்படவில்லை. இந்தத் தவறு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. உடனடியாக இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுகிறேன்.

என் தொகுதியில் உள்ள ஆண்டிமடத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டட வசதி கிடையாது; எனவே அந்தக் கட்டடத்தை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

எனது பகுதியில் அதிகப்படியாக முந்திரி சாகுபடி செய்யப்படுகிறது. தரமான முந்திரி விளைந்தும் அங்கே முந்திரித் தொழிற்சாலை அமைக்கப்படவில்லை. கடந்த காலத்தில் அங்கே முந்திரித் தொழிற்சாலை அமைக்கவேண்டும் என்று சொல்லியும் கூட அவ்விதம் அமைக்கப்படாததால் தனியார் நிறுவனங்கள் மூலம் முந்திரித் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன. எனவே அரசாங்கமே இதை ஏற்று அங்கே முந்திரித் தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

எனது தொகுதியின் அருகிலுள்ள செயங்கொண்டம் தொகுதியில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட பொன்னேரி என்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அதனை ஆழப்படுத்தி மழைக் காலங்களில் வரும் நீரைத்தேக்கி வைத்தால்,பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பாசன சாகுபடி செய்ய முடியும். இது சம்பந்தமாக முன்னால் உள்ள அரசின் கவனத்திற்குக்கொண்டு சென்றும், இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே. நம்முடைய அரசு இதற்கான நடவடிக்கைகளை எடுத்து, இந்த ஏரியை ஆழப்படுத்தி, அங்குள்ள விவசாயிகள் சாகுபடி செய்வதற்கான வசதியை, வழிவகைகளைச்செய்து தரவேண்டும்.

அதோடு மட்டுமல்ல. எங்களுடைய பகுதியில் குறிப்பாக நீர் நிலை குறைந்திருக்கிற காரணத்தினால், அங்குள்ள விவசாயிகள் நல்லமுறையிலே விவசாயம் செய்ய முடியாமல் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு கூட்டுறவு முறையிலே பாசன வசதி பெற, கிணறுகள் அமைத்து, அவர்கள் பாசன வசதிபெற இந்த அரசு ஏற்று, அதைச்செயல்படுத்தும் என்று நான் நினைக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயிகளுடைய கடனை இந்த அரசு ரத்து செய்யவில்லை என்று கூறினார்கள். அதோடு மட்டுமல்ல. விவசாயிகள் கொடுத்திருந்த கோரிக்கைகளை இந்த அரசு நிறைவேற்றவில்லை என்றும் கூறியுள்ளார்கள். நான் அந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். குறிப்பாக, என்னுடைய பகுதியிலே கூட்டுறவு நாணயச் சங்கம் இருக்கிறது; இந்தக் கூட்டுறவு நாணயச் சங்கம் சிறு விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறது. ஆனால், அங்கே இருக்கின்ற பெரிய விவசாயிகள் 4, 5 நபர்களின் பெயரிலே கடன் வாங்கி அவர்களிடத்திலே 100, 200 கொடுத்துவிட்டு, தாங்கள் கடனை வாங்கி இருக்கிறார்கள். இன்றைக்குப் பெரும் விவசாயிகள் அந்தக் கடனை வாங்கிக் கொண்டு விட்டார்கள். அரசு கடனை வசூலிக்கின்றபோது, அந்தச் சிறு விவசாயிகளுடைய வீடுகளிலே அரசு அதிகாரிகள் கடனை வசூலிக்கின்ற நிலை இருக்கிறது. இந்தச் சிறு விவசாயிகள் இதைப்பற்றிப் பெருவிவசாயிகளிடம் கேட்கின்றபோது, நாங்கள் கடனைக் கட்டி விடுகிறோம் என்று சொல்கிற இத்தகைய கோரக் காட்சியைத் தான் பார்க்கிறோம்.



இதேபோன்று. தமிழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே குறிப்பாக தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் கூட்டுறவு நாணயச் சங்கங்களிலே கடனைப்பெற்று, திருப்பித் தர முடியாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் இன்றைக்கு விவசாயப் போராட்டத்திலே ஈடுபடுகிறார்கள். அவர்கள் பேண்டும், சில்க் ஷர்ட்டும் போட்டுக்கொண்டு இன்றைக்கு சென்னையிலே உலாவுகின்ற காட்சியைப் பார்க்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயிகளுக்குக் கடன் ரத்து செய்யப்படவில்லை. அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப் பட வில்லை என்று சொல்லி, இது நியாயம் தானா என்று கேட்கிறார்கள். நான் அந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு நாணயச் சங்கக் கடனை சிறு விவசாயிகள் பேரிலே வாங்கி, இத்தகைய பெரிய விவசாயிகள் அந்தக் கடனைத் திருபபித் தராமல் அரசுக்கு அவதி தருகிறார்கள்; அரசினுடைய கடனை ஏமாற்றுவது நியாயம்தானா என்று கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம். நன்றி.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியத்தின்மீது பேசுகின்ற இந்த நேரத்தில் நமது தமிழகத்தைப் பொறுத்தவரை இன்றைக்கு 75 சதவிகிதம் நிலங்கள் மானம் பார்த்த பூமியாக, மானாவாரி நிலமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த 75 சதவிகித மானம் பார்த்த பூமியை நீர்வளம் மிக்க, பாசன வசதிக்குக் கொண்டுவர வேண்டுமென்றால், இன்றைக்கு நிறைய நிலத்தடி நீரைக் கொண்டு வருவதற்கு வழிவகை செய்கின்ற சூழ்நிலையிலே இருக்கிறோம். ஆனால், இந்த நிலத்தடி நீரைப் பயன்படுத்தக்கூடிய முயற்சியில் இன்றைக்கு எடுத்துக்கொண்டால், குழாய்க் கிணறுகள், ஆழ் கிணறுகள், துளைக் கிணறுகள் 4500, 2300, 2800 என்ற அளவிலேதான் இருந்து கொண்டு வருகிறது. இது கடந்த மூன்று ஆண்டுகளாக அதே நிலையில் தான் இருக்கிறது. இதிலே எந்தவிதமான அபிவிருத்தியும் இல்லை. ஆகவே, இந்தப் பிரச்னையில் தமிழக அரசு சமுதாயக் கிணறுகளைப் பரந்த அளவில் ஆங்காங்கே தோண்டி, இந்த நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிவகை செய்ய முடியும். இது விவசாயிகளுடைய பிரச்னையைத் தீர்ப்பதற்கும் உதவியாக இருக்கும். இதே போல, தஞ்சை மாவட்டத்தில் இந்தப் பிரச்னை நீண்ட நாட்களாக இதே அளவிலேஇருந்துகொண்டு வருகிறது. இந்த நிலத்தடி நீரைப் யபன்படுத்துவதிலே அரசு முனைப்பாக இருக்க வேண்டும் அதோடு. அரசுத்துறை மூலம் விதைப் பண்ணைகள் ஏற்பட வேண்டும்.

[திரு. என். பழனிவேல்] [1980 ஜூலை 16

(முற்பகல் 11.30)

தனியாருடைய விதைப் பண்ணைகளில் விதை வாங்கினால் தரம் மிகவும் குறைவாக இருக்கிறது. குறிப்பாக 'கோ 25' நெல் தரம் ஆரம்பத்தில் பரவாயில்லை என்ற சூழ்நிலை இருந்தது. இன்றையதினம் அது பிரயோசனமில்லாத நிலைக்கு வந்து விட்டது. அம்மாதிரி விதைகளை உற்பத்தி செய்வதை உடனடியாக நிறுத்திவிட்டு புதிய ரகங்களைக் கொண்டுவர அரசு முயற்சி எடுக்கவேண்டும்.

மேலும் வறட்சியைத் தாங்கக்கூடிய விதையை உற்பத்தி செய்யவேண்டும். அப்போதுதான் அவற்றை மானாவாரிப் பகுதிகளில் பயன்படுத்த முடியும். விவசாயிகள் நஷ்டம் இல்லாமல் உற்பத்தி செய்ய முடியும்.

பூச்சி மருந்தை எடுத்துக் கொண்டால் எங்கு வாங்கினாலும் பயனற்ற நிலையில்தான் இருக்கின்றன. காரணம், பெரும்பகுதி பூச்சி மருந்துகள் தனியார் நிர்வாகத்தில் உற்பத்தி செய்யப் பட்டவையாக இருக்கின்றன. பூச்சி மருந்தை அரசுத் துறை மூலமாக உற்பத்தி செய்து, சிறு விவசாயிகளுக்கு, குறிப்பாக ஐந்து ஏக்கருக்குக் கீழ் உள்ள விவசாயிகளுக்கு பூச்சி மருந்து வாங்க மானியம் கொடுத்து உதவினால் ஓரளவு சாதாரண விவசாயிகள் பலன் அடைய முடியும்.

இன்றைக்கு சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் தமிழகத்தில் 167 மையங்களில் செயல்பட்டுக் கொண்டு வருவதாக அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். இதனை நாடு பூராவும் 300-க்கு மேற்பட்ட மையங்களில் ஏற்படுத்தி செயல்படுத்த வேண்டும். இதற்காக சென்ற ஆண்டு மைய அரசு 315 லட்சம் ரூபாய் ஒதுக்கியதாகச் சொன்னார்கள். அதிலே கூட கொஞ்சம் செலவு செய்யாமல் நிறுத்தி வைத் திருப்பதாகச் சொல்லப்படுகிறது. 417 லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கியதாகச் சொல்லப்படுகிறது. அதை ஒழுங்கான முறையில் பயன்படுத்தி சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் நல்ல முறையில் செயல்பட ஒத்துழைக்கவேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

கறவை மாடுகள் வாங்கிக் கொடுப்பதை எடுத்துக்கொண்டால் சிறு விவசாயிகளுக்கு மாடுகள் வாங்கிக் கொடுக்கும்போது 100 மைல், 150 மைலுக்கு அப்பால் போய் வாங்கிக் கொடுக் கிறார்கள். அதற்கு கமிஷன் வேறு இருக்கிறது. இதை நிறுத்த வேண்டும். விவசாயிகள் இருக்கும் அந்தந்தப் பகுதிகளிலேயே மாடுகள் வாங்கிக் கொடுக்கவேண்டும். அப்போதுதான் சப்சிடி பயனுள்ள முறையில் விவசாயிகளுக்குப் பேய்ச் சேரும்.



1980 ஜூலை 16] [திரு. என். பழனிவேல்]

விவசாயிகளும் நேரடியாக மாடுகளைப் பார்த்து வாங்க உதவிகரமாக இருக்கும். தொலை தூரங்களில் போய் மாடுகள் வாங்கிக் கொடுக்கும் முறையை உடனடியாக நிறுத்த வேண்டும்.

விவசாய விளைபொருள்களுக்கு நியாய விலை நிர்ணயிக்க வேண்டுமென்றெல்லாம் பேசுகிறோம். ஆனால் அதை நிர்ணயிப்பது யார்? அதை நிர்ணயிக்க தனிக் குழு ஏற்படுத்தி அந்தக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் விவசாய விளை பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யவேண்டும்.

மார்க்கட்டிங் சொசைடிகளுக்குக் கமிட்டிகள் இருக்கின்றன. அந்தக் கமிட்டிகள் ஒரே கட்சியின் சார்பில் இருக்கின்றனவே தவிர, பொதுப்படையாக சர்வ கட்சியினரும் உள்ளதாக இல்லை. சர்வ கட்சியிலிருந்து அதிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்களை கமிட்டி உறுப்பினர்களாகப் போட்டு செயல் படுத்தவேண்டும்.

கால்நடை மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டால் குக்கிராமங்களில் எங்கு சென்றாலும் உதவி கிடைப்பதில்லை. நடமாடும் கால்நடை மருந்தகங்களை அதிக அளவில் ஏற்படுத்தி கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று கால்நடைகளுக்கு வைத்தியம் செய்து கொடுக்கவேண்டும். கால்நடை மருத்துவ மனைகளில் சிறு விவசாயிகள் கால்நடைகளைக் கொண்டு சென்றால் மருந்துச் சீட்டை எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். அதன் காரணமாக விவசாயி 50 ரூபாய், 100 ரூபாய் கொடுத்து மருந்து வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இது சிறு விவசாயிகளுக்குப் பெரும் பாதகமாக இருக்கிறது. நடமாடும் மருந்தகத்தை அதிகப்படுத்த வேண்டும்.

விவசாயக் கிடங்குகள் போதுமான அளவில் இல்லை. அவற்றைக் கட்ட பல லட்சம் ரூபாயைத் திட்டத்தில் ஒதுக்கி யிருக்கிறார்கள். இன்னும் அதிகமான அளவில் ஒதுக்கி உடனடியாகக் கிடங்குகளைக் கட்டவேண்டும். விவசாயக் கிடங்குகளைக் கட்டுவதைப் பொறுத்தவரை பல ஊர்களில் ஒரு வருஷம், இரண்டு வருஷ காலமாக பேஸ் மட்டம் போட்ட நிலையிலேயே இருக்கின்றன. அந்த இடங்கள் முழுவதும் ஊருக்கு வெளியே தள்ளி சுடுகாட்டு ஓரங்களில் கட்டப் படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இல்லாமல் ஊரை ஒட்டி, தனியார் நிலங்கள் இருந்தாலும் அவற்றை எடுத்து அந்த விவசாயக் கிடங்குகளைக் கட்டிக் கொடுத்து விவசாயிகளுக்கு நல்ல உதவியைச் செய்யவேண்டும்.

அதேபோல் பழம் பதப்படுத்தக்கூடிய தொழிற்சாலையைப் பற்றி சென்ற அரசிலேயே சொல்லப்பட்டது, மதுரை மாவட்டத்திலே ஏற்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டது.

அதை பழனியிலே ஏற்படுத்தவேண்டுமென்று போன சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நான் பேசினேன். என்னுடைய தொகுதியான பழனி தொகுதியிலே மா, கொய்யா, பலா, திராட்சை, தக்காளி போன்ற பழங்கள் அதிகமாக வருகின்றன, ஆகவே அந்தத் தொழிற்சாலையை ஆயக்குடியிலே அமைத்தால் விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும், அந்தத் திட்டத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விதைகளுக்கு சர்டிபிகேட் கொடுக்கக்கூடிய அதிகாரிகளிடத்திலே தவறுகள் இருப்பதாகத் தெரிகிறது. தனியார்களுக்கு லெகுவிலே சர்டிபிகேட் கொடுத்துவிடுகிறார்கள். இதனால் தவறுகள் ஏற்படுகின்றன. அந்த விதைகளை வாங்கிப் பயன்படுத்துகின்ற விவசாயிகள்தான் நஷ்டமடைகிறார்கள். அந்த சர்டிபிகேட்டைக் கொடுக்கும் அதிகாரிகளோ அல்லது அதற்கு உரிமம் வைத்து இருக்கிற தனியார்களோ நட்டப்படுவதில்லை, ஆகவே அரசாங்கம் இதிலே கண்காணிப்பாக இருந்து தனியார்களுக்குச் சான்றிதழ்கள் வழங்காமல் அரசாங்கமே நேரடியாக விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். சென்ற ஆண்டு நம்முடைய வேளாண்மை உற்பத்தி அதிகமானதின் காரணமாக 50 ஆயிரம் டன் அரிசியை கியூபா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததின் மூலம் நமது மாநிலத்தின் அரிசி உற்பத்தியில் ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு உற்பத்தி செய்த அளவையும் போட்டு எதிர்காலத்திலே, அதாவது 1980–81-ல் நாம் உற்பத்தி செய்யவேண்டிய இலக்குகளையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அரிசி 65.00 லட்சம் டன்னாகவும் சிறு தானியங்கள் 21.45 லட்சம் டன்னாகவும் உயர்த்தப்படும் என்று சொல்லிவிட்டு இன்னும் மற்றவைகளைப்பற்றி எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கடுத்தபடி கரும்பு (வெல்லம்) சென்ற ஆண்டு 20.16 இலட்சம் டன்னாக இருந்தது, இந்த ஆண்டு 19.80 இலட்சம் டன்னாக இருக்கும் என்று இருக்கிறது. இதிலே மட்டும் ஏன் குறைந்து இருக்கிறது என்று தெரியவில்லை. அதைச் சொல்ல வேண்டும்.





இதைத்தவிர, பிரதான மூலப்பொருளாக இருக்கக்கூடிய பொருளான பருத்தியைப் பொறுத்தவரையிலே சென்ற ஆண்டு 4.69 இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்யப்பட்டது, இந்த ஆண்டு 4.60 இலட்சம் பேல்கள்தான் இருக்கும் என்று குறைத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய இலக்கு கூடுவதற்குப் பதிலாக குறைக்கப்பட்டிருக்கிறது, எதற்காக என்று தெரியவில்லை.

பொதுவாகவே வேளாண்மையைப்பற்றி பல உறுப்பினர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். இன்னும் பேசுவார்கள். கடந்த காலத்திலே உற்பத்திப் பெருக்கத்திற்கும் பிரதானமான காரணமாக இருந்தது, அரசாங்கம் கொடுத்த கடன்களாக இருந்தாலும், கூட்டுறவுத் துறை கொடுத்த கடன்களாக இருந்தாலும் அவைகளைப்பெற்று லாபநட்டம் பார்க்காமல் விவசாயத்திலே விவசாயிகள் ஈடுபட்டார்கள். உற்பத்தி வேகமாக வளர்ந்தது. ஆனால் இன்றைக்கு அந்த வளர்ச்சியிலே தேக்கம் ஏற்பட்டு குறைந்துகொண்டே வருகிற அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் அவையிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் கூறியுள்ள இலக்கு நிறைவேறாதது மட்டுமல்ல, தலைகீழாகப் போகக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருட்கள் கிடைக்காத நிலைமையும் ஏற்படலாம். நீங்கள் இன்றைக்கு விவசாயிகளிடத்திலே கேட்டுப் பார்த்தால் தெரியும். இதற்குக் காரணம், அவர்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை இல்லாத காரணத்தால் அவர்கள் நிலங்களைத் தரிசாகப் போடக்கூடிய நிலைமையும் இரண்டு போகம் விளைவிக்கக்கூடியவர்கள் ஒரு போகம் மட்டுமே பயிர்செய்யக்கூடிய நிலைமையும், அந்தப் பயிரைப் போடலாமா வேறு பயிரைப் போட்டால் கட்டுபடியாகுமா என்று மாற்றி மாற்றி பயிர்களைப் போட்டு அவர்கள் விவசாயம் செய்யமுடியாத நிலைமையிலே இருக்கிறார்கள். ஆகவே பிரதானமான காரணம் அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்பதுதான்.

வேளாண்மைத் துறையைக் கேட்டால் சொல்கிறார்கள், உற்பத்தி செய்யவேண்டியதற்கான செம்மையான ஆலோசனைகளையும் என்ன என்ன உரங்களைப் பயன்படுத்தலாமென்றும் தான் சொல்கிறார்களே தவிர, நியாயமான விலை தரவேண்டுமென்று கேட்டால் அது எங்களுக்குச் சம்பந்தமில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் சம்பந்தமில்லை என்று சொல்லிவிட்டால் எப்படி விவசாயிகள் ஊக்கத்துடன் உற்பத்தியிலே ஈடுபட முடியும் ?

கடன்களை மேலும் மேலும் ஒத்திவைத்துக்கொண்டே வந்தார்கள். புதிய கடன்களை அதன் காரணத்தினால் பெற்று வந்தார்கள். இன்றைக்குக் கடன்களைக் கட்டவேண்டுமென்ற

நிலையின் காரணத்தினாலே அவர்கள் மிகப் பெரிய போராட்டத்திலே இறங்கினார்கள். இதிலே மத்திய சர்க்காரினுடைய மிகப்பெரிய உதவி என்ன தெரியுமா?

[முற்பகல் 11.40]

அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால், யூரியா 50 கிலோ மூட்டை 75 ரூபாயிலிருந்து 103 ரூபாய்க்குக் குறைத்திருக்கிறார்கள். ஏனென்றால், விவசாயிகள் உணவு உற்பத்தியைக் பெருக்க வேண்டுமென்ற நாட்டு நலனில் அக்கறை கொண்டு அவர்கள் அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். பொட்டாஷ் 41 ரூபாயிலிருந்து 57 ரூபாய்க்குக் குறைத்திருக்கிறார்கள். அதேமாதிரி டை அமோனியம் பாஸ்பேட் உரம் இருக்கிறதே, அது நெல்லுக்கோ மற்றும் பருத்திக்கோ, இன்னும் எத்தனையோ பயிர்களுக்குத் தேவையானது. அதை 91 ரூபாயிலிருந்து 127 ரூபாய்க்குக் குறைத்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய உதவியை மத்திய சர்க்கார் செய்திருக்கிறார்கள். இதற்கு மாநில அரசு என்ன செய்யப் போகிறது? மத்திய அரசின் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இங்கு இருக்கிறார்கள். அவர்கள் இது சம்பந்தமாக, இந்த விலையை ஏன் கூட்டினார்கள் என்று இதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி இந்த மன்றத்திலே இருக்கின்ற அத்தனை பேர்களும் சேர்ந்து மத்திய அரசாங்கத்தை எதிர்த்து இந்த உர விலைகளைக் குறைப்பதற்கு முயற்சிக்க வேண்டும். பழைய விலையையே குறைக்க வேண்டுமென்று கோருகின்ற நேரத்தில் இப்பொழுது விலையைக் கூட்டியிருக்கிறார்கள். இதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? இதற்கு மாநில அரசு முழுமையாக மானியம் கொடுத்து விலையைக் குறைக்க முடியாது. இதன் விளைவாக நெல் உற்பத்திக்கு மட்டும் ஏக்கருக்கு நூறுரூபாய் அதிகமாகச் செலவு கூடும். ஆனால் விலை என்ன கொடுக்கப் போகிறோம்? மத்திய அரசு எவ்வளவு இடைஞ்சல்களைச் செய்திருக்கிறது என்பதற்காக நான் சுருக்கமாகச் சொல்கிறேன். கோதுமைக்கான விலையை 115 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள், அதைவிட எந்தக் காரணத்தை முன்னிட்டும், எந்தச் செலவும் குறையாமல் நெல்லுக்குச் செலவாகும். ஆனால் நெல்லுக்கு மட்டும் 105 ரூபாய். இது என்ன நியாயம்? இதை நியாயம் என்று சொல்கிறீர்களா? மத்திய அரசில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இங்கே என்ன சொல்லப் போகிறார்கள்? இதை எதிர்த்து நாமெல்லாம் சேர்ந்து இதற்கு விடிவு ஏற்பட, நிவாரணம் கிடைக்க வேண்டிய முயற்சிகளைச் செய்யவில்லை என்றால், சீரழிவு ஏற்பட்டு, உற்பத்தி குறைந்து, விவசாயத்தை ஒட்டியுள்ள ஏனைய தொழில்களும் மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



நெல்லுக்கு 105 ரூபாய் என்று செய்யப்பட்ட விலை நிர்ணயம் கட்டுப்படியாகாது. நம்முடைய ஆளுங்கட்சியாக இருக்கின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக் குழுவிலே 130 வரை கேட்டிருக்கிறார்கள். நாங்கள் சொல்கிறோம் அதுகூடப் போதாது, குறைந்தபட்சம் 150 ரூபாய் கொடுத்தால்தான் இன்றைக்கு நெல் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்குக் கட்டுப்படியாகும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, இன்றைக்கு நாம் விவசாயத்தை ஒட்டி பல தொழில்களைத் துவங்க வேண்டும். விவசாய விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்று சொன்னால்,— இங்கே பல காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன — விளைபொருள்களுக்கு விலை கொடுக்க வேண்டுமென்பதற்காக நம்முடைய வேளாண்மை விளைபொருள் விற்பனைக்குப் பல இடங்களிலே மார்க்கெட்டிங் கமிட்டிகள் செயல்படுகின்றன. அந்தக் கமிட்டிகள் மூலம் என்ன ஏற்பாடுகள் இருக்கின்றன? மார்க்கெட்டிங் கமிட்டிக்கு வரக்கூடிய பொருள்களை அந்த வியாபாரிகள் வாங்குவதற்கு உதவி செய்கிறார்களே தவிர, நியாயமான விலையில் வாங்குவது கிடையாது. அதுமட்டுமல்ல, விளையும் காலத்தில் ஒரு விலை, விளைந்து முடிந்து விற்பனை செய்த பிறகு வேறு ஒரு விலை. இது அத்தனை பேருக்கும் தெரியும். என்ன விளை பொருளாக இருந்தாலும் அப்படித்தான் இருக்கிறது, அதற்கு நியாயமான ஏற்பாடு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் மிகத் தீவிரமாகச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மார்க்கெட்டிங் கமிட்டிகளைப் பொறுத்தவரையில் என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பெரிய விவசாயிகள் வைத்திருந்து, விலை கூடிய பிறகு விற்பதற்கான வசதி வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சாதாரண, சிறிய விவசாயிகள் அவற்றை விற்ற பிறகுதான் திரும்பவும் விவசாயம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகள் மார்க்கெட்டிங் கமிட்டிக்குப் பொருள்களைக் கொண்டு வந்தால், அவர்கள் வாங்கிக் கொண்டு, சௌகரியமாக சுகமாக வரக்கூடிய வியாபாரிகள் அதை வாங்குவதற்கு வசதியாக இருக்கிற அளவில், அந்த வியாபாரிகள் அங்கேயிருந்து பார்த்து, நல்ல சரக்காகப் பார்த்து, நல்ல எடையோடு வாங்கிச் செல்வதற்குத்தான் உதவியாக இருக்கிறது. வியாபாரிகளுக்குக் கட்டுபடியான விலைக்கு விற்கக்கூடிய ஒரு ஸ்தலமாகத்தான் இப்படிப்பட்ட விற்பனைக் கூடங்கள் இருக்கின்றனவே தவிர, விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை விற்க வந்தவுடனே நியாய விலையை வந்தவுடனே நிர்ணயித்து, அந்த விலைக்கு வாங்கிக்கொண்டு அவர்களுக்குப்

பணத்தைக் கொடுக்க வேண்டும். அப்படியில்லாமல், விவசாயிகள் கொண்டு வந்து வைத்தவுடன், நாங்கள் பணத்தைக் கொடுத்து விட்டு, மறுபடியும் விற்ற பிறகு பணத்தைக் கட்டி விடுங்கள், நாங்கள் வட்டி கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள், இதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை. ஒரு மாதம், இரண்டு மாதம் கழித்து அந்தப் பணத்தைக் கேட்பார்கள். அப்பொழுதும் அந்த விலைதான் கிடைக்கும். ஆகவே, அரசு, இந்தமாதிரி நேரடியாக, பாடுபடுகின்ற சிறு விவசாயிகளுக்கு, அவர்கள் தங்கள் பொருள்களைக் கொண்டு வந்து கொடுத்தவுடனே, நீங்கள் நிர்ணயம் செய்யக்கூடிய கட்டுப்படியான விலைக்கு அதை வாங்கிக்கொண்டு அவர்களுக்கு அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டும்.

அதற்கு எத்தனையோவிதமான ஏற்பாடுகளெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் தரம் பிரிப்பதற்கு வேண்டிய பலவிதமான ஏற்பாடுகள் இருக்கின்றன. அதிலே முக்கியமாக பருத்தி தரம் பிரிக்க பத்து இடங்களில் நிலையங்கள் வைக்க இருக்கிறீர்கள். அதே மாதிரியாக, பழத்தைப் பக்குவப் படுத்துவதற்கு ஆலைகள் எல்லாம் அமைக்கலாம் என்ற யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. அதே மாதிரியாக, தக்காளி போன்ற இம்மாதிரி பழ வகைகளைப் பக்குவப்படுத்துவதற்காக ஒரு தொழிற்சாலை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. தக்காளி ஒரு சமயத்திலே கிலோ பத்துகாசுக்கு விற்கிறது: ஒரு நேரத்தில் கிலோ ஐந்து ரூபாய்க்கு விற்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவேதான், இப்படி அதிகமாக விளைகிற காலத்திலே, சில நேரங்களிலே 10 பைசாவுக்கு விற்றால், அதைக் குப்பையிலே போடக்கூடிய நிலைக்கு விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாக்கப் படுகிறார்கள். அந்த மாதிரி இருக்கக்கூடிய நேரத்திலே, அந்த மாதிரிப் பொருள்களையெல்லாம் பக்குவப்படுத்தக்கூடிய தொழிற்சாலைகளைத் துவக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும். அவற்றைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே தவிர, செயல்படுத்துவதில்லை. அதற்கு முனைப்பாக அந்த மாதிரி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இந்தப் பழங்கள் சம்பந்தப்பட்டதுமட்டுமல்ல, எண்ணெய் வித்துக்கள் சம்பந்தப்பட்டமட்டிலே இங்கே ஒரு ஏற்பாடு சொல்லப்பட்டிருக்கிறது. குஜராத் மாநிலத்திலே செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை இங்கு செய்வதற்கு யோசித்து, அது சம்பந்தமாக ஆராய்வதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லப்படுகிறதே தவிர' அது சம்பந்தமாக முனைப்பான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.



இந்தத் திட்டத்தை குஜராத்திலே செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அந்த மாதிரி எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்வது, தமிழ்நாட்டை பொறுத்தவரை, ஆமணக்கு, நிலக்கடலை உற்பத்தி செய்வது அதிகமாக இருக்கிறது. நெல்லுக்கு அடுத்தபடியாக நிலக்கடலை பிரதான பொருளாக இருக்கிறது. நிலக்கடலை அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய தமிழ்நாட்டிலே, கடலை விளைந்தவுடனே, ஒரு மூட்டை ரூ. 100-க்கு வாங்கப்படுகிறது. ஆனால் விளைந்து முடிந்த பின், அது கடைக்கு வரும்போது ரூ. 200-க்கு விற்கப்படுகிறது. ஆகவே, அதற்கு நியாயமான விலை கொடுக்க எந்த ஏற்பாடும் கிடையாது. குஜராத் மாநிலத்திலே, அந்தமாதிரி சிறு விவசாயிகள் உற்பத்தி பண்ணக்கூடிய அத்தனை எண்ணெய் வித்துக்களையும் நியாயமான முறையிலே வாங்கி அதைப்பாகுபடுத்தி, மற்றக் காரியங்களைச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அதே மாதிரியாக நம்முடைய மாநிலத்திலே செய்வதற்கு யோசனை இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த யோசனையோடு நிற்காமல் அதை நடைமுறைப்படுத்தி, அந்த மாதிரி விவசாயிகள் உற்பத்தி பண்ணக்கூடிய ஆமணக்கு, நிலக்கடலை போன்ற எண்ணெய் வித்துக்களுக்கு நியாயமான விலை கொடுத்தால், உற்பத்தி அதிகமாகப் பெருகுவதோடு, பற்றாக்குறையும் நீங்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே மாதிரியாக, இன்றைக்கு நம்முடைய விவசாயிகளுடைய பல தேவைகளைப்பற்றி கூறுகள் சொல்லப்பட்டிருக்கின்றன, சிறு விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காக பலவிதமான ஏற்பாடுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்கார் உதவி இந்த மாநில சர்க்கார் உதவி 50% என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலுங்கூட, உதவிகள் விவசாயிக்குக் கிடைப்பதில்லை. இதிலே மானியத்திற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மானியப் பணத்தைப் பெறுவதற்கு, கடன் வாங்கவேண்டும். அந்தக் கடனை வாங்குவதற்குச் சிறு விவசாயிகளால் முடியவில்லை. எந்த வங்கியும் கொடுப்பது இல்லை. யார் சிறு விவசாயிக என்றால், இரண்டு மூன்று ஏக்கர் வைத்திருக்கிறவன். அதாவது இரண்டரை ஏக்கர் நஞ்சை அல்லது 5 ஏக்கர் புஞ்சை வைத்திருக்கிற சிறு விவசாயிகள் இந்த ஒருங்கிணைந்த விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்திலோ அல்லது சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்திலோ உதவி பெற வேண்டுமென்றால், கடன் பெற்றால்தான் மானியம் பெற முடியும். கடனுக்காக அங்குள்ள கலெக்டர் சிபாரிசு பண்ணினாலும், வங்கியிலே கடன் தருவது கிடையாது.

அது மட்டுமல்ல, பாண்டியன் பாங்கு என்று கிராம பாங்குகளை வைத்திருக்கிறார்கள். அந்த கிராம பாங்குகளில் கடன் கேட்டால், நிலம் அதிகமாக வைத்திருக்கிறவர்கள் ஜாமீன்

கொடுக்க வேண்டும் அல்லது ஏதாவது சொத்து ஜாமீன் இருந்தால்தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். சிறு விவசாயிகள், இந்தத் திட்டத்தின்கீழ் பயன்படக்கூடிய 5 ஏக்கருக்குக் கீழுள்ள சிறு விவசாயிகள் கறவை மாடு வாங்வேண்டுமென்றாலும், 5 ஏக்கருக்கு உட்பட்ட விவசாய நிலத்திற்குத் தேவைப்பட்ட மற்றப் பொருள்களை வாங்க வேண்டுமென்றாலும் ரூ. 1,000 கடன் வாங்கினால், ரூ. 250 மானியம் பெற முடியும். ஆனால், அவர்களுக்கு ரூ. 1,000 கடன் கிடையாது. ஆகவே, மானியம் பெற முடியாது என்ற நிலைமையிருக்கிறது. அதிலே, சில வசதி படைத்தவர்கள், அந்தக் கொஞ்சம் தொகையைப் பெற்றுக் கொள்வதால், சாதாரணமானவர்களுக்கு, கேட்பவர்கள் அத்தனை பேர்களுக்கும் கிடைக்கவில்லை. அது அனைவருக்கும் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி பணப்பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம், 17 இடங்களிலே கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதை எப்படி அமுல் நடத்தப்போகிறார்கள் என்பதைப்பற்றி விவரமாகத் தெரிந்து அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்றைய தினம் விவசாயிகளுக்கு மிக முக்கியமான தேவையானது தண்ணீர் வசதி. தண்ணீர் வசதி சம்பந்தப்பட்ட மட்டிலே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, கிணறுகள் மூலமாகப் பாசன வசதி செய்யப்பட்டாலும்கூட, மேற்கு நோக்கி பாயக்கூடிய ஆறுகள் 40 மேற்கு நோக்கிச் செல்கின்றன—அவற்றை முடிந்த அளவு பயன்படுத்த வேண்டிய காரியங்களையெல்லாம் நம்முடைய அமைச்சர்களும் அரசும் செய்ய வேண்டும். நமக்கு வேண்டியதெல்லாம் குறைந்த தண்ணீர்தான். கோவை, முகவை, நெல்லை, மதுரை ஆகிய 4 மாவட்டங்களுக்குத் தேவையான தண்ணீர் 85 டி. எம். சி.தான். ஆனால் மொத்தமாக 40 நதிகளின் மூலமாக, மேற்கு தொடர்ச்சி மலையிலே உற்பத்தியாகி, மேற்கு நோக்கிச்செல்லும் தண்ணீர் 1,400 டி. எம். சி. என்று சொல்லப்படுகிறது. சரியான முறையிலே அணுகி நமக்குத் தேவையுள்ள அந்தத் தண்ணீரைப் பெறுவதற்கு வேண்டிய முயற்சிகளை நாம் செய்தால், சுருக்கமாகப் பெற்றால்கூட, அந்த 4 மாவட்டங்களுக்கு அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியும். அதற்கு வேண்டிய முயற்சிகளை, ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; இன்றைக்கு விவசாயிகளுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய, உற்பத்தியிலே 20 சதவீதம் நஷ்டம் ஏற்படுத்தக்கூடிய நிலை சிமெண்ட் ஆலைகளின் புகையினால் ஏற்படுகின்றது. சிமெண்ட் ஆலைகளிலேயிருந்து வரக்கூடிய புகைகளின் காரணமாக, மகசூல்



அத்தனையும் கெட்டு, நிலமும் பாழடைந்து, விவசாயிகளுக்கு மிகப்பெரிய நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. அதற்குப் பரிகாரமாக, வேண்டிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட இலாகா மூலமாக, தொழில் அதிபர்களுக்கு எழுதி, வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, நெல்லை மாவட்டத்தில் தாழையூத்திலேயும், முகவை மாவட்டத்தில் ஆலங்குளத்திலேயும், திருச்சியிலே டால்மியாபுரத்திலேயும், கோவையிலே மதுக்கரையிலேயும், சேலத்திலே சங்கரியிலேயும், இந்த மாதிரி சிமெண்ட் ஆலைகள் இருக்கின்றன. அந்தப்பகுதியிலே பார்த்தால், விவசாயிகள் மிக அவலமான நிலையிலே பாதிக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் தொடர்ந்து இங்கு படை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது குறித்து எந்தவிதமான நடவடிக்கையுமே எடுக்கவில்லை. நானும் 12 ஆண்டுக்காலமாக, அது சம்பந்தமாகத் தொடர்ந்து இந்த அவையிலே சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

[முற்பகல் 11.50]

வேறு இடங்களில் புகை போவதற்கு பூமியின் கீழே பெரிய டேங்க் மாதிரி கட்டி அந்தத் தண்ணீரில் பில்டர் பண்ணி அனுப்புகிறார்கள். அந்த மாதிரி செய்வதற்கு அவர்களை வற்புறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதே போல் தோல் பதனிடும் தொழிற்சாலையில் இருந்து வெளிவரும் கழிவு நீர் விவசாயத்தை மிகப்பெரிய அளவுக்குப் பாதிப்பு அளித்துக் கொண்டிருக்கிறது.

சங்கரன் கோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமான நிலத்தைத் தனியார் ஒருவருக்குக் கொடுக்க ஏற்பாடுகள் நடத்துகொண்டிருக்கின்றன என அறிகிறேன். அதைக் கொடுக்கக்கூடாது. என்பதையும், அங்கே உள்ள தனி அதிகாரி அதைத் தனியாருக்குக் கொடுக்க முயற்சிகள் எடுத்து விடுவதாகச் சொல்லப்படுகிறது. அதைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

இன்றைக்கு வேளாண்மை பல்கலைக் கழகம் செய்கின்ற ஆராய்ச்சியின் பலனாக ஏற்படக்கூடிய விளைவுகளை நேரடியாக விவசாயத்திலே ஈடுபடுகின்ற அந்த விவசாயிகள் உடனுக்குடனாக தெரிந்து கொள்வதற்கும் அதைப் பயன்படுத்துவதற்கும் வேண்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். அது மட்டுமல்ல, இன்றைக்குப் பிரதானமாகக் கவனிக்க வேண்டியது இருக்கின்ற உற்பத்தியிலே கணக்கமோ, அதிலே குறையோ ஏற்படாமல் இருப்பதற்கு உதவிகளைச் செய்யவேண்டும்.

அடுத்து பல பேர்கள் சொல்லுகிறார்கள். வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள். சிறு விவசாயிகள் என்றால் 5 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் என்று அமைச்சர்கள் சொல்கிறார்கள். முதலமைச்சரும் சொன்னார். அரசாங்கமும் சொல்லுகின்றது. நஞ்சை நிலத்துக்கு 5 ஏக்கர் சரி. அதேமாதிரி நஞ்சை அல்லாத புஞ்சை நிலம், மானாவாரி போன்ற நிலங்களுக்கு 5 ஏக்கர் என்பது சரியல்ல, அவைகளை 5 ஸ்டான்டார்டு ஏக்கர்கள் என்று மாற்றி அவர்களுக்குக் கடன் நிவாரணம் அளித்து அவர்களுக்கு மேலும் கடனைக் கொடுத்து, ஊக்கம் அளித்தால் அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவார்கள், இன்றைக்கு நம்முடைய விவசாய இலாகாவின் மூலம் நவீனமான ஆலோசனைகளை. நவீனமான வித்துக்களைக் கண்டுபிடித்திருந்தால் கூட அதை எல்லாம் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கு இருக்கிற தடங்கல் எல்லாம போக்கி எதிர்காலத்திலே அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான விலை அவர்களுக்குக் கிடைக்க வழிவகை செய்யவேண்டும். அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு விவசாயத்தை ஒட்டி இருக்கக் கூடிய தொழில்களை ஆங்காங்கு உள்ள இடங்களிலே ஆரம்பிக்கின்ற ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அதே நேரத்தில் தவிட்டில் இருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம், வாழைத் தண்டிலிருந்து பேப்பர் செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்று சொல்லுகிறார்கள். அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே மாதிரி வெங்காயத்தைப் பற்றிச் சொன்னார்கள். கடந்த காலத்திலே சிலருக்கு இந்த வெங்காயம் மிகவும் கைகொடுத்தது தேர்தல் காலத்திலே, வெங்காயம் வியாபாரத்திலே கோடீஸ்வரர்கள் ஆகியோரும் இருக்கிறார்கள். அதே வெங்காயம் பயிரிட்டதனாலே அதலபாதாளத்திற்கு போனவர்களும் இருக்கிறார்கள். சில நேரங்களிலே வெங்காயம் 4 ரூபாய்க்குக்கூட விற்கிறது. சில நேரங்களில் மிகவும் மலிவாகக் கிடைக்கின்றது. ஹைத்ராபாத்திலே ஒருதொழிற்சாலை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அங்கே வெங்காயத்தைப் பவுடராக்கி வெளி இடங்களுக்கு அனுப்புவதாகச் சொல்லுகிறார்கள். அதேமாதிரி நாமும் வெங்காயம் விலை ஏறி இறங்குகின்றதன் காரணமாக அதை வாங்கி வைத்து பவுடராக்கி வெளியிடங்களுக்கு அனுப்பலாம், அதை நம்முடைய துறையின் மூலமாகவே செய்தால் அது மிகவும் பிரயோசனமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, மிகவும் பிரதானமாக வற்புறுத்திக் கூற விரும்புவது விவசாய விளைபொருள்களுக்கு நியாயமான விலையைக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அடுத்து மார்க்கட்டிங் கமிட்டிகள் இருக்கின்றன. அதை ஜனநாயகப்படுத்துகின்ற முறையில் அங்கே



இருக்கின்ற தனி அதிகாரிகளைக் நீக்கி விட்டு உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். அப்படி அமைக்கப்படுகின்ற அந்தக் கமிட்டிகளுக்கு காட்பீட்டுக் கழகங்கள் மூலமாகவோ, தேசிய உடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ, அதிகப்படியான கடனைப் பெற்று, மொத்தமாக விளையக்கூடிய காலத்திலே அந்த பொருள்களை நியாய விலையில் கொள்முதல் செய்து வைத்துக் கொண்டு நாம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக அல்லது கோவாபரேடிவ் சொசைட்டிகள் மூலமாக விற்பனை செய்கின்ற ஏற்பாடுகளைச் செய்தால், நியாயமான விலை கிடைக்கும். அதற்கு வேண்டிய முயற்சிகளை செய்யவேண்டும்.

அடுத்து பருத்திபோன்ற பொருள்களுக்கு, மகாராஷ்டிரத்திலே இருப்பதைபோன்று ஏகபோகமாக கொள்முதல் செய்ய ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அமைத்து அதன் மூலமாக நியாய விலையில் பருத்தியைக் கொள்முதல் செய்து மில்காரர்கள் அடிக்கின்ற கொள்ளையை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்பதோடு, விவசாயிகளுக்கு நியாயவிலை கிடைக்க அத்தனை உதவிகளையும், ஏற்பாடுகளையும் செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். விவசாயம் செழிக்க, நியாய விலை, கிடைக்க அத்தனை முயற்சிகளையும் செய்யவேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன்.

<u>*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்</u>; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ள விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் உற்பத்தி செய்வதற்காக அனுபவிக்கும் பல கஷ்டங்களை எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். அதை நானும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். உற்பத்தி என்று சொல்கிற போது, உரம் மிகவும் அவசியமாகிறது. அந்த உரத்திற்காக மத்திய அரசு கொடுத்து வந்த மானியத்தை நிறுத்தியதன் காரணமாக, இன்றைக்கு உரத்தின் விலை 1-க்கு $1\frac{1}{2}$ மடங்காக உயர்ந்து விட்டது. அதன் காரணமாக இன்றைக்கு விவசாயிகள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். சாதாரணமாக காம்ப்ளக்ஸ் உரம் ஒரு டன்னுக்கு 600 ரூ. என்று ஏறியிருக்கிறது என்று சொன்னால், விவசாயிகள் எப்படி உரத்தை வாங்கி, உற்பத்தி செய்து, அவன் கடனை அடைக்கவும், அதன் மூலம் அவன் வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக்கொள்ளவும் முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அந்த உரத்திற்காக அவன் பெற்ற கடனை வட்டி இல்லாமல் திரும்பப்பெறவோ—அல்லது வட்டி, அசல்

ஆகிய இரண்டையுமே தள்ளுபடி செய்யவோ அரசாங்கம் முன் வரவேண்டும். அசல் தள்ளுபடி செய்யமுடியாது என்று இருந்தால் குறைந்தபட்சம் வட்டியாவது இல்லாமல் வசூல் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் நலனுக்காக பெரிய பெரிய திட்டங்கள் போடுகிறோம். அப்படித் திட்டம் போடுகிறபோது, சிலவற்றை 'அன்-எகனாமிகல் ஸ்கீம்' என்று சொல்லி விட்டுவிடுகிறோம். அரசாங்கம் மக்களுக்கு நன்மை செய்யும் முறையில் லாபநஷ்டம் என்று கணக்குப் பார்க்காமல், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்கிற ஒரே எண்ணத்தோடு பெரிய பெரிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி செய்தால் தான் தண்ணீர் வசதி சிறப்பான முறையில் விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சியில் குட்டைகள் அமைக்கும் திட்டம் கொண்டு வந்தார்கள். அந்தக் குட்டைகளுக்கு நீர் வரத்து செய்வதற்கு வாய்க்கால்கள் அமைக்கப்பெறாத காரணத்தால், அது குழி வெட்டி வைத்ததைப் போல் இருக்கிறதே தவிர, அந்த 'பாண்ட் ஸ்கீமால்' எந்தவிதமான நன்மையும் விவசாயிகளுக்கு ஏற்பட வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அந்தக் குட்டைகளுக்கு நீர் வரத்து வரக்கூடிய முறையில் வாய்க் கால்கள் ஆங்காங்கு வெட்டித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறுமலை அருகே ஒரு திட்டம் போட்டார்கள். அது அரசாங்கத்திற்கும் அனுப்பப்பட்டது. ஆனால், இங்கே வந்த பிறகு, அதை 'அன்—எகனாமிகல் ஸ்கீம்' என்று தள்ளுபடி செய்து விட்டார்கள். எல்லா அமைச்சர்களும் சேர்ந்து அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து, அந்தத் திட்டத்தை அமல் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு தொழில் கருவிகள் கொடுக்கும் திட்டத்தின் மூலம் டிராக்டர், மற்றும் பிற கருவிகள் கொடுத்து வருகிறோம். பஞ்சாயத்து யூனியன்களில் கேட்டால் அந்த இயந்திரங்கள் ரிப்பேர் ஆகி இருக்கிறது என்று சொல்கிறார்கள். தேவைக்கு என்று கேட்கிறபோது அங்கே ஒன்றும் சரியாகக் கிடைப்பது இல்லை. அதனால் விவசாயிகள் பயிர் செய்கிற நேரத்தில் அவர்களுக்கு உபயோகமாக இருக்கும் வகையில், டிராக்டர், ட்ரெய்லர்ஸ், ஸ்ப்ரேயர்கள் போன்ற தொழில் கருவிகள் கொடுக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





தற்போது விதைகள் கொடுக்கிறோம். பஞ்சாயத்து யூனியனில் கொடுக்கும் விதையை நான்கூட வாங்கினேன். கம்பு விதை வாங்கிப் போட்டுப் பார்த்தேன். கம்பு விளையவே இல்லை. 60% 80% முளைக்கும் தன்மை உடைய விதைகள் என்று சொல்லி சான்றிதழ்கள் கொடுக்கிறார்கள். ஆனால் அவைகள் அந்த அளவிற்கு விளைவது இல்லை. அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, அதிக விலை கொடுத்து வெளியில் வாங்கி விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. இதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு, நிலைமைகளைச் சரிசெய்ய வேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

கிணறு வெட்ட மானியம் கொடுக்கப்படுகின்றது; கடன் கொடுக்கின்றார்கள். ஏற்கெனவே கிணறு வெட்டியிருப்பவர்களுக்கு மானியம் கொடுப்பது இல்லை; கடனும் கொடுப்பதில்லை. ஆகவே, பழைய கிணற்றில் தண்ணீர் இல்லாவிட்டால், அந்தக் கடனை தள்ளுபடி செய்யுங்கள். நான் எல்லோரையும் போல் கடன்களைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று கேட்பதாக கருதக் கூடாது. கடன்கள் வசூலிக்காமல் அரசாங்கம் நடக்கமுடியாது. இருப்பினும் எந்த அளவுக்கு முடியுமோ அதைச் செய்யுங்கள். பழைய கிணற்றில் தண்ணீர் வரவில்லை என்று சொன்னால், ஆழ் கிணறு போடவோ, குழாய்க் கிணறு போடவோ மானியம் கொடுக்கவேண்டும்; கடனும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மண் வளப் பாதுகாப்பு. இதிலே உள்ள சிரமங்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆயிரம் ஏக்கர் நிலம் எங்கள் பகுதியில் எடுத்தார்கள். என்னுடைய ஏரியாவான ஜம்புதுரைக் கோட்டைக்கு அதிகாரிகள் வந்து ஆய்வு நடத்துகிறார்கள் என்று கேள்விப்பட்டு உடனே நான் கார் எடுத்துக்கொண்டு ஓடோடிச் சென்று அவர்களைப் பார்த்தேன். எந்த ஏரியாவை எடுக் கிறீர்கள் என்று கேட்டேன். அவர்கள் ரோடு ஓரம் இருக்கிற ஆயிரம் ஏக்கர் எடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அந்தப் பகுதியில் உள்ள என் சொந்தக் கிராமமான அழகன் பட்டி அரிசன மக்கள் வாழும் ஒரு கிராமம், அதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அவர்கள் அதைச் செய்ய வில்லை. அதிகாரிகளை தனித்தனியாகக் கூட கேட்டேன். அந்தத் திட்டத்தை எடுத்திருந்தால் அந்தப்பகுதி மக்களுக்கு பல்வேறு நன்மைகள் கிடைத்து இருக்கும். அரசாங்கமே லேண்ட் ரிக்ளமேஷன் செய்வதற்கு பணம் கொடுத்து இருப்பார்கள். அரிசன கிணறு வெட்ட மானியம் கொடுத்து இருப்பார்கள். அந்தப் பகுதியில் இருப்பவர்கள் அரிசன சிறு விவசாயிகள் என்ற காரணத்தினால், அதையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பூச்சி மருந்து கரும்பு, திராட்சை போன்றவற்றிற்கு வாங்கி அடிக்கின்றோம். சில நேரங்களில் எக்ஸ்பயரி ஆன மருந்தை தேதி மாற்றிக் கொடுத்து விடுகிறார்கள். அதையும் நிவர்த்திக் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் தயாரிக்கும் மருந்து தரமானதாக இல்லை. எனவே, அரசாங்கமே மருந்து களை தயாரித்து விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் விநியோகம் செய்ய முன்வரவேண்டும்.

[நண்பகல் 12.00]

இங்கே அமைக்கப்பட இருக்கின்ற பல தொழில்களில், மதுரையில் பழத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க இருப்ப தாக அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே பழ வகைகள் ஏராளமாக கிடைக்கின்றன, தக்காளி கிடைக்கிறது. ஆரஞ்சு கிடைக்கிறது. அன்னாசிப் பழம் கிடைக்கிறது. வாழை நிறைய கிடைக்கிறது. இந்தப் பழவகைகளைப் பயன் படுத்தி அங்கே ஒரு பழத் தொழிற்சாலை அமைக்கப்பட இருப்பது நல்ல திட்டம். வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன்.

அதிலும் குறிப்பாக கொடைக்கானல் மேல் பகுதியில் வாழை, தக்காளி ஆரஞ்சு போன்ற பழவகைகள் நிறைய கிடைக்கின்றன. கீழ்ப் பகுதியிலே நிறைய திராட்சை, அதுவும் நல்ல ரக திராட்சை கிடைக்கிறது. பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்பட்டால் அவைகளை எல்லாம் நல்லமுறையில் பயன் படுத்திக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

இன்னொன்று, ஒரு ஏக்கர் திராட்சை பயிர் செய்ய 10,000 ரூபாய் வரையில் கடன் கொடுக்கிறார்கள். அப்படி ஒரு ஏக் கருக்கு 10,000 ரூபாய் கடன் வாங்கி திராட்சை பயிர் செய் தால், சில சமயங்களில் ஒரு கிலோ திராட்சை ஒன்றே முக்கால் ரூபாய், ஒன்றரை ரூபாய் கூட விலைபோகவில்லை. அதனால் அந்த விவசாயிகள் பெருத்த நஷ்டமடைகிறார்கள். ஆகவே, நிலக்கோட்டைப் பகுதியில் கொடை ரோட்டில் ஒரு பழப் பக்குவத் தொழிற்சாலையை ஆரம்பித்து, அங்கே கிடைக்கின்ற பழவகை களைப் பெற்று, அவைகளைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் சூழ்நிலையை உருவாக்கினால் அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டுவார்கள்; நன்றி செலுத் துவார்கள், நானும் அவர்கள் சார்பிலே நன்றுசெலுத்த கடமைப் பட்டிருப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று, அங்கே பூ விவசாயம் நிறைய செய்கி றார்கள். அதிலும் மல்லிகைப் பூவில் செண்ட் தயாரிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது; கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த மல்லிகைப் பூ அங்கே ஏராளமாகக் கிடைக்கிறது. ஆகவே,



நிலக்கோட்டைப் பகுதியில் மல்லிகைப் பூவிலிருந்து செண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை (ஜாஸ்மின் பாக்டரி) ஒன்றை ஆரம்பித்து அந்த விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து, உற் சாகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த செண்டை வெளிநாட்டிற்கு அனுப்பினால் நிறைய அந்நியச் செலாவணி கிடைக்கும். இது நாட்டிற்கும் விவசாயிகளுக்கும் நன்மை பயக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த ஏழை விவசாயிகளுக்கு நாம் பல வழிகளில் கடன் கொடுக்கிறோம். குறிப்பாக பால் மாடு வாங்கு வதற்கு கடன் கொடுக்கிறோம்; மானியமும் கொடுக்கிறோம். அப்படி விவசாயிகளுக்கு கடனும் மானியமும் வழங்கும் போது அவர்களுக்கு அது நேரடியாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் மானியம் வழங்குவதில் கோளாறு இருக்கிறது. திருட்டுத்தனம் நடக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டும். ஆகவே, அவர்களுக்கு நேரடியாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்கிற பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால் அறுவடைக் காலத்திற்கு முன் னாலேயே செய்யப்பட்டிருக்கிற செலவுகளின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். ஒரு குவிண்டால் நெல்லுக்கு 125 ரூபாய், ஒரு டன் கரும்புக்கு 150 ரூபாய் என்று அறு வடைக்கு முன்னாலேயே விலை நிர்ணயம் செய்துவிட வேண்டும். அப்படி விலை நிர்ணயம் செய்து அதை விநியோகம் செய்யும் போது அதிலே நஷ்டம் ஏற்படுமானால் அந்த நஷ்டம் முழுவதையும் அரசாங்கம் மானியமாகக் கொடுக்க வேண்டும். நஷ்டத்தை மானியமாகக் கொடுத்து, ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களை அரசாங்கம் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நானும் ஒரு கரும்பு விவசாயிதான். கரும்பு ஒரு டன் வெட்டுவதற்கு 20 ரூபாய் கூலி கொடுக்க வேண்டும்; அதை மில்லுக்கு எடுத்துச் செல்ல டன்னுக்கு 15 ரூபாய், 20 ரூபாய் கொடுக்க வேண்டும். இப்படிக் கணக்குப் பார்த்தால் 2,000 ரூபாய்க்கு மேல் உற்பத்திச் செலவு வந்து விடுகிறது. அதைப் போல நெல்லுக்கு உரம் விலை 1,500 ரூபாய், 2,000 ரூபாய் ஆகிவிடுகிறது. ஆகையால் இப்படி ஏற்படுகின்ற செலவுகளை எல்லாம் கணக்கிட்டுப்பார்த்து விலை நிர்ணயம் செய்ய வேண் டும். நிர்ணயித்த விலையைவிட குறைவாக வருமானம் கிடைத்தால் அந்த நஷ்டத்தை அரசாங்கம் மானியமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட விவகாரங்களில் மத்திய அரசின் மெத்தனப் போக்கைப் பார்த்து வருந்துகிறேன். உரத்திற்கு மானியம் தந்து வந்தார்கள்; இப்போது அதை நிறுத்திவிட்டார்கள். விவசாயப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து, நிர்ணய விலைக்கு அவர்களே கொள்முதல் செய்ய வேண்டும் அல்லது கொள்முதல் செய்வதற்கு அந்தத் தொகை வழங்க வேண்டும். அதை எல்லாம் செய்யாமல் பல துறைகளில் வரிகளாக வசூல் செய்துகொண்டு, மாநில அரசை புறக்கணிக்கும் சூழ்நிலை வந்தால் அது விவசாயிகளுக்கு நல்லதல்ல என்பதைச் சுட்டிக் காட்டி, மத்திய அரசு மூலமாக எவ்வளவு பணம் வாங்க முடியுமோ அதை வாங்கி, ஏழை எளிய விவசாயிகளுக்கு அதைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கும் இங்கே நான் பேசுகின்ற வாய்ப்பை எனக்கு அளித்த என்னுடைய தொகுதி மக்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, 1980-81 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்தமைக்காக தலைவரவர்களுக்கும் நன்றிதெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு விவசாயிகளுக்கு 60 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்திருக்கின்றது. இந்தக் கடன் தள்ளுபடி குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசுகின்றபோது யானைப் பசிக்கு சோளப்பொறி என்ற ஒரு கருத்தினைக் கூறினார்கள். இது குறித்து நான் ஒரு கருத்தினைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது மனிதர்களுக்கு ஏற்படுகின்ற வியாதியிலே எரிகொம்பு வாய்வு வியாதி என்று ஒன்று இருக்கிறது. அந்த எரிகொம்பு வாய்வு வியாதியை உடையவர்களுக்கு எவ்வளவு உணவைக் கொடுத்தாலும் அந்த உணவு அவர்களுக்குப் பற்றாது. அதைப் போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 60 கோடி கடன் தள்ளுபடியை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்ததையும், புதிய கடன்களை வழங்குவதற்கு வழிவகை செய்ததையும் விவசாயத் தொழில் முன்னேற்றம் காண்கிற வகையில் வழிவகைகள் செய்ததையும், பழப்பண்ணைகள் அமைத்ததையும், விவசாயிகளுக்கு விதைகள் முதலியவற்றை நல்ல முறையிலே வழங்குவதற்கு ஏற்பாடு செய்ததையும் பாராட்டி இந்த மானியக் கோரிக்கையினை வரவேற்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கறவை மாடு வாங்குவதற்கும், மாட்டு வண்டி வாங்குவதற்கும், உழவு மாடுகள் வாங்குவதற்கும் மானியம் கொடுப்பதை வரவேற்கிறேன். என்னுடைய தொகுதியாகிய கிழக்கு இராமநாதபுரம் மிகவும் பின்தங்கிய தொகுதி என்பதை அனைவரும் அறிவார்கள். ஜீவநதிகள் ஏதும் இல்லாதது கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம். குறிப்பாக தேவக்





கோட்டை, திருவாடானை வட்டங்களில் நூற்றுக்கணக்கான கண்மாய் பாசனத்தின் மூலம் தான் விவசாயம் நடைபெற்று வருகிறது. ஜமீன் ஒழிப்பு சட்டத்தின் பயனாய் அரசு வசம் ஆக்கப்பட்ட இக்கண்மாய்களுக்கு மடைகள், கலுங்குகள் கட்டி நிலைப்படுத்தும் பணி 1968 ஆம் ஆண்டு வரை உணவு உற்பத்தி அடிப்படையில் சிறப்பு சிறுபாசன திட்டத்தின் கீழ் செவ்வனே செயல்பட்டு வந்தது. 1968-லிருந்து 1973 ஆம் ஆண்டு வரை இவ்வேலைகள் படிப்படியாகக் குறைந்து 1974 ஆம் ஆண்டிலிருந்து திட்டத்தின் நோக்கமே அடியோடு தகர்க்கப்பட்டு, பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. 1974—ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ''விரைவு சிறுபாசனத் திட்டம்'' கவைக்கு உதவாத நிலையில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 50 ஏக்கர் வரை உள்ள கண்மாய்களுக்கு மடைகள், கலுங்கு கட்டி நிலைப்படுத்த ரூ. 20,000 என்றும், 50 ஏக்கரிலிருந்து 200 ஏக்கர் வரை ரூ. 30,000 என்றும் ஆதர்சனம் இல்லாத ஓர் உச்ச வரம்பு வகுக்கப்பட்டிருப்பதால், இத்திட்டத்தின்கீழ் ஒரு கண்மாய்க்கு அடிப்படைத் தேவையான, மடைகள், கலுங்குகள், மதகுகள் போன்றவைகளுக்கு மதிப்பீட்டுத் தொகை உச்ச வரம்பைத் தாண்டுகிறது என்ற காரணம் காட்டி பல கண்மாய்கள் நிலைப்படுத்தப்படாமல் உள்ளன. எனவே, மூன்றாண்டுக் காலம் என ஒரு இலக்கு நிர்ணயித்து எஞ்சியுள்ள அனைத்து கண்மாய்களுக்கும் மடைகள், கலுங்குகள் கட்டி நிலைப்படுத்தும் பணி முற்றுப்பெற வேண்டும். ஜமீன் ஒழிப்புச் சட்டம் நிறைவேறி 32 ஆண்டுகள் கழிந்த பின்னரும் பல நூற்றுக்கணக்கான கண்மாய்கள், மடைகள், கலுங்குகள் கட்டப்படாமல் இருப்பது விவசாயத்தையும் பாதித்து விவசாயிகளின் பொருளாதாரத்தையும் பாதிப்பதால் பொதுப்பணித்துறை, வரம்பு நிர்ணயம் ஏதும் வகுத்துக் கொள்ளாமல் சிறப்பு சிறுபாசனத் திட்ட அடிப்படையிலோ அல்லது போர்க்கால அடிப்படையிலோ எஞ்சியுள்ள கண்மாய்களை மூன்று ஆண்டு காலத்திற்குள் நிலைப்படுத்த வேண்டும்.

ஏற்கெனவே நிலைப்படுத்தப்பட்டு பொதுப்பணித்துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலிருக்கும் கண்மாய்கள் சரியான முறையில பராமரிக்கப்படவில்லை. இவ்விரு துறைகளுக்கும் பராமரிப்பு செலவிற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படல் வேண்டும்.

நூறு ஏக்கருக்கு மேற்பட்ட கண்மாய்களின் ஆற்றுக் சால்வாய்கள் பொதுப்பணித் துறையின் பொறுப்பில் உள்ளன. ஆனால், அவைகளின் கரையை பலப்படுத்தவோ, கால்வாய்களின் மேடிட்ட பகுதிகளை தூர் எடுக்கவோ சட்டம் இடம் தரவில்லை என்றும் அவை குடி மராமத்து முறையில் பேணப்படுதல் வேண்டும் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். காவேரி டெல்டா, மற்றும் பெரியாறு டெல்டா பகுதிகளின் ஆற்றுக்

கால்வாய்களை பொதுப்பணித்துறை ஆண்டு பராமரிப்பு செய்வதுபோல் இப்பகுதியிலும் அப்பணியினை பொதுப் பணித்துறை செய்ய உத்திரவு வழங்கப்படல் வேண்டும்.

காவேரியில் வெள்ளப்பெருக்கு நேரிடும்போது, காவேரி டெல்டா பகுதியினர் வெள்ளத்தால் பாதிக்கப்படும்பொழுது, அத்தகைய உபரி காவேரி வெள்ள நீரை கட்டளைக் கால்வாய் முடிவுறும் இடமான முதலை முத்துவாரியிலிருந்து ஒரு தனிக் கால்வாய் மூலம் இப்பகுதியில் செல்லும் காட்டாறுகளான பாம்பாறு, தேனாறு விரசூளையாறு மற்றும் சறுகனி ஆறு இவைகளுடன் இணைக்கும் திட்டம் ஒன்று 1976 ஆம் ஆண்டு இறுதியில் ஆளுநர் ஆட்சியின்போது பரிசீலிக்கப்பட்டது.

[பிற்பகல் 12.10]

பின்னர் அது பற்றி எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்பெறவில்லை. இந்த ஆண்டு கூட காவேரியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. தஞ்சை விவசாயிகளுக்கு பாதகம் ஏதும் இன்றி உபரி நீரை இப்பகுதிக்கு திருப்பிவிடும் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

100 அடி ஆழ் குழாய் கிணறு திட்டம் பரமக்குடி, திருப்புவனம் போன்ற ஒன்றியங்களில் செயல்பட்டு வருகிறது. அதே போன்று என்னுடைய தொகுதியில் தேவகோட்டை, திருவாடானை போன்ற ஒன்றியங்களிலும் இந்தத் திட்டத்தை அமுல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைத் திட்டம் என்று எங்கள் தொகுதியில் தேவகோட்டை ஒன்றியத்தில் செயல்பட இருக்கிறது. அதாவது தரிசு நிலங்களை விளைச்சல் நிலங்களாக மாற்றுதல் என்பது. இதனால், விஜயபுரம், வாகைக்குடி, செங்கக்கோளல் போன்ற கிராமங்களில் உள்ள விவசாயிகள் பயன் பெறுவர். இதற்கு 2 லட்சம் திட்டச் செலவு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள், அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அந்த இடங்களில் தண்ணீர் வசதி கிடையாது. எனவே, அரசு அங்கே கிணறு ஒன்று வெட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது விதை நெல் விலை மார்க்கெட் விலையை விட அரசாங்கத்தில் 40 காசு கூடுதலாக கொடுக்கிறார்கள். விதை, உரம், பூச்சி மருந்துகளின் விலை உயர்ந்திருக்கின்ற இந்த நேரத்தில் விதை நெல்லின் விலை கிலோவுக்கு 40 காசு உயர்வை அரசு ஏற்றுக்கொண்டால் விவசாயிகளுக்கு மிகவும் பயன்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



தேவகோட்டையில் மாவட்ட வேளாண்மைக் கழகம் ஏற்படுத்த போன ஆண்டிலேயே அனுமதி கிடைத்திருந்தும், இன்னும் இங்கு மாவட்ட வேளாண்மை கழகம் அமைக்கப்படவேயில்லை. ஆகவே உடனடியாக மாவட்ட வேளாண்மை அலுவலகம் திறப்பதற்கும், அதை போதுமான அலுவலர்களுடன் நடத்துவதற்கும் அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டி. பி. ஏ. பி., ஐ. ஆர். டி. பி. திட்டத்தில் பாஸ்பேட், பொட்டாஸ் உரங்களுக்கும் தற்பொழுது சிறு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப் பெறுவதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இந்த உரம் சொசைட்டி மூலமாக வழங்கப்பெறுகிறது. அந்த சொசைட்டியில் பல சிறு விவசாயிகளுக்கு கடன் இருப்பதால் இவைகளை வாங்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். ஆகவே இதை அந்த சிறு விவசாயிகளுக்கும் பயன்படத்தக்க வகையில், தற்போது ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும் ஒரு வகை கடை திறக்கிறார்கள். அந்த கடைகளின் மூலமாக இந்த உரங்களை வினியோகம் செய்தால் விவசாயிகள் அனைவரும் பயன் பெறுவார்கள் என்பதைக் கூறிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* <u>திரு. த. மாரிமுத்து</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளத்தூர் தொகுதி மக்கள் என்னை இந்த மன்றத்திலே பேச அனுப்பி வைத்ததற்காக அவர்களுடைய பாதங்களிலே என்னுடைய வணக்கத்தைச் செலுத்திக் கொண்டு நான் பேசத் தொடங்குகிறேன்.

திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து புதுக்கோட்டையை உருவாக்கியபிறகும், அந்த மாவட்டத்திற்கான எந்த அலுவலகங்களும் திறக்கப்படவில்லை; எந்தவிதமான வசதியும் மக்களுக்கு கிடைக்கப் பெறவில்லை. புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி வந்ததற்குப் பிறகு எங்கள் மாவட்டத்திற்கு வேண்டிய அலுவலகங்களை ஒதுக்கி கொடுத்து, அதற்கான கட்டிட வசதிகள் செய்து கொடுத்து, மருத்துவ மனைகள் கட்டிக்கொடுத்து, எங்கள் வணக்கத்துக்குரிய மாமன்னரின் பெயரிலே உள்ள மன்னர் கல்லூரியில் எம். ஏ. எம். எஸ். ஸி போன்ற பட்ட மேற்படிப்புக்கான வசதியினை அமைத்துக் கொடுத்ததற்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய குளத்தூர் தொகுதி மிகவும் பின் தங்கிய பகுதியாகும். அங்கே வசிக்கிற மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயமும் மழையை நம்பியே நடைபெறுகிறது. மழை சரியாகப் பெய்யாவிடில், விவசாயம் செய்ய அவர்களுக்கு நீர் கிடையாது. அவர்கள்

வாழ்க்கைக்கு சரியான மாற்றுத் திட்டங்கள் இல்லை. பனை மரத் தொழில், தீப்பெட்டித் தொழில் போன்ற சிறு சிறு குடிசைத் தொழில்களை அந்தப் பகுதிகளிலே ஆரம்பிக்க ஏதாவது ஏற்பாடு செய்தால், விவசாயம் இல்லாத நேரத்தில் அவர்கள் இந்த குடிசைத் தொழில்களை செய்து பிழைத்துக் கொள்வார்கள். அதனால் என்னுடைய தொகுதியில் இத்தகைய குடிசைத் தொழில்களை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே நிறைய காட்டாறுகள் இருக்கின்றன. அந்த காட்டாறுகளில் மழைக் காலங்களில் பருக் கெடுத்தோடும் தண்ணீரை தேக்கி வைத்து, நீர் இல்லாத காலங்களில் குளங்கள் மூலமாக நிலங்களுக்கு பாய்ச்சுவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

குடுமியான் மலையில் அண்ணா பண்ணை, விதை ஆராய்ச்சிப் பண்ணை அமைக்கப்பட்டு உள்ளது. ஏம்பல், வெள்ளாளவிடுதி ஆகிய இடங்களில் மாநிலப் பண்ணைக் கழகங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. வம்பன் என்ற இடத்தில் விதைப்பெருக்கு மையம் ஒன்றும் உள்ளது. மண் பரிசோதனை நிலையம் ஒன்றும் அமையப்பட்டுள்ளது. புனக் குளம் என்ற இடத்தில் தாவர எண்ணெய்த் தொழிற் கூடம் ஒன்று அமைக்கும் திட்டமும் போடப் பெற்றிருப்பதாக தெரிகிறது. அதற்காக என்னுடைய நன்றியை என் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதி விவசாயிகள் அதிகமாக வாழ்கின்ற பகுதி என்று ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

ஆகவே எங்களுடைய மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரி அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன்னால் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அங்கே ஒரு விவசாயப் பல்கலைக் கழகம் அமைப்பதற்காக கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் தலைமையில் நிதி முடிப்பு வழங்கப்பட்டது. ஆனால் எங்கள் மாவட்டத்தில் விவசாயப் பல்கலைக்கழகமோ அல்லது விவசாயக் கல்லூரியோ இதுவரை அமைக்கப்படவில்லை. எனவே எங்கள் மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரி அமைத்துத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என் சொந்தக் கிராமத்தில் உள்ள களமாவூர் டு விராலிமலையில் 12 ஆண்டுகளுக்கு முன் பாலம் சேதமடைந்து இருக்கிறது. அதிலேதான் பஸ் போய்க்கொண்டிருக்கிறது. அந்தப் பாலம் எந்த நேரத்திலும் இடிந்துவிழும் நிலையில்தான் இருக்கிறது. எனவே அந்தப் பாலத்திற்கான மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு



விரைவில் அனுமதி தந்து அந்தப் பாலத்தைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மன்றத்தில் எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு என் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி கலந்த என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசு தாக்கல் செய்துள்ள வேளாண்மைத்துறை மானியத்தின் மீது திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த அறிக்கையில் வருகிற நடப்பாண்டில், 65 லட்சம் டன் அரிசியும், சிறு தானியங்கள் 21.45 இலட்சம் டன், பயறு வகைகள் 3.75 இலட்சம் டன், எண்ணெய் வித்துக்கள் 16.03 இலட்சம் டன், கரும்பு 19.80 இலட்சம் டன், பருத்தி 4.60 லட்சம் பேல்கள் என்ற அளவில் உற்பத்தி இலக்கினை இந்த அரசு தன கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

எங்கள் கட்சி மன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுக்காட்டியதைப்போல் எங்கள் ஆட்சியில் கொண்டு வந்த பசுமைப்புரட்சி காரணமாகத்தான் இன்று தமிழகம் தன்னிறைவு நிலையை அடைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் நாங்கள் பல்வேறு கொள்கைகளை, பல்வேறு சாதனைகளைச் செய்தோம் என்று மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள் இதுவரை என்ன செய்திருக்கிறார்கள் என்று நினைத்துப்பார்க்கும்போது இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் திருப்தி அளிக்கின்ற வகையில் இருக்கிறதா என்றால் கண்டிப்பாக இல்லை என்றுதான் நான் இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக சாகுபடியில் அடங்காத நிலங்களை, பயிர் செய்ய முடியாத நிலங்களை எல்லாம் பயிரிடக்கூடிய அளவிற்கு ஏதாவது திட்டங்கள் இங்கு தரப்பட்டிருக்கிறதா என்றால் தரப்படவில்லை.

விவசாயிகள் உற்பத்தி செய்கிற விளைபொருள்களுக்கு ஒழுங்கான முறையில், நியாயமான முறையில் விலை கிடைக்கவேண்டும் என்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த போது பல்வேறு மார்க்கட்டிங் கமிட்டிகள் மூலம் நல்லதிட்டத்தைக் கொண்டுவந்து அது சிறப்பான முறையில் செயல்பட்டது. ஆனால் இன்றைக்கு மார்க்கட்டிங் சொஸைட்டீஸ் மூலம் செயல்படுத்தப்பட முடியாமல் மார்க்கட்டிங் கமிட்டிகள் எல்லாம் ஸ்பெஷல் ஆபீசர்ஸ் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளன. அந்த நிர்வாகம் சரியானமுறையில் இயங்குகிறதா என்றால் சரியாக இயங்கவில்லை.

[திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன்] [1980 ஜூலை 16

தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் விளை பொருள்கள் உற்பத்திச் சங்க அலுவலகம் நல்லமுறையில், தமிழகத்திலேயே முதன்மையாக இயங்கிக் கொண்டு வந்தது. ஆனால் இன்றைக்கு அது மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அது மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. காரணம் அதன் டயரக்ட்ரேட் ஆபீஸ், அதன் தலைமை அலுவலகம், இயக்குநர் அலுவலகம் இன்று திருச்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் திருச்சியில் உள்ள அலுவலகத்திற்குச் சென்றுதான் பிரச்னைகளை தீர்த்துக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அதை மீண்டும் பழைய இடத்திற்கே கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா விவசாயிகளும் நன்மை பெறும் வகையில் ஐந்து கிலோ மீட்டருக்கு உள்ளடக்கிய நிலையில் மார்க்கட்டிங் கமிட்டிகள் ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தினால்தான் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்கிற விளைபொருட்களை மார்க்கட்டிங் கமிட்டிக்கு கொண்டு வந்து நியாயவிலை கிடைக்க ஏற்பாடு செய்யமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

குறிப்பாக, காலை 4 மணிக்கே விவசாயிகள் நெல், பருத்தி ஆகியவைகளைக் கொண்டு வந்து மார்க்கெட்டிங் கமிட்டியிலே போடுகிறார்கள். அப்படிப் போடுகின்றவர்கள் காலை 4 மணியிலே இருந்து இரவு 12 மணி வரைக்கும் அங்கேயே காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனே பணம் பட்டுவாடா செய்யப்படுவதில்லை. ஏன் இந்த நிலை இருக்கின்றது என்பதை அரசாங்கம் கண்டிப்பாக கவனித்து, மிக சீக்கிரம் பணம் பட்டுவாடா செய்யவேண்டும். இதற்குக் காரணம், அங்கே இருக்கின்ற வியாபாரிகள் இந்த நெல்லை அல்லது விளைபொருள்களை விலைக்கு விற்றபிறகு, பணத்தைக் கொடுக்கிறார்கள். அதனால் அவர்கள் இரவு 12 மணிக்கு கிராமத்திற்கு திரும்ப வேண்டியிருக்கிறது. இப்படி திரும்ப வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் கையில் வைத்திருக்கின்ற பணத்தை இழக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, இந்த நிலையை மாற்றுகின்ற முறையில் மார்க்கெட்டிங் கமிட்டி மூலமாகவே அங்கே இருக்கும் அதிகாரிகள் அதற்கான அண்டர்டேக்கிங்கை எடுத்துக் கொண்டு, அந்தந்த விளைபொருள்களுக்கு அரசாங்கமே முன்பணம் தந்து அவர்களுக்கு உடனே பணத்தை பட்டுவாடா செய்கின்ற திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூலை 16] [திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்]

அதே நேரத்தில், நம்முடைய தமிழகத்திலே, அரசின் சார்பாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்கிற அமைப்பு உணவுப் பொருள்களை வாங்குகின்ற ஒரு அமைப்பாக இருக்கிறது. இதேபோன்று மத்திய அரசிலே எப்.சி.ஐ. என்ற ஒரு அமைப்பு உணவு உற்பத்திப் பொருள்களை வாங்குகின்ற ஒரு கார்ப்பரேஷன் இருக்கிறது. இந்த இரண்டு கார்ப்பரேஷன்களும் அவர்கள் வாங்குகின்ற உணவுப் பொருள்களை நேரடியாக புரோக்கர்கள் வைத்து தனியார் வியாபாரிகளைப்போல் வாங்குவதால், உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. இதிலே இடைத் தரகர்கள் தட்டிச் செல்லுகின்றார்கள். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஒழுங்காக கணக்கு வைப்பதில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இப்படி வாங்குவதாக இருந்தால், கண்டிப்பாக விவசாய சங்கங்களிலே இருந்து வாங்கவேண்டுமே தவிர, நேரடியாக வாங்கக் கூடாது, அதை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு பல்வேறு மார்க்கெட்டிங் கமிட்டி சொசைடிகள் இயங்குகின்றன. அவைகள் எல்லாம் ஸ்பெஷல் ஆபீசரின் கண்ட்ரோலில் இருக்கிறது. அவர்கள் யாரையும் கேட்கின்ற முறையில் இல்லாமல், யாருடைய அதிகாரத்தின் கீழும் இல்லாத வகையில் செயல்படுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், முன்பு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் குழு நிர்வாகத்தின் கீழ் இருந்தது, இப்போது அந்தக் குழு நீக்கப்பட்டதன் காரணமாக, அங்கே இருக்கின்ற ஸ்பெஷல் ஆபீசர்களுடைய தனி அதிகாரத்தின் மூலமாக இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகளில் ஒழுங்கீனங்கள், பல முறைகேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, வெகுசீக்கிரத்தில் எல்லா மார்க்கெட்டிங் கமிட்டி சொசைடிகளுக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. எங்களுடைய ஆட்சி காலத்திலே இந்த மார்க்கெட்டிங் கமிட்டியில் பதவியில் இருந்த தலைவர்களுடைய படங்கள் எல்லாம் அங்கே வைக்கப்பட்டிருந்தன. இன்று ஆட்சிக்கு வந்துள்ள அண்ணா தி.மு.க. ஆட்சியிலே அந்தத் தலைவர்களின் படங்களை நீக்கவேண்டும் என்று உத்தரவு போட்டு, அந்தப் படங்கள் எல்லாம் நீக்கப்பட்டிருக்கின்றன. இதிலேகூட எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அவர்களுடைய படங்களை அந்தத் தலைவர்களுடைய வீட்டிலே திருப்பிக் கொடுத்தால் நலமாக இருக்கும். ஆனால், அந்தப் படத்தை வேண்டுமென்றே மூலையிலே போடுவது என்பது ஒரு ஒழுங்கான, அரசாங்கம் செய்கிற நியாயமான காரியமல்ல என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல· குறிப்பாக, இன்றைக்கு தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, விழுப்புரம் பகுதியில் அதிகமாக......

திரு. ஏ. சி. சண்முகம் : உறுப்பினர் கூறிய படங்கள் எல்லாம் சொந்தப் பணத்திலே வாங்கப்பட்டதா? அல்லது யாருடைய பணத்திலே அந்தப் படங்கள் வாங்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன்: உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சொந்தப் பணத்திலே வாங்கியது தானா அல்லது யாருடைய பணத்திலே வாங்கப்பட்டது என்பதைச் சொல்ல விரும்பவில்லை. என்றாலும், அந்தத் தலைவர்களின் படங்கள் எல்லாம் அதிகாரம் பெற்ற முறையிலே அந்த மன்றங்களிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே இருந்த குழுவின் மேலதிகாரத்தைப் பெற்றுத்தான், அந்தப் படங்கள் அங்கே முறையாக வைக்கப்பட்டிருக்கின்றன. வேண்டுமானால், எந்த இடம் என்பதைக் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மன்றத்தில் இருக்கும் படங்களை எடுக்கவேண்டுமென்ற அரசு குறிப்பை அவர்கள் செயல்படுத்துகிற நேரத்தில் யார் அந்தப் படத்தை வைத்தார்களோ அவர்களிடம் அந்தப் படத்தைக் கொடுப்பது தான் நேர்மையான, நாணயமான அரசின் கடமையாகும்.

விழுப்புரம் பகுதியில் அதிகமான பருத்தி உற்பத்தியாகிறது. அங்கு உற்பத்தி செய்யப்படுகிற பருத்தி கோவைக்கோ, திருப்பூருக்கோ கொண்டு செல்லப்படுகிற நேரத்தில் அப்படியே கொண்டு செல்லுகிற சூழ்நிலை இருக்கிறது. பருத்தியைப் பிரித்து கொட்டை வேறாகவும், பஞ்சு வேறாகவும் பிரிக்கும் ஸ்பின்னிங் பாக்டரியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, மரவள்ளிக் கிழங்குகள் போன்றவை இன்றைக்கு அதிகமான அளவில் சேலம், தர்மபுரி, தென்னாற்காடு மாவட்டங்களில் விளைகிறது. அந்த விளைபொருள்கள் எல்லாம் மார்க்கெட்டிங் கமிட்டி மூலம் விற்கப்படாமல் தனிப்பட்ட மார்வாடிகள் மூலம் வியாபாரம் நடத்தப்படுகிற காரணத்தால் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. ஆகவே, அதையும் மார்க்கெட்டிங் கமிட்டி மூலம் விற்பனைக்குக் கொண்டுவர அரசு நல்ல முறையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படிக் கொண்டுவருவதன் மூலம் விவசாயிகளின் அந்த விளை பொருட்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



குறிப்பாக, செஞ்சியில் இருக்கும் மார்க்கெட்டிங் கமிட்டிக்கு ஏறக்குறைய 20 ஆண்டு காலமாக கட்டிடம் கட்டப்படாமல் இருக்கிறது. அதற்காக நிலம் எடுக்கவேண்டுமென்று பல்வேறு ஆய்வுகள் செய்து அதற்காக கோப்புகள் எல்லாம் பரிமாறி இது வரை நிலம் எடுக்கப்படாமலே இருக்கிறது. உடனடியாக நிலத்தைக் கையகப்படுத்தி சீக்கிரமாகக் கட்டிடம் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தற்போது மார்க்கெட்டிங் கமிட்டி இருக்கும் இடத்தில் போக்கு வரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது. மார்க்கெட்டிங் கமிட்டிக்கு வருகிற வண்டிகள் எல்லாம் காலை மூன்று மணியிலிருந்து 11 மணி வரை நிற்கும் காரணத்தால் திருவண்ணாமலை செஞ்சி பஸ் ரூட்டில் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. அதைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறிப்பாக, ஏழை எளிய விவசாயிகளின் எந்தவிதமான நியாயமான கோரிக்கைகளையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ள வில்லை, ஐந்து ஏக்கருக்குக் கீழ் உள்ள விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஐந்து ஏக்கருக்குக் கீழ் உள்ளவர்கள் என்றால் யார் என்ற கேள்வி இந்த மன்றத்தில் எழுப்பப்பட்டிருக்கிறது. குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை உள்ள ஐந்து ஏக்கர். தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரு ஏக்கருக்குத்தான் சமமாக இருக்கும். தென்னாற்காடு மாவட்டத்தில் ஐந்து ஏக்கர், தர்மபுரி மாவட்டத்தில் 50 ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அளவுக்குத்தான் வரும். சிறு விவசாயிகளுக்கு உண்மையான சலுகைகளைச் செய்கிறார்களா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எங்களுடைய ஆட்சிக் காலத்தில் உரம் வாங்க சப்சிடி தரப் பட்டது. இந்த ஆட்சியில் உரத்திற்கு எந்தவிதமான சப்சிடியும் தரப்படுவதில்லை. ஏன் தரவில்லை? விவசாயிகளுக்கு நன்மை செய்கிறோம் என்று சொல்லுகிறவர்கள், விவசாயிகளுக்கு மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லக்கூடியவர்கள் ஏன் உரத்திற்கு சப்சிடி தரவில்லை. மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயிற்சித் திட்டத்தை அறிவித்திருந்தாலும் எல்லா மக்களுக்கும் பயன்படுகிற முறையில் கொண்டு வரவேண்டும்.

விவசாயிகளுடைய கடன்களை ரத்து செய்வோம் என்று சொன்னவர்கள் மக்களை ஏமாற்றிவிட்டு ஆட்சிக்கு வந்தவர்கள். அவர்கள் விவசாயிகளின் கடன்களை ரத்து செய்யாமல் சிறு விவசாயிகள் கடனை மட்டும் ரத்து செய்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். சிறு விவசாயிகள் யார் என்ற கேள்விக்குப் பதில் என்ன? $7\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு ஏக்கர் உள்ளவர்கள் விவசாய வருமான வரி கட்டக்கூடியவர்கள்; $2\frac{1}{2}$ ஏக்கர் உள்ளவர்கள் சிறு

விவசாயிகள் என்ற கிளாசிபிகேஷன் இருக்கிறது. ஐந்து ஏக்கர் என்று சொன்னால் அது யாருக்குப் பொருந்தும் என்று இதுவரை சொல்லவில்லை. இப்படிப்பட்ட ஏமாற்று வார்த்தைகளின் மூலம் மக்களை திசை திருப்பி ஆட்சிக்கு வந்தவர்கள் நியாயமான முறையில் விவசாயிகளுக்கு நன்மைகளைச் செய்ய முன்வர வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 12·30)

திரு. சி. சபாபதி: மாண்புமிகு சபையின் துணைத் தலைவர் அவர்களே, என்னை வேட்பாளராக நிறுத்திய புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சைத் துவக்குகிறேன். தர்மபுரி மாவட்டம் ரொம்பப் பின்தங்கிய மாவட்டம் என்பது எல்லா அமைச்சர் களுக்கும் தெரியும். அதிகமாக ஏழை எளிய மக்கள் வாழ்கிற பகுதியாக இருக்கிறது. நம்முடைய நாடு சுதந்திரம் பெற்று 30 ஆண்டுக்காலமாகியும்கூட இன்னும் அந்தப் பகுதியிலே ஒரு தொழிற்சாலை கூட ஏற்படுத்தப்படவில்லை, மருத்துவமனைகூட இல்லை. போக்குவரத்து வசதிக்கான ரோடுகள் இல்லை. எல்லா அமைச்சர்களுக்கும் நன்றாகத் தெரிந்திருக்கும்.

ஊத்தங்கரைப் பகுதியை எடுத்துக்கொண்டால் அங்கே பல பகுதிகளிலே மக்கள் ஓட்டுப் போட மறுத்துவிட்டார்கள். ஏன் மறுத்து விட்டார்கள் என்றால் அவர்கள் சொல்கிறார்கள், ரோடு வசதிகள் இல்லை, நாங்கள் இருபது மைல் தூரம் நடந்துபோய் ஓட்டுப்போட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அரசாங்கம் உடனடியாக அப்படிப்பட்ட இடங்களிலே எல்லாம் சாலை வசதிகளை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுதந்திரம் பெற்று அநேக ஆண்டுகள் கடந்துவிட்ட ஆனால் இன்னும் ஒரு தொழிற்சாலைகூட, 2 ஆயிரம்பேர்கள், ஆயிரம் பேர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகூட ஏற்படுத்தப் படவில்லை. அதைப்போலவேதான் மருத்துவமனையும், வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்ட மருத்துவமனையைத் தவிர்த்து வேறு எந்த மருத்துவமனையும் அங்கே இதுவரையிலே அமைக்கப்படவில்லை. அரசு இதையெல்லாம் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரூர் தொகுதியிலே வாழ்கிற மலைவாழ் மக்கள் சாலை வசதிகள் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய கஷ்டங்களைப் போக்குகிற முறையிலே மினி ரோடுகளை அமைத்து ஆங்காங்கே மினி பஸ்களை விடவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



இந்த ஆட்சியிலே ஒரு நன்மையும் செய்யப்படவில்லை என்று இங்கே பேசினார்கள். இரண்டரை ஆண்டுக்காலத்திலே 40 கோடி ரூபாய் ஏழை எளிய மக்களுக்கு தள்ளுபடி செய்யவில்லையா? இருபது ஆண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் சாதாரண விவசாயிகளுக்கு 5 ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறதா? இப்போது 40 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருப்பது சாதனையில்லையா? முதியோர்களுக்கு உதவித் தொகை காமராஜர் காலத்தில் இருந்தது 20 ரூபாய், அதை 25 ரூபாயாக உயர்த்தியிருப்பது சாதனையில்லையா? அதைப்போலவே ஏழை எளிய தாய்மார்களுக்கு தீபாவளிக்கு ஒன்றும், பொங்கலுக்கு ஒன்றுமாக புடவைகள் அளிக்கப்படுவது சாதனையில்லையா? இவைகளையெல்லாம் ஏன் 20 ஆண்டுக்காலம் ஆண்ட காங்கிரஸ் செய்யவில்லை, 9 ஆண்டுக்காலம் ஆண்ட கலைஞர் ஆட்சி செய்யவில்லை? இப்போது செய்கிற சாதனை உங்கள் கண் களுக்குத் தெரியவில்லையா? ஏமாற்றி ஓட்டு வாங்கி விட்டோம் என்று சொல்கிறார்கள், மக்கள் எப்படி ஏமாறுவார்கள்? 1977 ஆம் ஆண்டு இந்திரா காங்கிரஸோடு கூட்டு சேர்ந்தபோது பசுவும் கன்றுக்கும் போடச்சொன்னோம் போட்டார்கள், அதற்குப் பிறகு கைச் சின்னத்திற்குப் போட்டார்கள், திரு. நெடுமாறனுக்கு மீன் சின்னத்திலே போடச் சொன்னோம், போடவில்லையா? இரட்டை இலைச் சின்னத்திற்கு மட்டும்தான் வோட்டுப் போடவேண்டும், இல்லாவிட்டால் ஓட்டுக் கிடையாது என்று பிடுங்கிக் கொண்டோமா? ஏமாறுகிற நிலையில் மக்கள் இல்லை, மக்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். சுயேச்சையாகப் போட்டியிட்ட திரு. செம்மலை ஜெயிக்கவில்லையா? புரட்சித் தலைவர் ஒருவர் திசை திருப்பி ஏமாற்றிவிட்டார் என்று சொல்வது சரியல்ல. அவர்தான் நல்லவர், அவர்களுக்கு வோட்டுப்போடுவதுதான் நல்லது என்று தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொண்டு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள், மக்கள் ஏமாறவில்லை. 6 மாதங்கழித்து பஞ்சாயத்து யூனியன்களின் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றது, அப்போது யார் ஏமாறு கிறார்கள் என்பது தெரியும் என்பதைச் சொல்லி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர், இந்த மானியத்தின் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைக்கின்ற நேரத்திலே சுருக்க மாகவும் சுவையாகவும் பேச வேண்டுமென்று சொன்னார்கள். விவசாயிகளுடைய நிலையைப் பற்றி சுவையாகப் பேசமுடியாது, சோகமாகத்தான் பேசமுடியும், சுருக்கமாகப் பேசமுடியாது. என்னைப் பொறுத்தவரையில் இந்த அரசுக்கு வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

விவசாய மானியத்தைப் பொறுத்தவரையில் சுமார் ஒரு வார காலம் ஒதுக்கினாலும் கூட ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் தங்கள் குறைகளைச் சொல்வதற்குக் 'காணாது' என்ற அபிப்பிராயத்தில் தான் நான் இருக்கிறேன்.

முதலாவதாக, இப்பொழுது சமீபத்தில் அரசுத் தரப்பில் இருந்து, விவசாயிகளுக்கு இருக்கின்ற கடன்களைத் தள்ளுபடி செய்வதாக வாக்குறுதி அளித்தார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்று. ஆனால் அதில் ஐந்து ஏக்கரா என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதில்தான் சிக்கல் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். நல்ல விளைச்சல் ஏற்படுகின்ற பகுதியிலேயும் 5 ஏக்கர்கள் என்றும், வருஷா வருஷம் பஞ்சத்தால் பாதிக்கப்படுகின்ற பகுதிகளிலே இருக்கின்ற நிலத்தையும் 5 ஏக்கர்கள் என்றும் ஒரேமாதிரியாகக் கருதி, பாகுபாடு இல்லாமல் அமைத்திருப்பது ஒரு பகுதி மக்களுக்கு நன்மை செய்வதாக ஆகாது என்பது என்னுடைய கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு ஆதாரமாக நமது அரசு அறிக்கையிலேயே சில விவரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. வருவாய்த்துறை அறிக்கையில் நிலங்கள் இல்லாத ஏழைகளுக்கு நிலங்களை ஒதுக்குவதில்—அசைன்மென்ட் கொடுப்பதில் மற்ற மாவட்டங்களில் நஞ்சையாக இருந்தால் ஒன்றரை ஏக்கர் என்றும். புஞ்சையாக இருந்தால் 3 ஏக்கர் கொடுக்கலாம் என்றும் சொல்கிறார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நிலங்கள் மிக விலை மதிப்பு உள்ளதாக இருப்பதால் நஞ்சையாக இருந்தால் அரை ஏக்கர் என்றும், புஞ்சையாக இருந்தால் ஒரு ஏக்கர் என்றும் கொடுக்க வேண்டுமென நிர்ணயித்திருக்கிறார்கள். இதிலிருந்தே அங்குள்ள விலை மதிப்புள்ள நிலத்தை சர்க்கார் உடைமையைக் கொடுப்பதற்குத் தயக்கம் காட்டும்பொழுது ஏழை எளிய விவசாயிகளுக்குக் கடன்களைத் தள்ளுபடி செய்வதில் மட்டும் இந்த நியாயம் ஏன் பொருந்தவில்லை என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள்மாவட்டத்தில், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து வறட்சியினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில்தான் சர்க்கார் நில வரியைக்கூடத் தள்ளுபடி செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலையில் கடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டால், பூரணமாக அந்தப் பகுதி மக்களுக்கு கடன் தள்ளுபடி செய்து கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது, அதில் சர்வ நியாயமும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், விவசாயத்தைப் பொறுத்த வரையில் சட்டபூர்வமாக 15 ஏக்கர்கள்தான் வைத்துக்கொள்ள முடியும். ஆனால் அந்தப் பகுதியில் ஏதோ கோடிக்கணக்கான ரூபாய் சம்பாத்தியம் செய்கிறார்கள் என்ற நினைப்பு பலருக்கு இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், இங்கே இருக்கின்ற பெரிய வர்த்தக நிறுவனங்கள்—டி.வி.எஸ்., எல்.ஐ.சி., பாரி கம்பெனி போன்ற நிறுவனங்களில் வேலை செய்யும் கடைநிலைஊழியர்கள்



கூட—அதாவது ஸ்கேவஞ்ஜர்—சுத்தம் செய்யும் தொழிலாளிகள் இருக்கிறார்கள், அவர்களுக்குக் கிடைக்கின்ற சம்பளம், நான் அறிந்த வரையில், 600 ரூபாய், 700 ரூபாய்க்குக் குறையாமல் கிடைப்பதாக அறிகிறேன். ஆனால் எங்கள் பகுதியிலே உள்ள விவசாயி 10 அல்லது 15 ஏக்கர் வைத்திருக்கிறார் என்றால் அந்த விவசாயிக்கு நிகர இலாபமாக வருஷத்திற்கு எட்டாயிரம் ரூபாய், ஒன்பதாயிரம் ரூபாய்க்கு மேல் கிடைப்பதில்லை என்ற நிலையில் இருக்கும்பொழுது, ஏன் நிலம் வைத்திருப்பவர்களையெல்லாம் பெரிய நிலச்சுவான்தார்கள் என்ற அடிப்படையில் கருதவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் நில வரியை ரத்து செய்வதற்குக் கணக்கிடும்பொழுது Assured water-supply இருக்கிறதா நிச்சயமாக விளையும் பகுதியாக இருக்கிறதா இல்லையா என்று பார்த்துத்தான் செய்கிறார்கள். ஆனால் இந்தத் தள்ளுபடியைச் செய்யும் பொழுது மட்டும் அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாதது அவ்வளவு நியாயம் இல்லை என்று நான் கருதுகிறேன். மேலும் சர்க்காரின் கணக்குகளிலேயிருந்து, The condition of the irrigated crops during 1979-80, was satisfactory paving way for remunerative returns என்று சொல்கிறார்கள். அப்பொழுது, Assured water supply உறுதியான முறையில், நிச்சயமாக நீர்ப்பாசன வசதி இல்லாத பகுதிகளில் கட்டுப்படியாகாத சாகுபடி என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டு, மீண்டும் அரசுத் தரப்பில் புனராலோசனை செய்து, தள்ளுபடிசெய்யும் விஷயத்தில் சிறு விவசாயி, பெரு விவசாயி என்று பாகுபாடு செய்யாமல் எந்தப் பகுதியில் அதிகமாக விளைகிறது, வருமானம் கிடைக்கிறதா இல்லையா என்று இதையெல்லாம் பார்த்து அதற்கான முறையில் சலுகைகளை வழங்குமாறு நான் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

மேலும், எங்கள் பகுதியிலே ஒவ்வொரு விவசாயியின் மீதும் கடன் பளு அதிகமாக சுமத்தப்பட்டிருக்கிறது. காரணம் தொடர்ந்து வறட்சியான நிலை, வெள்ளமான நிலை என்பதைக் கருத்தில் கொண்டு, இராமநாதபுரம், அதிலும் குறிப்பாக, கிழக்கு இராமநாதபுரம், தர்மபுரி என்று வறட்சிப் பகுதி என்று சர்க்காரால் அறிவிக்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்ட பகுதிகளுக்காவது விசேஷ சலுகை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வதில் விவசாயிகளை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் எல்லா அரசாங்கங்களும் நடத்துவது வருந்தத்தக்கது. வாங்கி உண்போர்

நலனை மட்டும் கருத்தில் கொண்டு நிர்ணயம் செய்வது நியாயமல்ல. எந்தப் பொருளை உற்பத்தி செய்தாலும் அடக்க விலையைக் கணக்கில் கொண்டு அதற்கு ஒரு சிறு ஆதாயத்தை அடக்கி, அதனை விலையாக நிர்ணயம் செய்கிற இந்த நாளில், விவசாயிகளுக்கு மட்டும் குறிப்பிட்ட விலைககுத் தான் விற்க வேண்டும், உரத்தின் விலையை அரசாங்கமோ, தனிப்பட்டவரோ உயர்த்தினாலும் சரி, என்ற வகையில் விலை நிர்ணயம் என்பது எந்த வகையிலும் நியாயம் அல்ல. ஆகவே, விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய நியாயமான விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் விவசாயிகளுக்கு மருந்து அடிக்கின்ற நிலையிருக்கிறது. எந்த விவசாயியும் மருந்து அடிக்காவிட்டால் சரியாக விளையாது என்ற நிலையிருக்கிறது. ஆனால் பல இடங்களிலே நடப்பது, அவர்களுக்கு வேண்டிய சாதனங்கள் கிடைக்காத காரணத்தினாலே, ஒழுங்கான முறையில் கிடைக்காத காரணத்தினாலே, அவர்கள் யாரோ தனியார்களிடம் கூடுதல் வாடகை கொடுத்து அடிக்கச் சொல்லும்போது, அவர்கள் எதிர்பார்க்கும் பலன் கிடைக்கவில்லை. ஆகவே, அரசு தரப்பில் ஒவ்வொரு வட்டாரத்திலும் பஞ்சாயத்து யூனியன்களில் மருந்து அடிப்பதற்கு ஒரு ஸ்குவார்ட் ஏற்படுத்தி அவர்கள் மூலம் அடித்து, அதற்குரிய கட்டணத்தை அவர்கள் வசூல் செய்தால் நிச்சயமாக நல்ல விளைவுகள் கிடைக்கும், பாதகமான விளைவுகள் எதுவும் வராது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், நீண்ட நாட்களுக்கு முன்னதாக மருந்துக்கு சப்சிடி கொடுத்தார்கள். ஆனால் இப்பொழுது கொடுப்பதில்லை. இப்பொழுது விவசாயிகளது அவல நிலையைக் கருதி, ஓரளவு விவசாயிகளுக்கு சப்சிடி கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

1979—80 ஆம் ஆண்டில் தோண்டப்பட்ட பல்வேறு கிணறுகளின் எண்ணிக்கை என்ன காரணத்தினாலோ 1980—81-க்கான உத்தேசத்தில் குறைவாக இருக்கிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை.

வாசனைப் பொருட்களைப் பொறுத்த அளவில், ஏலம், மற்ற வாசனைத் திரவியங்கள் உற்பத்தியாகிற மலைப்பாங்கான பகுதியில் அதற்கு வேண்டிய ஊக்கம் கொடுக்கிற வகையில் காரியங்கள் நடைபெறவில்லையென்பது என்னுடைய குற்றச்சாட்டு. கடந்த ஆண்டுகூட, விவசாய வருமானவரி வருவாயிலே அதிகமான அளவு பெருக்கம் ஏற்பட்டது. அதற்குக் காரணம் மலைத் தோட்டங்களிலிருந்து நிறைய வருமானம் வரியாக வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, பெரும்பான்மை



யான அந்தப் பொருட்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அன்னியச் செலாவணி ஈட்டுகிற காரணத்தால், அதை ஊக்குவிக்கிற வகையிலே இன்னும் தீவிரமாக அப்பொருட்களை உற்பத்தி செய்து, அதிக அன்னியச் செலாவணியை ஈட்ட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பல இடங்களிலே இருக்கின்றன. எங்கள் பகுதியைப் பொறுத்தவரையிலே, சிவகங்கையில் ஒன்று துவங்கி, பெரிய கட்டிடம், கிட்டங்கி கட்டப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைத் திறந்து வைத்தார்கள். ஊருக்கு அப்பாலே, மக்கள் நடமாடாத பகுதியிலே அது இயங்குகிறது. அங்கு என்ன நடக்கிறது என்றோ, விவசாயிகள் யாராவது அங்கு செல்கிறார்களா என்றோ, அல்லது பக்கத்தில் குடியிருக்கிற நரிக்குறவர்கள் மழைக்கு அங்கே ஒதுங்குகிறார்களா என்றோ எங்களுக்குத் தெரியவில்லை. ஆகவே அது பணிகளை ஒழுங்காகச் செய்ய ஆவன செய்யவேண்டும். பல இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து, திட்டங்களை நிறைவேற்றும்போது, யாருக்காகத் திட்டம் தீட்டப்படுகிறதோ அவர்களுக்கு அந்தப் பயன் சேரவேண்டும். இதைக் கண்காணிக்க அரசு முன் வரவேண்டும். ஏதோ திட்டங்கள் தீட்டி நிறைவேற்ற முயலும்போது, அமுலுக்குக் கொண்டுவருவதில் சிரமங்கள் இருந்தாலும், அதைக் கண்காணித்து, சர்க்காரால் செலவு செய்கிற ஒவ்வொரு பைசாவும் மக்களுக்குப் பயன்தரத்தக்க வகையில் இருக்க வேண்டியது மிக அவசியம். அதை அரசு கவனித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்ற வகையில் தமிழகத்தில் சுமார் 161 வட்டாரங்களில் செயல்படுத்துவதில் 30 வட்டாரங்களில் மட்டுமே வறட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படும் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஏன் இப்பகுதிகளுக்குக் கூடுதலாக அனுமதிக்கக் கூடாது? குறிப்பாக, கிழக்கு இராமநாதபுரம் போன்ற வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்று நீங்களே ஒத்துக்கொண்டு, மத்திய சர்க்கார் ஒத்துக்கொண்டுள்ள பகுதிகளுக்கு ஏன் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தவில்லை. இந்த நிலையைப் போக்கி, அப்பகுதிகளுக்கு அதிக அளவில் ஊக்கம் கொடுக்க இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்தி, அப்பகுதி மக்கள் பயன் அடையச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்து, இந்த டி.பி.எ.பி. திட்டம் என்று சொல்லுகிறார்கள். இன்னும் ஐ. ஆர். டி. பி. என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அந்தத் திட்டங்களின் மூலம் முழுப் பயன் பெறவேண்டும் என்றால் அதைக் கூட்டுறவு ஸ்தாபனங்களுடன் இணைத்து நடத்தவேண்டும், இல்லை என்றால் விவசாயிகளுக்கு அதன் பலன் கிடைக்காமல் போகும் இடைஞ்சல் இருக்கிறது. காரணம் எங்கள் தொகுதியில் ஒரு ஆட்டு சொசைட்டி ஆரம்பிக்கவேண்டும்

என்று அதிகாரிகளை அணுகினோம். அவர்களும் நல்ல திட்டம் என்று சொன்னார்கள். ஆனால் ஆரம்பிக்கப் போகும்போது, கூட்டுறவு சொசைட்டிகளிலே ஓவர் டியு இருக்கின்றவர்கள் இதில் சேர முடியாது, ஓவர் டியு இல்லாதவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், தமிழ் நாட்டில் இருக்கிற எந்த விவசாயியாவது கூட்டுறவு ஸ்தாபனங் களிலே கடன் பெறாமல் இருக்கின்றானா? நிச்சயமாக இருக்க முடியாது. ஒரு பக்கத்தில் அவர்களுக்கு நன்மை செய்வதற்குத் திட்டங்கள் வகுக்கிறார்கள். ஆனால் மறுபக்கத்திலே அதைத் தடுத்து நிறுத்துகின்ற வகையிலே சட்டங்களைப் புகுத்தியிருப்பது தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இத்தகைய தடைகளை நீக்கி நல்ல நோக்கத்தோடு அரசு கொண்டு வருகின்ற அந்தத் திட்டங்கள் அவர்கள் பயனடையத் தக்க வகையில் அமைய வேண்டும், இந்தக் குறைகளை நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கோபர்கேஸ் பிளான்ட்-சாணத்தில் இருந்து எரிவாயு தயார் செய்து, அதை சுமார் 1,300 ரூபாயில் ஏற்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எந்த அதிகாரியும் 3,000 ரூபாய்க்கு கீழே சொல்லவில்லை. அதுவும் சற்றுப் பெரிய குடும்பங்களைப் பார்த்தால் 4000, 5000 என்று அதிகமாகவே சொல்லுகிறார்கள். இப்படிக் குறைந்த அளவுக்கு உற்பத்தி செய்ய முடியும் என்று சொன்னால் நிச்சயமாக பல ஊர்களிலே இதை நிறுவ முடியும். கிராமங்களிலே உள்ள விவசாயிகள் அந்த அளவுக்கு செலவு செய்ய முடியாத நிலையிலே இருப்பதால் அவர்கள் அங்கே நிறுவவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, மற்றத் தொழில்களிலே ஆர்கனைஸ்டு லேபர் இருப்பதைப் போல விவசாயத் துறையில் இன்னும் சீரான ஒரு அமைப்பு இல்லை. விவசாயிகள் சம்பந்தப்பட்ட குறைகளை அரசு தரப்பில் வலியுறுத்திச் சொல்லுவதற்கு இதுவரையும் எந்த ஸ்தாபனமும் இல்லை என்ற காரணத்தால் இந்த அரசாங்கம் அவர்களைப் புறக்கணிக்கிறது. ஆகவே அந்த நிலை மாறவேண்டு மானால், இப்போது சென்னையிலே பார்க்கிறோம், பல தொழிற் சாலைகளில் 1000, 2000 பேர்கள் வேலை செய்கின்ற தொழிற் சாலைகளில் கட்டுப்பாடாக ஒரு அமைப்பை ஏற்படுத்தி இருக்கிற காரணத்தினால் தங்களுக்கு வேண்டிய கோரிக்கைகளை வலி யுறுத்தி, எடுத்துச் சொல்லி, வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஏனோ தெரியவில்லை, இந்த நாட்டின் முதுகெலும்பு விவசாயிகள் என்று சொல்லி, 80 சதவிகிதம் விவசாயிகள் என்றும் வெறும் வார்த்தைகளில் பெருமைப் படுத்துவதோடு மட்டும் நில்லாமல், அவர்களுக்கு ஒருங்கிணைந்த ஸ்தாபனம் இல்லாத காரணத்தால் இதுவரையில் தங்களுடைய நியாயமான கோரிக்



கையை எடுத்துச் சொல்லவேண்டும் என்ற காரணத்தால், விவசாயிகள் சங்கம் என்ற அமைப்பின்மூலம், அது விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், எடுத்துச் சொல்லப்படுகிறது, எனவே விவசாயிகள் நன்மையைக் கருதி அவர்களுக்கு நன்மை பயக்கின்ற திட்டங்களை இந்த அரசு செய்யவேண்டும என்று கேட்டு, அமர்கிறேன்.

* திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு சட்டப்பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நடுத்தர விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னை தமிழ்நாட்டின் யாத்திரிகர்களின திருத்தலமான சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவருக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து பேச விரும்புகிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிபெற்று 7—வது தமிழ்நாடு சட்ட சபைக்கு முதலமைச்சராக புரட்சித் தலைவர் பொறுப்பேற்று இருக் கும் பொற்காலத்தில்தான் தமிழ்நாட்டில் விவசாய இலாகா 100—வதுஆண்டு விழாவை நடத்தவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். அரிசிக்கும் அரசியலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பல ஆண்டுகளுக்கு முன்பாக காங்கிரஸ் ஆட்சி நடந்த காலத்தில், 6 அவுன்சுக்கு மேல் வயிறார போட முடியாமல் போனதால்தான் காங்கிரஸ் ஆட்சி அகற்றப்பட்டு, தி.மு.க. ஆட்சி வந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சியின் கடைசி காலத்தில் அரிசி விலை ஏறி மக்கள் அரிசிக்கு தவியாகத் தவித்தார்கள். அந்த அவல நிலையைப் போக்கி அடை மழை காலத்திலும், ஆடி மாதத்திலும் கூட அரிசி விலை ஏறாமல் விவசாயத்தைப் பேணி வளர்த்த பெருமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அதன் ஒப்பற்றத் தலைவர் புரட்சித் தலைவரையுமே சாரும்.

ஆளுநர் உரையிலும், நிதிநிலைஅறிக்கையிலும் விவசாயத்திற்கு முதலிடமும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டு, உணவு, சிறு தானியம், எண்ணெய் வித்துக்கள் அனைத்தையும் கணிசமாக உற்பத்தி செய்ய விவசாய மானியக் கோரிக்கையில் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 12.50]

உணவுக்கொடுத்தோரே, உயிர் கொடுத்தோர் என்பதை உணர்ந்த எங்கள் உத்தமத் தலைவர், மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என்று சொல்லி, யானை கட்டிப் போரடித்த மதுரை

மாநகர்போல், தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களும் வளம் கொழிக்க விவசாயத்திற்கு கணிசமான தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். வெள்ளம், புயல், வறட்சி போன்றவைகளால் பாதிக்கப்பட்ட 5 ஏக்கருக்கு குறைவான விவசாயிகள் அனைவருக்கும் கட்சி பாகுபாடின்றி சுமார் 60 கோடி ரூபாய் கடனை அசலும் வட்டியுமாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ரத்து செய்தது விவசாயிகள் வயிற்றில் பால் வார்த்தது போல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தியை 5.28 டன் அதிகம் பெருக்கும் நோக்கத்துடன் 73,300 ஏக்கர் நிலங்களை புதிதாக சாகுபடிக்குக் கொண்டு வரத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது, 1979–80 ஆம் ஆண்டில் 50,000டன் அரிசியை கியூபாவிற்கும், மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கும் புரட்சித் தலைவர் அரசு ஏற்றுமதி செய்தது தமிழகத்தின் புதிய சாதனையாகும்.

நெல்லுக்கு மாத்திரமல்லாமல், கரும்பு, எள், பருத்தி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியிலும் அதிக அக்கறை காட்டும் விவசாய மானியக் கோரிக்கை வரவேற்கத்தக்கது. தமிழ்நாட்டின் தேங்காய் தேவையை பூர்த்தி செய்கிற வகையில் 31 இலட்சம் தென்னங்கன்றுகள் பயிரிடுகின்ற திட்டம் போற்றுதற்குரிய ஒன்றாகும்.

நான் சார்ந்து இருக்கின்ற சிதம்பரம் தாலுக்காவைப் பொறுத்த வரையில் விவசாயிகள் வெள்ளத்தால் அடிக்கடி கிட்டத்தட்ட ஒவ்வொரு ஆண்டும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள், அறுவடைக்கு லாயக்கான நெல்லும் நெற்பயிர்களும் வெள்ளத்தால் மூழ்கி பாழாகி விடுகிறது. ஒரு மேட்டூர் அணை அல்ல, பல மேட்டூர் அணைகள் தேக்கும் தண்ணீர் வெள்ளக்காலத்தில் பயிர்களை அழிப்பதுடன், கடலில் வீணாகக் கலக்கிறது. வெள்ள நீரை பாளையங்கோட்டை போன்ற பல ஏரிகளில் தேக்குவதற்கு திட்டம் தீட்டவேண்டும், வடிகால் வாய்க்கால்களில் செல்வந்தர்கள் ஆக்கரமித்துக் கொண்டு தண்ணீரை வடியவிடாமல் செய்கிறார்கள். பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆக்ரமிப்புகளை அகற்ற சரியான நடவடிக்கை எடுப்பதில்லை. அத்துடன் வெள்ளாற்றுக்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம். சேத்தியா தோப்பு அணைக்கட்டிலிருந்து கிள்ளைவரை கட்டும் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். வெள்ளம் வந்து அதனால் ஏற்படும் ஒரு ஆண்டு நஷ்டம் ரூ. 5 கோடி ஆகிறது. வெள்ளாற்றில் வெள்ளத்தடுப்புச் சுவர் 1 கோடி ரூபாய் செலவில் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் கட்டுவது நியாயம் மாத்திரமல்ல; சர்க்காருக்கு லாபம் தருவதாகவும் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



வாய்க்கால்களை நவீனமாக்கும் திட்டம், ஏரிகளை நவீனமாக்கும் திட்டம் எல்லாம் லோயர் அணைக்கட்டுக்கு மேல் பகுதியிலேயே நடக்கிறதே தவிர, தேவையான கீழ்ப்பகுதி சிதம்பரம் தாலூக்கா பகுதி பல வருடங்களாக புறக்கணிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மென்ட் சிதம்பரத்தில் கார்டு போர்டு செய்கிற தொழிற்சாலையையும், சர்க்கரை ஆலையையும் துவக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனெனில், விவசாயிகள், தற்போது கரும்பை பெண்ணாடத்திற்கும், நெல்லிக்குப்பத்திற்கும் ஏற்றிச்செல்ல வேண்டியிருக்கிறது. திருமுட்டம், போன்ற பகுதிகளில் புது ரக மணிலாக்கொட்டை, வேறு புஞ்சைப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கு கொடுத்து விவசாயிகளுக்கு உற்சாகமூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரசாயன உரங்கள் விலை ஏறிவிட்ட இந்தக் காலத்தில் குளம், ஏரிகளில்உள்ள வண்டல்களை எடுத்து உபயோகிக்க மானியம் கொடுத்து விவசாயிகளை ஊக்குவித்தால் ஏரிகளையும் ஆழப்படுத்தியதுபோல் ஆகும்; உரப்பிரச்சினையும் ஓரளவு தீரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூச்சிக்கொல்லி மருந்துகளை அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மென்ட் தயாரித்து மலிவான விலையில் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும். பூச்சி மருந்துக்கு மானியம் கொடுப்பதில் கூட மத்திய அரசு காலதாமதம் செய்கிறது, தமிழ்நாட்டில் நெல்பயிருக்கு ஏற்படும் ஒரு சில நோய்களை மத்திய அரசு அங்கீகரித்து அதைத் தடுப்பதற்காக போடும் பூச்சி மருந்துகளுக்கு புகையான், குருத்துப் பூச்சி போன்றவைகளைக் கொல்லும் பூச்சி மருந்துகளுக்கு மத்திய அரசு கொடுப்பதுபோல் மானியம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பழங்களைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை மதுரையில் துவக்க உத்தேசித்து இருப்பது வரவேற்கத்தக்கது. அதேபோல், தென்னாற்காடு மாவட்டத்தில் பண்ருட்டி பலாச்சுளை, முந்திரி பழம் போன்றவைகளையும் டப்பாக்களில் பதப்படுத்தி உள்நாட்டிற்கும், வெளிநாட்டிற்கும் உபயோகப்படுத்துகிற முயற்சியில் ஈடுபடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

காய்கறி விலையைக் குறைக்க ஒவ்வொரு தாலுக்கா அல்லது ஒன்றியத்திலும் அரசு விவசாயத்துறை காய்கறி, பழம் உற்பத்தி செய்யும் முயற்சியில் ஈடுபட திட்டம் தீட்டும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சிதம்பரத்தில் ஒரு விவசாயக் கல்லூரி இருக்கிறது. ஆனால் அது பொதுமக்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற விதத்தில் குறிப்பாக விவசாயிகளுக்கு தரமான காய்கறிகளை, பழங்களை

உற்பத்தி செய்ய ஊக்கம் அளிக்கும் முறையில் செய்யவில்லை. ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு இ.ஓ.(அக்ரி) இருக்கிறார். இவருக்கும் விவசாயிகளுக்கும் தொடர்பே இருப்பதில்லை. இவர்கள் வ்வசாய அறிவை, அனுபவத்தை வயல் வெளிகளுக்கு, கிராமங்களுக்கு எடுத்துச்சென்று விவசாயிகளுக்குட் பரப்பி, விவசாயிகள் பயன்பெறுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

சிதம்பரம் பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கிற காரணத்தால் வீராணம் ஏரி, பொன்னேரி, மற்றுள்ள ஏரிகளை ஆழப்படுத்தி, விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றிகூறி, முடித்துக்கொள்றேன். வணக்கம்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது எனது ஒரு சில கருத்துக்களை இந்த அவை முன்பு வைக்க கடமைப் பட்டிருக்கிறேன்,

நாட்டினுடைய முதுகெலும்பு விவசாயம் என்ற முறையில் நாட்டு மக்கள் மத்தியில், இந்தியாவைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு கிராமப்புற மக்களின் வாழ்க்கை உயர்வைப் பொறுத்துத்தான் மற்றவர்கள் வாழ்க்கை அமைகிறது என்ற அடிப்படையில் அந்த கிராமத்தில் வாழ்கின்ற பெரும்பகுதி மக்கள் விவசாயிகளாகவும், விவசாயக் கூலிகளாகவும் இருக்கின்றநிலையில் மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளை நான் மனப்பூர்வமாக வரவேற்க முதற்கண் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்று பிரெஞ்சு புரட்சியின்போது ரூசோ அவர்கள் விவசாயிகள் தன்மையைப்பற்றி, விவசாய வர்க்கத்தைப்பற்றி சொன்ன வாசகத்தை போல்தான் இன்று தமிழ்நாடு முழுவதும், இந்தியா முழுவதும் விவசாயிகளுடைய வாழ்க்கை பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதை கிராமத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற என்னைப்போன்ற சிறு விவசாயிகள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத் திற்கு பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

விவசாயிகளுடைய வாழ்க்கை நலிந்திருக்கிறது என்பதை, விவசாயிகளுடைய வாழ்க்கை உத்தரவாதமற்ற நிலையில் இருக்கிறது என்பதை, விவசாயிகளுடைய திட்டமிட்ட முன்னேற்றத்திற்கு இந்த நாட்டு அரசியல் சாசனத்தில் பாது காப்பு இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



மத்திய சர்க்காரை அடையாளம் காட்டி, மாநிலத்தில் தன்னுடைய சக்திக்கு மீறி இந்த ஆட்சி கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கைகள் ஆனாலும், வரவு–செலவுத் திட்டத்தில் இந்த சர்க்கார் கொண்டுவந்திருக்கிற திட்டமானாலும் விவசாயி களுடைய வாழ்க்கையில் ஒளி ஏற்றக்கூடிய தன்மையைப் பெற்றிருந்தாலும் இந்த நாட்டினுடைய பரிபூரண சுபீட்சத்தைப் பெற வேண்டுமென்று சொன்னால் மத்திய சர்க்கார் ஏதாவது பெரும் முயற்சி செய்தால்தான் அந்த முயற்சியின் அடிப்படையில் தான் குறுகிய அதிகாரங்களைக் கையிலே வைத்துக்கொண்டிருக்கிற மாநில சர்க்காரால் நாட்டு மக்கள் மத்தியில் பெரும்பாலும் விவசாயிகளாக இருக்கக்கூடியவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் தங்களுடைய ஊதியத்தையும் தங்களுக்குத் தேவையான லாபத்தையும் விரும்பிப் பெறுவதற்கு தொழிற்சங்கங்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு தரத்தில் ஊழியர் களாகப் பணியாற்றுகின்றவர்கள் தாங்கள் சமுதாயத்தில் அங்கம் வகித்து தலை நிமிர்ந்து நடப்பதற்கு தங்களுக்கு என்று ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து, தங்களுடைய கோரிக்கைகளை, போராட்டங்களை, ஆர்ப்பாட்டங்களை நாட்டில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்று விவசாய சங்கம் என்ற அமைப்பில் விவசாயிகள் எழுப்புகின்ற கோரிக்கைகளை அரசால் நிறைவேற்ற முடியவில்லை என்று சொன்னாலும் விவசாயிகள் என்று கருதப் படக் கூடியவர்கள் யார் என்ற வியாக்கியானத்திற்குப் பின்னால் உண்மையான விவசாயி யார் என்று தெரிந்த பிறகு, அவன்தான் நெல்லை பயிரிடுகிறான், அவன்தான் கரும்பை பயிரிடுகிறான், அவன்தான் களை எடுக்கிறான், அவன்தான் விதை தூவுகிறான், அவன்தான் ஏர் உழுகிறான், அவன்தான் நாற்றைப் பிடுங்கு கிறான், நடுகிறான், களத்துமேட்டில் அடித்து கொண்டுவந்து சேர்க்கிறான் என்று சொன்னால் அப்படிப்பட்ட உண்மையான விவசாயிக்கு சங்கம் இல்லாத அமைப்பு இந்திய அரசியல் சாசனத்தில் மாத்திரமல்ல; ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில், வஞ்சிக்கப்பட்ட ஒரு வரட்டு வாழ்வை விவசாய பெருங்குடி மக்கள் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்று பிரெஞ்சு புரட்சி வெற்றிபெற்றதற்குக் கராணமே அந்த வாழ்க்கையில் ரூசோவினுடைய எழுத்துக்கு உச்சகட்டமாக இருந்தது விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரம் என்பதையும், விவசாயிகளுடைய போராட்டத் தன்மை என்பதையும் விவசாயக் கூலிகள் எடுத்துக்கொண்ட ஏற்றமிக்க நடவடிக்கை என்பதையும் இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

'அப்ரஸ்ட், சப்ரஸ்ட், அண்ட் டிப்ரஸ்ட்' என்று சொன்னான் அன்று ரூசோ. ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டு, அடிக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு இருக்கிற சமுதாயத்தைச் சேர்ந்த விவசாயப் பெருங்குடி மக்களும், விவசாயக் கூலிகளும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கீழே அழிந்து கொண்டிருந்ததைப் போன்ற ஒரு உணர்வு சுதந்திரம் கிடைத்து 33 ஆண்டுகள் கழித்து மத்திய அரசாட்சியை ஆண்டுகொண்டிருக்கிற சர்க்காருக்குக் கீழே பணியாற்றும் ஒரு மாநில சர்க்கார் விவசாயிகளுக்கு பரிபூரண வாழ்வு அளிக்க வேண்டுமென்று போராடுகிறது என்று சொன்னால், 60 கோடி ரூபாய்க்குமேல் விவசாயிகளுக்கு மானியமாகக் கொடுத்து கடனை ரத்து செய்யக் கூடிய தன்மைக்கு விவசாயிகளுடைய நிலை ஆளாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மாநில சர்க்காரின் மனதிலே விவசாயிகளுக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டுமென்று எண்ணினாலும் இந்திய அரசு தன்னுடைய அரசியல் சாசனத்தில் அல்லது திட்டத்தில் அல்லது சட்டத்தில் ஏதாவது ஒரு மாற்றத்தை இந்தியாவில் வாழுகின்ற விவசாயிகளுக்குச் செய்யாமல் தமிழக விவசாயிகள் உயர முடியாது என்ற கருத்தை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1—00]

ஒரு சிலர் பேசுகின்றபோது சொன்னார்கள். அப்பாவிகளான நாட்டுமக்களை ஏமாற்றி இவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வரவில்லை. மக்களை ஏமாற்றியவர்களை மக்கள் ஏமாற்றி எங்களை ஆட்சிக் கட்டிலிலே அமர்த்தி இருக்கிறார்கள். அப்படி அமைக்கப்பட்ட இந்த ஆட்சி இந்திய அரசியல் சாசனத்தில் ஒரு மாநில அரசு எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு உதவ முடியுமோ அந்த அளவுக்கு உதவுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கடன் தள்ளுபடியை யானைப் பசிக்கு சோளப்பொரி என்று சொல்பவர்கள் ஏன் மத்திய அரசிடம் சொல்லி விவசாயிகளின் கடனை ரத்து செய்யக்கூடாது என்பதைத்தான் நான் இந்த நேரத்தில், அப்பாவி மக்களையும் ஏமாற்றி ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள் என்று சொல்கின்றவர்களைப் பார்த்து கேட்க ஆசைப்படுகிறேன். இப்படி கூறுகிறவர்கள் தங்களுடைய நெஞ்சங்களைத் தொட்டுப் பார்த்து எங்களைப் போன்று பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பக்கம் தங்களது கவனங்களைத் திருப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய வாழ்க்கையில் பசுமைப் புரட்சியால் மேம்பாடு அடைந்திருக்கின்றதா என்று கேட்டால் கிடையாது என்ற குற்றச்சாட்டைத்தான் சொல்லமுடியும். சிலருடைய வாழ்க்கைக்கு வேண்டுமானால் அதாவது ஃபேக்டரிச்



சொந்தக்காரர்களுக்கு வேண்டுமானால் சிறந்த பயன்கள் பசுமைப் புரட்சியின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கலாம். நிலவள வங்கிகள் மூலமாக கடந்த காலகட்டங்களில் ஏழை விவசாயிகளுக்குப் பயன் ஏற்பட்டது உண்மையா, பசுமைப் புரட்சியால் ஏற்பட்டது உண்மையா என்று கேட்டால் இல்லை என்ற குற்றச்சாட்டைத்தான் இந்த மாமன்றத்தில் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆதாரத்தோடு ஆயிரம் குற்றச் சாட்டுகளை நான் சொல்லமுடியும். பசுமைப் புரட்சி என்று சொல்லப்பட்ட காலகட்டத்திலே ஏழை விவசாயிகளின் உள்ளங்களிலே நிதர்சனமாகப் பீறிட்டுக் கிளம்பிய, கிணறு வெட்டக் கடன் கிடைக்கவில்லை என்றெல்லாம் கிளம்பிய அந்த உணர்வுகள் எண்ணிப்பார்க்கப்பட்டதா? அவர்களால் கிணறு வெட்டுவதற்கான கடன்களை நியாயமாக பெற முடிந்ததா? நியாயமாகப் பெறுகின்ற முறையில் அந்த நிலவள வங்கிகள் நடந்தனவா? அந்த நிலவள வங்கிகள் எத்தனை விவசாயிகளின் புனர்வாழ்விற்கு வழி வகுத்தன? இருள் நிறைந்த எத்தனை விவசாயிகளின் வாழ்க்கையிலே விளக்கேற்றி வைத்தன என்பதைத்தான் அந்தப் பசுமைப் புரட்சியைப் பற்றி பேசுகிறவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக, ஆளும் கட்சியின் சார்பாக ஒரு சில ஆலோசனைகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் பல இடங்களிலே கிணறுகள் போதிய அளவிலே இல்லை என்று சொல்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே பசுமைப்புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்றால், எப்படி மற்ற காரியங்களுக்கு கூட்டுறவு சொசைட்டி மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதோ அதேபோன்று விவசாயிகள் கிணறுகளை வெட்டுவதற்கும் 10, 20 பேர்கள் சேர்ந்துகொண்டு கூட்டாக கிணறு வெட்டுவதற்கும் கடன் கொடுத்து உதவுகின்ற வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கூட்டுறவு முறையிலே அதற்கு ஏற்பாடு செய்ய வழி வகுக்க வேண்டும். தஞ்சாவூரில் இருப்பவர்களுக்கு வேண்டுமானால் கவலை இல்லை, ஏனென்றால் நிலத்தின் அடியிலே இருக்கின்ற தண்ணீரைப் பம்புகள் வைத்து இறைத்து வெளியே கொண்டு வர வேண்டிய அவசியம் அவர்களுக்குக் கிடையாது. ஆனால் எங்களுடைய பகுதிகளிலே 150 அடி, 200 அடி, 250 அடி என்ற ஆழத்திலே இருந்து தண்ணீரை உயரே கொண்டு வர வேண்டி இருக்கின்றது. அப்படிக் கொண்டுவரக்கூடிய தண்ணீரை வைத்துத்தான் நாங்கள் கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவசாயம் செய்ய வேண்டி இருக்கிறது என்பதையும் எங்களுக்கு உற்பத்திச் செலவு மிகவும் அதிகமாக ஆகின்றது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் 50 ஆண்டு காலத்திலே எங்களுடைய கோவை மாவட்டம் காய்ந்து பாலைவனம் ஆகக்

[திரு. கோவைத்தம்பி] [1980 ஜூலை 16

கூடிய நிலையில் இருக்கின்றது என்பதைப்பற்றி வல்லுநர்களும் ஆய்ந்து சொல்லி இருக்கிறார்கள். அந்த அளவுக்குப் பாலைவனம் ஆகாமல் செய்வதற்காக கூட்டுறவுத்துறையில் விவசாயக் கடன்கள் வழங்குவது போல கிணறுகள் வெட்டுவதற்கும் கூட்டுறவுத் துறையில் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். 10 பேர், 20 பேர் சேர்ந்துக்கொண்டு 50 ஏக்கர், 100 ஏக்கர் என்ற அளவிலே உள்ள நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கின்ற வகையில் கிணறுகளை வெட்டுவதற்கு கூட்டுறவுத் துறையின் மூலமாக கடன் வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டும்; என்னுடைய மாவட்டத்தில் பாலக்கரை என்ற ஒரு நீர்த்தேக்கத் திட்டம் இருந்தது. அது நின்று விட்டது. அதை புதுப்பிப்பதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே விளைகின்ற பணப்பயிரான கரும்பை வெல்லமாக மாற்றி, சர்க்கரையாக மாற்றி ஒரு சில வியாபாரிகள் கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே அந்த நிலையை மாற்றுவதற்கு அங்கே ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இன்று நெல்லுக்கு 105 ரூபாய் குவிண்டாலுக்கு சப்சிடி போட்டு தருகிறீர்கள். மத்திய சர்க்காரிடம் போராடி, இந்த விலை போதாது நீங்கள் ஏதாவது மானியம் கொடுக்க வேண்டும் என்று அவர்களிடமிருந்து மானியம் பெற்று, நெல்லுக்கு விலையை உயர்த்தினால்தான், என்னைப் போன்ற விவசாயப் பெருங்குடி மக்கள், அவர்களின் பெண்டு பிள்ளைகளோடு பெண்டுகளின் தாலிகளோடு வாழ முடியும்; இதைப்பற்றி மத்திய சர்க்காரிடம் நீங்கள் ஞாபகப்படுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாநில சர்க்கார் நெல்லுக்கு சப்சிடி கொடுக்கிறது என்று சொன்னால், மஞ்சளுக்கு வரி போட்ட மத்திய சர்க்கார் ஏன் கொடுக்கக் கூடாது? அதை போராடி வாங்க இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும் என்றும், அந்தப் போராட்டத்தின் காரணமாக தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை விவசாயிகளும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரை ஆதரிப்பார்கள் என்பதையும் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைமுகமாக எலக்ட்டிரிசிட்டி போர்டானாலும் சரி, மறைமுகமாக ரெவின்யூ டிபார்ட்மென்ட் ஆனாலும் சரி, விவசாயிகளை அல்லல்களுக்கு ஆட்படுத்தாமல், விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய வழிகளில் அவர்களின் விளைபொருள்களுக்கு விலை கொடுக்க மாநில சர்க்கார் எடுக்கும் நடவடிக்கைகளை விவசாயிகளாகிய நாங்கள் மனதார ஏற்றுக்கொண்டாலும் கூட எங்களைப் பொறுத்தவரையில் மாநில சர்க்கார் எதுவும் அதிக



1980 ஜூலை 16] [திரு. கோவைத்தம்பி]

மாக கொடுத்துவிட முடியாது என்பதை உணர்ந்திருக்கிறோம். நான் இப்போது ஒரு விவசாயி, விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே தான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆகவே விவசாயிகளுக்குத் தேவையானதை மத்திய சர்க்காரிடம் இருந்து போராடித்தான் பெறவேண்டும். அந்தப் போராட்டத்தை துவக்குகிற பணியை மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்ல. விவசாயிகளுக்கு சிக்கன சீரமைப்பு என்ற முறையில் விஞ்ஞான கணிப்போடு தொடங்குவதற்கு வேண்டிய திட்டங்களை உருவாக்க வேண்டும் என்றும், அது விற்பனை ஒழுங்கு முறை கூடமானாலும் அல்லது விற்பனை கோவாபிரேடிவ் சங்கமானாலும் அவைகளில் பணியாற்றுகிற அதிகாரிகள் விவசாய மக்களை மனம் புண்படுத்தாமல், மனதில் எளிதில் பதிகிற முறையில் எடுத்துச் சொல்கிற திறமை பெற்றவர்களாக அந்தக் கூடங்களில் அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் ஊருக்கு நாங்கள் எல்லாம் ஒரு பொது கூட்டத்திற்காக சென்றிருந்த நேரத்தில் கூட, அங்கே விவசாயத் துறையில் செய்ய வேண்டிய சில காரியங்களை எடுத்துச் சொன்னார்கள். சேரன்மாதேவியில், கலெக்டர், சப்-கலெக்டர் அலுவலகங்கள் இருக்கின்றன என்றும் ஆனால் அங்கே வேளாண்மைத்துறை அலுவலகம் ஒன்று நிறுவ வேண்டும் என்றும் கோரிக்கையை எடுத்துச் சொன்னார்கள். அதேமாதிரி மணிமுத்தாறு கால்வாயை, திருத்தாப்புள்ளி, புலவன்குடியிருப்பு, உவகன் குளம் வழியாக திருப்பி ஒரு கால்வாயை வெட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி அங்கே வெட்டினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் நஞ்சை நிலங்களாக மாறும் என்றும் சொன்னார்கள்.

அதேமாதிரி கோவை மாவட்டத்தில் பாலக்கரை நீர்த்தேக்கத் திட்டத்தையும், குந்தா கழிவு நீர் திட்டத்தையும் பயன்படுத்தினால் அந்த கோவை மாவட்டம் வளம் பெறும் என்ற கருத்தை மாத்திரம் சொல்லி, அந்த விவசாயிகளுடைய வாழ்வு வளம் பெறுவதற்கு முன்னேற்றம் அடைவதற்கு, பரிபூரணமாக அவர்களுடைய கஷ்டங்கள் போக்கப்படுவதற்கு மாண்புமிகு விவசாய நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை மனப் பூர்வமாக வரவேற்று இது மாத்திரம் போதாது, இன்னும் மத்திய சர்க்காரிடம் போராடி மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, விஞ்ஞான முறையில் விவசாயத்தைப் பெருக்குவதற்கும், கடன் சுமைகளை குறைப்பதற்கும் ஆவன செய்யுமாறு அன்போடு வேண்டிக் கொண்டு, விடைபெறுகிறேன், வணக்கம்,

திரு. நா. சுந்தரராஜ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது 200 ரூபாய் மஞ்சளுக்கு மத்திய அரசு வரி போட்டது என்ற தொனியில் பேசினார்கள். சென்றமுறை அறிவிக்கப்பெற்ற பட்ஜெட்டிலே கூட அதுபோல் வரிகள் போடப்பெறவில்லை. எப்பொழுது எந்த அரசாங்கம் போட்டது என்பதை தயவுசெய்து தெரிவிப்பார்களா? இந்த அரசுதான் மஞ்சள் மீது இன்கம்-டாக்ஸ் போட்டிருக்கிறது என்பதை அறிவார்களா என்பதை தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்?

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். எந்த அரசு போட்டிருந்தாலும், இந்த அரசு அதாவது இந்திரா அரசு அதை எடுத்தால் விவசாயிகள் மகிழ்ச்சியடைவார்கள்.

### (9) அறிக்கை அளித்தல்

### உயர் அழுத்த மின் இணைப்புகளுக்குள்ள மின்வெட்டு நீக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் பேரவையின் 106-வது விதியின் கீழ் பேரவைக்கு ஒரு அறிவிப்பு கொடுக்க விருக்கிறார். மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பருவமழை நன்றாகப் பெய்துள்ளதாலும் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் உயர்ந்துள்ளதாலும், உயர் அழுத்த மின் இணைப்புகளில் இப்போது இருந்து வரும் மின் உச்சத் தொழிலிலுள்ள 20 சதவீதம் மின்வெட்டும். 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் தேதி அன்று முதல் அறவே நீக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

### (8) வரவு செலவுத்திட்டம் 1980-81—வாக்கெடுப்பு—(தொடர்ச்சி.)

*திரு. கே. தனக்கோடித் தேவர்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பு அளித்த எங்கள் தொகுதி நடமாடும் தெய்வங்களான மக்களுக்கு என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு பேச ஆரம்பிக்கிற நேரத்தில், இந்த மாமன்றத்தில் மிகப் பெரிய அனுபவஸ்தர்களும்





மிகப் பெரிய தலைவர்களும் நல்லதொரு கருத்துக்களில் உரையாற்றியிருக்கிறார்கள். இருந்த போதிலும் நானும் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவனாக இருக்கிற காரணத்தினால் என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தில் உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்,

[பிற்பகல் 1.10].

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு நடுத்தர விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்கள். குறிப்பாக அவர் என்னுடைய முகவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர்களுக்குக் நன்றாகத் தெரியும். முகவை மாவட்டம் விவசாயத் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதி என்று, எங்கள் மாவட்டத்தை பொறுத்தவரையில் முதுகுளத்தூர். கடலாடி ஆகிய இரு தொகுதிகளும் மிகவும் பின்தங்கிய தொகுதிகள். இந்தத் தொகுதிகள், நம் பாரத நாடு சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகளாகியும் கூட அன்றிருந்தது போலவே இன்றும் இருக்கின்றன. இந்த நிலையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வெளிநாட்டிற்கு அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று சொன்னதைப் படித்துப் பார்த்த போது நான் பெருமகிழ்ச்சியடைந்தேன். அதேநேரத்தில் எனக்கு ஒரு ஐயப்பாடு எழுகிறது. நான் சிறுவனாக இருந்த காலத்தில் பட்டணம்படி என்று சொல்வார்கள் பெரியவர்கள். அந்த பட்டணம்படிக்கு ரூபாய்க்கு நான்கு பட்டணம் படி நெல் அன்று நானே விற்றிருக்கிறேன். ஆக, இப்போது நாம் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிற அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கியும் கூட இன்னும் அரிசி விலை குறையவில்லை, காரணம் என்னவென்று தெரியவில்லை. ஆகவே, அந்த மாதிரியான சூழ்நிலையை ஆராய்ந்து அந்த விலைக்கு அல்லாமல் ஏழை விவசாயிகளுக்கு நல்லதொரு வழியை ஏற்படுத்தித் தரவேண்டும். இந்த நாட்டின் முதுகெலும்பாக இருப்பவர்கள் விவசாயிகள்.

இந்த மானியக் கோரிக்கையின் குறிப்பில் இருப்பதுபோல் விவசாயிகளுக்கு விலை கிடைப்பதில்லை. ஆகவே, அந்த நிலையை ஆராய்ந்து இந்த மானியக் கோரிக்கையில் உள்ள குறிப்பில் கொடுக்கப்பட்டிருப்பது போல் ஏழை விவசாயிகளுக்கு அந்த அளவிற்கு விலை கிடைக்கவேண்டும்.

புரட்சித் தலைவர், மாண்புமிகு திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஏழை விவசாயிகளுக்காக செய்திருக்கக்கூடிய உதவி பெருமைக்குரியது. ரூ. 60 கோடி அளவிற்கு ஏழை விவசாயிகள் பட்டிருந்த கடனை நிறுத்திவிட்டேன் என்று சொல்லியிருப்பது எல்லோருக்கும் பெருமை, எனக்கும் பெருமையாக இருக்கிறது.

நான் சொல்லிக் கொள்ளவிரும்புவது, அறுபது கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு உள்ள கடன்களை நிறுத்திவிட்டாலும் அதன் பின்னணியில் ஒரு எரிமலை இருக்கிறது, விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருட்களுக்கு நாம் ஒரு விலை நிர்ணயம் செய்தால் தான் அவர்கள் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ளமுடியும். உத்தமர் பெருமகனார் திரு.முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் 1952-ல் இந்த மாமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். இந்த விவசாயிகள் பற்றி விவசாயிகள் உற்பத்தி செய்கிற விளைபொருட்களுக்கு விவசாயிகள் தான் விலை நிர்ணயம் செய்யவேண்டும். துணி நெய்கிற ஆலைகளில் அந்த ஆலை முதலாளிகள் தான் துணியின் விலையை நிர்ணயம் செய்கிறார்கள் ஆனால், இந்த நாட்டு மக்களுக்கு உணவு அளிக்கும் விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்கிற விளைபொருட்களுக்கு வணிகத் துறையிலிருந்து தான் விலை நிர்ணயம் செய்கிறார்கள். அந்த நிலையைப் போக்கவேண்டும் என்று அந்த உத்தமர் தேவர் அவர்கள் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அது குறித்து இந்த அரசு பரிசீலனை செய்து அப்படிப்பட்டதொரு நிலையை உருவாக்கித் தர வேண்டும்.

நம் அரசாங்கம் விற்பனைக்கூடம் என்ற நிலையத்தினை உருவாக்கி இருக்கிறார்கள். அந்த நிலையத்தில் பருத்தி, மல்லி, வற்றல் போன்றவைகளைத்தான் விலைக்கு எடுக்கிறார்கள். சிறு தானியங்கள் போன்ற நவதானியங்களை எடுக்க சாத்தியக்கூறு இல்லை என்று அந்த நிலையத்தில் இருப்பவர்கள் சொல்கிறார்கள்.

அதே நேரத்தில், இந்தமாதிரி நெல், பருத்தி, மல்லி, வற்றல் போன்ற பொருள்களை விலைக்கு எடுக்கின்ற இந்த கூட்டுறவு விற்பனைக் கூடம், சிறு தானியங்களையும் விலைக்கு எடுத்தால், விவசாயிகளுக்கு நல்லதொரு விலை கிடைக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இதைச் செய்து கொடுத்தால் விவசாயம் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பது என் கருத்து. இருந்த போதிலும், நான் இப்போது கொஞ்சம் சுயநலத்தோடு பேச ஆரம்பிக்கிறேன்.

என்னுடைய முதுகுளத்தூர் தொகுதியும், கடலாடி தொகுதியும் இரண்டும் ஒரே இணைப்பிலே இருக்கின்றன. அங்கே வெள்ளைக்கார ஏகாதிபத்திய காலத்தில் எப்படி இருந்ததோ, அப்படித்தான் இப்போதும் இருக்கிறது. இப்போது அங்கே முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, கிருதமால் நதித் திட்டம் செயல்பட்டு வருகிறது. கமுதி குண்டாறு வழியாக தண்ணீர் மலட்டாற்றில் ஓடி, சமுத்திரத்திலே கலக்கிறது. இந்தத் தண்ணீரைத் தேக்குவதற்கான ஒரு பெரிய திட்டம் 1963–லே இருந்தும், இதுவரைக்கும் இந்தத் திட்டம் செயல்படாமல் இருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், 200 கிராமங்



களுக்கு அங்குள்ள ஏழை விவசாயிகளுக்கு பாசன வசதி கிடைக்கும். கிணற்றிலேயும் தண்ணீர் கிடைக்கும்; குடிநீர் வசதியும் கிடைக்கும் என்ற கருத்தை தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோல், நாராயணகாவேரி, கஞ்சம்பட்டி ஓடை ஆறுகளில் தண்ணீர் வீணாக ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த திட்டத்தை, இங்குள்ள கண்மாய்களை, கால்வாய்களை செப்பனிட்டுக் கொடுத்தால் அங்குள்ள ஏழை விவசாயிகள் பயன் அடைவார்கள். இந்த வசதிகளை குடி மராமத்தின்கீழ் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த குடி மராமத்தின்கீழ் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், இதை இந்த அரசாங்கமே எடுத்து செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

அதேபோல், இந்தப் பகுதிகளிலே வாழ்கின்ற ஏழை விவசாயிகள் பஞ்சாயத்து யூனியன் மூலமாக சில வேலைகளை செய்ய வேண்டும் என்ற ஒரு கொள்கை இருக்கிறது. அந்த நிலைமையை பார்க்கின்றபோது. ஏழை விவசாய மக்கள் மழை ஏற்படுகின்ற நேரத்திலே விதை வித்துக்கள் வேண்டுமென்று கேட்டால், இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், பூச்சி மருந்துகள் தெளிக்கின்ற காரணத்தினால் அங்கே பூச்சிகள் சாவதில்லை, பயிர்கள் தான் செத்து விடுகின்றன. இப்படிப்பட்ட அவல நிலைமையும் அங்கே இருக்கிறது. எனவே, இம்மாதிரியாக இருக்கின்ற அவல நிலைமையையும் போக்குவதற்கு நமது அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நமது விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் என்னைப் போன்ற நடுத்தர விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்தினாலும். எங்கள் மாவட்டத்திலே இருந்து வந்திருக்கின்றவர் என்ற காரணத்தினாலும், இத்தகைய அவல நிலைமைகளைப் போக்குவதற்கான திட்டங்களைத் தீட்டி, அங்குள்ள விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று கூறி, இந்த மன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம். ஜெய் ஹிந்த்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயம் தவிர வேறு எந்தத் தொழிலும் பிரதானமானது அல்ல என்ற வகையிலே, சேடப்பட்டி தொகுதி பிரதிநிதி என்ற வகையிலே, அந்தப் பெருமக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து, இந்த விவசாயத்துறை மானியத்தின்மீது எனது சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, நீண்ட நாட்களுக்குப் பின்னர் சென்ற ஆண்டில் ஏறத்தாழ 50,000 டன் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத்தக்க ஒரு பெரிய சாதனையை செய்து காட்டியிருக்கிற இந்த அரசுக்கும், இந்தத் துறைக்கும் எனது மனப்பூர்வமான பாராட்டுதல்களை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.20.)

இந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கும் இந்தச் சாதனையை என்னுடைய மரியாதைக்குரிய பிரதான எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் ஏதோ அவர்கள் காலத்திலே செய்த பசுமைப் புரட்சியினாலே விளைந்த சாதனை என்ற முறையிலே எடுத்துச் சொன்னார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். உங்கள் காலத்தில் பசுமைப் புரட்சி செய்தீர்கள். அந்தப் பசுமைப் புரட்சி செய்வதற்கு முன்னால் இந்த நாட்டுக்கு படியரிசி அளந்த நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் பசுமைப் புரட்சி செய்தார்கள். அதற்கு முன்னாலே இருந்தவர்களும் செய்தார்கள். இன்றைக்கு நாங்கள் செய்கிறோம். இந்த ஆட்சி காலகட்டங்களில் எல்லாம் பசுமைப் புரட்சி செய்ததன் பயன் என்ன என்பதை இந்த அவையும் நாடும் நன்கு அறிந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சிக் காலத்தில் பசுமைப் புரட்சி சரியாக இல்லாத காரணத்தால் அன்றைக்கு அரிசி விலை உயர்ந்தது. 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி வந்து, அவர்கள் ஒழுங்காகப் பசுமைப் புரட்சி செய்தார்கள். அரிசி விலை குறைந்தது. உங்களுடைய ஆட்சி முடிந்து புரட்சித் தலைவர் ஆட்சி 1977—ல் மலர்ந்தது. அவர் செய்த பசுமைப் புரட்சியின் காரணமாக அரிசி விலை குறைந்தது. இன்றைக்கு 50,000 டன் அரிசியை ஏற்றுமதி செய்கிற அளவுக்கு சாதனையை எட்டியிருக்கிறது. அண்ணா அவர்கள் அரசுக்கும் இப்போதுள்ள அரசுக்கும் இடைப்பட்ட உங்கள் ஆட்சிக் காலத்தில் அரிசி விலை உயர்ந்ததன் மூலம் நீங்கள் பசுமைப் புரட்சியை ஒழுங்காகச் செயல்படுத்தவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக இல்லையா? நீங்கள் செய்த புரட்சி எல்லாம் பூச்சி மருந்துப் புரட்சிதான். நீங்கள் உங்கள் காலத்தில் மக்களுக்குப் பழக்கப்படாத உணவு தானியத்தைக் கொடுக்கின்ற முறையில் கப்பைக் கிழங்கு, மக்காச் சோளம் போன்றவற்றையெல்லாம் இறக்குமதி செய்து மக்களை உண்ணச் சொன்னீர்களே தவிர வேறு எந்த பசுமைப் புரட்சியும் செய்யவில்லை.

உண்மையான பசுமைப் புரட்சி என்ன என்பதைத்தான் இங்கே மானியக் கோரிக்கை பற்றிய விளக்கப் புத்தகத்தில் கொடுத்திருக்கிறார்கள், இங்கே நண்பர்கள் சிலர்—பிரதான எதிர்க் கட்சியைச் சார்ந்த மதிப்புக்குரிய ராஜமாணிக்கம் படித்தேன்—கிழிக்கிறேன் என்று சொல்லிக் கிழித்தார்கள். நான் நேற்றிலிருந்து அதனைப் பக்கம் பக்கமாகத் திரும்பத் திரும்பப் புரட்டிப் பார்க்கிறேன். சில அன்பர்கள் என்ன துருவித் துருவிப் பார்க்கிறீர்களே என்று கூடக் கேட்டார்கள். காரணம்—இதுபோன்ற விவசாயத்துறை மானியக் கோரிக்கைகள் இதற்கு முன்னால் இருந்த அரசாங்க காலங்களில் கொடுத்த போது அதிலே பக்கத்திற்குப் பக்கம் சில பெயர்கள் காணப்படும்—ஜெயா, பத்மா, சாரதா, கருணா, அஞ்சுகம் என்று பக்கத்திற்குப் பக்கம் இப்படிப்பட்ட பெண்மணிகளின் பெயர்கள் அன்றைக்குத் தென்படுவதைப் பார்த்திருக்கிறேன். ஏதோ நாவல் கதைகள் படிப்பது போல் ஒவ்வொரு ரகத்திற்கும் ஒவ்வொரு பெண்ணின் பெயரைக் கொடுத்திருந்தார்கள். அந்தப் பெயர்கள் எல்லாம் இன்று தட்டுப்படவே இல்லை. மாறாக நல்ல பல திட்டங்களை விவசாயத் துறையிலே எடுத்துச் சொல்லி, அதற்கான கோரிக்கையாக ஏறத்தாழ 61 கோடி ரூபாய் கோரியிருக்கிறார்கள்.



இன்றைய தினம் பேசும்போது எதிர்க்கட்சி உறுப்பினர் இந்தத் தொகையே குறைவு என்று சொன்னார்கள். இருப்பதை வைத்து நிலைமையை உணர்ந்து இந்த அளவுக்குக் கேட்டிருக்கிறார்கள், அந்த அளவுக் கேட்டிருப்பதே குறைவானது என்று நீங்கள் கருதுகிற காரணத்தால் உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் பெருந்தன்மையுடன் வாபஸ் வாங்கிக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. விதை, விதைப் பொருட்கள், ரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள், வேளாண்மை ஆராய்ச்சிப் பணிகள், வீரிய விதைகளுக்கு நியாய விலை, வேளாண்மை மறு நிதி மேம்பாட்டுத் திட்டம், பயிர் காப்புறுதித் திட்டம் போன்ற நல்ல திட்டங்களுக்காக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு நல்ல திட்டங்களைத் தமிழக அரசுத் தீட்டியிருக்கிற காரணத்தாலே தான் தமிழக அரசு 50,000 டன் அரிசியை ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு சாதனையைப் புரிந்திருக்கிறது. நீங்கள் என்ன செய்தீர்கள், ஏது செய்தீர்கள் என்று கேலி பேசுகிற அன்பர்களுக்கு இதனைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

தமிழக அரசு 60 கோடி ரூபாய் கடனை சிறு விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்திருக்கிறது. எல்லோருக்கும் ஏன் அந்தச் சலுகையைக் கொடுக்கவில்லை என்று திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் கேட்டார்கள். அதே நேரத்திலே அவர்களுக்கெல்லாம் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், இன்றைக்கு விவசாயிகளுடைய தலையிலே ஏற்றப்பட்டிருந்த சுமையின் ஒரு பகுதியை தமிழக அரசு குறைத்திருக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? உரவிலை

யிலே ஏறத்தாழ 30 ரூபாய் வரையிலும் ஏற்றியிருக்கிறார்களே அதை இந்த இரண்டு கட்சிகளும் கண்டித்துப் பேசுவதற்கு அவர்களுக்கு மனம் வந்ததா? காங்கிரஸ்காரர்களுக்கு வராது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற கட்சி, மாநில சுயாட்சி கேட்ட கட்சி, இப்படிப்பட்ட ஒரு கொடுமையை சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்னாலே மத்திய அரசாங்கம் செய்திருக்கிறதே அதைக் கண்டிக்கிறோம் என்று சொல்கிற மனத்துணிவு அவர்களிலே யாருக்காவது வந்ததா ? ரசாயன உர விலையுயர்வு பற்றி எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தார்கள் என்றால்....

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சி கோருகின்ற ஒரு கட்சி, இன்றைக்கு ரசாயன உர விலை ஏறியிருக்கிறதே அதைக் குறித்து கண்டித்திருக்கிறதா என்று அருமை நண்பர் ஆளுங்கட்சியைச் சேர்ந்த திரு. முத்தையா அவர்கள் கேட்கிறார்கள். நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், மாநில சுயாட்சி சம்பந்தமாக கோபாலன் துணைவியார் அவர்கள் பாராளுமன்றத்திலே தீர்மானம் கொண்டுவந்த போது எங்கள் கட்சியைச் சேர்ந்த மோகன் போன்றவர்கள் அதை ஆதரித்துச் சொல்லியிருக்கிறார்கள். அது ஒன்று. இரண்டாவதாக இதுபோன்ற பொருட்களின் விலையை ஏற்றியிருக்கிறார்கள் என்பதைக் கண்டித்து நாங்கள் நாடாளு மன்றத்திலே குரல் கொடுத்திருக்கிறோம், அடுத்து ஒன்றைச் சொல்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போதும் அமருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். இதே சட்டமன்றத்திலே மாநில சுயாட்சிக் கொள்கையை ஆதரித்துத் தீர்மானம் போட்டிருக்கிறோம். அதிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம்—அந்த புரொசீடிங்சைப் பார்த்தால் தெரியும்—எதிர்த்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. முத்தையா : துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே எடுத்துச் சொன்னது திரு. ரகுமான்கான் அவர்களுக்கு எப்படிப் படுகிறது என்று தெரியவில்லை. இங்கே இரண்டு உறுப்பினர்கள், பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், முழுமையாக விவசாயத்தை நம்பியிருக்கிற குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், அதிலும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர் இங்கே பேசியிருக்கிறார். அவர் பேசுகிறபோது விவசாயிகளுக்கு இந்த இந்தச் சுமைகள் ஏறியிருக்கின்றன என்று



சொல்கிறபோது இதையும் சுட்டிக்காட்டி இருக்க வேண்டாமா ? அதைச் சுட்டிக் காட்டினால் எங்கே உறவு அறுந்து போய் விடுமோ, எங்கே பிரிந்து போய் விடுவார்களோ, எங்கே நம்மைத் தன்னந்தனியாக விட்டு விடுவார்களோ என்ற நிலைமையிலே தான் அவர்கள் பேசவில்லை.....

திரு. அ. ரகுமான்கான் : பார்லிமெண்டிலே பேசியிருக்கிறார்கள், அந்தப் பேச்சை வேண்டுமானால் சபையிலே கொடுக்கிறேன்.

திரு. இரா. முத்தையா : மாநில சுயாட்சியை அன்றைக்கு எதிர்த்தார்களே என்று இதற்கும் அதற்கும் முடிச்சுப் போடுகிறார்கள். நாங்கள் அப்போதே தெளிவாகச் சொன்னோம், அதை நல்லவர்களுடைய கையிலே கொடுங்கள், நாணயமுள்ளவர்களின் கைகளிலே கொடுங்கள் என்றுதான் சொன்னோம். அந்த வகையிலே இன்றைக்கு பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற கட்சி, விவசாயிகள் மீது பெரிய சுமையை ஏற்றியிருக்கிறார்களே 75 ரூபாய் விற்ற உரத்திற்கு 105 ரூபாய் என்று பாதியளவுக்குக் கூட்டி இருக்கிறார்களே, அதைக் கண்டிக்க வேண்டாமா....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. இரா. முத்தையா : அதையெல்லாம் கண்டிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(பிற்பகல் 1.20)

வந்துவிட்ட காரணத்தால் என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்லி முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதி, நான முன்பே சொன்னதைப் போல, மானாவாரி பகுதி. மானாவாரி பகுதி என்பதைவிட ஏமாற்றப்பட்ட மானாவாரி பகுதி என்று சொல்ல வேண்டும். அந்தப் பகுதியில் அதனுடைய வளர்ச்சிக்குச் சில திட்டங்கள் தேவை என்றால்—இந்த அரசாங்கத்தின் சார்பில் இன்றைக்கு இந்த மானியக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கக் கூடிய ''மானாவாரி மேம்பாட்டுத் திட்டத்''தை கோவில்பட்டி பகுதிக்கும், புதுக்கோட்டை பகுதிக்கும் என்று மட்டும் இல்லாமல், என்னுடைய சேடப்பட்டி பகுதிக்கும், ஆண்டிப்பட்டி பகுதிக்கும், திருமங்கலம் போன்ற பகுதிகளுக்கெல்லாம் இதை விஸ்தரிப்பு செய்து தர வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல, ''காற்று அரிப்பு தடுப்புத் திட்டம்'' மதுரை மாவட்டத்தினுடைய கம்பம் பள்ளத்தாக்கு பகுதியிலே செயல்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கே அரித்துக் கொண்டு வரும் மணலெல்லாம் எந்தப் பகுதியிலே போடுகிறது என்றால், என்னுடைய ரேடப்பட்டி பகுதியிலேயும், ஆண்டிப்பட்டி பகுதியிலேயும், மணல் மேடுகளாகக் காட்சியளிக்கக் கூடிய வகையில் மணல் திட்டுகளாக இன்றைக்குக் காட்சியளிக்கிறது. அதைப் போல விளைநிலத்திற்கு லாயக்கில்லாத நிலைமையில் மணல் மேடுகளாகக் காட்சி அளிக்கக் கூடிய என்னுடைய பகுதியில் இருக்கக்கூடிய சூளப்புரம், மல்லப்புரம், கல்லுப்பட்டி, கிருஷ்ணாபுரம் போன்ற பகுதிகளில் இன்றைக்கு ஆயிரக்கணக்கான நிலம் நீண்ட நாட்களாக மணலால் மூடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் இந்தத் திட்டத்தின் கீழ்—''காற்றுத் தடுப்பு திட்டத்''தின் கீழ் சில நடவடிக்கைகளை எடுத்து, அந்த நிலங்களையெல்லாம் விளைநிலங்களாக ஆக்கித்தர வேண்டுமென்ற வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீண்ட நாட்களாக எங்கள் பகுதியில் செயல்படுத்தப்பட வேண்டிய சேறாப்பாறை, கட்டளைக்கொம்பை ஆகிய இரண்டு அணைக்கட்டுத் திட்டங்களை நீண்ட நாட்களாகக் கோரி வந்திருக்கிறோம். அந்த இரண்டு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால் ஏறக்குறைய 7,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்ற புள்ளிவிவரக் கணக்குகள் இருக்கின்றன. அந்தத் திட்டங்களையும் பெற்றுத் தர வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்து, இந்த அளவிற்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவவரர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்ற வேளாண்மைத்துறை மானியத்தின்மீது கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பு பற்றிப் பேசுவதைவிட, விவசாயிகளுடைய பிரச்னைபற்றிப் பேசுவது நல்லது என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக, வேளாண்மைத் துறையைப்பற்றி இங்கே நம்முடைய உறுப்பினர்கள் அதிகமாகப் பேசியது மாத்திரம் அல்ல; வேளாண்மையைப் பற்றி அந்தக்காலத்திலேயிருந்து இந்தக்காலம் வரையில் எல்லோராலும் பேசப்பட்டுத்தான் வருகிறது. ஆனால் வேளாண்மைத்துறை மானியத்தின்மீது நாம் இப்பொழுது பேசிக்கொண்டிருக்கின்ற நேரம் எல்லோருக்கும் பசி நேரம்; அதைச் சீக்கிரம் முடிக்க மாட்டார்களா என்று எல்லோருக்கும் எண்ணம் இருக்கும். அதே நிலைமையில்தான்



இன்றைக்குத் தமிழகத்திலே உள்ள விவசாயிகளின் நிலைமையும் இருக்கிறது. மற்றவர்களுடைய வயிற்றை நிரப்புவதற்காக அவன் பாடுபட்டு அவன் வயிற்றை நிரப்பிக்கொள்ள முடியாத பசி நிலை இருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

''சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை.''

என்று வள்ளுவர் சொன்னார். அதைப்போலவே நம்முடைய ஔவையார் அவர்கள்,

''உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு'' என்று சொன்னார்கள்.

நம்முடைய நாவலர் அவர்கள் அந்தக்காலத்திலே அடிக்கடி விவசாயிகளைப்பற்றிப் பேசுகின்றபொழுதெல்லாம் சொல்வார்கள்;

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.''

என்று வள்ளுவர் சொல்வார்; இன்றைக்கு அவர்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால்,

''டை கட்டி வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
கை கட்டி பின் செல்பவர்.''

என்ற நிலைமை இருக்கிறது என்பதை நாவலர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்.

ஆனால் இன்றையதினம் உழவர்களுடைய நிலைமை எந்த அளவிற்கு இருக்கிறது என்று பார்த்தால், யார் அழைத்தாலும் அவர்கள் பின்னால் போகும் நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக,—(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. இரா. முத்தையா,—தலைமை)—அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் சங்கம் நடத்துகிறார்கள். அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள் நடத்தும் சங்கத்திலேதான் இன்றைக்கு அதிகமாகக் கூடுகிறார்கள் என்றால் அதற்கு என்ன காரணம் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் என்றைக்காவது ஒருநாளைக்கு நாம் அரசியலுக்கு வருவோம் என்று கருதி, அவர்கள் திட்டவட்டமாக எதையும் சொல்ல முடியாது. ஆனால் இன்றையதினம் அத்தனை வரிகளையும் தள்ளுபடி செய்து விடுவோம் என்று சொல்பவர்கள் பக்கமெல்லாம் விவசாயிகள் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம்

கட்சியைச் சார்ந்தவர்கள் என்று நான் சொல்ல மாட்டேன். எப்படியாவது கடன் தள்ளுபடியாக வேண்டும், தள்ளுபடி ஆகி விடும் என்ற நம்பிக்கையிலேதான் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் செய்யப்படுமா என்பது வேறு காரியம்.

இன்றையதினம் இருக்கின்ற சூழ்நிலையில் பல்வேறு பிரச்னைகளைப் பற்றி நாம் இங்கே பேசியிருக்கிறோம். பொதுவாக விவசாயிகள் தமிழகத்தினுடைய முதுகெலும்பு என்று சொல்லப்பட்டாலும், அவன் இன்றையதினம் முதுகெலும்பு நிமிர்ந்து நிற்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் எல்லாம் நன்றாக அறிவோம். ஆனால், எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் விவசாயிகளை விட்டுவிட முடியாது. காரணம், அவர்களிடத்திலேதான் இன்றைய தினம் அதிக ஓட்டுக்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட தேர்தல் நேரத்தில், வாக்குறுதிகளை அளிப்பது என்பது, எல்லோருக்கும் எல்லா கட்சிகளுக்கும் உரியதாக ஆகிவிட்டது, அதனாலேதான், விவசாயிகள், அன்றையதினம், எப்படியும் கடன் தீர்ந்துவிடும் என்பதற்காக, யார் சொல்வதையும் கேட்டு அவர் பக்கம் போகின்ற காரணத்தாலேதான், அவன் எதையும் செய்ய முடியாத, செய்து கொள்ள முடியாத சூழ்நிலையிலே இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறான். தேர்தலுக்கு முன்னாலே அளிக்கப்பட்ட வாக்குறுதிகளையெல்லாம் நீங்கள் பார்ப்பீர்கள். ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களே கூட, எல்லா கடன்களும் ரத்து செய்யப்பட்டுவிடும் என்பதை உறுதியாகச் சொல்லி வந்தார்கள். எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. சர்ச்சில் ஒருமுறை சொல்லியிருக்கிறார். தேர்தலுக்கு முன்னாலே வாக்குறுதியை அள்ளி வீசினாலும், தேர்தல் முடிந்ததற்குப் பிறகு அதை ஏன் நிறைவேற்ற முடியவில்லை என்பதற்கான காரணங்களைச் சொல்ல வேண்டுமென்று சொன்னதைத்தான் நான் இப்பொழுது நினைவு படுத்த விரும்புகிறேன். தேர்தலுக்கு முன்னாலே,....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, அதைக் கையாளாததனால் சர்ச்சில் தோற்றுப் போய் விட்டார்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: துணைத் தலைவரவர்களே, கையாண்டுதான் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, இங்கே கடன்கள் பூராவும் தள்ளுபடி செய்யப்படவில்லை யென்பதை நாம் சொன்னபொழுது, அன்றையதினம் ஆளுங்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் கூட, நாங்கள் விவசாயிகளுடைய அத்தனை கடனையும் தள்ளுபடி செய்கிறோம், யார், யாருக்கு எப்படி செய்யவேண்டுமென்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு அவையினுடைய முன்னவர்



அவர்கள் கூட எல்லா கடன்களையும் எப்படி தள்ளுபடி செய்ய முடியும் என்றெல்லாம் கூட விளக்கம் சொன்னார்கள். இந்தக் கடன்கள் அத்தனையையும் தள்ளுபடி செய்துவிட முடியும், செய்துவிட வேண்டுமென்பது என்னுடைய எண்ணம் அல்ல, செய்துவிட முடியாது. ஆனால், செய்து விடுகிறோம் என்று சொல்வது மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப் போல, தேர்தலிலே வெற்றி பெற வேண்டுமென்பதற்காக இருக்கலாம். ஆனால், அந்த விவசாயிகள், சிறு விவசாயிகள் என்பதைப்பற்றி நான் அன்றையதினமேகூடச் சொல்வதாக இருந்தேன். சிறு விவசாயிகள் என்றால், யார் சிறு விவசாயிகள்? அவர்கள் எப்படி கடன்களில் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் நீங்கள் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். இன்னும் விவசாயியையே யார் என்று நாம் திட்டவட்டமாக, அறுதியிட்டுக் சொல்ல முடியவில்லை. விவசாயி என்றால், நிலத்திலே இறங்கி உழுகிறானே, அவன் விவசாயியா; உழச் சொல்லிவிட்டு வரப்பிலே சுற்றி வருகிறானே அவன் விவசாயியா? விவசாயியே இன்னும் யார் என்பது கண்டு பிடிக்க முடியாத சூழ்நிலையிருக்கிற காலத்தில், சிறு விவசாயிகளை நாம் இன்று பார்க்கின்றோம் 5 ஏக்கருக்குக் கீழ்பட்ட விவசாயிகளுக்கு விவசாயக் கடன் ரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 5 ஏக்கருக்கும் கீழ் என்றால், ஸ்டான்டர்ட் ஏக்கர்களா? சாதாரணமான ஏக்கர்களா என்பது திட்டவட்டமாக இல்லை. 5 ஏக்கருக்கும் குறைவாக ஸ்டான்டர்ட் ஏக்கர் இருந்தால் அது இன்னும் குறைவாக இருக்கும், அதுவும் திட்டவட்டமாக இல்லை. அதைப் போலவே, 5 ஏக்கருக்கும் குறைந்த விவசாயிகள் அத்தனைபேருக்கும் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தாலும் இல்லை. அது ஏனோ தெரியவில்லை, ஏட்டளவிலே இருக்கிறதே தவிர, நாட்டிலே செயல்முறையிலே இல்லையென்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுதுகூடக் கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்வதற்காக ஜப்தி செய்து கொண்டிருக்கிறார்கள், இன்றைய தினம் கூட. அவர்களைக் கேட்டால், தெளிவாக இன்னாருக்குத் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் திட்டவட்டமாக இங்கே தெரிவிக்காத காரணத்தாலே, இன்றைக்கும் அவர்கள் மீது ஜப்தி போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன.

அடுத்து, 5 ஏக்கருக்குக் கீழே உள்ள விவசாயிகளுக்குத் தள்ளுபடி என்று சொன்னால், இன்னொன்றை நினைத்துப் பார்க்கவேண்டும். குறுகிய காலக் கடன் நீண்டகாலக் கடனாக ஆக்கப்பட்டவர்களுக்கு மட்டும் என்றுதான் இதிலே இருக்கிறது. அந்தக் குறுகிய காலக் கடன் நீண்டகாலக் கடனாக மாற்றப்படுவது எப்படி என்றால், அணாவாரி முறைப்படி, 4 அணாவுக்குக் கீழ்ப்பட்டவர்களைத் தவிர, அதற்குமேல் உள்ளவர்களுக்கெல்லாம் இது நீட்டிக்கப்படவில்லை. அந்த 5 ஏக்கர்களுக்கு

உட்பட்டவர்களுக்குக் கூட இன்னும் சில இடங்களில், இந்தச் சிறு விவசாயிகள் கூட்டுறவுக் கடன்களை, அந்த சொஸைட்டி ஓவர் டியூவாக இருக்கக் கூடாது என்பதற்காக மீண்டும், கடன் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையோடு, அந்த விவசாயிகள் கடனை வாங்கிக் கூடக் கடனைக் கட்டினார்கள். அப்படிப்பட்டவர்களுக்குக் கடனும் கொடுக்கப்படவில்லை. கட்டின விவசாயிகளுக்கு இன்றைக்குத் தள்ளுபடியும் இல்லை. கட்டாதவர்கள் அத்தனை பேர்களும் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள். கட்டியவர்கள் அத்தனைபேரும் இன்றைக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தக் கடனைத் தள்ளுபடி செய்வதற்கு மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம் என்பதைக் கூட அன்றையதினம் முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மகாராஷ்ட்டிரத்தில் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நீங்கள், நிதி ஒதுக்கீடு செய்யாமல் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைச் சொன்ன நேரத்தில், நாங்களும் எழுதியிருக்கிறோம் என்று சொன்னார். ஆனால், இன்றையதினம் இங்கே வருகை தந்திருக்கிற மத்திய நிதி அமைச்சரவர்கள் None of the States including Tamil Nadu so far approached the Centre regarding the issue of writing off, of the farmer's debts by the Reserve Bank of India, என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 1.40]

அங்கே எழுதி இருக்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது எழுதவில்லை என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையைப் பார்க்கின்றபோது. விவசாயிகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர் சேடப்பட்டி உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஏதோ உற்பத்தியைப் பெருக்குவதைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். எந்த சர்க்கார் வந்தாலும் உற்பத்தியைப் பெருக்குகின்ற திட்டங்களைத் தான் போடுவார்கள். எங்களுடைய சாதனை என்ன என்பதை அப்போது அவர்கள் சொல்ல முடியும். ஆனால் போடப்படுகின்ற திட்டங்கள் அத்தனையும் நிறைவேற்றப்படுகின்றதா என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

பசுமைப் புரட்சி திட்டத்தை 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனே அது கொண்டுவரப்பட்டது. அதற்கு முன்னாலே இருந்தவர்கள் எல்லாம் செய்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால் 1967 ஆம்



ஆண்டு பசுமைப் புரட்சி என்ற பெயரிலே அண்ணா அவர்கள் இதை உருவாக்கினார்கள். அதன் பயனாக தமிழகத்திலே ஒரே ஆண்டு காலத்தில் உழவர் பெருமக்களின் ஒத்துழைப்பு காரணமாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு என்னென்ன செய்தார்கள் என்றெல்லாம் மாண்புமிகு சேடப்பட்டி உறுப்பினர் முத்தையா அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். பல திட்டங்கள் போடப்பட்டன. ஒரு போக நிலத்தை இருபோகமாக மாற்றினோம். இருபோக நிலத்தை முப்போகமாக ஆக்கினோம். இங்கே இருக்கிற தரிசு நிலங்களுக்கு எல்லாம் மானியம் கொடுக்கவேண்டும் என்று அண்ணா அவர்கள் சொல்லி எவ்வளவு ஒத்தாசை செய்திருக்கிறார்கள், என்பதை எல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதற்குப் பிறகு 1967-க்குப் பிறகு 1969-க்குப் பிறகு, 1976 வரையிலும் தமிழகத்தில் உணவுப்பஞ்சம் இருந்ததா என்று பார்க்கவேண்டும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்மீது எதிர்கட்சியைச் சேர்ந்தவர்கள் குறை சொல்வது ஒரு முறை. அதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால் ஓநாயும் ஆட்டுக்குட்டியும் கதையைப் போல ஏதோ நீ செய்யாவிட்டாலும், உங்கள் அப்பன், பாட்டன் செய்திருப்பான் என்று சொல்வது பொருத்தமாக ஆகாது. 1969-லேயிருந்து 1976 வரையில் தமிழகத்திலே உணவுப் பஞ்சம் இருந்ததில்லை. வெளிமாநிலத்திற்கு மாத்திரம் அல்ல, கேரளா போன்ற பகுதிகளுக்கு எல்லாம் ஓணம் பண்டிகைக்கு இலவசமாக அரிசி அனுப்பி உதவியது தமிழகத்திலே இருந்த கலைஞர் ஆட்சிதான் என்பதை தயவு செய்து மறந்துவிடக் கூடாது. அவரை ஏதோ பிடிக்கவில்லை என்பதற்காக சொல்வது சரியல்ல என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அது மாத்திரமல்ல. அவர்கள் இன்னும் ஒன்றைச் சொன்னார்கள்.

<u>திரு. இரா. முத்தையா:</u> துணைத்தலைவர் அவர்களே, நான் உங்களுடைய காலத்திலேயும் பசுமைப் புரட்சி செய்தார்கள் என்பதை நானும் ஒப்புக்கொண்டுதான் பேசினேன். பசுமைப் புரட்சியை நீங்கள் செய்தபோதும், அதற்குப் பின்னாலும் கூட அன்றைக்கு உணவுத் தட்டுப்பாடு இல்லை என்று சொன்னால் வெளியே இருந்து கப்பங்கிழங்கையும், மக்காசோளத்தையும், மைதா மாவையும் கொண்டு வந்து மக்களுக்கு விநியோகம் செய்கிற அளவிலேதான் அன்றைக்கு இருந்தது. அந்த அளவுக்கு நீங்கள் பசுமை புரட்சி செய்திருந்தால் மதுரை போன்ற இடங்களிலே அரிசியின்விலை 8 ரூபாய் 9 ரூபாய் இருந்ததே, அதற்காகத்தான் கேட்டேனே தவிர, அண்ணா காலத்திலே அரிசி விலை குறைந்திருந்தது, உங்கள் காலத்திலே 8 ரூபாய் 9 ரூபாய் இருந்தது, பின்னர் எங்கள் காலத்திலே குறைந்திருந்தது. எனவே பசுமைப் புரட்சியை அண்ணா காலத்திலும் அதற்குப் பிறகு நாங்களும்தான் ஒழுங்காகச் செய்தோம் நீங்கள் செய்யவில்லை என்பதைத்தான் குறிப்பிட்டுக் காட்டினேன்.

[1980 ஜூலை 16

திரு. அன்பில் தர்மலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே நீங்கள் பசுமைப் புரட்சியை அதிகமாகச் செய்யவில்லை, அதிலே பூச்சி மருந்துப் புரட்சியைத்தான் செய்திருக்கிறீர்கள் என்று அன்புக்குரிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள்' நான் அவர்களுக்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கத்தில் இருக்கின்றபோது பல திட்டங்கள் வரும். அப்படி வருகின்ற நேரத்தில் இந்த பூச்சி மருந்து என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். பூச்சி மருந்து என்ற பேச்சை இன்றையதினம் அது வழக்கு மன்றத்தில் இருக்கிற காரணத்தாலே அதற்குள் செல்ல விரும்பவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் நினைவு படுத்துகிறேன். நேற்றையதினம் முன்னவர் அவர்கள் சொன்னார்கள், நான் நிருபிக்கிறேன் என்று சொன்னார்கள். அதைத்தான் நானும் சொல்கிறேன், வரட்டும் நிச்சயமாக நிரூபிக்கிறேன். ஆனால் இந்தப்பூச்சிமருந்து அந்தக் காலத்தில்பக்தவச்சலம் காலத்திலிருந்து திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் கொண்டு வந்து நடைமுறைப்படுத்துகின்ற நேரத்தில் அதை விமானத்தின் மூலம் தெளிக்கக்கூடாது என்று சொன்னவன் நான். காரணம் நான் விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவன். அதிலே குறிப்பிட்டிருக்கிறேன். பூச்சி மருந்தை ஆகாயத்திலிருந்து தெளிக்கக்கூடாது, அப்படி தெளிக்கின்ற காரணத்தாலே அது பயிர்களுக்குப் போய் சேருவதில்லை. அது கரும்பு இருக்கிற பகுதி, வாழை இருக்கிற பகுதிக்கு அந்த உயரத்திற்கு சேருவதில்லை. அந்த உயரத்திற்கு அடிக்கின்றபோது அது வயலுக்கு வருவதே இல்லை. அது பயன் இல்லை என்று சொல்லி விமானத்தில் இருந்து பூச்சி மருந்தை அடிக்கக்கூடாது என்று திட்டவட்டமாக சொன்னவனே நான் தான். திட்டவட்டமாக சொன்னது மாத்திரம் அல்ல. இனி அப்படிப்பட்ட விமானத்தின் மூலம் தெளிக்கக்கூடாது என்று எழுதினேன். அதிகாரிகள் எல்லாம் கூட அதில் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு உங்களுடைய ஆட்சியிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசியலிலே இருக்கிற காரணத்தினாலே எங்கள் மீது குறை சொல்லிவிடலாம் என்ற நோக்கத்தோடு, பூச்சி மருந்து என்றெல்லாம் பேசுகிறார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இன்னும் வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள். அவர்கள் எல்லாம் நிரபராதிகள் ஆகிவிட்டார்களா? நாங்கள் எல்லாம் குற்றவாளிகள் என்று பேகிகிறீர்களே என்று கேட்க ஆசைப்படுகிறேன். 'கூடவே கூடாது' என்று எழுதியவனே நான்தான். காரணம் என்னவென்றால், தஞ்சை மாவட்டத்திற்கு நான் சென்றபோது, தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் ஆகாயத்தில் இருந்து பூச்சி மருந்து தெளித்தால் எங்களுக்குப் பயன் ஒன்றும் இல்லை. அதனால் பணம் கட்ட முடியாது என்று சொன்னார்கள். ஆகவே, அதைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எழுதியவனும் நான் தான் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1980 ஜூலை 16]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் அன்பில் அவர்கள் விமானம் மூலம் தெளிக்கக்கூடாது என்று எழுதினேன் என்று சொன்னார்கள். ஆனால் விமானம் மூலம் தெளிக்கப்பட்டதா என்பதையும் அவரே சொன்னால் பரவாயில்லை.

திரு. அன்பில் ர்மலிங்கம் : எழுதினேன் என்று சொன்னேன். எழுதியும் அனுப்பினேன். அதற்கும் குறிப்பு சொல்கிறேன். மத்திய அரசாங்கம் தமிழ் நாட்டிலே ஒவ்வொரு ஏக்கருக்கு தெளிக்கப்படும் பூச்சி மருந்துக்கும் 6 ரூ. அல்லது 7 ரூ. மானியமாகத் தருகிறேன் என்று சொன்னார்கள். நம்முடைய விவசாயிகள் மேற்கொண்டு ரூ. 5கொடுக்கவேண்டும். மத்திய அரசாங்கம் கொடுக்கிற அந்த நிதியை ஏன் நாம் வாங்காமல் இருக்க வேண்டும் என்று அதிகாரிகள் எழுதி அனுப்பினார்கள். அப்போதும் கூட நான் அது தேவையில்லை என்று எழுதினேன். அப்போது சொன்னார்கள், ஏற்கனவே இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு விட்டது. இந்த ஆண்டு நிறைவேற்றிவிடலாம் என்று சொல்லி, அதற்கு அடுத்த ஆண்டில் இருந்து நிறுத்திவிடலாம் என்று சொன்னார்கள். அதற்கு அடுத்த ஆண்டில் இருந்து அது நிறுத்தப்பட்டு இருக்கிறது. இப்போது அப்படி செய்வது இல்லை. காரணம், அதற்கு நான்தான் முயற்சி எடுத்துக் கொண்டேன். விவசாயிகளின் கஷ்டம் எனக்குத் தெரியும். ஆகவே தான் சொல்கிறேன், இன்றைக்கு நீங்கள் பூச்சிமருந்து,அதை நிரூபிக்கிறோம் என்று எல்லாம் சொல்லலாம்; அதைப் பற்றி கவலைப்படவில்லை. அரசியல் என்று ஒன்று இருக்கிற காரணத்தால் அப்படித்தான் சொல்வீர்கள்..

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, தெளிக்கப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டார்கள். நன்றி. ஆனால் தெளிக்கப்பபட்ட நேரத்தில் அவர்கள் திராவிட முன்னேற்றக்கழக அமைச்சரவையில் தான் இருந்தார்கள் என்று கருதுகிறேன். அப்போது கூட தடுத்து நிறுத்தி இருக்க முடியுமே, அதை ஏன் செய்யவல்லை என்பதற்கு ஏதாவது காரணங்கள் அவர்களிடத்தில் இருந்தால், சொன்னால் பரவாயில்லை.

திரு. அன்பில் தர்மலிங்கம் : அன்றும் இங்கே இருந்தேன். இன்றும் இங்கே இருக்கிறேன். என்றும் இங்கேதான் இருப்பேன். காரணம் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டவன் நான். நம்முடைய பெரும் தலைவர் தந்தை பெரியார் அவர்களின் நேரடிச் செல்லபிள்ளையாக வளர்ந்தவன் நான். அரசியல் எனக்கு முக்கியமல்ல. அரசியலில் இருந்துதான் சம்பாத்தியம் பண்ணி வாழவேண்டும் என்று இல்லை. ஆகவே, அன்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தேன். இன்றைக்கும்

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறேன். என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தான் இருப்பேன். என்றும் இருப்பேன். அந்தக் கழகத்தின் கொள்கைகள் நிறைவேறுகிற வரையில் நிச்சயமாக இருப்பேன். ஆகவே, அவர்கள் சந்தேகப் படத் தேவையில்லை.

நான் ஏற்கனவே சொன்னேன். நான் எழுதி அனுப்பி விட்டேன். ஆனால், ஒப்புக்கொண்ட காண்ட்ராக்ட் இருக்கிறது. காண்ட்ராக்ட் முடிந்ததற்குப் பிறகு வேண்டாம் நிறுத்திவிடலாம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு நிறுத்தியாகிவிட்டது. முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்திலேயே பூச்சி மருந்து தெளிப்பது நிறுத்தியாகிவிட்டது.

அதன் பிறகுதான் நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த நேரத்தில், ஸ்ப்ரேயர்கள் மூலம் பூச்சி மருந்து தெளிப்பது என்ற முறையைக் கொண்டு வந்தேன். அந்த பூச்சி மருந்துகளை விசைத் தெளிப்பான் மூலம் கையால் தெளிக்கும் முறையையும் அந்தத் துறை அலுவலர்களுக்கு பயிற்சி மூலம் சொல்லிக்கொடுத்து, ஒவ்வொரு யூனியனிலும் 2 பேர் 3 பேர் இதற்காக பயிற்றுவிக்கப்பட்டு, அவர்கள் மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் முறை பின்பற்றப்பட்டது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்து, அந்தக்காரியத்தைச் செய்தவனும் நான் தான் என்பதைத் தெளிவாக இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏதோ பேசவேண்டும் என்பதற்காக வேண்டுமானால், பூச்சி மருந்து என்று சொல்லலாம். அரசியலில் இருப்பவர்களுக்கு இது சகஜம். என்னை ஆளாக்கிய பேறிஞர் அண்ணா அவர்கள் அதைத்தான் சொன்னார்கள். அரசியலில் இருக்கிறபோது ஒருவரைப் பற்றிப் பேசலாம். தனியாக இருக்கிறபோது பேச முடியாது. என்னைப் பற்றி மட்டுமா பேசுகிறார்கள்? எந்தவித மான அதிகாரமும் இல்லாத பஞ்சாயத்து போர்ட் தலைவரைப் பற்றிக் கூட—அரசியலில் இருக்கிற காரணத்தால்–பேசுகிறார்கள். தலைவர் பதவியில் இருப்பவர்களுக்கு நிச்சயம் இப்படிப்பட்ட பேச்சுக்கள் இருக்கும். ஆகவே, தலைவர் பதவிக்கு வருகிற அத்தனைபேரும், பதவிக்குப் போகிறவர்கள் அத்தனை பேரும் அயோக்கியர்கள் என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட முடியாது.

இந்தப் பக்கம் இருப்பதாலேயே நாங்கள் எல்லாம் குற்ற வாளிகள் ஊழல் புரிந்தவர்களா? அந்தப் பக்கம் போய் விட்டால் அது எல்லாம் மறந்து விடுமா, அல்லது மறைந்து விடுமா? உங்கள் கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளராக இருக்கும் திரு. ப.உ. சண்முகம் அவர்கள் பேரில் எத்தனை ஊழல் புகார்கள்—கோதுமை ஊழல், அரிசி ஊழல், என்று



இப்படி எல்லாம் சொன்னீர்கள். இன்றைக்கு மறந்துவிட்டீர் களா? தயவு செய்து யோசித்துப் பார்க்கவேண்டும். எனவே அதை நிரூபிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதற் கிடையில் இதையெல்லாம் நீங்கள் சொல்ல வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1–50]

அடுத்து இங்கே விவசாயிகள் பிரச்சனைகளைப்பற்றி பேசும் போது கூட எதற்கும் அடக்கமாக பொறுமையாக இருக்கிற எனது அன்பிற்குரிய இன்றைய வேளாண்மை அமைச்சர் கூட விவசாயிகள் என்று சொன்னால் மாரிஸ் ஓட்டலிலும் சோழா ஓட்டலிலும் தங்குகிறவர்களா என்று கேட்டார். அது ஒன்றும் பெரிய பாவம் இல்லை என்று நான் நினைக்கிறேன். அங்கே தங்குகிறவர்கள் எல்லா பெரிய மிராசுதாரர்களா? இல்லை. அப்படிப் பட்ட இடங்களுக்கு போய் தங்குகிறோம். நான் கூட தங்கியிருக் கிறேன். நான் மட்டுமல்ல; இன்றைக்கு வேளாண்மை அமைச்ச ராக இருக்கின்றவர் அமைச்சராவதற்கு முதல் நாள் கூட அங்கே தங்கியிருந்தார். அதனால் மிராசுதாரர் ஆகிவிட முடியாது. தயவு செய்து யோசித்துப் பார்க்க வேண்டும். பொதுக் கூட்டத்தில் வேண்டுமானால் கைத் தட்டுவதற்கு எதை வேண்டுமானாலும் பேசலாம். சட்டமன்றத்தில் பேசும்போது நமக்குள் இது எல்லாம் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, நான் குறிப் பிட்டது அரசியல் தலைவர்களை அல்ல; விவசாய பெரு மக்களை, என்பதையும் சர்க்கார் வழங்கியிருக்கிற இந்த மாநிலத் தில் 5 ஏக்கருக்கு கீழே இருக்கிற......

திரு. துரைமுருகன் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இப்போது மாண்புமிகு அன்பில் அவர்கள் பேசிக்கொண்டிருக் கிறார்கள். இடையிலே ஆளுங்கட்சியிலுள்ள ஒரு உறுப்பினர் எழுந்து பேசுகிறார். அவர் பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் என்று கேட்டு பேசுகிறாரா? அல்லது பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டு தலைவரின் அனுமதி பெற்று பேசுகிறாரா? இடையிலே அமைச்சர்கள் தான் எழுந்து பேசலாம் அங்கத்தினர்கள் பேசும்போது. இன்னொரு அங்கத்தினர் எழுந்து பேசக்கூடாது. அதுதான் முறை. (குறுக்கீடுகள்) இதுமாதிரி பேசுவதுசரியல்ல. இல்லை என்றால் நாளை அமைச்சர்கள் பேசமுடியாது; குறுக் கீடுகள் வரும்.

திரு. அ. ரகுமான்கான் : ப.உ.ச. கோதுமை சம்பந்தப் பட்டதாக இருந்தால் பேசலாம்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : இன்றைக்கு விவசாயிகளுடைய பிரச்சினையில் முக்கியமானது, தாங்கள் உற்பத்திச் செய்யும் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பது தான். அந்த நியாயவிலை அவர்களுக்கு கிடைக்கிறதா என்பதை உங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. அழகர் சாமி அவர்கள் உர விலை பற்றி சொன்னார்கள். பலருக்கு அது தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு 45 ரூபாய்க்கு விற்ற 50 கிலோ சல்பேட் மூட்டையை 96 ரூபாய்க்கு நானே வாங்கியிருக்கிறேன். அந்த நிலைமை எப்படி வந்திருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். மத்திய சர்க்கார் விலையை ஏற்றிவிட்டது என்று சொல்கிறோம். அதனால் விவசாயிகளுடைய உற்பத்திச் செலவு அதிகரித்திருக் கிறது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் விவசாயிகளுடைய விளைபொருட்களுக்கு என்ன விலை கொடுக் கிறோம் என்று சற்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

கோதுமைக்கு மத்திய சர்க்காரிலிருந்து 'சப்போர்ட் பிரைஸ் கொடுக்கிறார்கள். அதைப்போல நாமும் ஏன் கொடுக்கக்கூடாது. மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை என்றால் கூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது வண்டிச் சத்தம், இன்னும் மற்ற செலவுகள் என்ற பெயரால் அவர்கள் நிர்ணயித்ததைவிட கூடுதலாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவு படுத்துகிறேன்.

அதைப் போலவே விவசாயிகள் பிரச்சனைக்கு தீர்வு என்பது இன்றைக்கு நிச்சயமாக முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. ஏனென்றால் விவசாயிகள் கடனை அற்றவர்கள் என்ற தன்மை யில் இருந்தால்தான் மீண்டும் அவர்கள் வளர முடியும். இல்லை என்றால் கட்ட கட்ட கடன் வளர்ந்துகொண்டே வரும்.

அதைப்போலவே இங்கே விவசாயிகளுக்கு கூட்டுறவுத் துறை யின் மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. நான் கூட்டுறவுத்துறை மானியத்திலே கூட பார்த்தேன். இந்த ஆண்டு மிக மிக குறைந்திருக்கிறது. இப்போது விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் கொடுக்க முடியாது போலிருக்கிறது. எல்லா பிரைமரி சொசைட்டிகளிலும் ஓவர் டியூ இருக்கிறது. அந்த சொசைட்டிகளில் மேலும் கடன் வாங்க வழியில்லை. பணம் கட்டினவர்களும் வாங்க முடியவில்லை; கட்டாதவர்களும் வாங்க முடியவில்லை. அதற்கு ஏதாவது புது வழிவகை செய்யப் பட்டிருக்கிறதா என்றால் இல்லை, அதற்கு வழிவகை செய்யப் பட வேண்டும்.



கூட்டுறவுக் கடனுக்காக ஒதுக்கப்பட்டத் தொகையைப் பார்த் தால் 1975–76 ஆம் ஆண்டில் 78.82 கோடி ரூபாய் குறுகிய கால கடன் கொடுக்கப்பட்டது. 1976-77 ஆம் ஆண்டில் 125.12 கோடி யாக அது உயர்த்தப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டில் 120.13 கோடி அளவுக்கு வந்திருக்கிறது. இப்போது, 1980–81 ஆம் ஆண்டில் குறிப்பைப் பார்க்கும்போது 42.70 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அப்படியானால் விவசாயிகள் இன்றைக்கு எத்தனையோ பேர் கடனாளிகளாக இல்லையா? 120 கோடி ரூபாய் என்றெல் லாம் ஒதுக்கி கடன் கொடுத்து வந்த தமிழகத்தில் 42 கோடி ரூபாய் தான் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் விவசாயியால் எப்படிக் கடன் வாங்க முடியும்? அவர்களுடைய வேதனையை எப்படிப் போக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே நீண்டகாலக் கடன்கள், என்ற வகையில் 1976-77-லே 19·14 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1977-78-லே 17·28 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்போது 8·85 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இது எப்படி விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்கும் என்று கேட்க விரும்புகிறேன். அதைப்போலவே நாங்கள் விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இங்கே பேசுகின்றபோது சிலர் சொன்னார்கள். பத்மா என்றும், கருணா என்றும், அஞ்சுகம் என்றும் பெயர்களை எல்லாம் குறிப்பிட்டுச் சொன் னார்கள். பத்மநாபன் என்பவர் ஒரு ஆராய்ச்சியாளர். அவர் கண்டுபிடித்த ரகத்திற்குத்தான் பத்மா என்ற பெயர் வைக்கப் பட்டது. அவருடைய பெயர்தான் அதற்கு வைக்கப்பட்டது. அவர் இன்னும் பல ஆராய்ச்சிகளைச் செய்யவேண்டும் என்பதற் காகவும் அவரைப்போல மற்றவர்களும் செய்ய வேண்டும் என்று ஊக்கமளிப்பதற்காகத்தான் அவ்வாறு அவருடைய பெயர் வைக்கப்பட்டது. அதுமட்டுமல்ல. மஹாலட்சுமி என்று பருத்திக்கு பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. நான் கூடச் சொன்னேன் மஹாலட்சுமி என்று கூடத் தேவையில்லை என்று சொன்னேன். அதிகாரிகள் அப்போது கேட்கவில்லை.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் அருமை அண்ணன் அன்பில் அவர்களுடைய பேச்சிலே குறுக்கிட விரும்பவில்லை. அதாவது அதிகாரிகள், சொன்னார்கள், அதனால் தான் செய்தோம் என்கிற அந்தக் கருத்தை திரும்பவும் தயவு செய்து வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகள் ஒரு கருத்தைச் சொன் னாலும் அதிலே இறுதியான முடிவு எடுக்க வேண்டிய பொறுப் பிலே அமைச்சர்களும், முதலமைச்சரும்தான் இருந்திருக்

கிறார்கள். நடவடிக்கைகளுக்குப் பொறுப்பு அமைச்சர் அல்லது அமைச்சரவை தானே தவிர அதிகாரிகள் அல்ல. அவர்களால் பதில் சொல்லுகின்ற வாய்ப்பும் கிடையாது. ஆகவே தயவுசெய்து திரும்ப திரும்ப அதனை அவர்கள் மீது போட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: துணைத் தலைவரவர்களே, அதிகாரிகள் என்று நான் சொன்னது அவர்கள் எழுதி அனுப்புவதைத்தான். அவர்கள் எழுதி அமைச்சர்களுக்கு அனுப்புகிறார்கள் அதைத்தான் சொன்னேன். அவர்கள் அனுப்பிய நோட்டைப் படித்துப் பார்த்தேன். அவ்வாறு படித்துப் பார்த்தப் பிறகு அந்த பத்மநாபன் என்பவரால் கண்டுபிடித்து கொடுக்கப்பட்டரகமாக அது இருப்பதால் அவரை ஊக்குவிப்பதற்காகவும் மற்றவர்கள் அதைப்பார்த்து ஊக்கம் அடையவேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு பெயர் வைக்கப்பட்டதே தவிர வேறல்ல. அதுமட்டுமல்ல இங்கே பலர் கேட்டார்கள், அஞ்சுகம் என்ற பெயரை வைத்திருக்கிறீர்கள் என்று. கருணா என்று ஏன் பெயர் வைக்கப்பட்டது என்று கேட்டார்கள் அப்போது திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் அமைச்சராக இருந்தார். அவர்கள்தான் கருணா என்ற பெயரை வைத்தார். நான் கருணா என்பது என்ன என்று அவரிடம் கேட்டேன், அதற்கு அவர் முதலமைச்சர் பெயரிலேயே வைத்திருக்கிறேன் என்று சொன்னார்கள், ஆகவே அந்தப் பெயரை வைத்தது திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள்தான் நாங்கள் அல்ல. அதைப்போலவே அஞ்சுகம் என்று பச்சைப் பயிருக்கு பெயர் வைக்கப்பட்டிருந்தது. பச்சைப் பயிர் என்றால் அது கிளிபோல இருக்கும். அஞ்சுகம் என்றாலே கிளி. ஆனால் நம்முடைய நண்பர்களுக்கு எல்லாம் தோன்றுவது என்னவென்றால் அஞ்சுகம் என்றாலே கலைஞருடைய அம்மா பெயரைத்தான் வைத்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறார்கள். ஆகவே பெயர்கள் வைக்கின்றபோது பார்த்துத்தான் வைத்தோம். அதிலே தவறொன்றும் இல்லை. இன்றைக்கும் எத்தனையோ பெயர்களை வைத்திருக்கிறீர்கள். அதை எல்லாம் ஒரு பெரிய குற்றம் என்று கருதவில்லை.

அடுத்து விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் தினக்கூலி சட்டத்தைக் கொண்டுவந்து அதற்கொரு குழு போட்டு விசாரித்ததே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தான் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன் அதைப்போலவே தனிச் சட்டம் கொண்டுவந்து விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஆக மூன்று பேருக்குமாகச் சேர்த்து முத்தரப்பு மாநாடு நடத்தி முடிவு கண்டதும் திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலேதான் என்பதைத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



[பிற்பகல் 2-00]

அதைப்போலவே கழக ஆட்சியின் காலத்திலே தான் இனாம் நிலங்கள் என்ற பெயரில் பல பிரச்சனைகள் எழுந்தன. மேஜர் இனாம், மைனர் இனாம், மோகினி இனாம் போன்ற பல்வேறு இனாம்கள் எல்லாம் இருந்தன. அவைகள் எல்லாம் ஒழிக்கப்படவேண்டும் என்றும், உழைக்கிற மக்களுக்கே அந்த நிலங்கள் அளிக்கப்பட வேண்டும் என்றும் சட்டம் கொண்டு வந்தோம் நாங்கள். நான் வேளாண்மை அமைச்சராக இருந்த போது, இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து கொண்டு வந்த நேரத்தில். கோவில் நிலங்களையும் ஒழிக்க வேண்டுமென்று நான் சொன்னேன். ஆனால் அப்போது எதிர்க்கட்சியிலே இருந்தவர்கள் அன்றையதினம், 'கோவிலிலே கை வைக்கக் கூடாது வைத்தால் கோவில் நிர்வாகம் சரியாக நடக்காது, என்று சொன்னார்கள். அதற்குப பிறகு அது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. பிறகு என்ன ஆயிற்று என்பது எனக்குத் தெரியாது.

அதைப்போலவே மைனர் இனாமில், 'அபார்ஷன் அண்டு கன்செஷன்' என்ற ரைட்வாரி ஆக்ட் என்ற சட்டம் கொண்டு வந்ததும் கழக ஆட்சிக் காலத்தில்தான் என்பதை நான் உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி சட்டம் வந்ததன் காரணமாக மைனர் இனாம். மேஜர் இனாம், சர்வீஸ் இனாம், மோகினி இனாம் ஆகிய அனைத்தையுமே கட்டுப்படுத்தக் கூடிய அளவிற்கு ஒரு முறை வகுக்கப் பெற்று, அந்தப் பிரச்னைகள் தீர்க்கப்பெற்றன என்பது உங்களுக்குத் தெரியும். இந்த இனாம் பிரச்னையிலே மற்றவர்களைவிட மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் அதற்காக வெகுவாகக் கஷ்டப்பட்டார்கள்? அவர்களே போராட்டம் கூட நடத்தினார்கள். அதை வைத்தும் தான் இந்தச் சட்டம் கொண்டு வந்தோம் என்பதை உங்கள் மூலமாக மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது இருக்கிற விவசாயப் பிரச்னை என்னவென்று பார்க்கும் போது, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இருந்தது போல், மிராசுதார்களுக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்ட பிரச்னை அல்ல, நிலச் சொந்தக்காரர்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கிற பிரச்னை அல்ல. இப்போது ஏற்பட்டிருக்கிற பிரச்னை அரசாங்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையே உண்டாகியிருக்கிறது. விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க தயாராக இருக்கிறார்கள். ஆனால்

அவர்கள் உற்பத்திச் செய்த பொருட்களுக்கு தகுந்த விலை கிடைப்பதற்கு தக்க நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். ஏதோ அந்த நேரத்தில் வாங்கி விடுகிறோம் என்று எல்லாம் சொல்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகளின் நெல்லை வாங்க வேண்டும் என்பதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அணுகியபோது, 'உங்கள் ஆட்சிக் காலத்தில் 95 ரூபாய் தானே கொடுத்தீர்கள், நான் மேலும் 5 ரூபாய் போட்டு 100 ரூபாயாக கொடுக்கிறேன்' என்று சொன்னார்கள். உத்தரவும் போட்டார்கள். ஆனால் அங்கே வாங்குவதற்கான சென்டர்கள் நிறுவப்படவில்லை. வாங்குவதற்கான சென்டர்கள் ஆங்காங்கே நிறுவப்பெறாத காரணத்தினால் குறித்த காலத்தில் அந்த நெல்லை வாங்க முடியவில்லை.

இங்கே பெரும்பாலும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும், குறுவை நெல்லை களத்திலேயே அளந்து விட்டால்தான் முடியுமே தவிர குறுவை நெல்லை இருப்பு வைக்க முடியாது என்பது, களத்திலே அளந்து விட்டால்தான் விவசாயிக்கு லாபம். இருப்பு வைக்,, வைக்க அது குறைந்துக் கோண்டே போகும். விலை ஏறிய பிறகு விற்றுக் கொள்ளலாம் என்று சொன்னால், 10 மூட்டை வைத்திருந்த இடத்தில் 7 அல்லது 8 மூட்டைகள்தான் இருக்கும்.

ஆகவே குறுவை நெல்லை மட்டும் விவசாயிகள் களத்திலேயே அளந்து விட வேண்டும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னதைப்போல, அந்த நேரத்திலே அதை வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கான சென்டர்களை ஆங்காங்கே ஏற்படுத்தி வாங்கினால் தான் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும் என்பதைக் கூறி, இந்த விவசாயிகளுடைய பிரச்னை எப்படியாவது தீர்க்கப் பெற வேண்டும் அதற்காக எவ்வளவோ கஷ்டப்படுகிறோம் அப்படியும் இது எப்படி முடியும் என்பதுதான் மிகப் பெரிய பிரச்னையாக இருக்கிறது. இருந்தாலும் விவசாயிகளுடைய பிரச்னை தீர்க்கப்படாவிட்டால், மிகப் பெரிய புரட்சி உருவாகும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே கூறிக் கொண்டு அமைகிறேன். நன்றி வணக்கம்.

*மாண்புமிகு திரு. கா. காளீமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீது மேலான பல கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நேரமு



அதிகமாவிட்டதினால் அவை நடவடிக்கைகளில் இருந்த ஒரு சோர்வு தட்டக் கூடிய சூழ்நிலையை மாற்றி மீண்டும் அவை நடவடிக்கைகளில் உயிரோட்டம் ஏற்படுத்திய அண்ணன் அன்பில் அவர்களுக்கு என்னுடைய நன்றியை எனக்குத் துணை புரிந்ததற்காக தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறை தமிழகத்திலே தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் ஆகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றதற்கு பிறகு, இந்தத் துறையை விரிவுபடுத்துக்கிற வகையில், மூன்று முக்கிய பிரிவுகள் கடந்த காலத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

தோட்டக் கலை பிரிவு என்றும், விற்பனை பிரிவு என்றும், விதைச் சான்றிதழ் வழங்குத்துறை என்றும் அதைப்போலவே மற்றைய துறைகளின் உதவியோடு இந்தத் துறையை செழுமைப்படுத்துகிற வகையிலே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இப்போது புதிதாக இரண்டு பிரிவுகளையும் தோற்றுவித்திருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எண்ணெய் வித்துக்கள் அதிகமாக உற்பத்திச் செய்யக் கூடிய அளவிற்கு, அதற்குத் துணை புரியக் கூடிய அளவிற்கு ஓர் இயக்கம் தொடங்கப்படவிருக்கிறது என்பதனை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே பொறியியல் துறையினைத் தனியாகப் பிரித்து இயங்கச் செய்கிற வகையில் ஒரு அமைப்பு புதிதாக உருவாக்கப்படவிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விழைகிறேன். கொள்கை விளக்கக் குறிப்பு சற்று தாமதமாக வந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ராசமாணிக்கம் அவர்கள் தெரிவித்ததை நானும் ஒப்புக்கொள்கிறேன். மிக முக்கியமான நான்கு கொள்கை முடிவுகளை நாம் எடுத்து அதையும் இந்த மானியக்கோரிக்கையோடு இணைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கிடவேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாகத்தான் அந்தத் தாமதம் ஏற்பட்டது என்பதையும், எதிர்காலத்தில் அத்தகைய தாமதம் நிச்சயமாகத்தவிர்க்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராசமாணிக்கம் அவர்கள் விவாதத்தை தொடங்குகிற நேரத்திலேயே அவருடைய இயல்புக்கு மாறாக கொஞ்சம் கோபப்பட்டு கொள்கை விளக்கக் குறிப்பையே அவர்கள் கிழித்தெறிந்தார்கள். நான் அதற்காக

வருத்தப்படவில்லை. ஏனென்றால் அவர்கள் பேச ஆரம்பிக்கிற போதே அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிக்கப்பட்டிருக்கிற கருத்தை எடுத்து வைத்துதான் பேச்சையே தொடங்கினார்கள். ஆகவே அவர்கள் கிழித்தெறிந்தாலும் படித்து விட்டுத்தான் கிழித்திருக்கிறார்கள் என்ற வகையில் நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையை தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் மிகுந்த காலக்குறைவு இருந்தபோதிலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் படித்துப் பார்த்து விட்டு வந்து பல நல்ல கருத்துக்களை, இந்தத் துறை மேம்பாடு அடையத் தக்கவகையில் வழங்கியிருக்கிறார்கள் என்பதை குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரிசி என்பது அற்புதப்பொருளாக இருந்த நிலைமை மாறி அரிசிக்கு க்யூ என்பது மக்களின் மனதிலிருந்து மறைந்து போகக் கூடிய அளவிற்கு, அது ஒரு பழங்கனவாக மாறி அரிசி தாராளமாகக் கிடைக்கும், எல்லோருக்கும் கிடைக்கும் என்ற அளவிற்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 50 கிலோ அரிசி அரசாங்கம் தூக்கிக் கொடுக்கிறோம் என்ற அளவிற்கு உற்பத்தியில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்று தலைநிமிர்ந்து நிற்கிறது, ஏற்றுமதியும் செய்கிறது என்பதை இங்கிருக்கிற உறுப்பினர்கள் மிகத் தெளிவாக அறிவார்கள்.

அதேபோல் கடந்த காலங்களிலே மிகப் பெரிய புயல் ஏற்பட்டு திரு. இராசமாணிக்கம் எடுத்துக் கூறியது போல், ஒரு நூறாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் ஏற்படாத அளவிற்கு புயலும், பெரு வெள்ளமும் ஏற்பட்டு வேளாண்மை சிதைந்து சீர்குலைந்து விடுமோ என்ற அளவிற்கு சூழ்நிலை ஏற்பட்ட நேரத்தில் அரசு தன்னம்பிக்கையோடு வேளாண்பெருமக்களுடைய துயரத்தைத துடைத்து அதை சீர்படுத்திக் காட்டியிருக்கிறது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயப் பெருமக்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வேளாண்பெருமக்கள் அந்தத் துறையில் ஊக்கத்தோடு ஈடுபடத்தக்க அளவிற்கு உதவிக் கரம் அரசாங்கத்தால் நீட்டப்படுகிறது; என்கிறபோது; யார் அந்த விவசாயிகள் என்ற கேள்விக்குறி விசுவரூபம் எடுத்துக் கிளம்புவதை நாம் காண்கிறோம், அண்ணன் அன்பில் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல் வரப்பிலே நின்று கொண்டு இன்னொருவர் வெயிலுக்குக்குடை பிடிக்க மேற்பார்வை பார்த்துவிட்டு போகிறவர்கள் விவசாயிகளா அல்லது வானமே கூரையாக வரப்பே தலையணையாக வயலே பஞ்சணையாக படுத்துக் கிடந்து அங்கே உழைக்கிற உழைப்பாளிகள் விவசாயிகளா அல்லது கீரைப்பாத்திக்கு கூட தனக்கு என்று சொந்த நிலம் இல்லாமல் விவசாயத்தையே நம்பி



வாழக்கூடிய அளவிற்கு அந்தத தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் விவசாயிகளா என்று சொல்லி கேள்விகள் எல்லாம் கிளம்புகிற நேரத்தில் அதை பகுத்துப்பார்த்து சிறு விவசாயிகள் யார் குறு விவசாயிகள் யார் என்று வரையறை செய்ய முன்வந்து உதவி செய்வதுதான் ஒரு நல்ல அரசின் கடமையாக இருக்கமுடியும்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன். மகாகவி பாரதி பாடினான், ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்’ என்று. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்ய இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது, ஆனால் அதே நேரத்தில் வீணில் உண்டு களித்திருப்போரை வந்தனை செய்ய இந்த அரசு தயாராக இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலேதான் சிறு விவசாயிகள் பலன் அடையத்தக்க வகையில் அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்கின்ற மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு அரசாங்கம் பல உதவிகளைச் செய்திருக்கிறது. அந்த உதவிகளின் காரணமாகத்தான் தமிழ்நாட்டின் விவசாயத் துறை காப்பாற்றப்பட்டிருக்கிறது. விவசாயத் துறை செழுமைப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணன் திரு. அழகர்சாமி அவர்கள் பேசுகிறபோது இந்த ஆண்டு நீங்கள் குறிப்பிட்டிருக்கிற இலக்குகள், கரும்பு போன்றவற்றிற்கு குறிப்பிடப்பட்டிருக்கிற இலக்குகள் கடந்த ஆண்டு உற்பத்தியான அளவைப் பார்க்கிற நேரத்தில் வேறுபட்டிருக்கிறதே, அதைக் காட்டிலும் அதிகமாக அல்லவா நீங்கள் இலக்கை குறித்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடந்த ஆண்டு பருத்திக்காக நாம் குறிப்பிட்ட இலக்கு 4.40 இலட்சம் பேல்கள். ஆனால் உற்பத்தியான அளவு பருத்தி 4.69 இலட்சம் பேல்கள், ஆக நாம் குறித்திருந்த இலக்குகளைக் காட்டிலும் அதிகமாகவே பருத்தி விளைந்திருக்கிறது. அதே போல் கரும்புக்கு நாம் குறித்திருந்த இலக்கு 19.67 இலட்சம் டன். கடந்த ஆண்டு நாம் கூறியிருந்த இலக்கைவிட அதிகமாக கரும்பு உற்பத்தியாகியிருக்கிறது. ஆகவே கடந்த ஆண்டு நாம் வைத்திருக்கிற இலக்கை அடிப்படையாக வைத்துத்தான் இந்த ஆண்டு இலக்கு குறிப்பிடவேண்டும். ஏனென்றால் இந்த இலக்கை எய்தக்கூடிய அளவிற்குத்தான் நாம் விதைகள், இரசாயன உரம் அதைப்போல விவசாயத்திற்கு துணைபுரிவதற்கான பல சலுகைகளை வழங்க முடியும். ஆக அந்த அடிப்படையில் தான் அது குறிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல்—2.10]

அதைப்போல் இந்த ஆண்டு 53.0 லட்சம் டன் தழைச் சத்தும் ஒரு இலட்சம் டன் மணி சத்தும், ஒரு இலட்சம் டன் சாம்பல் சத்தும் விநியோகிக்க அரசு திட்டமிட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உரத்தினுடைய உபயோகம் அதிகரித்து வரக்கூடிய இந்த நேரத்திலே, மத்திய சர்க்கார் உரத்தின் விலையை அதிகரித்து இருப்பதை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டுக் காட்டினார்கள். உரத்தினுடைய விலையைக் குறைக்க மானியம் வேண்டுமென்று மைய அரசுக்கு வேளாண்மைத் துறையும் கடிதம் எழுதியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாமன்றத்திலே நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். மைய அரசு உரத்தினுடைய விலையைக் குறைத்தாக வேண்டும். அப்படி குறைத்தால் தான் ஏற்கெனவே உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும். விலை கட்டுபடியாகவில்லை என்ற மனக் குமுறலோடு இருக்கின்ற விவசாயப் பெருமக்களுக்கு ஓரளவாவது நிவாரணம் காண முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள் கிறேன்.

உயர் விளைச்சல் ரகங்களைக் கண்டுபிடிப்பது, புதிய ரகங்களை அறிமுகப்படுத்துவது என்பதுதான் விவசாயத் துறையினுடைய ஒரு மிக முக்கியமான பணி. அந்த வகையிலே அண்ணா தி. மு. க. ஆட்சி காலத்தில் 44 புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், மேலும் புதிய ரகங்களை கண்டுபிடிக்கின்ற வகையிலே நம் ஆராய்ச்சி பிரிவு வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

பெரியார் மாவட்டத்தில் உழவர்கள் பயிற்சி பெறத்தக்க வகையிலே நவீன வேளாண்மையைப் பற்றி தெரிந்துகொள்கின்ற வகையிலே, உழவர் பயிற்சி நிலையம் உருவாக்கப்பட இருக்கிறது என்பதையும் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே புதுக்கோட்டையில் குடுமியான்மலையில் மண் பரிசோதனை நிலையம் ஒன்றும் துவக்கப்பட இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்ணா தி. மு. கழகம் தேர்தல் காலத்திலே கொடுக்கின்ற வாக்குறுதிகளை காற்றிலே கலக்கும் கீதமாக ஆக்கிவிடவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக, பயிர்க் காப்புறுதி திட்டத்தை 17 வட்டங்களிலே முன்னோடித் திட்டமாக கொண்டுவர இருக்கிறது என்பதை கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்



ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விவசாயப் பிரிவின் இன்னொரு பிரிவான தோட்டக் கலை பிரிவு பழ வகைகளை, கீரை வகைகளை, கிழங்கு வகைகளை உற்பத்தி செய்வதற்கும், அதைப்போலவே அந்நிய செலவாணியை பெருக்கத்தக்க வகையிலே மிளகு, ஏலக்காய், முந்திரி, தேயிலை, காப்பி போன்றவைகளை உற்பத்தி செய் வதற்கும் அதிகமான முன் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் உருவாகிக் கொண்டி ருக்கின்றன. இந்த விற்பனைக் கூடங்களைப் பொறுத்தவரையில் ஐக்கிய நாட்டு சபையின் உணவு வேளாண்மைக் கழகம் நாம் அமைந்திருக்கிற இந்த விற்பனைக் கூடங்கள் அமைக்கும் முறையை வெகுவாகப் பாராட்டியிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும். அவர்களுக்கு இருக்கின்ற வேதனை அகல வேண்டுமென்றால், அதை நிச்சயமாக இத்தகைய விற்பனை கூடங்களின் மூலமாக செய்ய முடியும் என்பதையும் இடைத் தரகர்களின் இரும்புப் பிடியிலே இருந்த விவசாயப் பெருமக்களை காப்பாற்ற இது ஒன்றுதான் மிக முக்கியமான நிறுவனம் என்பதையும் உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகவே, அந்த வகையிலே ஏற்கனவே 14.10.77 யிலே தொடங்கிய இந்த வேளாண்மை விற்பனைத்துறை இதுவரை இரண்டு விற்பனைக்குழுக்களை அதிகமாக்கிக் கொண்டு இருக்கிறது என்றும், இன்றுவரை புதிதாக 90 விற்பனைக் கூடங்கள உருவாக்கி இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

16 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள்ளே ஒரு ஒழுங்கு முறை விற்பனைக கூடம் இருந்தாக வேண்டும் என்பதைக் குறிக் கோளாகக் கொண்டு, உலக வங்கி வழங்கக்கூடிய 102.11 கோடி நிதி உதவியோடு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் உருவாகும். இந்த விற்பனைக் கூடங்களிலே வங்கிகள் பிரிவு அமைந்திடவும், விவசாயிகள் அங்கேயே தங்கி விளைபொருள்

களை விற்கத்தக்க வசதியும், வாய்ப்பும் தரப்பட வேண்டும் என்ற குறிக்கோள் இருக்கின்றது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களும். திரு.பழனிவேல் அவர்களும் எடுத்துச் சொன்னதைப் போல், பழம் பதனிடுகின்ற தொழிற்சாலை அல்லது பழத்திலே இருந்து சாறு தயாரிக்கின்ற தொழிற்சாலை அல்லது எந்தப் பகுதியிலே எந்தப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி ஆகின்றனவோ, அந்தப் பொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்டு அங்கே ஒரு தொழிற்சாலையை உருவாக்கக்கூடிய சூழ்நிலையை நம்முடைய வேளாண் தொழிற் கழகத்தின் மூலமாகவும், விவசாயத் துறையின் மூலமாகவும் செயல்படுத்த இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். விரிவான விளக்கங்களைச் சொல்வதற்கு நேரமில்லை என்றாலும், இந்த வகையிலே இந்தத் துறை அதிகமான முயற்சிகளை எடுத்து வருகிறது என்பதையும், மேற்கொள்ள இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே நாம் புதிதாக எடுத்த கொள்கை முடிவுப் படி, இந்தத் துறையினிடத்திலே இருக்கிற ஆய்வு நிலைய ஆய்வுப் பணியாளர்கள் பல்கலைக்கழகத்தோடு சேர்க்கப்படுகிறார்கள். ஆய்வுத் துறையை இன்னும் விரிவுபடுத்துகின்ற முறையிலே அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கிறது. அண்ணன் அழகர்சாமி அவர்கள் தெரிவித்ததுபோல் சிமெண்டு ஆலையிலே இருந்து வருகின்ற தூசிகளால் விவசாயம் பாதிக்காத அளவுக்கு எப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் விரிவான ஆய்வு நடைபெறுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தேசிய பால்வள நிறுவனத்தின் துணையோடு இந்த நிறுவனத்தின் நிதி உதவியோடு 2.5 லட்சம் ஹெக்டேரில் ஆனந்த் பாணியிலே நிலக்கடலை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதையும், அதற்குரிய மானாவாரி நிலங்களை எடுத்து, விவசாய பெருமக்களுக்கு நிலக்கடலை உற்பத்தி செய்வதிலே ஆக்கமும் ஊக்கமும், அளித்து, அதற்கு நல்ல விலை கிடைக்கத்தக்க சூழ்நிலையை உருவாக்குவதற்கு இந்தத் துறை முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டி, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கையை மனதார ஆதரித்து, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இதனை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு,

## கோரிக்கை எண். 20.

திரு. ப. சுந்தரம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

திருவாளர்கள் உ. சுப்பிரமணியன், பொ. விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், செ. சிவசாமி, திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

" மானியக் கோரிக்கை எண் 20-வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 58,41,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

## கோரிக்கை எண். 48.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

திருவாளர்கள் கே. எம். தங்கமணி கவுண்டர், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

[1980 ஜூலை 16

திரு. பொ. விஜயராகவன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,10,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 17-7-80 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-17 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

ஏதுவுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*51. 1980-81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள். 36 மேலும் 50 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

*52. 1980-81 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் (தமிழ், ஆங்கிலம்)

*53. 1980-81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள். 37 பொதுப் பணிகள்-கட்டிடங்கள், 51—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி பற்றிய விவரங்கள் (ஆங்கிலம்).



*54. பதவிகள்-சம்பள வீதங்கள் பற்றிய விவர அறிக்கை (1980-81) (ஆங்கிலம்).

**55. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1980).

**56. 1980 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1980).

**57. 1980 ஆம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1980).

**58. 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு, முறைப்படுத்துதல்) பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1980).

@59. 1979-80 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் ஆய்வுரை. (தமிழ், ஆங்கிலம்).

@60. 1979-80 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு இணையத்தின் ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

---

*15-7-1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.

**13-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

@15-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

இணைப்பு I.

[46ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

புதிய கொள்கை முடிவுகள்.

1. தற்போது வேளாண்மை இயக்கத்தோடு இயங்கி வரும் வேளாண்மைப் பொறியியற் பிரிவைத் தனியாகப் பிரிக்கும் பொருள் கடந்த சில காலமாக அரசின் கவனத்தில் இருந்து வருகிறது. அவ்வாறு பிரிப்பதற்கு இது தகுந்த சமயம் என்று உணரப்படுகிறது. எனவே, தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஒருவரின் தலைமையின்கீழ் இது தனித்து இயங்க வகை செய்யும் வண்ணம் வேளாண்மைப் பொறியியற் பிரிவை பிரித்திட அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. இத்துறையின் நடவடிக்கைகள் மேலும் முன்னேற இது உதவும் என்று உணரப் படுகிறது.

2. தற்போது வேளாண்மை இயக்ககத்தின் பொறுப்பில் இருந்து வரும் வேளாண்மை ஆராய்ச்சி நடவடிக்கைகள் யார் பொறுப்பில் இருக்க வேண்டும் என்கிற வினா வேளாண்மைப் பல்கலைக்கழகம் துவங்கப்பட்டதில் இருந்தே விவாதத்திற் குரியதாக இருக்கிறது. ஒருங்கிணைப்பு, மேற்பார்வை, தேவையற்ற இரட்டிப்பு வேலைகளைத் தவிர்த்தல் ஆகியவற்றிற்காக ஆராய்ச்சி வேலைகள், ஒருவர் தலைமையின்கீழ் கொண்டுவரப் படவேண்டும் என்று இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவும், வேளாண்மைப் பல்கலைக் கழகமும் வலியுறுத்துகின்றன. வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பொறுப்புக்கு வேளாண்மை ஆராய்ச்சிப் பிரிவை தற்போது கொண்டுவருவது, ஆராய்ச்சி நடவடிக்கைகள் சிறப்பாக அமைய உதவும் என்று, அரசு நீண்ட ஆய்வுக்குப் பின் உணர்கிறது. எனவே, ஆராய்ச்சி நிலையங்களையும், அதைச் சார்ந்த பணியாளர்களையும், வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றுவது பற்றி ஆய்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. சமையல் எண்ணெய் பற்றாக்குறை பிரச்சினையைத் தீர்ப்பது மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை மாநிலத்தில் பெருக்குவதன் அவசியம் ஆகியவை, அரசின் தீவிர கவனத்தில் உள்ள ஒன்றாகும். இந்த நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்துவதன் மூலமாக, சிறு விவசாயிகள் பெருமளவுக்கு பயன்பெறுவார்கள் என்பதையடுத்து, அரசு இதில் அவ்வாறு தீவிர கவனம் உடையதாக இருக்கிறது, எனவே, தற்போதுள்ள வேளாண்மை இயக்ககத்திலிருந்து இந்நடவடிக்கைகளை மேற் கொள்ள புதிதாக எண்ணெய் வித்துக்கள் இயக்ககம் ஒன்றை உருவாக்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது.

4. கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளதைப் போல, தேசிய பால்வள நிறுவனம்/ஆனந்த் பாணியில் 2.5 இலட்சம் ஹெக்டேரில் நிலக்கடலை உற்பத்தியை மிகுதிப்படுத்தும் ஒரு முன்னோடித் திட்டத்தை, அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது தேசிய பால்வள நிறுவனத்தோடு கலந்து பேசி, அதனுடைய நிதி உதவியோடு இத்திட்டம் அமுலாக்கப்படும்.





வேளாண்மைத் துறை

1979-80 ஆம் ஆண்டில் 50,000 டன் அரிசியை கியூபா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் நமது மாநிலத்தின் அரிசி உற்பத்தியில் ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளோம். ஒருங்கிணைந்த ஒரு நல்ல வேளாண்மைக் கொள்கையைச் செயற்படுத்தியதன் வாயிலாக மாநிலத்தில் அரிசி உற்பத்தியில் தன்னிறைவை அடைய முடிந்தது. மாநிலத்தின் முழுமையான பொருளாதார முன்னேற் றத்திற்கு வேளாண்மை அபிவிருத்தியே அடிப்படையாக அமைந் துள்ளது.

வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதில், ஆய்வுக் கூடத் திற்கும், விளை நிலத்திற்கும் இடையே முக்கிய பாலமாக வேளாண்மைத் துறை தொடர்ந்து செயலாற்றி வருகிறது. தகுந்த பயன்முறைகள் புகுத்தல், விதைகள், உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் ஆகிய இடுபொருட்களை வழங்குதல் ஆகியவற்றி னைத் துணையாகக் கொண்டு அமோக விளைச்சல் திட்டத் தினைச் செயல்படுத்துவது, நிலம் மற்றும் நீர்ப்பராமரிப்பு, உழவர்களுக்கு விரிவாக்கப் பணிகளை வழங்குதல் ஆகியவை இத் துறையின் முக்கியப் பணிகளாகும். தோட்டக்கலை மற்றும் விதைச் சான்றிதழ் நடவடிக்கைகளில் தனிக்கவனம் செலுத்த வேண்டி, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்களுக்கென ஒன்றும், விதைச் சான்றிதழ் திட்டத்திற்கென மற்றொன்றுமாக இரண்டு தனித்தனி அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதிக பாதிப்புக்கு இலக்காகும் பகுதிகளைச் சார்ந்த உழவர்களுக்கு உதவிடும் நோக்கத்துடன் மாநிலத்தில் ஒன்பது மாவட்டங்களில் பயிர்காப்புறுதித் திட்டம் முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நாம் பெற்றுள்ள வளர்ச்சி நிலையாயிருக்க வேண்டுமெனில் அவ்வளர்ச்சி சமூகத்தின் எல்லாத் தரப்பினரின் முன்னேற்றத் துடன் இணைந்திருத்தல் வேண்டும் என்பதனை நாம் அறிவோம். இத்தகைய குறிக்கோளுடன்தான் சிறு விவசாயிகள் மற்றும் நில மற்றவிவசாயிகள் நவீன தொழில நுட்ப முறைகளைக் கையாண்டு பலன்களைப் பகிர்ந்துக் கொள்வதற்காக சிறுவிவசாயிகள் மேம் பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த மானாவரி வேளாண்மை

மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் வறட்சி சார்பு பகுதித் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்ாக்கப் படுகின்றன.

## 1979—80 ஆம் ஆண்டில் நமது சாதனைகள்

### பருவ நிலைகள் ; 1979—80

1979–80 ஆம் ஆண்டில் அணைக்கட்டுக்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை நல்ல முறையில் ஆரம்பித்ததால், வேளாண் பெருமக்கள் பண்ணை வேலைகளை நம்பிக்கை நிறைந்த உற்சாக மனநிலையுடன் தொடங்கினர். நீர்த்தேக்கத்தில் இருந்த சென்ற ஆண்டின் உபரி நீரின் அளவு மற்றும் இந்தப் பருவ மழையினால் ஏற்பட்ட திருப்திகரமான நிலையையும் கருத்தில் கொண்டு மேட்டூர் அணை ஜூன் மாதத்தில் நிர்ணயிக்கப்பட்ட தேதியிலேயே பாசனத்திற்காகத் திறந்துவிடப் பட்டது. கடந்த பத்து வருடங்களில் முதன் முதலாகத் துணிவுடன் ஏற்று எடுத்த இம்முடிவு கடந்த ஆண்டில் குறுவை அறுவடையில் ஒரு சாதனையை ஏற்படுத்த உதவியது.

இறவைப் பயிர்களின் நிலை 1979–80 ஆம் ஆண்டில் நல்ல வருவாய் தரக்கூடிய திருப்திகரமான நிலையில் இருந்துள்ளது.

1979 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவ மழையினால் பவானி அணையில் கிடைக்கப் பெற்ற உபரி நீரின் வசதியினைக் கொண்டு 25,600 ஹெக்டேரில் எள் பயிரிடப்பட்டு 16,000 டன் உற்பத்தி செய்யப்பட்டது.

எனினும் பல மாவட்டங்களில் தென்மேற்குப் பருவமழை ஆரம்ப காலத்தில் குறைவாகவும் தாமதித்தும் பெய்ததினால் மானாவாரிப் பயிர்களுக்குப் பருவ நிலை சாதகமாக இல்லை பரவலாக இல்லாமல் சிற்சில இடங்களில் மட்டுமே பெய்த இம் மழையினால் முக்கிய பயிர்களான நிலக்கடலை, பருத்தி ஆகியவற்றின் பரப்பும், உற்பத்தியும், பெரும்பாலான மாவட்டங்களில் பெருமளவிற்குக் குறைந்தது. சிறு தானியங்களில் இழக்கப்பட்ட பயிரிடும் பரப்பு, பிறகு பெய்த மழையினைக் கொண்டு ஈடு



செய்யப்பட்டது. அக்டோபர் இறுதி வாரத்தில் இம்மாநிலத்தில் வட கிழக்குப் பருவமழை ஆரம்பித்தது. இதன் விளைவாகப் பல மாவட்டங்களில் பெருமளவு மழை பெய்தது. இக்காலத்தில் பெய்த பெருமழையால் பல ஆறுகளில் வெள்ளம் ஏற்பட்டதுடன், பல்வேறு பாசன ஏரிகள் உடைப்புக்குள்ளாகியது. இதனால் பரவலான சேதம் ஏற்பட்ட போதிலும் முந்திய ஆண்டைப்போல் அவ்வளவு பலத்த சேதம் ஏற்படவில்லை.

முந்திய ஆண்டுகளில் மேற்கொண்டது போல பாதிக்கப்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட நிவாரண நடவடிக்கைகளை அரசு உடனடியாகச் செயல்படுத்தியது: —

1. சிறு விவசாயிகளுக்கும், குத்தகைக்காரர்களுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.30/— பெறுமானமுள்ள நெல் விதைகளையும், நெல் சாகுபடி செய்ய முடியாத பகுதிகளில் சிறு தானியங்களைச் சாகுபடி செய்ய விரும்பிய விவசாயிகளுக்கு ரூ. 10/— பெறுமானமுள்ள சிறுதானிய விதைகளையும் இலவசமாக வழங்குதல்.

2. சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு அடி உரமிடுவதற்கு 25 சதவிகித உதவித் தொகையில் (ஏக்கர் ஒன்றுக்கு அதிக அளவு ரூ.50/—) உரங்களை வழங்குதல், மேல் உரமிடுவதற்கு 25 சதவிகித உதவித்தொகையில் (ஏக்கர் ஒன்றுக்கு அதிக அளவு 20) தழைச்சத்து உரங்களை வழங்குதல்.

3. திருச்சிராப்பள்ளி, மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வாழைப் பயிரைப் புதுப்பிக்க சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100/— மானியம் வழங்குதல்.

4. மதுரை, கோயம்புத்தூர் மற்றும் வடஆற்காடு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட கரும்புப் பயிரினைப் புதுப்பிக்கச் சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100/— மானியம் வழங்குதல்.

5. மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் வெற்றிலைக் கொடிக்காலை மீண்டும் புதுப்பிக்கச் சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 மானியம் வழங்குதல்

[1980 ஜூலை 16

6. மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களில் சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்குப் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பதிலாக இலவசமாகப் புதிய தென்னங்கன்றுகளை வழங்குதல்.

7. மண்மேடிட்ட நிலங்களையும், கிணறுகளையும், சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும், மற்ற விவசாயிகளுக்கு 50 சதவிகித மானிய செலவிலும், ஏக்கர் ஒன்றிற்கும், கிணறு ஒன்றிற்கும் ரூபாய் ஆயிரம் உச்சவரம்பு என்ற அளவில், சீர் திருத்தம் செய்து தருதல்.

மேற்கூறிய நிவாரணப் பணிகளுக்கென 31–3–80 வரை ரூ. 26.03 இலட்சம் தொகை செலவு செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் 79-ல் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் மண்அரிப்பு ஏற்பட்டு சாகுபடி செய்யமுடியாத நிலங்களையும் சாகுபடி செய்வதற்கேற்ப சீர்திருத்துவதற்கான பணிகளை, சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும், மற்றவர்களுக்கு 50 சதவிகித மானிய செலவில் (ஏக்கருக்கு உச்சவரம்பு ரூ. 1000/– என்ற அளவில்) உடனடியாக மேற்கொள்வதற்கு அரசு உத்தரவிட்டது. நீலகிரி மாவட்டத்திற்குத் தூர் நிரவுதல், படிப்பாத்திகள் அமைத்தல் மற்றும் தடுப்புச் சுவர்களைக் கட்டுவதற்கான பணிகளுக்கும் மானியம் வழங்க உத்தரவிடப்பட்டது.

## கோடை காலத் திட்டம்

வடகிழக்குப் பருவ காலத்தில் பெய்த பெருமழையினால் அணைகள், ஏரிகள் மற்றும் கிணறுகளில் டிசம்பர்–ஜனவரி மாதங்களில் ஏற்பட்டிருந்த நீர் வசதி, கோடையில் ஒரு பெரிய அளவிலான திட்டத்தைத் துவக்க வழிவகை செய்தது. இதன் படி 3.35 இலட்சம் ஹெக்டேரில் நெல்லும், 3.00 இலட்சம் ஹெக்டேரில் சிறுதானியங்களும், 4.25 இலட்சம் ஹெக்டேரில் பயறு வகைகளும், 3.13 இலட்சம் ஹெக்டேரில் நிலக்கடலையும் மற்றும் 1.08 இலட்சம் ஹெக்டேரில் எள்ளும் பயிரிடப்பட்டது இக்கோடை திட்டத்தின் சாதனைகள் டீசல் மற்றும் மின்சாரத் தட்டுப்பாடு இல்லாதிருந்தால் மேலும் கூடுதலாக இருந்திருக்கும்



1980 ஜூலை 16]

பெருமளவு பெய்த வடகிழக்குப் பருவமழையின் மூலம் பெற்ற நீர் இருப்பினைக் கொண்டு எண்ணெய்வித்துக்கள் மற்றும் பயறு வகைகளுக்குச் சிறப்பு அம்சமாக அணைக்கட்டுகளில் இருந்து தண்ணீர் விடப்பட்டது. 1980 ஆம் ஆண்டில் பவானி திட்டப் பகுதியில் 17,859 ஹெக்டேரில் எள் பயிரிடப்பட்டது. சேலம் மற்றும் பெரியார் மாவட்டங்களில் மானாவாரிப் பயிர்களுக்கென மேட்டூர் வாய்க்கால் மார்ச் மாதத்தில் இருந்து மே 1980 வரை பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டது.

1979–80 ஆம் ஆண்டில் மின்சாரம் மற்றும் டீசல் தட்டுப்பாடு இருந்த போதிலும் இத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகளின் வாயிலாகக் கீழ்க்காணும் உற்பத்தி அளவினை அடைய முடிந்தது :—

(இலட்சம் டன்னில்)

| | |
|---|---|
| அரிசி .. .. .. | 62.29 |
| சிறுதானியங்கள் .. .. | 19.03 |
| பயறு வகைகள் .. | 2.60 |
| எண்ணெய் வித்துக்கள். .. | 14.03 |
| கரும்பு (வெல்லம்) .. .. | 20.16 |
| பருத்தி .. .. .. | 4.69 இலட்சம் பேல்கள் |

## 1980–81 ஆம் ஆண்டுக்கான குறிக்கோள்கள்

நமது மாநில மக்களுக்குப் போதிய அளவு உணவுப்பொருட்களை வழங்கவும், வேளாண்மை விளைபொருட்களைப் பெருமளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையிலும் வேளாண்மை வளர்ச்சி பெறுவதற்கான நமது குறிக்கோளை அடையும் வகையில் 1980–81 ஆம் ஆண்டுக்கு கீழ்க்கண்ட உற்பத்திக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| அரிசி .. .. | 65.00 | இலட்சம் டன் |
| சிறுதானியங்கள் .. | 21.45 | ,, |
| பயறு வகைகள் .. | 3.75 | ,, |
| எண்ணெய்வித்துக்கள் .. | 16.03 | ,, |
| கரும்பு (வெல்லம்) .. | 19.80 | ,, |
| பருத்தி .. | 4.60 | இலட்சம் பேல்கள் |

[1980 ஜூலை 16

நெல் மற்றும் சிறுதானியங்கள்

26.50 இலட்சம் ஹெக்டேரில் நெல் பயிரிட்டு 65.00 இலட்சம் டன் அரிசி உற்பத்தி என்ற அளவில் நிலைப்படுத்தப்படும். பருவநிலையின் மாறுதல், வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற இயற்கையால் ஏற்படும் அழிவைக் கவனத்தில் கொண்டு அரிசியின் உற்பத்தி இந்த அளவில் ஒரு நிலைக்குக்கொண்டு வரப்படும். உற்பத்தித் திறனைப் பெருக்கி அதன் மூலம் நெல் பயிரிடும் பரப்பினைக் குறைத்து அவைகளில் எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகைகளைப் பயிரிடுவதற்காக மேற்கொண்டுள்ள விரிவாக்க முயற்சிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். சிறு தானியங்களைப் பொறுத்தவரை இதன் குறிக்கோள் முந்திய ஆண்டு பயிரிட்ட பரப்பைவிட சிறிதளவு அதிகரிப்பதும், வீரிய மற்றும் அமோக விளைச்சல் இரகங்களை அதிகப் பரப்பில் பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்குவதுமாகும். சிறுதானியத்தில் முந்திய ஆண்டு பயிரிட்ட பரப்பளவான 18.28 இலட்சம் ஹெக்டேரில் இருந்து 19.00 இலட்சம் ஹெக்டேருக்கும், உற்பத்தியை 19.03 இலட்சம் டன்னில் இருந்து 21.45 இலட்சம் டன்னிற்கும் அதிகரிக்கப்படும். இத்தகைய நடவடிக்கைகளால் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு உபரி அரிசியும், உணவிற்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன்படும்படி அதிக அளவு சிறுதானியங்களும் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமோக விளைச்சல் திட்டத்தில் நெல் மற்றும் சிறுதானிய அபிவிருத்தி முக்கிய அங்கமாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. 1979-80 ஆம் ஆண்டில் நெற்பயிரின் குறியீடான 22.80 இலட்சம் ஹெக்டேராக இருந்த அமோக விளைச்சல் ரகங்களின் பரப்பு 1980-81 ஆம் ஆண்டில் 23.20 இலட்சம் ஹெக்டேருக்கு அதிகரிக்கப்படும். அம்மாதிரியே சிறு தானியத்தில் 1979-80 ஆம் ஆண்டில் குறியீடாக இருந்த 6.25 இலட்சம் ஹெக்டேர் பரப்பு 1980-81 ஆம் ஆண்டில் 6·55 இலட்சம் ஹெக்டேராக அதிகரிக்கப்படும்.

சாகுபடி செலவுகளைக் குறைத்து அதன் உற்பத்தித் திறனைப் பெருக்க நெற்பயிரில் கடந்த ஆண்டு புகுத்தப்பட்ட குறைந்த செலவுள்ள அதிகத் திறன் வாய்ந்த தொழில் நுட்பத் திட்டம் 1980-81 ஆம் ஆண்டில் தீவிரப்படுத்தப்படும். நெற்பயிரில்



வேருக்கு அருகாமையில் உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளை இட்டு அவற்றின் திறனை அதிகரிக்க இத்துறையால் உருவாக்கிய "திராவிடர் அப்ளிகேட்டர்" என்ற கருவி மேலும் சரிபார்க்கப்பட்டு, திருத்தியமைக்கப்பட்டு அதற்கான வரைபடம் மற்றும் புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இக்கருவியின் பயன்பற்றி விவசாயிகளிடையே அதிக அளவில் பரப்பப்படும்.

அமோக விளைச்சல் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக, பின்வரும் விதைகளை இத்துறை மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் :

| | |
|---|---|
| நெல் | 9,500 டன் |
| கேழ்வரகு | 165 ,, |
| சோளம் | 170 ,, |
| வீரிய ஒட்டுச்சோளம் | 184 ,, |
| வீரிய ஒட்டுக்கம்பு | 309 ,, |
| மக்காச்சோளம் | 177 ,, |

விதைச் சான்றிதழ் திட்டத்திற்கு ஒரு தனித்துறையை அமைத்ததன் மூலம் விதைகளை உற்பத்தி செய்து வழங்குவதில் தரக்கட்டுப்பாட்டு முன்னேற்றம் குறித்து, 1980-81 ஆட்ஆண்டில் தனிக்கவனம் செலுத்தப்படும்.

பயறு வகைகள்

நமது மொத்தத் தேவையை நிறைவு செய்யும் வகையிலும் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்குத் தேவைப்படும் சத்துணவின் அளவான 84 கிராம் பயறு வகைகள் கிடைக்கும் வகையிலும் நமது மாநிலத்தில் பயறு வகைகளின் உற்பத்தி போதுமானதாக இல்லை. நமது தேவையின் பெரும் பகுதியை வெளி மாநிலங்களில் இருந்து தருவித்துக்கொண்டு இருக்கிறோம். எனவே தற்போதைய சாகுபடிப் பரப்பின் அளவான 11.60 இலட்சம் ஹெக்டேரில் இருந்து 1985-86 ஆம் ஆண்டின் இறுதியில் 16·36 இலட்சம் ஹெக்டேருக்கு அதிகரிக்கவும், தற்போதைய உற்பத்தியின் குறியீடான 3.58 இலட்சம் டன்னில் இருந்து 1985-86

ஆம் ஆண்டின் இறுதியில் 6.40 லட்சம் டன் உற்பத்தி செய்யவும் ஒரு பெரிய திட்டத்தைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் விதை உற்பத்தித் திட்டத்தைத் தீவிரப்படுத்தி ஆண்டொன்றுக்கு 22 டன் வீரிய விதைகள், 225 டன் மூல விதைகள் மற்றும் 2,400 டன் சான்றிதழ் பெற்ற விதைகள் உற்பத்தி செய்யப்படும்.

1979–80 ஆம் ஆண்டில் 11-60 இலட்சம் ஹெக்டேர் குறியீட்டிற்கு எதிராக 11.84 இலட்சம் ஹெக்டேர் பயிரிடப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டில் பயறு வகைகளின் தற்போதைய பயிரிடும் பரப்பு 11·84 இலட்சம் ஹெக்டேரில் இருந்து 12·50 இலட்சம் ஹெக்டேருக்கு அதிகரிக்கப்படும். தனிப்பயிராகவும், கலப்புப் பயிராகவும் மற்றும் நெல் தரிசுகளிலும் பயறு வகையைப் பயிரிடுவதின் மூலம் மேற்கூறிய கூடுதல் பரப்பின் இலக்கு எட்டப் பெறும்.

தரமான விதைகளைப் பயன்படுத்துதல், சமச்சீர் உரமிடுதல், நுண்ணுயிர்க் கலவை இடுதல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை அனுசரித்தல் போன்ற மேம்படுத்தப்பட்ட உற்பத்தித் தொழில் நுட்பங்கள் 1,000 எண்ணிக்கை கொண்ட ஒரு ஏக்கர் செயல்விளக்கத் தளைகள் மூலம் விளக்கிக் காட்டப்படும். நடப்பு ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய இரகங்களை அதிக அளவில் பயிரிடுவதற்கேற்ப, இப்புதிய இரகங்கள் பற்றி விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்படும்.

மேலும் 10,000 ஹெக்டேரில் டை அமோனியம்பாஸ்பேட்டை இலைமூலம் தெளிக்கவும், 40,000 ஹெக்டேரில் ஒட்டுமொத்த மருந்து தூவவும் திட்டமிடப்பட்டுள்ளது. டை அமோனியம் பாஸ்பேட்டைத் தெளிப்பதற்கான செலவில் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 10 மானியமும், ஒட்டுமொத்த மருந்து தூவுவதற்கான செலவில் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 7.50 மானியமும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நுண்ணுயிர்க் கலவைப் பொட்டலங்களை 85,000 ஹெக்டேருக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தழைச்சத்து மற்றும் மணிச்சத்து உரங்களை 5,000 ஹெக்டேரில் அடியுரமாக இடுவதற்கு வழிவகைகள் மேற்கொள்ளப்படும். பயிரிடும் மொத்தப் பரப்பில் 10 சதவிகிதப் பரப்பிற்குத் தரமான பயறு வகை விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்க வழிவகை செய்யப்படும். இவ்வாறு சுமார் 2,400 டன் விதைகளை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



கிராமப்பகுதிகளில் பணப்புழக்கத்தை அதிகரிக்கவும் பிற்பட்ட மக்களில் பெரும் பகுதியினர் பயனடையவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும், 1979–80 ஆம் ஆண்டில் சேலம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் தொடங்கப்பட்ட பயறு வகைகள் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டத்தை 1980–81 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். பெருவிளக்கத் தளைகளில் பயறு வகைகளின் உற்பத்திக்கான வாய்ப்புகளை விளக்கம் செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். மேற்குறிப்பிட்ட இரண்டுமாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 650 ஹெக்டேரில் பெருவிளக்கத் தளைகள் அமைப்பது, 10,000 ஹெக்டேரில் 25 சதவிகித மானியத்தில் பூச்சி மருந்துகளை விநியோகித்தல், 150 பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்களை 25 சதவிகித மானியத்தில் வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.

மத்திய அரசின் உதவியுடன் நடைபெறும் திட்டத்தின் கீழ் 1,000 ஹெக்டேரில் பெருவிளக்கத் தளைகள் அமைத்திடவும் ஹெக்டேர் ஒன்றுக்கு இடுபொருட்களுக்காக ரூ. 275 மானியமாக வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் 13,000 ஹெக்டேருக்கு 25 சதவிகித மானிய விலையில் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 15-க்கு மேற்படாமல் வழங்கப்படும். 200 பயிர்ப்பாதுகாப்புக் கருவிகள் 50 சதவிகித மானிய விலையில் கருவி ஒன்றுக்கு சுமார் ரூ. 250 மானியம் என்ற அளவில் வழங்கப்படும்.

**எண்ணெய் வித்துக்கள்**

உணவுக்குப் பயன்படும் எண்ணெயின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இதனை ஓரளவு நிறைவு செய்யும் வகையில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி அதிகரிக்கப்படும்.

எண்ணெய் வித்து உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பல்வேறு வழிவகைளின் வாயிலாக முயற்சிகளை எடுத்து வரும் இத்துறை 1979 ஆம் ஆண்டில் பவானி நீர்த் தேக்கத்தில் வடகிழக்குப் பருவ மழையினால் ஏற்பட்ட உபரி நீரைக் கொண்டு எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டது. 1980 ஆம் ஆண்டிலும் பவானிப் பகுதியில் 17,889 ஹெக்டேரில் எள் பயிரிடப்பட்டது.

[1980 ஜூலை 16

மேலும் தேங்காயின் தேவையை நிறைவு செய்யவும் அதனுடைய விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தவும் சுமார் ரூ. 75 இலட்சம் செலவில் ஒரு நீண்ட காலத் தென்னை தீவிரத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு 15 இலட்சம் நெட்டைத் தென்னங்கன்றுகள், 3 லட்சம் நெட்டை × குட்டை வீரிய தென்னங்கன்றுகள் மற்றும் 4 இலட்சம் குட்டை × நெட்டை வீரியத் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்வதற்கென ஒவ்வொன்றும் 30 ஹெக்டேர் பரப்புக் கொண்ட புதிய தென்னை நாற்றங்கால்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்துறையில் தற்போது இதற்கென அமுல்படுத்தி வரும் திட்டங்களுடன் கூடுதலாக இத் திட்டம் இருக்கும். 1982–83 ஆம் ஆண்டு முதல் விநியோகம் செய்வதற்குத் தென்னங்கன்றுகள் தயாராகி விடும். உரமிடுதல் மற்றும் பயிர்ப்பாதுகாப்பு போன்ற பணிகளும் இத் திட்டத்தில் மேற்கொள்ளப்படும். தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்களோடு இத்திட்டத்தையும் சேர்த்துச் செயல்படுத்தும் போது ஆண்டுக்கு 77.60 கோடி தேங்காய்கள் கூடுதலாக உற்பத்தி ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1980–81 ஆம் ஆண்டில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி இலக்கு 16.03 இலட்சம் டன்னாகும். 1979–80 ஆம் ஆண்டில் பயிரிடப்பட்ட எண்ணெய் வித்துக்களின் பரப்பான 13.37 இலட்சம் ஹெக்டேர் 1980-81 ஆம் ஆண்டில் 13·83 இலட்சம் ஹெக்டேராக அதிகரிக்கப்படும். இக்கூடுதல் பரப்பு இறவைப் பகுதியில் மேற்கொள்ளப்படும். இவ்வாண்டில் 1,100 டன் நுண் ணூட்டச் சத்துக்களும் மற்றும் 15,000 டன்கள் ஜிப்சமும் வழங்கப்படும்.

நிலக்கடலையில் டி. எம். வி. 7, டி. எம். வி. 9, மற்றும் டி.எம் வி.10 இரகங்களும், எள்ளில் டி.எம்.வி.3, டி.எம். வி.4 இரகங்களும் சூரியகாந்தியில் கே.2 இரகமும் அதிக அளவில் பயிரிடுவதற்கு ஏற்ப இந்த இரக விதைகள் கிடைப்பதற்கு வழி வகை செய்யப்படும்.

1980–81 ஆம் ஆண்டில் 6,500 ஹெக்டேர் பரப்பில் கூடுதலாகத் தென்னை பயிரிடுவதன் மூலம் தேங்காய் மொத்த உற்பத்தி 125 கோடிக்கு அதிகரிக்கப்படும். நடப்பு ஆண்டில் 14 இலட்சம் நெட்டைத் தென்னங்கன்றுகளும், ஒரு இலட்சம் நெட்டை × குட்டை வீரியத் தென்னங்கன்றுகளும் இத்துறை மூலம் விநியோகம் செய்யப்படும்.



1980 ஜூலை 16]

சாதகமற்ற பருவநிலைகளின் காரணத்தால் திடீரென்று விதைகள், குறிப்பாக நிலக்கடலை விதைகளுக்குத் தேவை ஏற்படுகிறது. ஆகவே, விதை உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தும் நிலை ஏற்பட்டு, நெல் மற்றும் பயறு வகைகளுக்கு இருப்பது போல் நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கு எண்ணெய் வித்துக்களுக்கும், விதை உற்பத்தி மையங்கள் அமைக்கப்படும். 1980–81 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட அளவு மேம்படுத்தப்பட்ட விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும்:—

| | டன் |
|---|---|
| நிலக்கடலை .. .. | 4,540 |
| எள் .. .. | 50 |
| சூரியகாந்தி .. .. | 900 |
| ஆமணக்கு .. .. | 22.5 |

கரும்பு

21 சர்க்கரை ஆலைகள் மற்றும் இதர வெல்லத் தயாரிப்பாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கேற்ப, அளவிலும் மற்றும் தரமான உற்பத்தியை அதிகரிப்பதே அரசின் கொள்கையாகும். தரமான விதைக்கரணைகளை அபிவிருத்தி செய்து விநியோகம் செய்வதன் வாயிலாக, ஐந்து ஆண்டுகளுக்குள் ஆண்டு ஒன்றுக்கு கரும்பு பயிரிடும் பகுதியில் மூன்றில் ஒரு பாகம் வீதம் கரும்பு சாகுபடியாகும் பரப்பு அனைத்தையும் தரமான மற்றும் நோய் தாக்காத திருந்திய இரகங்களின் கீழ் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. விதைக்கரணையை வெப்ப நேர்த்தி செய்வதற்கென ஆறு வெப்பக் காற்று நிலையங்களைக் கொண்ட மூன்று ஆதார கரும்பு விதைக்கரணை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விதைக்கரணைகளை உற்பத்தி செய்வதற்கென ஆதார நாற்றங்கால்களைத் தவிர, முதல் நிலை, இரண்டாம் நிலை மற்றும் வணிக நோக்கான நாற்றங்கால்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. செயல்-விளக்கத் திடல்கள் அமைத்தல், பயிற்சியளித்தல் போன்ற பல்வேறு விரிவாக்க முறைகள் மூலம், திருந்திய பயிர் உற்பத்தி நுணுக்கங்களை கரும்பு சாகுபடியாளர்களுக்குக் கற்பித்து அவற்றை அவர்கள் உடனே பின்பற்றவும், ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை அவர்கள் கடைப்பிடிக்கவும் வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

1979-80 ஆம் ஆண்டில் சாகுபடிப் பரப்பை 1.50 இலட்சம் ஹெக்டேர் அளவில் நிலைநிறுத்தி வெல்ல உற்பத்தி 19.67 இலட்சம் டன்னை அடையத் திட்டமிடப்பட்டது. இக் குறியீட்டிற்கு எதிராக 20.16 இலட்சம் டன் வெல்ல உற்பத்தி அடையப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டிலும் சாகுபடிப் பரப்பை 1.50 இலட்சம் ஹெக்டேர் அளவிலும், வெல்ல உற்பத்தியை 19.80 இலட்சம் டன்னாகவும் நிலை நிறுத்தப்படும்.

## பருத்தி

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதற்குப் பதிலாக தரமுள்ள மற்றும் 120 எண்கள் வரை நூற்கும் திறனுள்ள 'சுவின்' பருத்தி போன்ற நீண்ட இழைப் பருத்தி இரகங்களை அபிவிருத்தி செய்வதில் நமது மாநிலம் ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. மாநிலத்தில் பருத்தி பயிரிடப்படும் மொத்தப்பரப்பில் பெரும் பாலான பரப்பில் நீண்ட இழை கொண்ட உயர்ந்த இரகப் பருத்தி வகைகள் பயிர் செய்யப்படுகின்றன. உற்பத்தியும் உற்பத்தித் திறனும் படிப்படியாக அதிகரித்து வந்தாலும், கிணற்றின் மூலம் பாசனம் பெறும் பகுதிகளில் தண்ணீர் பற்றாக் குறை, பருவமழை பொய்த்து விடுவது, அணைக்கட்டுப் பகுதிகள் மற்றும் வாய்க்கால் மூலம் பாசனமாகும் பகுதிகளில் மாற்றுப் பயிரினைப் பயிரிடுதல், பயிர்ப்பாதுகாப்பில் உள்ள பல்வேறு சிக்கல்கள், விலைகளில் அதிக அளவு ஏற்றத்தாழ்வு ஆகிய பல்வேறு காரணங்களால் பருத்தி பயிரிடும் பரப்பில் அதிக ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன.

1979-80 ஆம் ஆண்டில் 3.50 இலட்சம் ஹெக்டேரில் பருத்தி பயிரிடவும், 4.40 இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்யவும் திட்ட மிடப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் பருத்தி பயிரிடும் பரப்பு 3.00 இலட்சம் ஹெக்டேருக்குக் குறைந்தபோதிலும், அதன் உற்பத்தி 4.69 இலட்சம் பேல்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் பருத்தி பயிரிடும் பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 3.50 இலட்சம் ஹெக்டேர் எனவும், 4.60 இலட்சம் பேல்கள் எனவும் நிலைநிறுத்தப்படும்.

மேம்படுத்திய இரகங்களைப் பயிரிடுதல், சமச்சீர் உரமிடல், மேம்படுத்தப்பட்ட உழவியல் முறைகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை அனுசரித்தல் மூலம் மேற்குறிப்பிட்ட



இலக்கினை அடையப்பெறும். இதுவரை இத்துறை மூலம், பாசனப் பரப்பில் 50 சதவிகிதத்திற்கும், மானாவாரிப் பரப்பில் 30 சதவிகிதத்திற்கும் தரமுள்ள விதைகள் விநியோகம் செய்யப் பட்டு வந்தன. பல கூட்டுறவு நிலையங்கள், தென்னிந்தியப் பருத்தி ஆலை உரிமையாளர்கள் சங்கம் மற்றும் பல்வேறு தனியார் விதை உற்பத்தியாளர்கள், பருத்தி விதை விநியோகத்தை மேற் கொண்டுள்ளார்கள். அவர்கள் மூலம் மட்டும் பருத்தி சாகுபடி யான பரப்பில் 50 சதவிகிதத்திற்கு மேல் விதை விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. தரமான விதைகளுக்கு அதிக முக்கியத் துவம் தருவதற்கும், விதை உற்பத்தித் தொழிலுக்கு ஊக்கமளிப் பதற்கும், பருத்தி விதைகள் விநியோகத்திற்கான நடவடிக்கை களைக் கட்டுப்படுத்தவும் இத்துறை திட்டமிட்டுள்ளது. பாசனப் பரப்பில் 40 சதவிகிதத்திற்கும் மானாவாரிப் பரப்பில் 20 சதவிகி தத்திற்கும் இத்துறை மூலம் விதைகளை விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 1979-80 ஆம் ஆண்டைப்போல், 1980-81 ஆம் ஆண்டிலும், தரமான விதைகள் வழங்கல், சமச்சீர் உரமிடல், பயிர்ப் பாதுகாப்பு முறை கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட உழவியல் முறைகளை அனு சரித்தல் ஆகிய ஒவ்வொரு திட்டமும் 1.06 இலட்சம் ஹெக்டேர் அளவில் மேற்கொள்ளப்படும். மேலும் 175 பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்கள் (விசைத் தெளிப்பான்கள்) 25 சதவிகித மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். மேம்படுத்தப் பட்ட சாகுபடி முறைகளை விளக்கிக் காட்ட, விவசாயிகளின் நிலங்களில் 800 ஹெக்டேர் பரப்பில் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படும். சேலம், திருச்சி, மதுரை மற்றும் இராமநாத புரம் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதைப்போன்று திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட மானாவாரிப் பகுதிகளிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள இறவைப் பகுதிகளிலும் தீவிரப்பருத்தி அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 1.75 இலட்சம் ஹெக்டேரில் தரமான விதைகள் கொண்டு பயிரிடுதலும், சமச்சீர் உரமிடலும் மேற்கொள்ளப்படும். கடந்த ஆண்டைப் போல் 3,375 ஹெக்டேரில் செயல் விளக்கப்பாத்திகள் அமைக்கப்படும்.

[1980 ஜூலை 16

பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பருத்தி பயிரிடுவோர்களுக்குத் தரமான புதிய விதைகளை வழங்குவதற்காக, பல்வேறு நிலைகளில் விதைப் பெருக்கம் செய்வதற்கும், தரமான விதைகளைத் தொடர்ந்து வழங்குவதற்கேற்பவும் கோவில்பட்டி மற்றும் ஆடுதுறையில் ஒரு தனி விதைப் பெருக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் 1980-81 ஆம் ஆண்டில் 350 கிலோ மூல விதைகளும், 2,250 கிலோ ஆதார விதைகளும் கடந்த ஆண்டைப்போல் உற்பத்தி செய்யப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள வாய்ப்புக்களைக் கவனத்தில் கொண்டு, 1979-80 ஆம் ஆண்டில் கோடைத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு 5,000 ஹெக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது.

**புகையிலை**

கோவை, மதுரை, திருச்சி மற்றும் தஞ்சை மாவட்டங்களில் புகையிலையின், முக்கியமாக சுவைக்கும் புகையிலையின் தரத்தையும், மகசூலையும் அதிகரிக்கும் நோக்கத்துடன் புகையிலை அபிவிருத்தித்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1980-81 ஆம் ஆண்டில் இத்திட்டம் 10,000 ஹெக்டேரில் செயல்படுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ் 130 கிலோ விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகம் செய்வதோடல்லாமல் 30 ஒருங்கிணைந்த செயல் விளக்கப் பாத்திகளும் அமைக்கப்படும்.

**மானாவாரி சாகுபடி**

நமது மாநிலத்தில் பயிரிடப்படும் பகுதிகளில் பெருமளவு மானாவாரியாகவே பயிரிடப்படுகின்றன. இவைகளில் பெரும் பகுதி பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறு உழவர்கள் மற்றும் மிகச் சிறு உழவர்களால் சாகுபடி செய்யப்படுகிறது. பருவமழை பொய்த்தல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் இப்பகுதிகள் பெரும்பாலும் பாதிக்கப்படுவதால் மாநிலத்



தின் உணவு உற்பத்தியில் சரிவு ஏற்படுகிறது. ஆகவே மானாவாரி சாகுபடியில் சமீபத்தில் கண்டுள்ள முன்னேற்றங்களை உழவர்கள் பின்பற்றுவதற்காகத் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது.

மானாவாரிப் பகுதிகளில் பயன்படுத்துவதற்கென கடந்த ஆண்டில் இத்துறையால் உருவாக்கப்பட்ட 'பலநோக்குக் கருவி' மேலும் சோதனை செய்யப்பட்டு திருத்தியமைத்து முறைப்படுத்தி அவற்றிற்கான வரைபடமும் கையேடும் தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த மானாவாரி வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளில் விவசாயிகளிடையே இக்கருவியின் பயன் பற்றிப் பரப்பப்படவிருக்கிறது.

அனைத்து மானாவாரி சாகுபடி முறைகளை உள்ளடக்கிய செயல் விளக்கப் பாத்திகள் சிறிய நீர்த்தளப் பகுதியின் அடிப்படையில் 1000 ஏக்கர்கள் கொண்ட பரப்புகளில் அமைக்கப்படும். நீர்த்தளப் பகுதிகளின் அபிவிருத்தியில் மண்வளப் பாதுகாப்பை மேற்கொண்ட பிறகு பயிர் மேம்பாட்டுத் திட்டங்கள் பின்பற்றப்படும்.

மேலும் மண்வளப் பாதுகாப்பிற்கான அடிப்படைப் பணிகளான ஆழ்ஓடை தடுப்புப் பணிகள் மற்றும் கசிவுநீர்க்குட்டைகள் அமைத்தல் போன்ற சமுதாயப் பணிகளையும் ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டம், வறட்சி சார்புப் பகுதித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த மானாவாரி வேளாண்மை மேம்பாட்டுத் திட்டங்களில் மேற்கொள்ளப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டியிலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டையிலும் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த மானாவாரி வேளாண்மை மேம்பாட்டுத்திட்டம் 1980-81-ஆம் ஆண்டிலும் புதிய பகுதிகளுக்கு நீட்டிக்கப்படும். மானாவாரிப் பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதும், கலப்புப் பயிர் மற்றும் கலப்புப் பண்ணையில் அதிக அளவு கவனம் செலுத்திப் பொருளாதாரத்தில் பின்தங்கிய மானாவாரி விவசாயிகளின்வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

### இடுபொருட்கள் வழங்குதல்

வெற்றிகரமான வேளாண்மைக்கு இடுபொருட்களைக் காலத்தே வழங்குவது ஒரு முன் தேவையாகும். விதைகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் ஆகியவற்றைப் போதுமான அளவிலும், காலத்திலும் வழங்குதலை இத்துறை மேற்கொண்டுள்ளது.

### விதையும் விதைப் பொருட்களும்

வேளாண்மைத் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்ட நெல் மற்றும் சிறு தானிய இரகங்களின் விதைகள், 48 மாநில விதைப்பண்ணைகள் மற்றும் விதை மையங்களில் பெருக்கம் செய்யப்படுகிறது. மொத்தம் 12,800 டன் கொள்ளளவு கொண்ட எட்டுப் பெரிய மற்றும் 36 சிறிய விதை சுத்திகரிக்கும் மையங்களில் விதைகள் சுத்தம் செய்யப்பட்டு பதப்படுத்தப்படுகின்றன.

நெல் மற்றும் சோளத்தின் மொத்த விதைத் தேவையில் 7 சதவிகித அளவிற்கு விதைகள் வழங்குவதை இத்துறை மேற்கொண்டுள்ளது. இவற்றில் 2 சதவிகிதம் வறட்சி மற்றும் வெள்ளக் காலங்களில் ஏற்படும் அவசர காலத் தேவையினைச் சமாளிக்க ஒதுக்கப்படும். மேம்படுத்திய விதைகளின் மிகுதித் தேவையை விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தனியார் மூலமாகவும், மற்றும் விவசாயிகள். நடைமுறையில் தங்களுக்குள் மாற்றிக் கொள்வதின் மூலமும் நிறைவு செய்யப்படுகிறது. மேலும் கேழ்வரகு பயிரிடும் பரப்பில் 15 சதவிகிதத்திற்கும், வீரிய ஒட்டுக்கம்பு மற்றும் மக்காச்சோளம் பயிரிடும் பரப்பில் 30 சதவிகிதத்திற்கும் மேம்படுத்திய விதைகள் வழங்குதலை இத்துறை மேற்கொண்டுள்ளது.

மேற்கூறிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டு 9,500 டன் நெல் விதைகள், 165 டன் கேழ்வரகு விதைகள் 170 டன் சோள விதைகள் 184 டன் வீரிய ஒட்டுச் சோள விதைகள், 309 டன் வீரிய ஒட்டுக் கம்பு விதைகள் மற்றும் 177 டன் வீரிய மக்காச்சோள விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு இத்துறை மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும்.



### இயற்கை மற்றும் இரசாயன உரங்கள்

12,500 கூட்டுறவு மற்றும் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் உரங்கள் தொடர்ந்து விநியோகம் செய்யப்படும். இது வரை குறைந்த அளவு உரச்சத்துக்களை உபயோகித்த பகுதிகள் மற்றும் பயிர்களைக் கவனத்தில் கொண்டு உர உபயோக நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதின் மூலம் உர விநியோகத்தின் அளவு 3.50 இலட்சம் டன் தழைச்சத்து ஒரு இலட்சம் டன் மணிச்சத்து மற்றும் ஒரு இலட்சம் டன் சாம்பல் சத்திற்கு அதிகரிக்கப்படும். இயற்கை உரங்களை உபயோகப்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்படும். 1000 டன் பசுந்தாளுர விதைகள் மற்றும் 3.5 இலட்சம் நுண்ணுயிர்க் கலவைப் பொட்டலங்கள் விநியோகம் செய்யப்படும். உள்ளூர் உரம் மற்றும் கழிவு உரம் உற்பத்தி செய்வதிலும் கவனம் செலுத்தப்படும். குறைவான செலவில் தழைச்சத்தைத் தரவல்ல நீலப்பச்சைப் பாசியின் உபயோகம் பரவலாகியுள்ளது. 1980-81-ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிரிடும் நெற்பயிருக்கு நீலப்பச்சைப் பாசி பயன்படுத்தப்படும்.

விவசாயிகள் தரமுள்ள உரங்களைப் பெறும் வகையில், உர வாணிபத்தில் தரக்கட்டுப்பாட்டைத் தீவிரமாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### பயிர்ப் பாதுகாப்பு

வேளாண் கிடங்குகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் பூச்சிமருந்துகள் தொடர்ந்து விநியோகம் செய்யப்படும். விவசாயிகளுக்குப் பயிர்ப்பாதுகாப்புச் சாதனங்கள் நியாயமான தொகைக்கு வாடகைக்கு விடப்படும். பூச்சி மருந்துகளை முறையின்றிப் பயன்படுத்துவதால் சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்குத் தீங்கு ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் கையாளப்பட வேண்டியது வலியுறுத்தப்படும். இதற்காகப் பூச்சித் தாக்குதல் பற்றிய கண்காணிப்பிற்கு முதலிடம் தரப்படும். இதன் மூலம் தேவைப்படும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மட்டுமே அனுசரிப்பது பற்றி விவசாயிகளுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படும்.

மத்திய அரசு உதவியுடன் 1980-81-ஆம் ஆண்டிலும் குறிப்பிட்ட பகுதிகளில் நெல்லில் தோன்றும் புகையானைக் கட்டுப் படுத்த 40,000 ஹெக்டேரில் மருந்து தெளிப்பும் 20,000 ஹெக்டேரில் தத்துப்பூச்சியைக் கட்டுப்படுத்தும் பணியும் செயற்படுத்தப் படும். பயிர்ப் பாதுகாப்புப் பணிகளுக்குச் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் தரமான பூச்சி மருந்துகளை விவசாயிகள் பெறுவதற்கேற்பப் பூச்சிமருந்துச்சட்டம் தீவிரமாக அமுல்படுத்தப் படும்.

**வேளாண்மை ஆராய்ச்சிப் பணிகள்**

வேளாண்மைத் துறையின் கீழ் தற்போது 16 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்கள் செயல்படுகின்றன. மாநிலத்தில் பயிராகும் முக்கியப் பயிர்களுக்கான பயிர் மேம்பாடு, பயிர்ப் பராமரிப்பு, பயிர்ப் பாதுகாப்பு மற்றும் மண்ணின் தன்மை ஆகியவை பற்றிய ஆய்வுகள் இவ்வாராய்ச்சி நிலையங் களில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த ஆராய்ச்சி நிலையங்களில் மேற்கொண்ட பல்வேறு ஆய்வுகளின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு பலதரப் பட்ட பயிர்களுக்கான உற்பத்தி நுணுக்கங்கள், குறைந்த செலவில் அதிக திறனைப் பெறவல்ல தொழில் நுட்பங்களை வலியுறுத்தும் நுணுக்கங்கள் ஆகிய வகைகள் அவ்வப்போது திருத்தியமைக்கப்படுகின்றன. ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் இந்நாட்டிலுள்ள இதர ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சி முடிவு கள் விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படும் அனுசரனை ஆராய்ச்சித் தளைகளில் தேவைப்படும்போது, பரிசீலனை செய் யப்பட்டு அதன் பிறகே இதன் முடிவுகளைப் பெருமளவில் பின் பற்றுவதற்கும், செயல் விளக்கத்திற்கும் வழங்கப்படுகின்றன.

1979-80 ஆம் ஆண்டில் பல்வேறுதரப்பட்ட பயிர்களுக்காக கண்டுபிடிக்கப்பட்ட எட்டு புதிய இரகங்கள் மேற்படி ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து இத்துறை மூலம் வெளியிடப்பட்டுள்ளன. வெளியிடப்பட்ட இரகங்களின் முக்கிய குணங்கள் பின்வருமாறு :—

1. ஆடுதுறை 36 (ஏடிடீ 36)

இது திருவேணி மற்றும் ஐ. ஆர். 20 ஆகிய வகைகளை ஒட்டு சேர்த்து பெறப்பட்ட இரகமாகும். இந்த இரகம் ஓரளவு



குட்டையான உருவம், நடுத்தர சன்ன வெள்ளை நிற அரிசி ஆகிய குறிப்பிடத்தக்க தன்மைகளைப் பெற்றதாகும். கொள்ளை நோய் மற்றும் இலைக் கருகல் நோயை இந்த இரகம் ஓரளவு தாங்கும் சக்தியைப் பெற்றது. இதனுடைய வயது 107 முதல் 120 நாட்கள் ஆகும். தஞ்சை மற்றும் திருச்சி மாவட்டங்களில் குறுவைக்கும் கோவை மாவட்டத்தில் நவரைப்பட்டத்திற்கும் ஏற்றது. குறுவைப்பட்டத்தில் இந்நெல் ஹெக்டேருக்கு 5,052 கிலோவும் தாளடிப்பட்டத்தில் ஹெக்டேருக்கு 3,519 கிலோவும் மகசூல் தந்துள்ளது.

2. கோவில்பட்டி-4 (எச். பி) கம்பு

ஆண் இன 111 'ஏ' இரகத்தோடு மகரந்தத்தை அளிக்கும் இனமான உள்ளூர் கம்பு எஸ் 411 இரகத்தை ஒட்டு சேர்த்ததின் மூலம் உண்டான வீரியக்கலப்பினக் கம்பு இது. இது 85 முதல் 90 நாட்கள் வயதைக் கொண்டது. நன்கு கிளைக்கக் கூடியது; நீண்ட கதிர்களையும் உடையது. இந்த வீரியக் கலப்பின ஒட்டுக் கம்பு சாம்பல் நோயை அதிக அளவில் தாங்கும் சக்தியையும், 'எர்காட்' நோயை ஓரளவு தாங்கும் சக்தியை யும் பெற்றது. சராசரி ஒரு ஹெக்டேருக்கு 3,103 கிலோ விளைச்சல் தரவல்லது.

3. கோவில்பட்டி-2 (எச்.எம்.) மக்காச் சோளம்:

நால்வகை இனமடங்கிய இரட்டை வகை ஒட்டில் உண்டான இரகமாகும். 'கங்கா-5' ஐ விட 10 முதல் 15 நாட்களுக்கு முன்பே அறுவடைக்கு வரக்கூடியதாகும். 90 முதல் 95 நாட் கள் வயதைக் கொண்டது. குறிப்பாக தஞ்சாவூர், புதுக் கோட்டை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பயிரிடு வதற்கு இந்த இரகம் பரிந்துரை செய்யப்படுகிறது. இருந்தாலும் தமிழகம் முழுவதும் பயிரிடலாம். ஒரு ஹெக்டேருக்குச் சராசரி 4871 கிலோ மகசூல் தந்துள்ளது. இதனுடைய தானியங்கள் நல்ல சுவையுடையவை. சமையலுக்கு மிகவும் ஏற்றதும் மற்றும் நீண்ட நாட்கள் சேமித்து வைக்க ஏற்ற தன்மையையும் கொண்டது.

4. கோவில்பட்டி-கம்போடியா (கே. சி. 1) பருத்தி:

இது குஜராத் மாநிலத்தைச் சார்ந்த எஸ்.ஆர்.டி. சூரத் இரகத்திலிருந்து மறுதேர்வு செய்யப்பட்ட இரகமாகும். தமிழ

கத்தின் தென் மாவட்டங்களில் மானாவாரி கரிசல் மண் பகுதி களுக்கு ஏற்றது. நல்ல கட்டுத் திறனையும், நன்கு முதிர் வடையக்கூடியதும் மற்றும் ஒரே அளவான இழைகளையும் கொண்ட இரகமாகும். 40 எண்கள் வரை நூற்கக்கூடிய திறன் கொண்டது. இலட்சுமி மற்றும் பாரதி இரக பருத்திகளைவிட அதிக மகசூல் தரவல்லது. ஒரு ஹெக்டேருக்கு சராசரி மகசூல் 327 கிலோ தந்துள்ளது. மற்ற இரகங்களை விட தத்துப் பூச்சிகளை ஓரளவு தாங்கும் தன்மையுடையது.

## 5. கோவில்பட்டி-2 (கே. 2, எச்.சி) பருத்தி

எம்.சி யு. 7. எஸ்.பி.289—இ. என்ற இரு தனி இனங்களைச் சார்ந்த இரகங்களை மூலமாகக் கொண்ட வீரிய ஒட்டுப்பருத்தி யாகும். இது குறைந்த வயதுடையதும், அமோக விளைச்சல் தரக் கூடியதும், தஞ்சை மாவட்டத்தில் நெல் தரிசுக்கு ஏற்றது மான இரகமாகும். எம்.சி.யு.7 பருத்தியை விடத் தரத்தில் சிறந்ததாகவும், அதி நூற்புத்திறனையும் தரவல்லது. அனு சரனை ஆராய்ச்சித் தளைகளில் ஒரு ஹெக்டேருக்கு சராசரி 1,681 கிலோ மகசூல் கொடுத்துள்ளது. இது இரு தனி இனங் களில் இருந்து உருவாக்கிய வீரிய ஒட்டுப் பருத்தியாதலால், பூச்சிகள் மற்றும் நோய்களால் ஓரளவு தாக்கப்படும் இரக மாகும். அதிக மகசூலைப் பெறப் பயிர்ப் பாதுகாப்பு மிகவும் அவசியம்.

## கோவில்பட்டி—7 (கே.7) தீவனச்சோளம்

இது கே.3, மற்றும் எம். 5-1 ஆகியவைகளை ஒட்டுச் சேர்த்ததின் மூலம் பெறப்பட்டதாகும். இது முக்கியமாகத் தீவனத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரகமாகும். தென் மாவட்டங்களுக்கு மிகவும் ஏற்றதெனக் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. 100 முதல் 105 நாட்கள் வயதுடையதாகும். சாறுள்ள மற்றும் தக்கையற்ற தட்டைகளைக் கொண்டதால் மாடுகளால் விரும்பி உண்ணக்கூடியதாகும். அதிக அளவு விதை களை உபயோகித்ததில் ஒரு ஹெக்டேருக்கு சராசரி 16,436 கிலோ தட்டைகளும், 863 கிலோ தானியமும் தந்துள்ளது.

## குடுமியான்மலை-1 (கே.எம்.1) சோயாமொச்சை

தைவானில் உள்ள ஆசிய காய்கறி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிலையத்தில் இருந்து பெற்ற இரகத்திலிருந்து தேர்வு



செய்யப்பட்ட இரகமாகும். இதர இரகங்களை விட சிறிய மொச்சை விதைகளையும் 95 முதல் 100 நாட்கள் வயதையும் கொண்டது. எல்லா முக்கிய சாகுபடிப் பருவங்களிலும் பயிர் செய்யலாம். எனினும் புரட்டாசிப் பட்டம் மிகவும் சிறந்தது. 42.6 சதவிகிதம் புரதச்சத்தைக் கொண்டது. 'காரிப்' பருவத் தில் சராசரி ஒரு ஹெக்டேருக்கு 729 கிலோவும், 'ராபி' பரு வத்தில் சராசரி ஒரு ஹெக்டேருக்கு 1,575 கிலோ மகசூலும் தந்துள்ளது.

## குடுமியான்மலை-1 (கே. எம். 1) முருங்கை

இது இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டைப் பகுதிகளில் பயிராகும் நாட்டு முருங்கையில் இருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட இரகமாகும். இது ஓர் ஆண்டில் காய் காய்த்து முடியும் தன்மையும், குறைந்த இடவசதி உடைய இடங்களில் வளர்வதற்கேற்ற மிதமான வளர்ச்சியும் பெற்றது. விதை குறைந்ததும், சதைப்பற்றுடையதும், ருசியானதும், குறைந்த நாருடைய காய்களையும் கொண்டது. நட்ட 5-வது மாதத் திலிருந்து இச்செடிகள் மகசூலைத் தர ஆரம்பிக்கின்றன. ஒரு வருடத்தில் இரண்டு மகசூலைப் பெறலாம். ஆண்டொன்றுக்கு ஒரு செடி சராசரி 868 காய்கள் காய்க்கும்.

வேளாண் சமுதாயத்தினர் பயன்பெற 1979–80 ஆம் ஆண்டில் இத் துறையால் பல்வேறு புதிய ஆராய்ச்சித் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. பல்வகைப் பயிர் ஆராய்ச்சி நிலையம், தர்மபுரி மாவட்டம் சீலமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் செயல்படத் தொடங்கியது. இதைப்போன்று உயிரியல் கட்டுப்பாட்டு முறை ஆய்வுக்கூடம் 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செயல்படத் தொடங்கியது. பயிர்ப் பாதுகாப்பில் வலியுறுத்தப் படும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளுக்கு உயிரியல் தடுப்பு முறை இன்றியமையாததாக அமைகிறது.

பயிர்களில் ஏற்படும் நூற்புழுவின் தாக்குதல் பற்றி ஒரு விரிவான ஆய்வை மேற்கொள்ளவும், ஆராய்ச்சியின் முடிவுகளை விவசாயிகளின் நிலங்களில் பயன்படுத்த இப்புழுவினைக் கட்டுப் படுத்துவதற்கு ஏற்புடையதாக உள்ளனவா என்பதனை அறியவும், காஞ்சிபுரத்தில் ஓர் ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டது. உயிரியல்

உரங்களின் உபயோகத்தைப் பரவலாக்குவதற்கும், ஒரு இலட்சம் ஹெக்டேரில் இவ்வுரங்களைப் பயன்படுத்துவதற்கும் விவசாயிகளின் நிலங்களில் நீலப் பச்சைப் பாசியைப் பெருக்க வேண்டியுள்ளது. இதற்குத் தேவையான மூல விதைப் பொருளின் உற்பத்தி, ஆடுதுறை, அம்பாசமுத்திரம் மற்றும் திரூர்க் குப்பம் ஆகிய நெல் ஆராய்ச்சி நிலையங்களில் மேற்கொள்ளப்படும்.

## மண் பரிசோதனைப் பணி :

புதுக்கோட்டை மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட பெரியார் மாவட்டங்களைத் தவிர ஏனைய எல்லா மாவட்டங்களிலும் மண் பரிசோதனை நிலையங்கள் செயல்படுகின்றன. மற்றும் ஆடுதுறை, பரமக்குடி, கோயில்பட்டி ஆகிய இடங்களில் மூன்று நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும் 1979–80 ஆம் ஆண்டில் 12 மண் பரிசோதனை நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு அவை மேலாலத்தூர், காஞ்சிபுரம், கடலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, நாகர்கோவில், புதுக்கோட்டை, உதகமண்டலம், தர்மபுரி மற்றும் அருப்புக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட ஏழு நடமாடும் மண் பரிசோதனை ஆய்வுக் கூடங்களும், வறட்சி சார்பு பகுதிகளுக்கென அனுமதி வழங்கப்பட்ட இரண்டு நடமாடும் மண் பரிசோதனை ஆய்வுக் கூடங்களும் இவற்றில் அடங்கும். இவையல்லாமல் நுண்ணூட்டச் சத்துக்களான துத்தநாகம், மாங்கனீயம், இரும்பு, செம்பு முதலியவற்றைப் பரிசோதனை செய்வதற்குத் தேவையான சாதன வசதிகளைக் காஞ்சிபுரம், ஆடுதுறை மற்றும் கோவில்பட்டி மண் பரிசோதனை நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நன்மைக்கென, ஆண்டொன்றுக்கு 7.02 இலட்சம் மண் மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுகின்றன. இதைத்தவிர நீர் மாதிரிகளும் பரிசோதனை செய்யப்படுகின்றன. பாசன நீரின் தரத்தின் அடிப்படையில் அவற்றை நல்லமுறையில் சிக்கனமாகப் பயன்படுத்தப் பரிந்துரைகள் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் கூடுதல் வசதிகள் உண்டாக்கியதன் வாயிலாக ஆண்டொன்றுக்கு எட்டு இலட்சத்திற்கு மேல் மண் மாதிரிகளை நாம் பரிசோதனை செய்ய முடியும்.



## பயிற்சித் திட்டம்

புதிதாக அமைக்கப்பட்ட பெரியார் மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் உழவர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதர மாவட்டங்களில் தற்போதுள்ள நிலையங்களின் அமைப்பின்படி இவ்வாண்டு பெரியார் மாவட்டத்தில் ஓர் உழவர் பயிற்சி நிலையம் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த பொருள்கள் பற்றி 30,000 உழவர்களுக்கு இந்த நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படும். புதிய விவசாயத் தொழில் நுட்பங்களை விவ்சாயப் பெரு மக்களிடையே விரைவில் பரப்புவதற்காக செங்கற்பட்டு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு உழவர் பயிற்சி நிலையத்திற்கும் 10 தொலைக் காட்சி கருவிகள் வீதம் வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

## வேளாண்மைப் பொறியியல்

நிலச் சீர்திருத்தம், சிறு பாசனம், மண் மற்றும் நீர் மேம்பாட்டுப் பணிகளை இத்துறையின் பொறியியல் துறை செயல்படுத்தி வருகிறது. இத்துறையின் வசம் 145 புல்டோசர்கள், 176 வீல் டைப் டிராக்டர்கள் மற்றும் பல்வேறு வகைகளைச் சார்ந்த் 856 சிறுபாசனக் கருவிகள் உள்ளன. நிலச் சீர்திருத்தப் பணிகளுக்கு இவைகள் வாடகைக்கு விடப்படுகின்றன.

## நிலச்சீர்திருத்தம்

1980–81 ஆம் ஆண்டில் 6,600 ஹெக்டேர் பரப்பைச் சமன் படுத்தவும், மற்றும் 21,000 ஹெக்டேர் பரப்பில் உழவு செய்யவும், புல்டோசர்களையும், வீல் டைப் டிராக்டர்களையும் இப்பணியில் 2,35,000 மணி நேரம் ஈடுபடுத்தப்படும். 1979–80 ஆம் ஆண்டில் இவ்வியந்திரங்கள் சமன்படுத்துவதற்கு 1,56,000 மணி நேரத்திற்கும், உழுவதற்கு 84,000 மணி நேரத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பயனில்லை என்று கழிவு செய்யப்பட்ட புல்டோசர்களுக்குப் பதிலாக, 1980–81 ஆம் ஆண்டில் ஒன்பது புதிய புல்டோசர்களை வாங்குவதற்கு அரசு அனுமதி அளித்து அவைகள் வாங்கப்பட்டன.

## சிறுபாசனம் :

தமிழ்நாட்டில் மேல் ஓடும் நீரின் வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்திய நிலையில், கிடைக்கும் நிலத்தடி நீரின் வாய்ப்பு

களை நம்பி இருக்க வேண்டியுள்ளது. கரையோர மாவட்டங்களான தென்னாற்காடு, தஞ்சாவூர். புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் மேலும் பயன்படுத்திக் கொள்ளும் அளவிற்கு நிலத்தடி நீர் வசதிகள் அதிக அளவில் உள்ளன. சிறுபாசனத்தின்கீழ் இத்துறையால் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:—

1. குழாய்க் கிணறுகள் திட்டம்.
2. கிணற்றில் துளையிடும் திட்டம்.
3. வடிமுனைக்குழாய்க் கிணறுகள் திட்டம்.
4. கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம்.

இத்துறையில் நிலத்தடி மற்றும் மேல் ஓடும் நீரின் ஆய்வுக்கான நிறுவனத்தின்கீழ் ஓர் ஆராய்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நிலத்தடி நீரின் வாய்ப்புகளை நுட்பமாக முற்றிலும் ஆராய்ந்து அவைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகளை மேற்கொள்ளவும், அறிவியல் முறைப்படி நிலத்தடி நீரைப் பயன்படுத்திக் கொள்வது பற்றி விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கவும் இத்திட்டம் பயன்படுத்தப்படும்.

1979–80-ஆம் ஆண்டில் 4,300 குழாய்க் கிணறுகள் அமைக்கவும், 2,200 கிணறுகளில் துளையிடவும், 2,500 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கவும் மற்றும் 2,700 கிணறுகளை ஆழப்படுத்தவும் திட்டமிடப்பட்டது. இக்குறியீட்டைக் காட்டிலும் அதிகமாக பின்வரும் சாதனைகள் அடையப்பட்டன:—

| | | | |
|---|---|---|---|
| 1. | குழாய்க் கிணறுத் திட்டம் | 4,921 | எண்ணிக்கை |
| 2. | கிணற்றில் துளையிடும் திட்டம். | 2,668 | ,, |
| 3. | வடிமுனைக் குழாய்க் கிணறுத் திட்டம். | 2,733 | ,, |
| 4. | கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம். | 2,807 | ,, |

1980–81–ஆம் ஆண்டில் இத்திட்டங்களின்கீழ் பின்வரும் குறிக்கோளை அடையத் திட்டமிடப்பட்டுள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| 1. | குழாய்க் கிணறுத் திட்டம் — | 4,500 | எண்ணிக்கை |



| | | | எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 2. | கிணற்றில் துளையிடும் திட்டம். | 2300 | ,, |
| 3. | வடிமுனைக் குழாய்க் கிணறுத் திட்டம். | 2700 | ,, |
| 4. | கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம். | 2800 | ,, |

ரோட்டரித் துளையிடும் கருவிகளின் அதிகத் தேவையைக் கருத்தில் கொண்டு 1979–80-ஆம் ஆண்டில் மேற்கொண்டது போலவே மேலும் ஒரு 'பெர்குஷன்' துளையிடும் கருவியை ரூ. 2.50 இலட்சம் செலவில் 'ரோட்டரித்' துளையிடும் கருவியாக, நடப்பு ஆண்டில் மாற்றியமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1979–80-ஆம் ஆண்டில் சமுதாயக் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் 163 குழாய்க் கிணறுகள் தஞ்சை மாவட்டத்தில் அமைக்கப்பட்டன. இவற்றுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் வறட்சி சார்பு பகுதித் திட்டத்தின்கீழ் 140 குழாய்க் கிணறுகள் படிப்படியாக அமைப்பதற்கான திட்டம் ஒன்றிற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. 1979–80-ஆம் ஆண்டில் 39 குழாய்க் கிணறுகள் முடிக்கப்பட்டுள்ளன. 1980–81-ஆம் ஆண்டில் 35 கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

குழாய்க் கிணறுகளை அபிவிருத்தி செய்வதற்கு அதிகத் திறனுள்ள காற்றழுத்தக் கருவிகளின் தேவையைக் கருதி 150 'பி. எஸ். ஐ. 600 சி. எப். எம்.' காற்றழுத்தக் கருவிகளை வாங்கிய தோடல்லாமல் மாநிலப் பண்ணைக் கழகத்திடம் இருந்தும் இது போன்ற ஒரு காற்றழுத்தக் கருவி பெறப்பட்டுள்ளது. 1980–81-ஆம் ஆண்டில் இதே திறனுள்ள மேலும் ஒரு காற்றழுத்தக் கருவியை வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மண் வளப் பாதுகாப்பு

மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 1979–80–ஆம் ஆண்டில் 55,683 ஹெக்டேர் பரப்பில் நீர்த்தளப்பகுதிப் பராமரிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1980–81-ஆம் ஆண்டிலும் இதே அளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். நடப்பு ஆண்டில் நீர்த்தளப் பகுதிப் பராமரிப்புத் திட்டம், ஆதார வளங்களை மேம்படுத்தும் குறிக்கோள்களைக் கொண்டு

ள்ளது. வரப்புக் கட்டுதல், நிலச்சமன் படுத்துதல், தரிசு நிலங்களில் ஆழ உழுதல், வண்டல் மண் இடுதல் மற்றும் பாது காப்பு முறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான பணிகளை மேற்கொள்ள விவசாயிகளுக்கு உறுதியளிக்கப்படுகிறது. இத் தகைய ஒருங்கிணைந்த அணுகு முறைகளைப் பின்பற்றி நீர்த்தளப் பகுதியில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதே இதன் நோக்க மாகும். இத்தகைய ஒருங்கிணைந்த நீர்த்தளப் பகுதிப் பராமரிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது மட்டு மின்றி அதற்கான தொடர் நடவடிக்கைகளை அடுத்து மேற் கொள்ளும்போதும் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்க வழிவகை செய்கிறது. நீர்த்தளப்பகுதிப் பராமரிப்புத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் 112 நீர்த்தளப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

## பாசனப் பகுதிகளில் நீர்ப்பராமரிப்பு

பாசனத்திற்கு நீரை அதிக சிக்கனமாகவும் அதே சமயம் திறன்மிக்கதாகவும் பயன்படுத்தவதற்கென 1979–80–ஆம் ஆண்டில் காவிரி ஆற்றின் கழிமுகப் பகுதி மற்றும் சாத்தனூர்த் திட்டப் பகுதியிலுள்ள பாசனப் பகுதிகளில், பாசனப் பகுதி அபிவிருத்தித் திட்டம் ஒன்று செயல்படுத்தப் படுகிறது. 1979–80–ஆம் ஆண்டில் காவேரி பாசனப் பகுதி களில் 4,160 ஹெக்டேர் பரப்பிலும், சாத்தனூர் பாசனப் பகுதியில் 452 ஹெக்டேர் பரப்பிலும் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டுள்ளது. இதே அளவில் இத்திட்டம் 1980–81–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். நீர்ப் பராமரிப்புத் திட்டம் செயலாக்குவதின் தேவையை உணர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை அணையால் பயன் பெறும் ஏரிகளின் ஆயக்கட்டுப் பகுதிகளைப் புதுப்பிக்க 1979–80–ஆம் ஆண்டில் வறட்சி சார்பு பகுதித் திட்டத்தின்கீழ் ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏரிகளின் பாசனப் பகுதியை அபிவிருத்தி செய்வதால், நீரினை உபயோகப்படுத்து வதில் அதிக சிக்கனம் கடைபிடிக்கப்பட்டு, இதுவரை இந்த ஏரிகளின் ஆயக்கட்டுப் பகுதிகளில் பாசன வசதி பெறாத பகுதிகள் பாசன வசதி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏரிகளின் கீழ் உள்ள பாசனப் பகுதிகளில் நீர்ப் பராமரிப்பு முறைகளை நன்கு மேற்கொள்வதால் இப்பகுதிகளில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மற்றும் பயிரிடுதலைத் தீவிரப்படுத்துவ



தற்கும் வழிவகை ஏற்படுகிறது. பாசன நீரைப் பயன்படுத்து வதில் நீரைச் சிக்கனப்படுத்தி அதன் மூலம் நீர்ப் பராமரிப்பை நல்லமுறையில் விவசாயிகள் கடைப்பிடித்து அதிக மகசூலைப் பெறும் நோக்கத்துடன் பெரியார் வைகை நவீனத் திட்டத்தின் கீழ் உள்ள பாசனப் பகுதிகளில், "பண்ணை அபிவிருத்தித் திட்டம்" ஒன்றை உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. உலக வங்கியின் உதவியைப் பெறுவதற் காக இத்திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## ஆழ் ஓடைச் சீர்திருத்தத் திட்டம்

நீர்த்தளப் பகுதியில் சரிவர பராமரிப்பை மேற்கொள்ளாத தால், ஆழ் ஓடைகள் ஏற்பட்டு நிலத்தைச் சாகுபடிக்கு உதவாமல் ஆக்கிவிடுகிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் இத்தகைய ஆழ் ஓடைகளால் பாதிக்கப்பட்ட நிலங்களில் 226 ஹெக்டேர் பரப்பில் 1979–80 ஆம் ஆண்டில் சீர்திருத்தம் செய்து பாதுகாக்கப் பட்டுள்ளது. தென்னாற்காடு மாவட்டத்தில் இத்தகைய ஆழ் ஓடையால் பாதிக்கப்பட்ட 2,700 ஹெக்டேர் பரப்பில் சீர்திருத்தம் செய்வதற்கென அரசு ஒரு உட்கோட்டத்திற்கு அனுமதி வழங்கியதின்பேரில் அது செயல்படத் தொடங்கியுள்ளது.

## காற்றரிப்புத் தடுப்பு

காற்றரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளான மதுரை மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியிலும் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள "தேரி" நிலங்களிலும் காற்றரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1979–80 ஆம் ஆண்டில் இரண்டு மாவட்டங்களுக்குமுள்ள குறியீடான 6,000 ஹெக்டேரைக் காட்டிலும் 6,029 ஹெக்டேர் பரப்பில் பாதுகாப்பிற்கான மரங்கள் நடப்பட்டுள்ளன. 1980–81 ஆம் ஆண்டிலும் 6,000 ஹெக்டேர் பரப்பில் இத் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 1980–81 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

தற்பொழுது நடப்பில் உள்ள திட்டங்களுடன் கீழ்க்காணும் புதிய திட்டங்களையும் 1980–81 ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் சில திட்டங்களுக்கு அனு மதியும் வழங்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

## வேளாண்மை விரிவாக்கம்

### பயறு வகைகள்—

பயறு வகைகளில் நமது தேவையை நிறைவு செய்யும் வகையில் தற்போதைய பயறு வகை உற்பத்திக் குறியீடான 3·58 இலட்சம் டன்னில் இருந்து 1985-86 ஆம் ஆண்டு முடிவில் 6·40 இலட்சம் டன்னாக உயர்த்த ஒரு பெரும் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு செயல் படுத்தப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ், போதுமான அளவில் தரமான மூல விதைகள், ஆதார மற்றும் சான்றிதழ் பெற்ற விதைகளை உற்பத்தி செய்வதின் மூலம், விதை உற்பத்தி நடவடிக்கைகள் வலுப்படுத் தப்படும். இத்திட்டம் 1980–81 ஆம் ஆண்டு முதல் செயல்படத் துவங்கியுள்ளது.

### தென்னை—

இம்மாநிலத்தில் தென்னை உற்பத்தி, தேவையை விட மிகக் குறைவாக உள்ளது. எனவே ஒவ்வொரு ஆண்டும் இப்பொழுது விநியோகிக்கப்படும் தென்னங்கன்றுகளைத் தவிர மேலும் கூடுத லாக 15 இலட்சம் நெட்டைக் கன்றுகளும், 3 இலட்சம் நெட்டை குட்டை வீரிய கன்றுகளும், 4 இலட்சம் குட்டை நெட்டை வீரிய கன்றுகளும் உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்காக முப்பது ஹெக்டேர் பரப்பு கொண்ட புதிய நாற்றங் கால்கள் ஆரம்பிப்பதற்கென ஒரு தீவிர திட்டம் செயல் படத் துவங்கியுள்ளது. மேற்கண்ட திட்டத்தின்கீழ், தென்னந் தோட்டங்களில் பயிர் மேம்பாட்டினை அபிவிருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தப்படும்.

### நிலக்கடலை—

நம் மாநிலம், எண்ணை வித்துக்களை அதிக அளவு உற் பத்தி செய்யும் மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இவற்றில் நிலக்கடலை மிக முக்கியமான பயிராகும். நிலக்கடலை சாகு படியில் தரமான விதைகள் கிடைப்பதும் அவற்றினை உற்பத்தி செய்து விநியோகிப்பதும் தொடர்ந்து ஒரு கடின நிலையாகவே இருந்து வருகிறது. எனவே தரமான விதைகள் விவசாயிகளுக்கு வழங்குவதற்காகத் தென்னாற்காடு, வடாற்காடு, பெரியார் மற்றும் மதுரை மாவட்டங்களில் நிலக்கடலை உற்பத்தி மையங்கள்



ஏற்படுத்தி இவ்விதை மையங்களில் 4000 ஹெக்டேர் பரப்பில் விதைப்பண்ணைகள் அமைத்து 4000 டன் சான்றிதழ் பெற்ற நிலக்கடலை விதைகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

### பருத்தியில் புரொடீனியா ஒழிப்பு—

பருத்தி, நிலக்கடலை மற்றும் வாழை பயிர்கள் புரொடீனியா புழுவின் தாக்குதலுக்கு உள்ளாகி இதன் மூலம் இப்பயிர்கள் பெரும் சேதத்திற்குள்ளாகிறது. இப்பூச்சியை ஒழிக்கும் முறை களில் ''நியூக்லியர் பாலிடெட்ரோலிக்'' என்ற நுண் கிருமியினைக் கொண்டு கட்டுப்படுத்தும் உயிரினக் கட்டுப்பாடு முறை குறை வான செலவுடையதும் அதிக அளவு பயன் தரத்தக்கதுமான சிறந்த முறையாகும். எனவே இந்த நுண்கிருமியை பொள் ளாச்சி, கோபி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் உள்ள ஒட்டுண்ணிப் பெருக்க மையங்களில் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தென்னை நாற்றங்கால்களில் அலுவலர் குடியிருப்புக் கட்டுதல்—

தென்னங்கன்று உற்பத்தி செய்யும் திட்டம் தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெற்று வரும் ஒரு திட்டமாகும். இத்திட்டத் தின் கீழ் உள்ள நிர்வாக அலுவலர்களுக்கு வசதி செய்து தரும் பொருட்டு, நாற்றங்கால்களில் அலுவலர் குடியிருப்புகள் படிப்படி யாக கட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சேலம் மாவட்டம் டேனிஷ்பேட்டையில் உள்ள தென்னை நாற்றங்காலில், குடியிருப்புகள் கட்டப்படும்.

## வேளாண்மை ஆராய்ச்சி

### மூல விதை உற்பத்தி—

மூல விதைதான், ஏனைய எல்லா நிலை விதைகளை உற்பத்தி செயவதற்கு அடிப்படையாக உள்ளது. எனவே, அமைப்பிலும், வம்சாவழியிலும் நூற்றுக்கு நூறு சுத்தமான விதைகளை, குறிப்பிட்ட தரத்திற்குத் தக்கவாறு மூலவிதைகளை உற்பத்தி செய்ய வேண்டியது அவசியமாகிறது. இதற்கென நெல்லில் மூல விதைகள் உற்பத்தி செய்ய, ஒரு தனித்திட்டம் ஆடுதுறையில் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1980 ஜூலை 16

## உள்ளூர் சோள ரகங்களுக்குப் பதில் வீரிய ரகங்கள் பயிரிடுதல்—

நீண்ட கால வயதுடைய மக்கட்டை மற்றும் தலைவிரிச் சானைப் போன்ற உள்ளூர் சோள இரகங்கள் நம் மாநிலத்தில் 20,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றன. இந்த இரகங்களை மாற்றம் செய்யத் தகுந்த உயர்விளைச்சல் இரகங்கள் இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு, தற்பொழுது பயிரிடப்படும் இரகங்களில் தகுதியான சிறந்த இரகங்களைத் தேர்ந்தெடுத்தும் மேலும் பல்வேறு இடங்களில் உருவாக்கப்பட்ட வீரிய ஒட்டு இரகங்களையும் அதனின்று பிறக்கப்பெற்ற இரகங் களையும் பரிசோதித்துப் பார்த்து மக்கட்டை தலைவிரிச்சான் சோளம் பயிரிடும் பகுதிகளுக்கு உகந்த உயர் விளைச்சல் இரகம் தேர்ந்தெடுக்கப்படும்.

## தங்கும் குடியிருப்புகள் கட்டுதல்—

குடுமியான்மலை ஆராய்ச்சி நிலையப்பகுதிகளில் வேலை செய்யும் அலுவலர்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கும், இதன் தொடர்பான இதர பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் ஏற்ப, தங்கும் குடியிருப்புகள் அமைக்கப்படும்.

## ஆய்வுக் கூடங்கள் கட்டுதல்—

திரூரில் உள்ள நெல் பரிசோதனை நிலையத்திலும், திண்டி வனத்திலுள்ள எண்ணெய் வித்துக்கள் பரிசோதனை நிலை யத்திலும், ஒருங்கிணைந்த ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்படும்.

## வேளாண்மைக் கல்வி

## உழவர் பயிற்சி நிலையம்

கோயம்புத்தூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதன் விளைவாக உழவர்களுக்கும், விரிவாக்கப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக பெரியார் மாவட்டத்தில் ஈரோடில் ஒரு தனி உழவர் பயிற்சி நிலையம் அமைக்கப்பட உள்ளது.

## வேளாண்மைப் பொறியியல்

## பழைய புல்டோசர்களுக்குப் பதில் புதியவை வாங்குதல்

விவசாயிகளின் பெருகிவரும் தேவையை நிறைவுசெய்வதற்காக பழையதும், தகுதியற்றவை என்று கழிவு செய்யப்பட்ட



1980 ஜூலை 16]

புல்டோசர்களுக்குப் பதிலாக ஒன்பது புதிய புல்டோசர்கள் வாங்குவதற்கு அரசு அனுமதி அளித்து அவைகள் வாங்கி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் சமன் செய்யும் கருவியும் உழும் கருவியும் முன் பக்கத்தில் பொருத்தப்பட்டுள்ள இரண்டு 'கிர்லோஸ்கர்' உழுவை இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. முன்பக்கம் பொருத்தப்பட்ட சமன் செய்யும் கருவியினைக் கொண்ட இப்புது இயந்திரம் வயல்வெளிகளில் எவ்வாறு வேலை செய்கின்றது என்று பரிசோதிக்கப்படவிருக்கிறது.

## சிறுபாசனம்

## பெர்குஷன் துளையிடும் கருவிகளை சுழல் வகைத் துளையிடும் கருவிகளாக மாற்றுதல்:—

நம் மாநிலத்தில் வண்டல் மண் பகுதிகளில் சுழல் வகைத் துளையிடும் கருவிகளுக்கு அதிக தேவை இருக்கிறது. இக்கருவி களை வேலைக்குப் பயன்படுத்தக்கூடிய காலம் மிகக் குறுகிய தாகவும், இப்பொழுதுள்ள கருவிகளின் எண்ணிக்கை பற்றாக் குறையாகவும் உள்ளன. இக்கருவிகளின் எண்ணிக்கையை நிதிப் பற்றாக்குறையின் காரணத்தால் அதிகப்படுத்த இயலவில்லை. எனவே ஒரு "யுபி 200 பெர்குஷன்" துளையிடும் கருவியை அதிக தேவையுள்ள சுழல் வகைத் துளையிடும் கருவியாக மாற்றி அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் இப்பொழுதுள்ள "யுபி 200 துளையிடும் கருவிகளை" நல்ல முறையில் பயன்படுத்த வழி வகுத்துள்ளது.

## அதிகத் திறன் வாய்ந்த காற்றமுத்தக் கருவி வாங்குதல்—

வண்டல் மண் நிலப்பகுதிகளில் குழாய்க் கிணறுகளின் ஆழம் 500 அடியிலிருந்து 1000 அடி வரை இருக்கும். இந்த ஆழத்திற் குக் குழாய்க் கிணறுகள் அமைக்க அதிகத்திறன் வாய்ந்த 150 பிஎஸ்ஐ/600 சி. எப். எம் காற்றமுத்தக் கருவி தேவைப்படும். இவ்வாண்டு ஒரு பழைய காற்றமுத்தக் கருவிக்கு மாற்றாக ஓர் அதிகத் திறன் வாய்ந்த புதிய காற்றமுத்தக்கருவி வாங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

## மண் பரிசோதனை ஆய்வுக் கூடம்:

புதுக்கோட்டைப் பகுதியில் மண் பரிசோதனை ஆய்வுக் கூடம் இல்லாத காரணத்தினால், தங்கள் மண் பரிசோதனை

முடிவுகளை ஆய்வு செய்வதில் காலதாமதம் ஏற்படுவதாக பல வேளாண் பெருமக்கள், விண்ணப்பித்துள்ளனர். எனவே, குடுமியான்மலையில் ஒரு மண் பரிசோதனை ஆய்வுக்கூடம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிர்வாக அமைப்பை மேம்படுத்துதல்—

இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசிக் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, அருப்புக்கோட்டைக் கோட்டத்தையும் அரசு அமைத்துள்ளது. அந்த புதுக் கோட்டத்திற்கு இணையாக ஒரு விவசாயக் கோட்டம் ஒரு மாவட்ட வேளாண்மை அலுவலரின் பிரிவாக அருப்புக் கோட்டையைத் தலைமையகமாகக் கொண்டு அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வேளாண் துறையின் நடவடிக்கைகள் அதிகமாக உள்ளதாலும், திட்டத்தில் சார்ந்த இனங்கள் அதிக அளவு உள்ளதாலும், இவற்றினை செம்மையாக நடத்தவும் அலுவலர்களின் திறனை அதிகரிக்கும் வகையிலும், கூடுதல் அமைச்சுப் பணியாளர்களை நியமிக்க வேண்டியது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு கீழ்க் குறிப்பிட்ட புதிய பதவிகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

15 கண்காணிப்பாளர் பதவிகள்.

தருமபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு இரு நிர்வாக அலுவலர்கள்;

சில மாவட்ட அலுவலகங்களுக்கு எட்டு உதவியாளர் பதவிகள்;

வேளாண்மை கிடங்குகளில் உள்ள இளநிலை உதவியாளர்கள் பதவியை உயர்த்துதல்.

முக்கிய திட்டங்களும் எதிர்கால நடவடிக்கைகளும்

சிறப்பான வகையில் முன்னதாகவே தண்ணீர் திறந்து விடுதல்—

சமீபகால வரலாற்றில் முதன் முறையாக மேட்டூர் அணையை உரிய தேதியான ஜூன் 12ல் திறப்பதென்ற அரசின் துணிவான முடிவு குறுவை சாகுபடியில் நல்ல பயனை அளித்தது. இதன் மூலம் குறுவை அதிக வெப்ப நாட்களைக் கொண்ட காலங்களில் வளர்ந்தும், எந்தக் காலத்திலும் இல்லாத மிகக் குறைந்த அளவு பூச்சி தாக்குதல் முக்கியமாக புகையான் அதிகம்



தாக்காத நல்ல தரமுள்ள நெல்லை உற்பத்தி செய்ய முடிந்தது. கீழ்பவானி அணையில் வடகிழக்குப் பருவமழையின் மூலம் பெற்ற உபரி நீரை 1979—ஆம் ஆண்டின் தொடக்கத்தில் எள் பயிரை சிறப்பு போகமாக பயிரிடுவதற்கு ஏற்ப திறந்து விடப்பட்டதின் மூலம் நல்ல மகசூலைப் பெற முடிந்தது. இந்த நடவடிக்கையின் மூலம் பற்றாக்குறைப் பயிரான எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை பெருக்குவதில் நல்ல பலன் காண முடிந்தது. 1980 ஆம் ஆண்டிலும் பவானியில் 17,889 ஹெக்டேர் பரப்பில் எள் பயிரிடப்பட்டது.

பயிர் காப்புறுதித் திட்டம்

வெள்ளம், வறட்சி போன்ற இயற்கையின் சீற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்புகளிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்ற இவ்வரசு, மத்திய அரசு மற்றும் இந்திய பொதுப் பாதுகாப்பு நிறுவனத்தின் உதவியுடன் 1979—80 ஆம் ஆண்டிலிருந்து பயிர் பாதுகாப்புத் திட்டத்தை ஆரம்பித்தது. இத்திட்டம் 17 வட்டங்களில் 8,000 ஹெக்டேர் பரப்பில் முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. அந்தந்த வட்டங்களில் உள்ள விவசாய கூட்டுறவுக் கடன் சங்கங்கள், பங்கேற்க விரும்பும் அங்கத்தினர்களைச் சேர்த்து இத்திட்டத்தினை அமுல் படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். இத்திட்டத்தின் கீழ் ஒரு விவசாயி அதிக அளவு தொகையாக ரூ 2,000 வரை பயிர் பாதுகாப்பு செய்யலாம். அதற்குரிய பிரிமிய தொகை அந்தந்த பகுதிகளின் சராசரி மகசூலைப் பொறுத்து மாறுபடும்.

வேளாண் கருவிகளை முறைப்படுத்துதல்

முறையான ஆராய்ச்சி மற்றும் சோதனைகள் மூலம் விதைகள் வெளியிடுவதன்றி, வேளாண் துறை தற்போது விவசாய கருவிகளையும் முறையாகச் சோதனை செய்து, ஒருநிலைப்படுத்தி, வேளாண் மக்களிடையே பரவலாக்க முனைந்துள்ளது. இந்த அடிப்படையின் கீழ் 'கிராவிடர் அப்ளிகேடர், மற்றும் 'பல நோக்கு கருவி' முழுமையாக பரிசோதிக்கப்பட்டு, மறுபடியும் தொழிலகத்திற்கு எடுத்துச் சென்று மாறுதல்களை மேற்கொண்டு ஒருநிலைப்படுத்தி, வரைபடம் எடுத்து, அவற்றிற்கான கையேடும் தயாரிக்கப்பட்டு வரும் ஆண்டுகளில் வினியோகிக்கப்பட இருக்கின்றன.

## இரசாயன மற்றும் உயிரின உரங்கள் விநியோகம்

இரசாயன உரங்களில் குறிப்பாக யூரியாவின் விநியோகம் திருப்திகரமாக உள்ளபோதிலும், இந்திய உணவு கார்ப்பரேஷன் மட்டும் அல்லாது பல்வேறு நிறுவனங்களும் இறக்குமதியாகும் உரங்களை, விநியோகம் செய்ய வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் 'ஸ்பிக்' நிறுவனத்தைக் கொண்டு வந்ததன் மூலம் 'கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்' மற்றும் 'அம்மோனியம் சல்பேட்' விநியோகம் மாநிலத்தில் அதிகமாகியுள்ளது. நீலப் பச்சைப் பாசி பயிருக்கான தழைச் சத்தை மிகக் குறைந்த செலவில் அளிக்கக் கூடியதாய் இருக்கிறது. இரசாயன உரங்களுடன் இணைந்து இதனை இடுவதன் மூலம் நெல் அதிக விளைச்சலைக் கொடுத்துள்ளது. 1979–80–ஆம் ஆண்டில் நீலப் பச்சை பாசியை அதிகமான பரப்பளவில் விநியோகம் செய்வதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டு 0·79 இலட்சம் ஹெக்டேர் நெல் பரப்பில் நீலப்பச்சைப்பாசி இடும்பணி மேற்கொள்ளப்பட்டது. 1980–81-ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் ஹெக்டேர் பரப்பில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

## நடப்பு ஆண்டிற்கான ஒரு சில முன்னோடி நடவடிக்கைகள் :—

### இடுபொருட்கள் மேலாண்மை

இடுபொருட்கள் மேலாண்மை நல்ல முறையிலும் குறிப்பாக உரங்களைப் பற்றியவரை நன்கு உறுதியாகவும் உள்ளது. பூச்சி மருந்துகளைப் பொறுத்தவரையிலும் கூட, மேலும் அதிக அளவு நுட்ப மூலப் பொருளை மத்திய அரசிடமிருந்து பெற்று, தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநர் உதவியுடன் பங்கீட்டு முறையில் விநியோகம் செய்யப்படுகிறது. இது இத்துறையின் நேரடிப் பொறுப்பிலுள்ளது என்றே கொள்ளலாம். வரும் ஆண்டுகளில் இதனை மேலும் திறமையாகவும், உறுதியாகவும் செயல்படுத்தப்படும்.

மற்றொரு முக்கிய இடுபொருள், விதையாகும். நெல் மற்றும் சிறுதானியங்களைப் பொறுத்தவரை, சிறந்த முறையில் விதை உற்பத்தியை மேற்கொள்வதற்கான அடிப்படை வேலைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டன. இத்தகைய முயற்சி எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகைகளில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. பயறு வகைகளில் மூல விதைகளிலிருந்து



ஆதாரக் கரு விதை மற்றும் சான்றிதழ் பெற்ற தரமான விதை உற்பத்திக்கென, தீவிரத் திட்டமொன்று அரசு அனுமதி அளித்துச் செயல்பட துவங்கியுள்ளது.

### தென்னை தீவிரத் திட்டம்

புதிய நாற்றங்கால் அமைத்து 15,00,000 தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்வதும், புதிய நெட்டைகுட்டை ரகங்கள் உற்பத்தி செய்வதும் மற்றுமொரு தீவிரத் திட்டமாகும். குட்டை நெட்டை கன்றுகள் உற்பத்திக்கென ஒரு சிறப்புப் பண்ணை அமைப்பதும், அரசின் தீவிர ஆய்வில் உள்ளது. நிலக்கடலை விதை உற்பத்தியிலும் மேற்கண்டவாறு ஒரு தீவிரத்திட்டம் ஆய்வில் உள்ளது. நெல் மற்றும் பயறு வகைகளுக்கு என இருக்கும் விதை உற்பத்தி மையங்கள் போன்று, நிலக்கடலை விதை உற்பத்திக்கும் விதை மையங்களே 1980–81 ஆம் ஆண்டில் வேளாண்மை விரிவாக்கப் பகுதியின் முக்கிய திட்டமாக இருக்கும். இம்முக்கிய இடுபொருட்களுக்கு முழுநேர கவனம் செலுத்தப்படுகிறது.

### தாவர எண்ணெய் சிறப்பு மையம்

நிலக்கடலை உற்பத்தியின் பல்வேறு அம்சங்களை அதன் இடுபொருட்கள் விநியோகம், தொழில் நுட்ப அறிவினை விரிவாக்கப் பணி மூலம் வழங்குதல், நுட்ப அறிவினைப் பெருக்குதல், நிலக்கடலையை இலாபகரமான நல்ல விலை கொடுத்து வாங்கி அவற்றினை எண்ணெயாக மாற்றுதல், ஆகிய நடவடிக்கைகளை குஜராத் மாநிலத்தில் பால் வழங்குவதில் உலகப் புகழ் பெற்ற 'ஆனந்த்' பண்ணை செயல்படுவது போன்ற வகையில் செயற்படுத்துவதற்கென தாவர எண்ணெய்ச் சிறப்பு மையம் ஒன்றினை அரசு அமைத்தது, அம்மையம் அதற்கான செயல் திட்டம் தீட்ட ஆரம்பித்து உள்ளது. இது தேசியப்பால் வளர்ச்சிக் கழக நிதி உதவியுடன் செயல்படுகிறது. இதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அதனை நடைமுறைப் படுத்துவது அரசின் தீவிரஆய்வில் உள்ளது.

### பாசனப் பகுதிகளில் நீர்ப் பராமரிப்பு

பாசனப் பகுதிகளில் நீர்ப் பராமரிப்பின் முக்கியத்துவத்தை அறிந்து, 1979–80-ல் தஞ்சை மாவட்டத்தில் வெற்றிகரமாகச்

செயல்பட்ட ஐந்து நீர்ப்பராமரிப்புப் பகுதிகள் போன்று அம்மாவட்டத்தில் மேலும் பலபகுதிகள், செயல்பட வேளாண்மைப் பொறியியல் பிரிவில் நிர்வாக முறையினை வலுப்படுத்துவதன் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்.

தமிழ்நாட்டில் பழவகைகள் சாகுபடிக்கு ஏற்ற வசதிகள் இயல்பாகவே அமைந்துள்ளன. ஏறத்தாழ 6.6 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்தில் முந்திரி, வாசனைத் திரவியங்கள், காபி, தேயிலை ஆகிய பயிர்களை உற்பத்தி செய்ய நிறைந்த வாய்ப்புகள் உள்ளன. மேற்படி பயிர்கள் அதிக லாபம் தருவதுடன் அதிக நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திறன் பெற்றுள்ளன. மேற்படி வாய்ப்புக்களைத் தக்க முறையில் பயன்படுத்தும் நோக்குடன் தர்மபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு ''தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை'' என்னும் தனித்துறை ஒன்று இயங்கி வருகின்றது—இத்துறையின் முக்கிய நோக்கங்கள் :

1. குறைந்த விலையில் நிறைந்த மகசூல் தரும் பழக் கன்றுகள் மற்றும் ஒட்டு செய்யப்பட்ட கன்றுகள் ஆகியவைகளை அரசு பழத்தோட்டங்களிலிருந்து உருவாக்கப்பட்டு பெருமளவில் விநியோகித்தல்.

2. சான்றிதழ் பெற்ற காய்கறி விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகித்தல்.

3. பெரிய அளவில் பழத்தோட்டங்கள் அமைத்தல் ஆகியவைகள் ஆகும்.

வேளாண்மைத் துறையில் செயற்படுத்தப்பட்ட 256 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பல்வேறு தோட்டக்கலைத் திட்டங்கள் இத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் ரூ. 32.28 இலட்சம் மதிப்புள்ள இரண்டாம் பகுதித்திட்டங்கள் நடப்பு ஆண்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன.



## 1979–80 ஆம் ஆண்டின் திட்டங்களும் பணிகளும்

### பழத்தோட்டங்கள்:

விவசாயிகளுக்கு குறைந்த விலையில் மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, பேரிக்காய், பிளம்ஸ் ஆகிய பழக்கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு கோவை, பெரியார், திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் 111.29 ஹெக்டேர் பரப்பளவில் அரசு பழப்பண்ணைகள் இயங்கி வருகின்றன.

1979–80 ஆம் ஆண்டில் ரூ 9,03,760 பெறுமானமுள்ள 12,91,340 கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப் பட்டுள்ளன. மேற்படி பழத்தோட்டங்கள் வணிக முறையில் நல்ல வருவாய் ஈட்டும் வகையில் இயங்கி வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வல்லத்திராயன் கோட்டை என்ற இடத்தில் 1978–79 ஆம் ஆண்டில் 465.38 ஹெக்டேர் பரப்பில் பெரிய அளவில் ஒரு பண்ணை ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. 325.36 ஹெக்டேர் பரப்பளவில் அப்பண்ணையில் இதுவரை மா, பலா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, விளாமரம் ஆகிய கன்றுகள் நடப்பட்டு இருக்கின்றன. கன்றுகள் நடும்பணி இவ்வாண்டு முடிவிற்குள் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### வாழை

விவசாயிகளுக்கு நோயில்லாத தரமான வாழைக் கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு 1977 ஆம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் நவ்லாக் என்னுமிடத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முதலைப்பட்டியிலும் வாழைத் தோட்டங்கள் ஆரம்பித்து இயங்கி வருகின்றன. 1979–80-ல் 61.91 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்து 50,000 கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டுள்ளன.

வாழை சாகுபடி திட்டத்தின் கீழ் 50 விளக்கப் பண்ணைகள் அமைத்து வாழை சாகுபடிக்குத் தேவையான தொழில் நுட்ப அறிவுரைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

### பைன் ஆப்பிள்

தரமான பைன் ஆப்பிள் கரணைகளை உற்பத்தி செய்து விநியோகிக்கக் கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை என்னுமிடத்திலும், சேலம் மாவட்டம் கொல்லிமலைச் சாரலிலும் 2 நாற்றங்கால்கள் அமைத்து 1979–80 ஆம் ஆண்டில் 1,84,600 கரணைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளன.

### மாண்டரின் ஆரஞ்சுப் பழத் திட்டம்

நீலகிரி மற்றும் தமிழ்நாட்டின் மலைப்பிரதேசங்களில் ஆரஞ்சுப் பழச் சாகுபடி முக்கியத்துவம் வகித்து வந்தது. பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்த்து நிற்க இயலாது மேற்படி பழத்தோட்டங்கள் சிதைந்து விட்டதால், விவசாயிகளை ஊக்குவித்து மாண்டரின் ஆரஞ்சு சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்தி உற்பத்தியை பெருக்க, தமிழ்நாட்டில் மதுரை மாவட்டம் கீழ்ப்பழனியிலும், நீலகிரி மாவட்டம் குக்கல் பள்ளத்தாக்கிலும் இரண்டு பழத்தோட்டங்கள் அமைத்து மாண்டரின் ஆரஞ்சுக் கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப் படுகின்றன. 1979–80 ஆம் ஆண்டில் 36,000 கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு 205 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

### வாசனைத் திரவியங்கள்

தமிழ்நாடு தொன்றுதொட்டு மிளகு, ஏலக்காய், ஜாதிக்காய், கிராம்பு ஆகிய மூலிகைகளுக்குப் பெயர் பெற்றது. அதிக லாபம் தரும் மேற்படி மூலிகைகளின் பயிரிடும் பரப்பளவை அதிகப்படுத்த கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையிலும், நீலகிரி மாவட்டம் கடலூரிலும் 2 நாற்றங்கால்கள் அமைத்து 1979–80 ஆம் ஆண்டில் 2,30,100 மிளகுக் கரணைகளும் 12,500 கிராம்பு மற்றும் ஜாதிக்காய் கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

### முந்திரி

அந்நியச்செலாவணியை அளிக்கும் முக்கிய பயிரான முந்திரி தென் ஆற்காடு, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் பயிரிடப்ப



கேரள நாட்டைப்போல அதே பரப்பளவில் முந்திரி சாகுபடி செய்யப்பட்ட போதிலும், தமிழ் நாட்டின் மகசூல் கேரள நாட்டைவிட மிகவும் குறைந்த அளவில் உள்ளது. எனவே முந்திரி சாகுபடியை அதிகரிப்பதற்கும் தக்க அளவு உரமிடவும் தகுந்த காலத்தில் பயிர்ப்பாதுகாப்பு முறைகளைக் கையாளவும் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது. 1979–80 ஆம் ஆண்டில் விவசாயிகளுடைய நிலங்களில் நவீன சாகுபடி முறைகளைக் கடைப்பிடிப்பதற்கு 150 செயல்விளக்கங்கள் நடைபெற்றன. மேலும் விவசாயிகளுக்குத் தரமான விதைகள் உற்பத்தி செய்து விநியோகிக்கவும், மரங்களில் ஒட்டுவகை இனவிருத்தி செய்வதற்கு தமிழ்நாட்டில் செங்கை மாவட்டம் பிச்சவாக்கம், புதுக்கோட்டை மாவட்டம் நாட்டுமங்கலம், இராமநாதபுரம் மாவட்டம் தேவகோட்டை ஆகிய மூன்று இடங்களிலும் முந்திரித் தோட்டங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

### மலைப்பிரதேசங்களில் பழ அபிவிருந்தித் திட்டம்:

நீலகிரி மாவட்டம் தவிர மலைப்பிரதேசங்கள் அடங்கிய வட ஆற்காடு, சேலம், கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களில் விவசாயிகளுக்குத் தேவையான விதை, உரம், பூச்சி மருந்துகள் பாதி விலையில் விநியோகிக்கத் தனித்திட்டமொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. 1979–80 ஆம் ஆண்டில் மாண்டரின் ஆரஞ்சு, மா, கொய்யா, எலுமிச்சை, பைன் ஆப்பிள், பலா, சப்போட்டா ஆகிய பழக்கன்றுகளும், கோக்கோ, மிளகு, ஜாதிக்காய், கிராம்பு ஆகிய மூலிகைப் பயிர்களின் கன்றுகளும் கரணைகளும் பாதிவிலையில் வழங்கப்பட்டு 1,828.34 ஹெக்டேரில் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி மலைப்பிரதேசங்களில் இருக்கும் விவசாயிகளுக்குத் தேவையான உரங்களும், பூச்சி மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

### மலைவாழ் பழங்குடியினருக்கான பழ அபிவிருத்தித்திட்டங்கள்:

இத்திட்டத்தின் கீழ் சேலம், தர்மபுரி, தென் ஆற்காடு, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் மலைவாழ் பழங்குடியினருக்கு வேலை வாய்ப்பளிக்கவும், பழ மரங்கள் சாகுபடி செய்வதில் ஊக்கமளிக்கவும், அவர்களுக்குத் தேவையான பழக்கன்றுகள், உரங்கள், பூச்சி மருந்துகள் விவசாயக் கருவிகள் ஆகியவற்றை 50 சதம் முதல் 75 சதம் வரை மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மலைவாசிக் குடும்பத்தினரையும்

கணக்கெடுத்து அவர்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குவதுடன், பயிற்சி முகாம்கள் அமைத்து அதன்வழி பயிற்சியளிக்கப்பட்டு சுற்றுலா மூலம் ஊக்குவித்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

## மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டத்தில் 17 ஊராட்சி ஒன்றியங்களிலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 ஊராட்சி ஒன்றிகங்ளிலும் பழ மரங்கள் மற்றும் மிளகு, கிராம்பு ஆகிய வணிகப் பயிர்களுக்குத் தேவையான கன்றுகள், கரணைகள், உரங்கள், பூச்சி—பூஞ்சான மருந்துகள் ஆகியவைகள் பாதி விலையில் விநியோகிக்கப்பட்டு, 1979-80 ஆம் ஆண்டில் 652·34 ஹெக்டேரில் 2,16,568 கன்றுகள் நடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## நீலகிரி வேளாண்மை வளர்ச்சித் திட்டம்:

1979-80ஆம் ஆண்டில், விதைப்புக்குத் தேவையான 600.00 டன் உருளைக் கிழங்கும் 1,892 கிலோ காய்கறி விதைகளும் (முட்டைக்கோஸ், கேரட், பட்டாணி) நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

## சிறுமலைப் பகுதியில் பெரிய பழத்தோட்டம் அமைத்தல்:

1980-81ஆம் ஆண்டில் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒரு மிகப் பெரிய பழத் தோட்டம் மதுரை மாவட்டம், திண்டுக்கல் பகுதியிலுள்ள சிறுமலையில் 202.34 ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பளவில் ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும். அந்த மிகப்பெரிய பழத்தோட்டத்தில் வாழை, கொய்யா, எலுமிச்சை, அன்னாசி, மா, பலா, மாண்டரின் ஆரஞ்சு ஆகிய பழக் கன்றுகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு அதிக அளவில் விநியோகம் செய்யப்படும்.

## விதைச் சான்றிதழ்:

ஒரு நல்ல பயிரைச் சாகுபடி செய்ய தூய்மையானதும் உயிருள்ளதுமான விதையே அடிப்படையாகும். இனத் தூய்மை மற்றும் நல்ல முளைப்புத் திறனும், நோயினால் தாக்கப்பட்ட விதைகள் களைவிதைகள் இல்லாமலிருத்தல் போன்ற நல்ல தன்மைகள் கொண்ட விதைகளைப் பயன்படுத்தினால் உயர் விளைச்சல் தரவல்ல பயிர் உருவாகிறது. விவசாயிகளுக்கு இத்தகைய தன்மைகள் நிறைந்த விதைகளை வழங்குதல் அவசியம். விதை சான்றிதழ் மூலம் இனத்தூய்மை கொண்டதும், நோய்கள், களைச் செடிகள் இல்லாத நல்ல விதைகளைப் பெற முடிகிறது. கலப்புக் கதிர்கள் மற்றும் நோய் தாக்கப்பட்ட கதிர்கள் இல்லாமல் இருக்க, பயிர்களைப் பார்வையிடுதல், அறுவடை மற்றும் அறுவடைக்குப்பின் கலப்பு ஏற்படாமல் கண்காணித்தல், விதைகளிலிருந்து குப்பைக் கூளங்கள் போன்றவைகளை அகற்ற எடுக்கும் நடவடிக்கைகளை கண்காணித்தல், முளைப்புத் திறனைச் சோதனை செய்தல், எல்லாம் சரிபார்த்தப்பின் சான்றிதழ் வழங்குதல் போன்ற பல கட்டங்கள் விதைச் சான்றிதழ் வழங்குதலில் அடங்கியுள்ளன.



விதைச் சான்றிதழ் செய்யும் முகமை அமைப்பு 1970ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையின் ஒரு பிரிவாக துவங்கப்பட்டது. விதைகள் சட்டத்தின்படி சான்றிதழ் பெறுவது விரும்பிப் பெறுவதாக இருப்பினும், வேளாண்மைத் துறையின் இடைவிடா முயற்சியின் மூலம் வேளாண்குடி மக்கள் சான்றிதழ் வழங்கப்பட்ட விதைகளைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்பட்டுள்ளார்கள். ஆரம்ப காலத்தில் வீரிய ஒட்டு, சிறு தானியங்களில் கவனம் செலுத்தப்பட்டு, பின் படிப்படியாக நெல் மற்றும் சிறு தானியங்களும், சான்று வரையின் கீழ் கொண்டு வரப்பட்டன. 1970-71 ஆம் ஆண்டில் சான்றுவரை செய்யப்பட்ட 6,125 ஏக்கர் பரப்பு 1979-80ஆம் ஆண்டில் 31,763 ஏக்கர்களாக உயர்ந்தது. அவ்வாறே, 1970-71 ஆம் ஆண்டில் சான்றிதழ் பெறப்பட்ட விதைகளின் அளவு 130 டன்களிலிருந்து 1979-80ஆம் ஆண்டில் 8,245 டன்களாக உயர்ந்தது. சான்றுரைக்கான பரப்பளவு அதிகமானதாலும் மேலும் விதைச் சான்றிதழ் செய்யப்படும் முகமை விதை உற்பத்தி செய்யும் பிரிவிலிருந்து தனித்தியங்க வேண்டும் என்ற காரணத்தினாலும், சென்ற ஆண்டு அப்போதிருந்த வேளாண்மை மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சட்டமன்றத்தில் அளித்த உறுதிமொழிக்கிணங்க "தனித்தியங்கும் விதைச் சான்றிதழ் இயக்கம்" துவங்கப்பட்டது. தனித்தியங்கும் விதைச்சான்றிதழ் இயக்கம் 24-10-1979 முதல் கோயம்புத்தூரை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகிறது. 1.11.1979 முதல் வேளாண்மைத் துறையின் விதைச் சான்றிதழ் முகவர் அமைப்பு இந்தத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது.

தனியானதொரு விதைச் சான்றிதழ் துறை அமைக்கப்பட்டதால் சான்றிதழ் செய்யப்படும் பரப்பளவை அதிகமாக்கவும், சான்றிதழ் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் முடியும். சான்றிதழ் அளிக்கப்படும் பரப்பளவை அதிகரிப்பது ஒரு குறிப்பிட்ட அளவிற்குத்தான் இயலும். அரசு விதைப் பண்ணைகளில் பயிர் செய்யப்படும் எல்லா பயிர்களுமே சான்றிதழின் கீழ் கொண்டு வரப்பட்டுவிட்டன. வேளாண்மைத் துறை, சான்றிதழ் பெற்ற நெல், மற்றும் சிறுதானிய விதைகளையே கொள்முதல் செய்கின்றது. வேளாண்மைத் துறையினால் கொள்முதல் செய்யப்படும் எல்லா ஒட்டுவகைப் பருத்தி விதைகளும், மற்ற பருத்தி விதைகளில் பெருமளவு சான்றிதழ் பெற்றவை ஆகும். எண்ணெய் வித்துக்கள், பயறுவகைகள், காய்கறிவகைகள் ஆகியவைகளை \ அதிக பரப்பளவில் பயிரிட வாய்ப்புகள் உள்ளன. இந்த வகை பயிர்களில் போதுமான ஆதார விதைகள், அடிப்படை விதைகள் கிடைக்காமை இதுவரை ஒரு தடையாக இருந்து வந்துள்ளது. நெல், சிறுதானியங்கள், பருத்தி போன்றவைகளில் உள்ள ஊக்குவிப்புகள் இல்லாமல் இருப்பதும் ஒரு காரணமாகும். இந்த குறைபாடுகள் இருப்பினும், இயன்ற அளவு அதிக பரப்பை சான்றிதழ் செய்ய முயற்சிகள் எடுக்கப்படும்.

உழவர் பயிற்சி நிலையங்கள் போன்ற நிறுவனங்களைப் பயன்படுத்தி, இந்த தொழில் நுட்பத்தை மேலும் பல விவசாயிகளுக்குக் கற்றுத்தர நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1980–81 ஆம் ஆண்டில் விதைச் சான்றிதழ் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள குறியீட்டளவு பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| நெல் | 6,000 | ஹெக்டேர் |
| சிறுதானிய வகைகள் | 800 | ஹெக்டேர் |
| சிறுதானிய ஒட்டு ரக வகைகள் | 2,000 | ஹெக்டேர் |
| பருத்தி | 1,200 | ஹெக்டேர் |
| வீரிய பருத்தி | 280 | ஹெக்டேர் |
| பிற பயிர் | 2,520 | ஹெக்டேர் |
| மொத்தம் .. | 12,800 | ஹெக்டேர் |



**வேளாண்மை விளைபொருள் விற்பனை:**

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு வேளாண்மை விளைபொருள் விற்பனைத்துறை ஏற்படுத்தப்பட்ட பின்பு, எல்லா வகையிலும் விற்பனைக் குழுக்களின் செயல்முறையில் நிலையான வளர்ச்சிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே இருந்த சிக்கலான நிலைமைகள் நீக்கப்பட்டு புதிய உத்வேகத்துடன் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பணி ஊக்குவிக்கப்பட்டுள்ளது. விற்பனைக் குழுக்களின் பணிகள் சீரமைக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்படவும் விவசாயிகளின் பொருளாதார நிலைமையை உயர்த்த தேவையான திட்டங்கள் தயாரிக்கப்படவும் பலவகையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்:**

இந்த குறுகிய கால அளவிற்குள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை 140-லிருந்து துணை விற்பனைக் கூடங்கள் உட்பட 230 ஆக உயர்ந்துள்ளது. விற்பனையாளர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் நல்ல வசதிகளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற நோக்கத்துடன் கட்டிடங்கள் கட்டும் பணியும் நிலம் வாங்கும் பணியும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

1979-80 ஆம் ஆண்டில் மத்திய அரசு 25 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை மேம்படுத்த முதல் தவணையாக ரூ. 25 இலட்சம் வழங்கியது. இதன்மூலம் 25 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அலுவலகம், கிடங்கு, ஏல மேடை மற்றும் தண்ணீர் மற்றும் கழிவிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இந்த ஆண்டிலும் மத்திய அரசு 9 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை மேம்படுத்த ரூ.10.50 இலட்சம் வழங்கியுள்ளன. இதில் முதல் தவணையாக ரூ. 7.50. இலட்சம் அந்தந்த விற்பனைக் குழுக்களுக்கு இந்த ஆண்டு வழங்கப்பட உள்ளது.

**தேசிய கிராமக் கிடங்குகள் திட்டம்:**

விவசாயிகள் தங்கள் பொருட்களைச் சேமித்து வைப்பதற்காக கிராமப்புறங்களில் கிடங்குகள் கட்ட மத்திய அரசு ஒரு திட்டம் தயாரித்துள்ளது. இந்தக் கிடங்குகள் பொருட்களைச் சேமித்து வைக்க உதவுவதோடன்றி, விவசாயிகள் தங்கள் பொருட்கள் மீது வங்கிகளின் மூலம் கடன் பெறுவதற்கும் வழி

செய்கிறது. மேலும் இது குறைந்த விலையில் பொருட்களை விற்கும் நிலையையும் தவிர்க்கிறது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவில் மத்திய அரசு 25 சதவிகிதத் தொகையை மானியமாகவும், 25 சதவிகிதத்தை மாநில அரசு மானியமாகவும் வழங்கும். மீதமுள்ள 50 சதவிகிதத் தொகையை வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற வேண்டும். இத் திட்டத்தின் கீழ் 75 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ. 337.38 இலட்சம் செலவில் கிடங்குகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. இந்த ஆண்டு முதல் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

**உலக வங்கி நிதி உதவி:**

இம்மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை மேம்படுத்த உலக வங்கி மூலம் ரூ. 102.11 கோடி நிதி உதவி பெறுவதற்காக ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டம்:**

1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவுகள் வேளாண்மை விற்பனை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது. விற்பனைக் குழுக்கள் இச்சட்டத்தின் மூலம் நிறுவப் பட்டவைகள் ஆகும். இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொழுது ஏற்பட்ட சில குறைகளை நீக்க வேண்டி ஒருங்கிணைந்த சட்டத் திருத்தங்கள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த வரைவு சட்டத் திருத்தம் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப் பப்பட்டுள்ளது, மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது.

வேளாண்மை விற்பனைத்துறை கீழ்க்கண்ட திட்டங்களைச் செயற்படுத்துகிறது:—

**வணிக முறைத் தரம் பிரிப்புத் திட்டம்:**

தரம் பிரிக்கப்பட்டதன் மூலம் விளை பொருள்களுக்கு நல்ல விலை கிடைத்து விவசாயிகள் நன்மை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழகமெங்கும் 50 வணிகமுறைத்



தரம் பிரிப்பு நிலையங்கள் செயல்படுகின்றன. இந்த நிலையங்களில் கடந்த ஆண்டு 1,57,614 டன் வேளாண்மை விளை பொருள்களும் 61.54 இலட்சம் பழங்களும் தரம் பிரிக் கப்பட்டன. 1980—81 ஆம் ஆண்டில் மேலும் குறியீட்டை உயர்த்தி விவசாயிகள் பயன் பெறும் வகையில் இந்தப் பணியை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதாலும் எண்ணற்ற விவசாயிகள் இத்திட்டத்தில் ஊக்கம் செலுத்துவதாலும் மேலும் 25 வணிக முறை விற்பனை நிலையங்களை நிறுவ அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நடப்பு ஆண்டிலிருந்து இந்நிலையங்கள் செயல்படத் துவங்கும்.

**வேளாண்மை விற்பனை மற்றும் தரக்கட்டுப்பாடு நெல் மற்றும் எண்ணெய் தரம்பிரிப்பு ஆய்வுக்கூடங்கள்:—**

உணவுப் பொருட்களில் கலப்படத்தைத் தடுக்கவும் பொது மக்களுக்கு தரமான கலப்படமற்ற சுத்தமான பொருட்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் இத்திட்டம் செயல் படுகிறது. தற்பொழுது தமிழகத்தில் 20 இடங்களில் தன்னிறைவுடன் அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுக் கூடங்களில் கடந்த ஆண்டு 41,46,210 முட்டைகளும் 26,13,500 பழங்களும் மற்றும் 87,346 குவிண்டால் நெய் மற்றும் எண்ணெய் பொருட்களும் 1,84,912 குவிண்டால் வேளாண்மை விளை பொருள்களும் தரம் பிரிக்கப்பட்டன. மேலும் கடந்த ஆண்டில் 95 புதிய தரம் பிரிப்பு வணிகர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நடப்பு ஆண்டில், அதிக அளவில் பொருட்களைத் தரம் பிரிக்கவும் இந்த ஆய்வுக் கூடங்களின் வருவாயைப் பெருக்கவும் ஆய்வுக் கூடங்களின் பணியைத் தரம் பிரிப்பு வணிகர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளும் வகையில் வணிகர்களை மிகுந்த அளவில் ஈடுபடுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் 10 இடங்களில் அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் நிறுவுவதற்கும் ஏற்கனவே திருப்பூர், கரூர், திருநெல் வேலி விருதுநகர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் செயல் படும் ஆய்வுக் கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பருத்தி தரம் பிரிக்கும் நிலையங்கள்.

பருத்தி விற்பனைக்கு வரும் இடங்களிலும், உற்பத்தியாகும் இடங்களிலும் பருத்தி தரம் பிரித்துக் காண்பித்து விவசாயிகள் தங்கள் பருத்தியின் தரத்தை உணர்ந்து இலாபகரமான விலைக்குப் பருத்தியை விற்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்பொழுது தமிழகத்தில் 10 இடங்களில் பருத்தி தரம் பிரிக்கும் நிலையங்கள் உள்ளன. மத்திய அரசுச் சார்புத் திட்டத்தின் கீழ் 7 நிலையங்களும் தேனி, திருப்பூர், இராஜபாளையம் ஆகிய 3 இடங்களில் உள்ள நிலையங்கள் மாநில அரசுத் திட்டமாகவும் செயல்படுத்தப் படுகின்றன.

## பயிற்சி நிலையம் :

இத்துறையைச் சார்ந்த வேளாண்மை உதவியாளர்களுக்கு வேளாண்மைப் பொருட்களை அக்மார்க் முறையிலும் வணிக முறையிலும் தரம் பிரிப்பது பற்றிப் பயிற்சி அளிக்க இந்தப் பயிற்சி நிலையம் 1-7-74-ல்துவக்கப்பட்டது. விற்பனைக் கூடங்களுக்கு வரும் பொருட்களைத் தரம் பிரிக்கவும், விவசாயிகளுக்குத் தரம் பிரிப்பது பற்றிய நுணுக்கங்களைப் போதிக்கவும் இப்பயிற்சி வழி வகை செய்கிறது. இத்திட்டத்திற்கான குறியீட்டின்படி ஆண்டொன்றுக்கு 60 பணியாளர்கள் பயிற்சி பெற வேண்டும். 1980–81 ஆம் ஆண்டில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்கள், மற்றும் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கும் இப்பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## விற்பனைத்துறையில் விரிவாக்கம்:

1980–81 ஆம் ஆண்டில் வேளாண்மை விற்பனைத் துறையை விரிவுபடுத்தும் வகையில், கூடுதல் பணியாளர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## உற்பத்தி முதல் விற்பனைவரை ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துத்திட்டம்

ஒரு ஹெக்டேருக்கான எண்ணெய் வித்து மகசூலில், தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தையும், உற்பத்தியை பொறுத்த வரை இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது. தமிழ்நாட்டில் 12.10 இலட்சம் ஹெக்டேர் நிலத்தில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படுகின்றது. இதில் 11.5 இலட்சம் டன் உற்பத்தியாகு



மென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் வித்துக்களின் மதிப்பு ரூ. 200 கோடியாகும். விளைவிக்கப்படும் எண்ணெய் வித்துக்களில் நிலக்கடலை மற்றும் எள், ஆமணக்கு முதலியவை முக்கிய இடம் வகிக்கின்றன. இந்த எண்ணெய் வித்துக்கள் 60 சதவிகிதம் மானாவாரிப் பயிராகப்/பயிரிடப் படுகின்றன. எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு ஒரு தன்னிறைவு பெற்ற மாநிலமாக இருந்தாலும் இங்கு விளையும் எண்ணெய் வித்துக்களில் ஒரு பகுதி அண்டை மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 60,000 டன்னிலிருந்து 80,000 டன் வரை பற்றாக் குறையாக உள்ளது. மேலும் வளர்ந்து வரும் எண்ணெய் வித்துக்களின் தேவைக்கேற்ப இந்தப் பற்றாக் குறை மேலும் ஒரு இலட்சம் டன்னாக உயரக் கூடுமென மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே மைய அரசின் ஏற்பாட்டின்படி, குஜராத் மாநிலம் ஆனந்தில் உள்ள தேசிய பால் பெருக்குக் குழு, எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாவர எண்ணெய் போன்றவைகளின் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைக் களைவதற்கும், விலைவாசிகளில் அடிக்கடி கடுமையான ஏற்றத் தாழ்வு ஏற்படுவதைத் தடுப்பதற்கும், அது ஏற்கெனவே கிராம அடிப்படையில் ஏற்படுத்தி உள்ள 5,000 பால் கூட்டுறவு சங்கங்களை நிருவகித்துப் பெற்ற அனுபவத்தின் பயனாக ஒரு திட்டத்தைத் தீட்டியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய பணி சுமார் 3.50 இலட்சம் எண்ணெய் வித்து உற்பத்தியாளர்களைக் கூட்டுறவு இயக்க முறையில் ஒருங்கிணைத்தல் ஆகும். இம்மாதிரியான ஒரு திட்டத்தைத் தமிழ் நாட்டில் ஒரு குறிப்பிட்ட சில மாவட்டங்களில் செயல்படுத்துவதற்கு செயற்குறிப்பொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. ஒரே ஒரு மாவட்டத்தில் நிலக்கடலையைப் பெருக்குவதற்கு முன்னோடியாக இந்தத் திட்டம் உள்ளது. எண்ணெய் வித்துக்களைத் தமிழ்நாட்டில் பெருக்குவதற்குத் தகுந்த ஏற்றமிகு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மேற்சொன்ன திட்டக் குறிப்பின் முக்கிய பரிந்துரைகளில் ஒன்று இதற்கென தனியாக ஒரு எண்ணெய் வித்து இயக்ககம் தோற்றுவித்தல் என்பதாகும். இந்தத் திட்டக்குறிப்பு தேசிய பால்பெருக்குக் குழுவிற்கு அதனுடைய கருத்தினை அறிவதற்காக அனுப்பப் பட்டுள்ளது.

### கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம்

கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கம் சர்க்கரை ஆலைப் பகுதியைச் சுற்றிலுமுள்ள கரும்பினைச் சுலபமாகவும், துரிதமாகவும் ஏற்றிக்கொண்டு வரப் போக்குவரத்துக்கான புதிய சாலைகள் அமைப்பதும் மற்றும் ஏற்கனவே உள்ள பழைய சாலைகளைச் சீரமைத்தலும் ஆகும். 5—வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 500 இலட்சத்தில் சாலைகள் அமைக்க ஒரு திட்டம் தீட்டப்பட்டு, நிதி நிலை நெருக்கடி காரணமாக நிதி ஒதுக்கீடு ரூ.309.84 இலட்சமாகக் குறைக்கப்பட்டு நான்கு ஆண்டு காலத்தில் (1974–75-லிருந்து 1977–78 வரை) இத்தொகை கரும்புச் சாலை வேலைகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது. அதற்கடுத்த ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை விவரம் வருமாறு:—

| ஆண்டு. | ரூ. இலட்சத்தில். |
|---|---|
| 1978–79 | 109.92 |
| 1979–80 | 150.00 |

1980–81 ம் ஆண்டிற்காக ரூ. 150 லட்சம் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

1979–80-ஆம் ஆண்டில் அடைந்த சாதனை கீழே தரப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | சாலை அமைப்பு .. | 55.40 கி. மீ. |
| 2. | சரளைக்கல் பரப்புதல் | 59.57 கி.மீ. |
| 3. | தார்போடுதல் .. | 66.16 கி.மீ. |
| 4. | பாலங்கள் .. | 6 |
| 5. | குறுக்கு வடிகால்கள்.. | 184 |

1980–81 ஆம் ஆண்டில் மொத்தம் 14 கரும்புச் சாலைகள் ரூ. 162.55 இலட்சத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது மேலும், மூலத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதில் ரூ. 13 கோடி செலவில் கரும்புச் சாலைகள் அமைக்கும் வேலையைப் படிப்படியாக 1981–82-லிருந்து 1984-85 ஆம் ஆண்டுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



### வேளாண்மை மறுநிதி மற்றும் மேம்பாட்டுக் கழக உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறுபாசனமல்லாத திட்டங்கள்

தமிழ்நாட்டில் ஏற்கனவே அதிக அளவில் நிலநீர் அலகுகள் பயன்படுத்தப்பட்டதையொட்டி மேலும் பல சிறுபாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறைந்தமையால், பிரதம நிலவள வங்கிகளின் செயல்முறைகளை விரிவாக்கும் பொருட்டு வேளாண்மை மறுநிதி மற்றும் மேம்பாட்டுக்கழக உதவியுடன் செயல்படுத்துவதற்காகச் சிறுபாசனத் திட்டங்கள் அல்லாத தோட்டப் பயிர்களான காப்பி, தேயிலை, ரப்பர், கோக்கோ, கிராம்பு, தென்னை, மா மற்றும் திராட்சை போன்றவைகளைச் சாகுபடி செய்வதற்கான திட்டங்களும், மற்றும் பலநோக்குத் திட்டங்களான பால் பண்ணைத்திட்டம், ஆடு வளர்ப்புத் திட்டம், கோழி வளர்ப்புத் திட்டம் மற்றும் கட்டை வண்டிகள் வழங்குதல் போன்ற திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன. விவசாயிகள் அதிக வருமானம் பெறும் பொருட்டு தோட்டப் பயிர்கள் சாகுபடிக்கான திட்டங்களும், விவசாய வேலைகள் இல்லாத இதர காலங்களில் பயன் பெறும் பொருட்டு பல நோக்குத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல நோக்குத் திட்டங்களின்கீழ் தொடக்கத்திலிருந்து இதுவரை 456.56 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1979–80–ல் 165.67 இலட்சம் ரூபாய் அளவில் 25 சிறுபாசனமல்லாத திட்டங்கட்கு வேளாண்மை மறுநிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. 1979–80–ல் மட்டும் சிறுபாசனமல்லாத திட்டங்களின் கீழ் 189.63 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 1,529.00 இலட்ச ரூபாய் அளவில் 65 சிறுபாசனமல்லாத பல நோக்குத் திட்டங்கள் செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

1980–81-ல் (31-5-1980 வரை) வேளாண்மை மறுநிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தால், 11.81 இலட்சம் ரூபாய் அளவில் 3 சிறுபாசனமல்லாத திட்டங்களுக்கு ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. இவ்வாண்டில் 31-5-1980 வரை 19.82 இலட்சம் ரூபாய் அளவில் சிறுபாசனமல்லாத திட்டங்களின்கீழ் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

நடைமுறையில் இருந்து வரும் திட்டங்கள் தவிர, 1,414.10 இலட்சம் ரூபாய் அளவில் 40 புதிய திட்டங்கள் தற்போது பல்வேறு நிலைகளில் தயாரிப்பில் இருந்து வருகின்றன. இத்

திட்டங்களுக்கு 1980-81-ல் விவசாய மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டங்கள் ஒப்புதல் கிடைத்தவுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டங்களின்கீழ் 1980-81-ல் 550 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## கழிவுநீர் உபயோகத் திட்டம்.

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள கழிவு நீரை உரத்திற்காகப் பயன்படுத்துவது, நகர கம்போஸ்ட் உரத்திட்டத்தின் ஓர் பகுதியாகும். இத்திட்டத்தில் வடிகால் முறையை மாற்றியமைத்தல் அல்லது வடிகால்கள் கட்டுதல், கழிவுநீரைச் சேகரித்துக் கழிவு நீர்ப் பண்ணையில் நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படுத்துதல் ஆகியவை அடங்கும். தற்போது 22 உள்ளாட்சி நிறுவனங்கள் கழிவு நீர்ப் பண்ணைகளை நடத்தி வருகின்றன.

கழிவு நீர்ப்பண்ணைகளில் புல் மற்றும் இதர பயிர்கள் பயிராகின்றன. இப்பண்ணைகளை முறைப்படி பராமரிக்க உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கழிவு நீர்ப்பண்ணைகளில் வேளாண்மைக்குப் பயன்படும் மொத்தப் பரப்பு, புல் உற்பத்தி, இதன் மூலம் நகராட்சிகள் பெறும் வருவாய், உற்பத்தி செய்த கலவை உரத்தின் மொத்த அளவு முதலிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| (1) | புல் பயிரிடப்படும் மொத்தப் பரப்பளவு. | 477.60 ஹெக்டேர் |
| (2) | பயிராகும் புல்லின் மொத்த அளவு. | 58,993 டன் |
| (3) | நகராட்சிகள் பெறும் வருவாய். | ரூ. 30,54,049 |
| (4) | நகராட்சிகளின் ஆய்வாளர் கட்டுப்பாட்டிலுள்ள நகராட்சிகளும், நகரியங்களும் உற்பத்தி செய்த மொத்தக் கலவை உரத்தின் அளவு. | 3.65 இலட்சம் டன். |



கழிவு நீர் உபயோகத் திட்டத்தை 10 நிலையங்களில் செயல்படுத்தும் வகையில் மத்திய அரசு ரூ. 1,32,18,950 செலவில் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த அனுமதி அளித்திருந்தது அதில் 33 சதவீதமான ரூ. 43,62,253.50, மூலதனச் செலவில் மானியத் தொகையாகும். இதில் ரூ. 41,22,955.32 மத்திய அரசால் கொடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தேசீய வளர்ச்சி மன்றம் எடுத்த முடிவின்படி, உள்ளூர் உர அபிவிருத்தி குறித்த மத்திய திட்டத்தையும், அதற்குரிய நிதியையும், மத்திய அரசுத் துறையிடமிருந்து மாநில அரசுத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மத்திய அரசு தற்போது தெரிவித்துள்ளது. எனவே, எஞ்சிய தொகை 2,39,298.18 ரூபாயை மாநில நிதியிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு, அதாவது, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் நகராட்சிகளுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

1978-79ஆம் ஆண்டிலிருந்து இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறு உழவர்கள், குறுநில உழவர்கள், சிறு குத்தகைதாரர்கள், வேளாண் தொழிலாளர்கள், ஊரக கைவினைஞர்கள், அரிசனங்கள், பழங்குடியினர் அடங்கிய நலிந்த நிலையிலுள்ள எளியவர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் குறிப்பிட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்படுவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

தமிழகத்தில் 161 வட்டாரங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த இந்திய அரசு இணங்கியது. இந்த 161 வட்டாரங்களில், 30 வட்டாரங்கள் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் செயல்படும் இடங்களிலும், 100 வட்டாரங்கள் சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் இடங்களிலும் எஞ்சிய 31 வட்டாரங்கள் மேற்கூறிய தனித்திட்டங்கள் செயல்படாத இடங்களிலும் அமைந்தவை ஆகும். 1979-80 ஆம் ஆண்டில் வறட்சிப் பகுதிகள் திட்டம், சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற தனித் திட்டங்கள் செயல்படாத 26 வட்டாரங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்திட இந்திய

அரசு முன்வந்துள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் மேற்கொண்டு 25 வட்டாரங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்திட இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1979-80 ஆம் ஆண்டிலிருந்து 50:50 என்ற அடிப்படையில் மைய அரசும் மாநில அரசும் இத்திட்டத்திற்காகும் செலவினை ஏற்கும். தலைமைச் செயலகத்திலுள்ள வேளாண்மைத் துறையே தொடர்ந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நேரடிப் பொறுப்பினை ஏற்கும். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளர்கள், திட்ட அலுவலர்கள் தொடர்புடைய தொழில் நுட்ப அலுவலர்களின் உதவியுடனும் வட்டார அளவில் வட்டார வளர்ச்சி அலுவலரும் அவரது பணியாளர்களும் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பினைத் தொடர்ந்து ஏற்பர்.

இந்திய அரசு ''ஊரக இளைஞர் தன் முயற்சியால் வேலை பெறப் பயிற்சித் திட்டம்'' என்ற ஒரு புதிய தேசிய திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. ஊரக இளைஞர்களுக்குப் பல்வேறு துறையில் பயிற்சி அளித்து அவர்களே வாழ்க்கையை நடத்திக் கொள்ளும் வகையிலும் தொழில் நடத்த வழி வகுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகை வழங்கவும், பயிற்றுநர்களுக்கு ஊதியம் அளிக்கவும், பயிற்சிக்கான மூலப் பொருட்கள் வாங்கவும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நிறைவேறும் பகுதிகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்தும், இதர பகுதிகளில் ஊரக இளைஞர் தன் முயற்சியால் வேலை பெறும் பயிற்சித் திட்ட நிதியிலிருந்தும் இதற்காகும் செலவுகள் மேற்கொள்ளப்படும்.

இத் திட்டத்திற்கு மைய அரசு 31-3-80 வரை ரூபாய் 676.25 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. முந்தைய ஆண்டு கையிருப்புத் தொகையையும் சேர்த்து 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 697.99 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. மைய அரசு இத் திட்டத்தின்கீழ் 1980-81 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1,227.00 இலட்சம் ஒதுக்கத் தீர்மானித்துள்ளது.

## சிறு உழவர் மேம்பாட்டு முகமை

உயர் விளைச்சல் இரகங்கள், உரமிடுதல், பலபயிர் சாகுபடி முறை ஆகியவற்றில் அடைந்துள்ள புதிய நுட்பத்தை சிறு உழவர் குறுநில உழவர் ஆகியோரிடை பரப்பி,



அவர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதே இந்த முகமைகளின் நோக்கமாகும். எங்கெங்கு இயலுமோ அங்கெல்லாம் பாசன வசதிகளை மேம்படுத்துவதன்வாயிலாகவும், கடன் உதவித் தொகை மூலம் இடு பொருட்கள், வேளாண் கருவிகள் வழங்குவதற்குத் தேவையான உதவி ஆகியவைகளுக்கு வகை செய்வதன் வாயிலாகவும் உற்பத்தித் திறனை மேலும் கூட்டிட முயற்சிக்கப்படுகிறது. கால்நடைகள் வாங்க கடனுதவி மானியம் அளிக்கப்படுகிறது. அவற்றை நன்முறையில் வளர்த்திடத் தொழுவம் அமைக்கவும், மருத்துவ வசதி அளிக்கவும், பொருட்களை விற்பனை செய்யவும் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இதனால் பால் பண்ணை போன்ற துணைத் தொழில்கள் ஓங்கி வளர இத்திட்டத்தில் வகை செய்யப்படுகிறது. இராமநாதபுரம், தருமபுரி, சென்னை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டு முதல் 50:50 என்ற அடிப்படையில் இத்திட்டத்திற்காகும் செலவினை இந்திய அரசும், மாநில அரசும் ஏற்கும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான விரிவாக்கப் பணியாளர்களுக்கான ஊதிய தொகைக்கு மாநில அரசு வகை செய்கிறது. இத்திட்டம் தற்சமயம் 167 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்திற்கு மைய அரசு 31-3-80 முடிய ரூபாய் 314.98 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இவற்றில் 1979-80 ஆம் ஆண்டில் 309.28 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. மைய அரசு, இத்திட்டத்தின்கீழ் 1980-81 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 417.50 இலட்சம் ஒதுக்கத் தீர்மானித்துள்ளது.

## இராமநாதபுரம் தருமபுரி மாவட்டங்களுக்கான வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம்.

இத்திட்டம் இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல அபிவிருத்திப் பணிகள் மூலம் நீண்ட காலமாக வறட்சித் தாக்குதலுக்கு உட்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதும், இப்பகுதிகளிலுள்ள பொது மக்களின், முக்கியமாக ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வறட்சித் தாக்குதலினால் இவர்களுக்கு ஏற்படும் நலிவை ஓரளவு குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கான செலவை மத்திய அரசும், மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

இந்த இரண்டு மாவட்டங்களிலும் 1974–75 முதல் 1978–79 முடிய செலவு செய்யப்பட்ட தொகை சுமார் ரூ. 1,286.48 இலட்சம் ஆகும். 1979–80 ஆம் ஆண்டு முதல் ஆறாவது ஐந்தாண்டு காலம் முடிய ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 720 இலட்சம் அளவில் ஒதுக்கீடு அமையும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த ஒதுக்கீடு வறட்சிக்குட்பட்ட இவ்விரு மாவட்டங்களிலுள்ள ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 15 இலட்சம் என்ற அடிப்படையில் இருக்கும். 1979–80 ஆம் ஆண்டிற்கு, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 318.694 இலட்சத்திற்கான திட்டங்களுக்கும், தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 304·53 இலட்சத்திற்கான திட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், தருமபுரி மாவட்டம், 16 வட்டாரங்களைக் கொண்டுள்ளதால் 1979–80 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தின் செலவை ரூ. 240 இலட்சம் அளவில் நிறுத்திக்கொள்ள உத்தேசிக்கப்பட்டது.

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரியில் ரூ. 175 இலட்சம் மதிப்பீட்டில் பால்பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ 1979–80 ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இம்மாவட்டத்தில் பாம்பாற்றின் குறுக்கே மாரப்பட்டி என்னும் இடத்தில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது.

1980–81 ஆம் ஆண்டிற்கு ரூ. 661.80 இலட்சம் அளவில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், ரூ. 481.13 இலட்சம் அளவில் தருமபுரி மாவட்டத்திற்கும் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்ட வரைவுகள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடமிருந்தும், தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத் தலைவரிடமிருந்தும் வந்துள்ளன. 1980–81 ஆம் ஆண்டிற்கு அனுமதி வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டின், அளவு இத்திட்ட வரைவுக்கு மத்திய அரசு அளிக்கும் ஒப்புதலைப் பொறுத்து அமையும்.

## தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகம்.

தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகம் 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள்:—

வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்றவை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்;



உணவுப் பண்டங்களைப் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.

இந்நிறுவனத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம் ஆகும். இதில் ரூ. 350 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு, அதற்குரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு ரூ. 185 இலட்சமும், இந்திய அரசு ரூ. 165 இலட்சமும் செலுத்தியுள்ளது.

### 1979-80 ஆம் ஆண்டின் முக்கிய அம்சங்கள்.

**உர விற்பனை :**

சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் உற்பத்தி செய்யும் உரங்களை விற்பனை செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது. கடந்த மார்ச் 1980 வரை, இக்கழகம் 10,000 டன் அளவு உரங்களை விற்பனை செய்துள்ளது. 1980–81 ஆம் ஆண்டிற்கு 45,000 டன் அளவு உரத்தை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

### பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கான மூலப் பொருள்களைத் தயாரித்தல்.

நமது நாட்டில் உபயோகப்படுத்தப்படும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் மொத்த அளவில் தென்னிந்திய மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகியவை சுமார் 50 சதவீதம் அளவிற்குப் பயன்படுத்துகின்றன. இருந்த போதிலும் தென்னிந்தியாவில், வளர்ந்து வரும் உபயோகத்திற் கேற்ப பூச்சிக் கொல்லி மருந்துத் தொழில் வளர்ச்சியடைய வில்லை. இதனைக் கருத்தில் கொண்டு, நியாயமான விலையில் விவசாயிகளுக்குத் தேவைப்பட்ட சமயத்தில் தேவையான அளவு தரமான பூச்சிக்கொல்லி மருந்து கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, 'இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட்' என்ற இந்திய அரசுத் துறை நிறுவனத்தின் உதவியுடன் தென் மாநிலங்களின் வேளாண்மை தொழில் கழகங்கள் எல்லாம் சேர்ந்து 'சதர்ன் பெஸ்டிசைட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்' என்று புதியதொரு நிறுவனத்தை ஏற்படுத்தியுள்ளன.

தென்னிந்தியாவிலும் தேவைப்பட்ட வேறு எந்தப் பகுதியிலும், பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிலையும் அதன் சார்நிலைத் தொழிலையும், நீண்டகால அளவில்

[1980 ஜூலை 16

விரிவாக்கும் பொருட்டு இந்த ஐந்து நிறுவனங்கள் தங்களது மூலதனத்தை பயன்படுத்துவதே இந்த புதிய நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நிறுவனத்தில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகிய ரூ. 194.80 இலட்சம் கீழ்க்கண்டவாறு செலுத்தப்படும்.

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட் | 99.35 |
| 2. | ஆந்திர மாநில வேளாண் தொழிற் கழகம் | 34.45 |
| 3. | தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகம். | 26.00 |
| 4. | கர்நாடக மாநில வேளாண் தொழிற் கழகம். | 25.00 |
| 5. | கேரள மாநில வேளாண் தொழிற் கழகம். | 10.00 |
| | | 194.80 |

இதனுடைய முதலாவது உற்பத்திப்பிரிவு ஆந்திராவிலுள்ள சோலூர் என்ற இடத்தில் நிறுவப்பட்டுள்ளது; இந்நிறுவனம். முதலில் 'பென்சின் ஹெக்ஸாக்குளோரைடு' 26 சதவீதம் காமா என்ற மூலப்பொருளைத் தயாரிக்கும் இப்பிரிவு ஆண்டொன்றிக்கு 3,000 டன் தயாரிக்கும் திறனுடையது. 1981 ஆம் ஆண்டு மத்தியில் இத்தொழிற்சாலை தனது உற்பத்தியை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனுடைய உற்பத்தி நமது கழகத்திற்கு தேவையான பி.எச்.சி. மூலப்பொருள் கிடைக்க வழி செய்யும்.

**உதிரி பாகங்கள் விற்பனை :**

விவசாயிகளின் டிராக்டர்களை சரியாக பராமரித்து நல்ல நிலையில் வைத்திருக்கவும், நியாயமான விலையில் தேவைப்பட்ட அளவு தரமுள்ள உதிரிப்பாகங்களை சீராக விநியோகம் செய்ய வேண்டியதின் அவசியத்தை உள்ளிட்டும், இக்கழகம் உள்நாடு வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட உதிரி பாகங்களைத் தேவையான அளவில் இருப்பில் வைத்து அதனுடைய விற்பனை நிலையங்கள் வாயிலாக விநியோகம் செய்கின்றது. இப்பொழுது இக்கழகம் சென்னை, பொன்னேரி, மதுராந்தகம், திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, பண்ருட்டி, மாயூரம் கோயம்புத்தூர் முதலிய 10 இடங்களில் தனது விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது.



1980 ஜூலை 16]

1979–80 ஆம் ஆண்டிற்கான இக்கழகத்தின் உதிரிப் பாகங்களின் விற்பனை ரூ. 128.42 இலட்சமாகும். தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம், 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 175 இலட்சம் மதிப்புள்ள உதிரிப்பாகங்களை விற்பனை செய்ய உத்தேசித்துள்ளது.

உதிரி பாகங்களின் விற்பனையோடு மட்டுமல்லாமல், இக்கழகம் பல்வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட டிராக்டர் களையும் பவர் டில்லர்களையும் விற்பனை செய்து வருகின்றது. கடந்த 1979–80 ஆம் ஆண்டில் இக்கழகம் 46 டிராக்டர்களையும் 99 பவர் டில்லர்களையும் விற்பனை செய்துள்ளது. 1979–80 ஆம் ஆண்டிற்கு டிராக்டர், பவர் டில்லர் விற்பனை மூலம் ரூ.56.60 இலட்சம் மதிப்புள்ள விற்பனைக் குறியீட்டை எட்டியது.

**பூச்சிகொல்லி மருந்து தயாரிக்கும் திட்டம்.**

1972ஆம் ஆண்டு இக்கழகம் புகழ் பெற்ற பூச்சிக்கொல்லி மருந்துகளில் முக்கியமான பி எச்.சி. 10 சதவீதம், என்ட்ரின் 20 சதவீதம் இ.சி. போன்றவைகளை தயாரிக்க ஆரம்பித்தது. துவக்கத்தில் இந்த நிறுவனம் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தனியார் நிறுவனங்களின் உதவியால் தயாரித்து வந்தது. ஆனால் இப்பொழுது இந்நிறுவனம் ரூ. 9.79 இலட்சம் முதலீட்டில் அம்பத்தூரில் தனது சொந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தி யுள்ளது. இந்த தொழிற்சாலை தனது வர்த்தக அளவிலான உற்பத்தியை 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் ஆரம்பித்தது. பெருகிவரும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தேவையை ஈடு கட்ட ரூ. 4 இலட்சம் செலவில் தனது இரண்டாவது ஆலையை நிறுவியுள்ளது.

இக்கழகத்தினால் இந்திய தர நிர்ணயக் கழகத்தின் விதி முறைகளுக்குட்பட்ட, தரம் உயர்ந்த பூச்சிக்கொல்லி மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு இக்கழகத்தின் கிளைகள் மூலமும் வேளாண்மைத்துறை விற்பனைக் கூடங்கள் மூலமாகவும் விநியோகிக்கப்படுகின்றன.

[1980 ஜூலை 16

1978–79 ஆம் ஆண்டிலும் 1979–80 ஆம் ஆண்டிலும் விற்பனை செய்யப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1978–79 | | 1979–80 | |
|---|---|---|---|---|
| | அளவு | மதிப்பு (இலட்சம்) | அளவு | மதிப்பு (இலட்சம்) |
| | | ரூ. | | ரூ. |
| 1. மருந்து பொடி தயாரிப்பு. | 4,081 டன. | 35.50 | 2,005 டன். | 19.59 |
| 2. மருந்து திரவ தயாரிப்பு. | 11,910 லிட்டர். | 3.08 | 29,323 லிட்டர். | 11.40 |

1980–81 ஆம் ஆண்டிற்கு 9,000 டன் பொடி மருந்துகளையும், 2,000 லிட்டர் திரவ மருந்துகளையும் விற்பனைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய பூச்சிக்கொல்லி மருந்து கழகத்தின் பதிவுச் சான்றிதழ் கிடைத்தவுடன் பி.எச்.சி. 50 சதவீதம் W.D.P. டி.டி.டி. 50 சதவீதம், W.D.P., டி.டி.டி. 25 சதவீதம் ஈ. சி., எண்டோ சல்பான் 35 சதவீதம் ஈ. சி. போன்றவற்றை 1980–81 ஆம் ஆண்டில் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றுடன், இக்கழகம் ஹைதராபாத்தில் அமைந்துள்ள இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட்டின் தயாரிப்புகளான என்டோசல்பான் பி.எச்.சி. 50 சதவீதம் W.D.P. டி.டி.டி. 50 சதவீதம், மேலும் டி.டி.டி. 25 சதவீதம் போன்றவைகளை விற்பனை செய்து வருகின்றது. 1978–79 ஆம் ஆண்டில் அந்த நிறுவனத்தின் தயாரிப்புகள் ரூ. 20.62 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 3.17 இலட்சம் அளவிற்கு விற்பனைச் செய்யப்பட்டுள்ளது.

**மீன்பிடி வலைத் தயாரிப்புத் திட்டம் :**

மீன் பிடித்தலை நவீனமாக்கும் முயற்சியில் இயந்திரங்களின் மூலம் தயாரிக்கப்பட்ட வலைகளின் தேவையை ஈடுகட்டும் பொறுப்பை இக்கழகம் மேற்கொண்டுள்ளது. இதற்காக இக்கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலை உறுதிவாய்ந்த நைலான் நூலினாலும், பாலிஎதிலி நூலினாலும் ஆண்டொன்றிற்கு 60 டன் மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் திறன் வாய்ந்தது.



1980 ஜூலை 16]

மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் நான்கு இயந்திரங்களைக் கொண்ட இத்தொழிற்சாலை 1976 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் துவக்கப்பட்டது. இத்தொழிற்சாலையில் உற்பத்தித் திறனாகிய 50 டன்னிலிருந்து 60 டன்னாக உயர்த்தும் பொருட்டு, 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் மற்றொரு இயந்திரமும் வாங்கப்பட்டது. இக்கழகத்தினால் தயாரிக்கப்பட்ட மீன்பிடி வலைகள் அதனுடைய தரத்தாலும், விலையாலும் விற்பனையில் அதிக மதிப்பைப் பெற்றுள்ளன. மிக நுண்ணிய நைலான் வலையிலிருந்து மிகக் கெட்டியான நூல்களைக் கொண்ட மீன்பிடி வலைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

மேற்கூறியவற்றுடன் இக்கழகம், மீன்பிடி படகுகளுக்கு ஏற்பவும் மீன் வலைஞர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு வலைகளைத் தயாரித்து விற்பனை செய்வதிலும் முன்னோடியாக உள்ளது. இந்தியாவில் மீன்பிடி தொழில் தேவைகளை ஈடு கட்டுவதில் இக்கழகம் நல்ல மதிப்பை பெற்றுள்ளது.

மீன்பிடி வலைகளின் உற்பத்தி ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டே உள்ளது. இக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட மீன்பிடி வலைகளின் விபரம் வருமாறு :—

| விபரம். | 1976–77. | 1977–78. | 1978–79. | 1979–80 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. நைலான் மீன் பிடி வலைகள். (டன்னில்) | 4.4 | 12.00 | 11.5 | 6.99 |
| 2. பாலி எதிலின் வலைகள் | 2.1 | 6.5 | 7.5 | 9.5 |
| 3. தயாரிக்கப்பட்ட வலைகள். (எண்ணிக்கை) | | 24 | 35 | 25 |
| 4. மொத்த விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | 6.97 | 18.68 | 22.11 | 18.55 |
| 5. மொத்த லாபம் ,, | 3.07 | 7.84 | 10.16 | 6.10 |
| 6. நிகர லாபம் ,, | (—)0.55 | (+)3.36 | (+)2.09 | (+)1.39 |

**இலை புரதமாவுத் திட்டம் :**

இக்கழகம் இலைப் புரதமாவுத் தயாரிக்கும் தொழிற்சாலையை உடுமலைப் பேட்டையில் நிறுவியுள்ளது. இலைப் புரதமாவு லூசரின் என்ற புல் வகையின் மூலம் தயாரிக்கப்படுகின்றது. கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் தேவையான முக்கிய உணவாக இது தயாரிக்கப்பட்டு நல்லமுறையில் விற்பனை செய்யப்படுகின்றது. இது கடந்த 1978–79, 1979–80 ஆண்டுகளில்

முறையே ரூ. 1.45 இலட்சம், ரூ. 2.37 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 4.16 இலட்சம் மதிப்புள்ள 450 டன் அளவு இலைப் புரத்மாவு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**எண்ணெய் ஆலைத்தொகுதி, போச்சம்பள்ளி :**

இக்கழகத்தால் தருமபுரி மாவட்டத்தில் பிற்பட்ட பகுதியான போச்சம்பள்ளி என்னும் இடத்தில் ரூ. 56 இலட்சம் செலவில் நிறுவப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் ஆலைத்தொகுதி செப்டம்பர் 1978-ல் வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்கியது. இவ்வாலை நாள் ஒன்றுக்கு 50 டன் எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுக்கவும் 20 டன் எண்ணெயைச் சுத்திகரிக்கவும் 50 டன் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுக்கவும் திறன் கொண்டது. இக்கழகம் சூரியகாந்தி விதைக்காக விவசாயிகளுக்கு நல்ல விலை அளித்து விரிவான விளம்பரம் செய்து விரிவாக்கப் பணிகள் செய்தபோதிலும் போதிய அளவு சூரியகாந்திவிதை கிடைக்காததால் இவ்வாலையை அதன் முழுத்திறனுக்கு இயக்க இயலவில்லை. எனினும் முழுத் திறனையும் பயன்படுத்தும் வகையில் சாதகமான வணிக நிலை உள்ள காலங்களிலெல்லாம் கடலைப் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல், கடலை எண்ணெய் சுத்திகரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள இக்கழகம் தீவிர முயற்சிகள் எடுத்து வருகிறது. ''சனோலா'' என்ற வணிகப் பெயரில் விற்பனை செய்யப்படும் சூரியகாந்தி எண்ணெயும் ''கடோலா'' என்ற வணிகப் பெயரில் விற்பனை செய்யப்படும் கடலை எண்ணெயும் அங்காடியில் பெரிதும் வரவேற்கப்படுகின்றன.

**வருங்காலத் திட்டங்கள் :**

கீழ்க்காணும் திட்டங்கள் அதனுடைய வெவ்வேறு வகையான செயலாக்க நிலையில் உள்ளன :—

**புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள புணக்குளத்திலிருக்கும் தாவர எண்ணெய் தொழிற் தொகுதி :**

இக்கழகம் காதி கிராமத் தொழில் கழக வாரியத்தினரால் பட்டுக்கோட்டையில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட எண்ணெய் பிழிந்து எடுக்கும் தொழிற்கூடத்தை ஏற்றுக் கொண்டது. தொழிற்கூடம் அமையவிருக்கும் இடத்தினருகேயே மூலப்



பொருள் கிடைப்பதாலும், பிற்பட்ட மாவட்டங்களுக்கு அளிக்கப்படும் அரசுச் சலுகையைப் பெற வேண்டியும் இக்கழகம் இத்தொழிற்கூடம் நிறுவ வேண்டிய இடத்தைத் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டையிலிருந்து, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள புணக்குளம் என்ற இடத்திற்கு மாற்றிக் கொண்டது. இத்தொழிற்கூடம் நாளொன்றுக்கு 60 டன் பிண்ணாக்கிலிருந்து அல்லது 30 டன் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் திறன் கொண்டது. இயந்திரங்களை நிறுவும் பணியும், கட்டுமானப் பணியும் நடந்தேறி வருகின்றன.

**பழங்கள் பக்குவப்படுத்தும் ஆலை :**

தக்காளி, மாம்பழம், அன்னாசி ஆகியவற்றை பக்குவப் படுத்துவதற்காக பழங்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை மதுரை மாவட்டத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. தக்காளிச்சாறு, தக்காளிக் குழம்பு, மாம்பழக்கூழ், மாம்பழச் சாறு, மாம்பழத் துண்டுகள், அன்னாச்சிப் பழச்சாறு, அன்னாசிப் பழத் துண்டுகள் முதலியவை தயாரிக்கப்படும், இப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படும் வாய்ப்பினைப் பெற்றுள்ளன. தேசிய வர்த்தகக் கழகத்துடன் (State Trading Corporation) கூட்டு முயற்சியில் இத்தொழிற்சாலையை அமைக்கும் வாய்ப்புகள் பற்றி பரிசீலனை செய்யப்படுகின்றது.

**சவ்வரிசி ஆலை :**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கும் மரவள்ளிக் கிழங்குகளைப் பயன்படுத்தும் வகையில் நாள் ஒன்றுக்கு 5 டன்கள் உற்பத்தித் திறன் கொண்ட சவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இதற்குத் தேவையான முதலீடு ரூ. 15 இலட்சம் ஆகும். அவற்றுல் ரூ. 6 இலட்சம் முதல் ரூ. 8 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்களையும், சாதனங்களையும் இலவசமாக ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் கல்வி மற்றும் நிதி நிறுவனம் அளிக்கும். இது குறித்து ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் கல்வி மற்றும் நிதி நிறுவனம் மற்றும் மத்திய அரசின் உணவு மற்றும் ஊட்டக்குழு ஆகியவற்றுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது.

**தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணிக்கூட்டுறவு இணையம் :**

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக்கூட்டுறவு இணையம் (என்கோபெட்) 1972 ஆம் ஆண்டு ஒரு மாநிலக் கூட்டுறவு சங்கமாக அமைக்கப்பட்டது. வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் பணிக்கூட்டுறவு மையங்கள் 220-ம் மாவட்ட அளவிலான கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்கள் 12-ம் இந்த இணையத்தைச் சார்ந்துள்ள அங்கங்களாக பணிபுரிந்து வருகின்றன. இவ்விணையத்தின் முதன்மையான நோக்கங்கள் வருமாறு :—

1. (அ) டிராக்டர்கள், ஆயில் இஞ்சின்கள், தெளிப்பான்கள், விசைக்கலப்பைகள், பாறை துளைக்கும் கருவிகள் வாங்கி வாடகைக்கு விடுதல்;

(ஆ) விவசாய இயந்திரக் கருவிகளைப் பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்;

(இ) விவசாயத்திற்குத் தேவையான கருவிகள், உதிரிப் பொருட்கள், வேண்டிய விதை, உரம், பூச்சி மருந்து ஆகியவைகளை நியாயமான விலையில் நல்ல தரமாக வழங்குதல். ஆகிய சேவைகள் புரிவதற்காக, ஏற்படுத்தப்பட்டுள்ள இணையத்துடன் இணைக்கப்பட்ட மையங்களுக்கும், சங்கங்களுக்கும் தேவையான தொழில் நுட்ப ஆலோசனை, இதர உதவிகள் புரிதல்.

2. இணைக்கப்பட்ட சங்கங்களை மேற்பார்வையிடவும் அவைகளுக்கு அவ்வப்போது தேவைப்படும் ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் வழங்கவும், அவைகளின் பணிகளை ஒருங்கிணைத்து நல்லவகையில் செயல்படவும் செய்தல்.

இந்நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்குமூலதனம் ரூபாய் 100 இலட்சம். இதுவரை ரூபாய் 28.24 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு அதற்குரிய தொகை செலுத்தப் பட்டுள்ளது.

கடந்த 8 ஆண்டு காலத்தில் இந்த இணையம் ரூபாய்71 ·6 இலட்சம் இலாபம் அடைந்துள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன :—





1. விவசாய இயந்திரக் கருவிகள், சிறு உதிரிப்பொருட்கள், டீசல் எஞ்சின், மின்சார மோட்டார் பம்புசெட்டுகள், விசைத் தெளிப்பான்கள், மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை விவசாயிகளுக்குப் பல்வேறு திட்டங்களின்கீழ் மானிய உதவியுடன் வழங்கியது.

2. கிராமப்புற இளைஞர்களுக்கு டிராக்டர்கள், விசைத் தெளிப்பான்கள், ஆயில் எஞ்சின் மற்றும் விவசாய இயந்திரங்களைப் பராமரித்துப் பழுதுபார்த்தலில் தமிழக அரசு மற்றும் சிறு விவசாயிகள் மேம்பாட்டு அமைப்பு ஆகியவை அளித்த நிதி உதவியுடன், 12 மாவட்ட சங்கங்கள் மூலம் போதிய பயிற்சி அளித்தது.

3. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்கும் பயிர்க் கடன் பெறும் விவசாயிகளுக்குத்தேவையான உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றை வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுப் பணி மையங்கள் மூலம் மலிவான விலையில் வழங்கியது.

<u>கடந்தகாலப் பணிகள்</u>—

மின்வெட்டுக் காலத்தில், விவசாயிகள் நீர்ப்பாசன வசதியில் எவ்விதத் தடையுமின்றி பயிர் செய்ய இந்த இணையம் நிலவள வங்கிகள் வழங்கிய கடன் உதவி மூலம் விவசாயிகளுக்கு டீசல் எஞ்சின், பம்பு செட்டுகளை ஒரு சிறப்பான திட்டத்தின் கீழ் வழங்க முற்பட்டது. இவ்விணையம் 1973–74 முதல் 1976–77 ஆம் ஆண்டு வரை 18,973 தரமான டீசல் எஞ்சின் பம்புசெட்டுகளை மலிவான விலையில் வழங்கியது. இவ்விணையத்தின் மூலம் வழங்கப்பட்ட ஒவ்வொரு பம்புசெட்டுக்கும் ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை விவசாயிகளுக்கு அரசின் மானியம் கிடைத்தது. இவ்விணையத்தைச் சார்ந்த வட்டார வேளாண்மைக் கூட்டுறவுப் பணி மையங்களில் நியமிக்கப்பட்ட நிர்வாக இயக்குநர்களுக்கு டிராக்டர்கள் மற்றும் இதர இயந்திர விவசாயக் கருவிகளை உபயோகித்தல், பழுதுபார்த்தல், பராமரித்தல் ஆகியவைகளிலும், நிதி, நிர்வாகம், கணக்குகள் வைக்கும் முறைகள் குறித்தும் அரசு அளித்த நிதி உதவியுடன் ஒரு பயிற்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வகையில், இணையம், 225 நபர்களுக்குச் சென்னை மத்திய கூட்டுறவுப் பயிற்சிக் கழகத்திலும், 165 நபர்களுக்குப் பெங்களூரில் உள்ள ''எஸ்கார்ட்'' வேளாண்மை இயந்திரப் பயிற்சிக் கழகத்திலும், 190 நபர்களுக்குச் சென்னை

உற்பத்திச் சபையிலும், 1977–78-ல் பயிற்சி அளித்தது. 1975–76-ல் கிர்லாஸ்கர் டிராக்டர் விநியோகம் செய்தல் மேற்கொள்ளப்பட்டு 37 டிராக்டர்கள் வழங்கப்பட்டன. இணைக்கப்பட்ட சங்கங்கள் மூலம் 1979–80 வரை 1071 பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

## தற்போதைய பணிகள்

**ஒருமுகப்படுத்தும் திட்டம் —**

இத்திட்டத்தின்கீழ் தரமான டீசல் எஞ்சின் மற்றும் மின்சார மோட்டார் பம்புசெட்டுகள், அதன் உபகரணங்கள் ஆகியவை கட்டுப்பாடான விலையில் நிலவள வங்கி கடன்தாரர்களுக்கு இவ்விணையத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. 1979–80-ல் 1,461 டீசல் எஞ்சின் பம்புசெட்டுகளும், 497 மின்சார மோட்டார் பம்புசெட்டுகளும், 1,608 தெளிப்பான்களும் மற்றும் ரூ. 4,87 இலட்சம் மதிப்புள்ள நீர்ப்பாசனக் குழாய்கள் மற்றும் உபகரணங்கள் மலிவான விலையில் வழங்கப்பட்டுள்ளன.

**வாடகைக்கு விடும், மற்றும் பழுதுபார்க்கும் நிலையங்கள்—**

இவ்விணையத்தைச் சார்ந்துள்ள சங்கங்கள்/மையங்கள் மொத்தம் 226 டிராக்டர்களையும், 195 டிரெயிலர்களையும் 149 ஆயில் எஞ்சின்களையும் 314 விசைத் தெளிப்பான்களையும் 11 பாறை துளைக்கும் கருவிகளையும், ஒரு விசைக் கலப்பையையும் கொண்டு விவசாயிகளுக்குத் தனியார்களினால் வசூலிக்கப்படும் விகிதத்தை விடக் குறைவான தொகைக்கு வாடகைக்கு விடும் பணியினை மேற்கொண்டு வருகின்றன. சிறு விவசாயிகள் மேம்பாட்டு அமைப்பு அளித்த மானியமும் டிராக்டர் வாடகைக்கு விடும் திட்டத்திற்கு இம் மையங்களின் மூலம் அளிக்கப்படுகின்றது.

**டிராக்டர்களின் வேலை விவரங்கள் கீழ்வருமாறு :—**

| | ஆண்டு | வேலை செய்த மணிக் கணக்கு | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 1975–76 | 207904 | 51.00 |
| 2. | 1976–77 | 200626 | 50.00 |
| 3. | 1977–78 | 220146 | 55.00 |
| 4. | 1978–79 | 148098 | 37.00 |



1979–80ல் சுமார் ஒன்றரை இலட்சம் மணி நேரம் இந்த டிராக்டர்கள் பணி புரிந்தன. இந்த டிராக்டர்களின் எதிர்பார்த்த பணி ஆயுட்காலம் முடிவுறும் தருவாயில் இருப்பதாலும், பழுதுபார்த்தல், மற்றும் பராமரித்தல் செலவுகள் அதிகரித்து வருவதாலும் வேலை செய்யும் மொத்த பணி நேரமும் அதனால் வருமானமும் குறைந்து வருகின்றன. 1979–80-ல் தேசிய வளர்ச்சிக் கூட்டுறவு நிறுவனம் வழங்கிய ரூ. 5.5 இலட்சம் கடன் உதவியில் 5 டிராக்டர்களும் மற்றும் விவசாயக் கருவிகளும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மையங்களில் நியாயமான விகிதத்தில் வாடகைக்கு விடுவதற்கு 5 (எம். எப் 1035) டிராக்டர்கள் வாங்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**இயந்திரக் கருவிகள் விவசாயப் பொருட்கள் விநியோகம்—**

சிறு விவசாயிகள் மேம்பாட்டு அமைப்பு, ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் ஏனையத் திட்டங்கள் மூலம் வழங்கும் மானிய உதவியுடன் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் தெளிப்பான்கள் சிறு விவசாய உபகரணங்கள், மாட்டு வண்டிகள் மற்றும் விவசாயத் தேவைப்பொருள்கள் இவ்விணையத்தைச் சார்ந்துள்ள சங்கங்கள்/மையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. 1979–80-ல் சுமார் ரூ. 750 இலட்சம் மதிப்புள்ள உபகரணங்களும், பொருட்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் விவசாயிகள் தங்கள் தானியங்களைச் சேதமின்றி சேமித்து வைக்க ஏதுவாக சேமிப்பு உலோகக் குதிர்கள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்குக் குறிப்பாக சிறு விவசாயிகளுக்கு மானிய உதவியுடன் வழங்கப்பட்டு வருகிறது. 1979–80-ல் ரூ. 9.74 இலட்ச மதிப்பிற்கு 3,002 தானிய சேமிப்புக் குதிர்கள் தயாரிக்கப்பட்டன. 2,834 குதிர்கள் ரூ. 9.12 இலட்சத்திற்கு சிறுவிவசாயிகளுக்கு மானிய உதவியுடன் வழங்கப்பட்டுள்ளன. இதனைச் சேர்த்து 31—3—1980 வரை இத்திட்டத் தொடக்கத்திலிருந்து இச்சங்கங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட தானிய சேமிப்பு உலோகக் குதிர்களின் எண்ணிக்கை 10,891 ஆகும் ; இதன் மதிப்பு ரூ. 36.95 இலட்சம் ஆகும்.

**கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி**

1979–80 ல் டிராக்டர்கள், ஆயில் எஞ்சின்கள், பம்புசெட்டுகள் தெளிப்பான்கள் போன்ற விவசாய இயந்திரக் கருவிகளைப் பராமரித்துப் பழுது பார்க்கும் பணியில் கிராமப்புற இளைஞர்களுக்குப்

பயிற்சியளிக்கத் திட்டமொன்றை இவ்விணையம் வகுத்தது. இதன் மூலம் ரூ. 1.22 இலட்சம் அரசு மானியம் பெற்று 354 கிராம இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**எதிர்காலத் திட்டங்கள்—**

சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலை நம்பி வாழும் பாட்டாளிகளுக்கு மேன்மேலும் நன்முறையில் உதவி புரியும் வண்ணம் தம்மைச் சார்ந்துள்ள சங்கங்கள்/மையங்களின் நிர்வாகப் பணியைச் சீரமைத்து அவைகளின் நடவடிக்கைகளைப் பரவலாக்கவும் வகை செய்யப்பட்டு வருகிறது. 1980–81 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் சில வருமாறு :—

அ) தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்கும் பயிர்க் கடன்கள் மூலம் விவசாயிகளுக்குத் தரமான, மலிவான விவசாயத் தேவைப் பொருட்களை விநியோகம் செய்ய அவ்வங்கிகளுடன் ஒத்துழைப்புப் பெற ஏற்பாடு செய்யப்படும்.

ஆ) விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்குத் தேவையான பெட்ரோலியம் வகைப் பொருட்கள் குறைந்த விலையில் வழங்க டீசல் விற்பனை நிலையங்களைத் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் நிறுவனம் செய்யும் திட்டம் உள்ளது.

இ) மானிய உதவியுடன் விவசாயப் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் விநியோகத்தை அதிகரிக்கவும் திட்டமுள்ளது.

ஈ) கிராமப்புறங்களில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1980–81-ல் 12 மாவட்ட சங்கங்களில், மேலும் 1440, கிராம இளைஞர்களுக்கு டிராக்டர் பராமரிப்பு ஆயில் இஞ்சின்கள், மின் மோட்டார்கள் பழுதுபார்த்தல் இவைகளில் பயிற்சி அளிக்க ரூ.4.32 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டுள்ளது.

உ) 1980-81-ல் 3,600 டீசல் எஞ்சின்கள் மற்றும் மின்சார மோட்டார் பம்பு செட்டுகளையும், மற்றும் 3,000 தெளிப்பான்களையும் விவசாயிகளுக்கு மலிவான விலையில் வழங்க உத்தேசம் உள்ளது.



சார்ந்துள்ள சங்கங்கள் மையங்களை நன்முறையில் நடத்தத் தக்க ஆலோசனை கூறவும், மேற்பார்வையிடவும் மண்டல மேற்பார்வை அலுவலகங்களைப்பல இடங்களில் ஏற்படுத்த உத்தேசம் உள்ளது.

**தமிழ்நாடு அரசுப் பண்ணைக் கழகம்.**

தமிழ்நாடு அரசுப் பண்ணைக் கழகம் 1974 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நிறுவப்பட்டது. மாநிலத்திலுள்ள தரிசு நிலங்களைப் பயிரிடத்தக்க நிலங்களாக மாற்றுவதே இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். இலங்கை அகதிகளைப் பண்ணைகளில் ஈடுபடும்படி செய்து அவர்கட்கு மறுவாழ்வு அளிப்பதும் மற்றும் ஒரு குறிக்கோள் ஆகும்.

ஜுன் திங்கள் 1979 ஆம் ஆண்டுவரை இக்கழகம் 2,183.15 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலங்களைப் பெற்றிருந்தது. இந்தப் பரப்பளவுள்ள நிலங்களில் 1,752 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டன. நடப்பாண்டில் கூடுதலாக 1971.02 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலங்கள் மேம்பாடு செய்யப்படும். மேம்பாடு செய்யப்பட்ட நிலங்களில் தீவிர சாகுபடித் திட்டங்கள் கொண்டு வரப்படும். நடப்பாண்டில் 3,630 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. பயிர்செய்யப்படும் நிலங்களின் தகைதிறம் 210 சதவிகிதத்திற்கு உயர்த்தப்படும்.

நகரத்தில் உருவாகியுள்ள காய்கறிகளின் பற்றாக்குறையைத் தீர்க்க கழகத்தைச் சார்ந்த நெய்வேலி, முரசவாக்கம் (காஞ்சிபுரம்) பண்ணைகளில் காய்கறிகள் பயிரிடும் ஒரு பெரிய திட்டம் நடைமுறையில் கொண்டுவரப்பட்டது. இந்தப் பண்ணைகளில் உற்பத்தியாகும் காய்கறிகள் நெய்வேலியிலும் காஞ்சிபுரத்திலும் மற்றும் சென்னை நகரத்திலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் இன்னும் அதிக அளவில் காய்கறிகளை விளைவித்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

காய்கறி பயிர் வளர்ச்சித் திட்டத்தை மேற்கொண்டதன் பொருட்டு எதிர்காலத்தில் நன்கு பயிர் வளர்ச்சிக்குச் செழுமையான மண்வளம் வளர்ச்சி அடைவதுடன், கழகத்தினுடைய நிதி நிலை வரவிருக்கும் ஆண்டில் திடப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

நம் மாநில உழவர் பெருமக்களின் முன்னேற்றத்திற்காக அவர்களுக்குத் தேவையான சிறந்த பொருத்தமான தொழில் நுணுக்கங்களை உருவாக்க ஆராய்ச்சி, கல்வி விரிவாக்கக் கல்விப் பணிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மேலும் வலிவுபடுத்தி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடர்ந்த முயற்சியுடன் செயல்பட்டு வருகிறது.

### கல்வி

கால்நடை மருத்துவ அறிவியலில் 1979–80 ஆம் ஆண்டில் ஈனியல் துறை, மருந்தியல் துறை ஆகியவற்றில் பி.எச்.டி. படிப்பிற்கான பட்டமேற்படிப்பு வகுப்புகள் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

இத்துடன் கோயம்பத்தூர் தலைமை வளாகத்தில், தாவர நூற்புழுவியலில் எம்.எஸ்.சி. (வேளாண்) கல்விக்கான ஒரு புதிய பாடத் திட்டமும், தோட்டக் கலை, பயிர்ப் பாதுகாப்பு ஆகியவற்றில் நாற்றங்கால் செய்முறைகள் பற்றி இரண்டு குறுகிய கால வகுப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி, மீன்வள அறிவியல் கல்லூரியில் நடைபெற்று வரும் பி.எப்.எஸ்.சி. பட்ட வகுப்பிற்குச் சார்பாக மீன்வள அறிவியல் புலத்தில், மீன்வள உயிரியல், மீன்வளர்ப்பு, மீன்வளத் தொழில் நுணுக்கவியல் ஆகிய மூன்று புதிய துறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கால்நடை மருத்துவ அறிவியலில் 1980–81 ஆம் ஆண்டில் கால்நடை விளைவியல் துறையில் பி. எச். டி. படிப்புக்கு வழி வகுக்கும் வகையில் புதிய பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் பி. எஸ். ஸி. (மனை இயல்) என்ற புதிய பட்டப் படிப்பு 1980–81 ஆம் கல்வி ஆண்டிலிருந்து மதுரை வளாகத்தில் தொடங்கப்படுகிறது



பி. எஸ். ஸி. (பட்டு வளர்ப்பு) என்னும் புதிய பட்ட வகுப்பை நடத்துவதற்குரிய தீர்மானம் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பில் செய்முறைப் பயிற்சி அனுபவம் அளிக்கும் நோக்குடன் ஆறு மாதகால உள்நிலை வகுப்பு தொடங்கப்பட இருக்கிறது. இத்துடன் 1980-81 ஆம் ஆண்டில் +2 கல்வித் திட்ட முறையில் (பொதுக் கல்வி மற்றும் தொழிற் கல்வி) தேவைக்குப் பொருந்தும் வண்ணம், வேளாண் பொறியியல், வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை மருத்துவம் ஆகியவற்றின் பாடத் திட்டங்கள் மறு சீராய்வு செய்யப்பட்டுள்ளன. புதிய திட்ட முறை 1980–81 ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வரும்.

### ஆராய்ச்சி.—

வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியலைச் சேர்ந்த பல்வேறு பிரிவுகளின்கீழ் 1979–80 ஆம் ஆண்டில் 1,200 ஆய்வுத் திட்டங்கள் செயல்முறையில் இருந்தன. 1980-81–ல் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் துறைகளில் 1,950 ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### வேளாண்மை—

தொடர்ந்த ஆராய்ச்சியின் பயனாக பல்வேறு பயிர்வகைகளின் 10 புதிய இரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள வம்பன் என்னுமிடத்தில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் தேசிய பயறுகள் ஆராய்ச்சி மையம் ஒன்றும் 12-9-1979–ல் தொடங்கப்பட்டுள்ளது.

பயறுவகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் பற்றியும், கம்பு பற்றியும், மக்காச்சோளம் பற்றியும், விதை உற்பத்தி பற்றியும் நான்கு புதிய இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத் திட்டங்கள் இவ்வாண்டில் தொடங்கப்பட்டுள்ளன.

பயிர்களின் சீரமைப்புக்குத் தேவையான கூடுதல் முயற்சிகளைக் கருதியும், அதன் முக்கியத்துவத்தைக் கருதியும் 'பயிர் மரபியல்' நிலையம்' அமைக்கப்பட்டுள்ளது, இந்த நிலையம்

பயிர்களின் மேம்பாட்டுக்குரிய ஆராய்ச்சிச் செயல்முறைகளை மறு சீராய்வு செய்து ஒழுங்குப்படுத்தும், புதிய பயிர் இரகங்களை இனப்பெருக்கம் செய்வது தொடர்பான பிரச்சினைக்குரிய பல்நோக்கு அணுகு முறைக்கு இதன் மூலம் உரிய முக்கியத்துவம் தரப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டையில் வேளாண்மை ஆராய்ச்சி மையம் ஒன்று நிறுவ பல்கலைக் கழகம் தீர்மானித்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் இட அமைவுக்கு ஏற்ற ஆராய்ச்சியைச் செய்வதற்காக வடஆற்காடு மாவட்டத்தில் வட்டார ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு முயற்சிகள் தொடங்கப்பட இருக்கின்றன. தமிழ்நாட்டில் உவர் மற்றும் களர் நிலப் பிரச்சினைகள் பற்றி உரிய ஆலோசனைகளையும், எச்சரிக்கைகளையும் வழங்குவதற்கான ஆராய்ச்சிகளைச் செய்ய திருச்சி மாவட்டத்தில் மையம் ஒன்று நிறுவப்படும்.

பழங்கள், பணப்பயிர்கள் மற்றும் தோட்டப் பயிர்கள் ஆகியவற்றின் ஆராய்ச்சிகள் செய்யக் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பல்பயிர் ஆராய்ச்சி நிலையம் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். கிராமப்புறங்களில் நிகழும் சமூகப் பொருளாதார மாற்றங்களை முன்கூட்டி அறிந்து ஆவனச் செய்வதற்குக் கிராமப்புறக் கண்காணிப்பு நிலைங்கள் நிறுவப்படும்.

பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாட்டிற்கான ஒருங்கிணைந்த முறைகள் இதுவரை மேற்கொள்ளப்படாத பகுதிகளில் விரிவுபடுத்தப்படும்.

நெல், சோளம் மற்றும் சிறுதானியங்கள், பயறுவகைகள் எண்ணெய் வித்துக்கள் மற்றும் பழங்கள், காய்கறிகள், பணப்பயிர்கள், மலைத் தோட்டப் பயிர்கள், மலர்கள் ஆகியவை உள்ளிட்ட தோட்டப்பயிர்கள் முதலியவற்றில் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்தி, விளைச்சலைப் பெருக்கப் பொருத்தமான வேளாண் தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**கால்நடை மருத்துவம்—**

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒன்று வீதம், கோழி வளர்ப்பில், ஆராய்ச்சியுடன் கூடிய தேர்வாராய்ச்சி மையங்கள் நிறுவப்படும்.



கோழி வளர்ப்பில் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளைக் கண்டறிவதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் இந்த மையங்கள் செயல்படும். கால்நடைகளைப் பாதிக்கும் குறிப்பிட்ட பிரச்சினைகளைப் பற்றி ஆராயவும், அவற்றிற்குத் தீர்வு காணவும் மூன்று வட்டாரக் கால் நடை மருத்துவம் மற்றும் கால்நடைப் பராமரிப்பு ஆராய்ச்சித் தேர்வு மையங்கள் இவ்வாண்டில் துவங்கப்பட உள்ளன. அவை திருநெல்வேலி, பெரியார், தர்மபுரி மாவட்டங்களில் அமையும்.

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் சத்துணவுப் பிரிவு ஒன்று விரைவில் தொடங்கப்பட்டுச் செயல்பட இருக்கின்றது. தனியார் மற்றும் அரசு நிறுவனங்களால் வழங்கப்படும் கால்நடைத் தீவனத்தின் தரத்தை மதிப்பீடு செய்யத் தீவனத் தரக் கட்டுப்பாடு மற்றும் சேவைப் பிரிவு ஒன்று இவ்வாண்டில் தொடங்கப்பட உள்ளது.

**பொறியியல்**

<u>மலிவு விலை இயற்கை எரிவாயுச் சாதனம்</u> (த. நா. வே. ப. மாதிரி)

உள்ளூரில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே கட்டப்பட்ட சிமெண்ட் கான்கிரிட் அடித்தளத்தின் மீது ஒரு மலிவு விலை இயற்கை எரிவாயுச் சாதனம் நிர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் 50 கிலோ சாணத்திலிருந்து தினந்தோறும் 1,500 லிட்டர் எரிவாயு கிடைக்கிறது. இச்சாதனத்தின் மொத்த விலை ரூ.1,300 மட்டுமே.

பொருத்தமான தொழில் நுணுக்கத்தை உருவாக்குதல், சிறந்த முறையில் தீவனத்தைப் பயன்படுத்துதல், சிறந்த நீர் நிர்வாகம் போன்ற முறைகளிலும் அதிகக் கவனம் செலுத்தப்படும்.

**விரிவாக்கக் கல்வி.**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆய்வுக் கூடத்திலிருந்து—பண்ணைக்கு என்னும் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. கோயமுத்தூர், மதுரை, தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி ஆகிய மாவட்டங்களிலும், பாண்டிச்சேரியிலும் உள்ள 3,000 சிறு உழவர்கள், குறுநில உழவர்கள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்கள் இத்திட்டத்தினால் பயன்

பெறுவர். இவ்வாண்டில் விதை உற்பத்தித் திட்டம், அனுசரணைச் சோதனைகள் அகியவற்றில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கல்லூரி வளாகத்தில் மட்டுமின்றி, திருச்சிராப்பள்ளி, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் அமைந்துள்ள வேளாண் ஆராய்ச்சி மையங்களிலும், கோயமுத்தூர் மற்றும் மதுரை உழவர் பயிற்சி மையங்களிலும் பயிற்சித் திட்டங்கள் அதிகரிக்கப்படும்.

வரவு—செலவு திட்டம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1980-81 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீனவள அறிவியல் ஆகிய தலைப்புகளின் கீழ் 1979-80 ஆம் ஆண்டுக்குரிய வரவு—செலவு மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீடு ஆகியவை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இப்பல்கலைக் கழகம் தனது பணிகளுக்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் மற்றும் பிற தனியார் நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவி பெறுகிறது.



இணைப்பு.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வரவு—செலவுத் திட்டம்.

| | 1979—80 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. திட்டம். | பொது | மொத்தம். | 1979-80 ஆம் ஆண்டிற்கான திருந்தியவரவு—செலவுத் திட்ட மதிப்பீடு. திட்டம். | பொது. | மொத்தம். | 1980-81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. திட்டம். | பொது. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வேளாண்மை | 70.47 | 206.00 | 276.47 | 70.00 | 215.00 | 285.00 | 70.00 | 260.00 | 330.00 |
| கால்நடை | 92.24 | 100.00 | 192.24 | 92.00 | 105.00 | 197.00 | 92.00 | 130.00 | 222.00 |
| மீன்வளம் | 28.00 | .. | 28.00 | 30.00 | .. | 30.00 | 30.00 | .. | 30.00 |

## இணைப்பு II.

[3௨0..ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம்.

### ஆய்வுரை.

தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் 1966-ம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள்:—

1. வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்றவை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.

2. உணவுப் பொருட்களை பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.

இந்நிறுவனத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம் ஆகும். இதில் ரூ. 350 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு, அதற்குரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு ரூ. 185 இலட்சமும், இந்திய அரசு ரூ. 165 இலட்சமும் செலுத்தியுள்ளன.

### 1979—80-ம் ஆண்டின் முக்கிய அம்சங்கள்.

1. உர விற்பனை.

விவசாயத்திற்கு இன்றியமையாததும் பெருமளவு பயன்படுத்தப்படுவதுமான உரத்தின் பெருகிவரும் தேவையை ஈடுசெய்யும் வகையில் உழவர்களுக்கு தங்களுடைய தேவைகளுக்கேற்ப நியாயமான விலையில் தரமுள்ள உரத்தை சோதனை முறையில் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் சென்னையிலுள்ள சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டில் உற்பத்தி செய்யப்படும் உரங்களை விற்பனை செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது. கடந்த மார்ச் 1980 வரை, இக்கழகம் 10,000 மெ. டன் அளவு உரத்தை விற்பனை செய்துள்ளது. மற்றும் 1980—81-ம் ஆண்டிற்கு 45,000 மெ.டன் அளவு உரத்தை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.



2. பூச்சி கொல்லி மருந்துகளுக்கான மூலப் பொருட்களை தயாரித்தல்:.

நமது நாட்டில் உபயோகப்படுத்தப்படும் பூச்சி கொல்லி மருந்துகளில் மொத்த அளவில் தென்னிந்திய மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை சுமார் 50 சதவிகித அளவிற்கு பயன்படுத்துகின்றன. இருந்த போதிலும் தென்னிந்தியாவில், வளர்ந்து வரும் உபயோகத்திற்கேற்ப பூச்சி கொல்லி மருந்துத் தொழில் வளர்ச்சியடையவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு நியாயமான விலையில் விவசாயிகளுக்கு தேவைப்பட்ட சமயத்தில் தேவையான அளவு தரமான பூச்சி கொல்லி மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட் என்ற இந்திய அரசுத் துறை நிறுவனத்தின் உதவியுடன் தென் மாநிலங்களின் வேளாண் தொழில் கழகங்கள் எல்லாம் சேர்ந்து சதர்ன் பெஸ்டிசைட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற புதியதொரு நிறுவனத்தை ஏற்படுத்தியுள்ளன.

தென்னிந்தியாவிலும், மற்றும் தேவைப்பட்ட வேறு எந்தப் பகுதியிலும், பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிலையும் அதன் சார்நிலைத் தொழில்களையும் நீண்டகால ரீதியில் விரிவாக்கும் பொருட்டு இந்த ஐந்து நிறுவனங்கள் தங்களது வாய்ப்பு வளங்களைப் பயன்படுத்துவதே இந்த புதிய நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகிய ரூ. 194.80 இலட்சம் கீழ்க்கண்டவாறு செலுத்தப்படும்:—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| 1. இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட். | 99.35 |
| 2. ஆந்திர மாநில வேளாண் தொழில்கள் கழகம். | 34.45 |
| 3. தமிழ்நாடு மாநில வேளாண் தொழில்கள் கழகம். | 26.00 |
| 4. கர்நாடக மாநில வேளாண் தொழில்கள் கழகம். | 25.00 |
| 5. கேரள மாநில வேளாண் தொழில்கள் கழகம். | 10.00 |
| | 194.80 |

இதனுடைய முதலாவது உற்பத்திப் பிரிவு ஆந்திராவிலுள்ள கோவூர் என்ற இடத்தில் நிறுவப்படும். இந்நிறுவனம் முதலில் பென்சின் ஹெக்ஸாக் குளோரைடு 26 சதவீதம் காமா என்ற மூலப்பொருளைத் தயாரிக்கும். இந்தப் பிரிவு ஆண்டொன்றிற்கு 3,000 மெ.டன் தயாரிப்புத் திறனுடையது. 1981 ஆம் ஆண்டு மத்தியில் இத்தொழிற்சாலை தனது உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனுடைய உற்பத்தி நமது கழகத்திற்குத் தேவையான பி. எச். சி. மூலப் பொருள் கிடைக்க வழி செய்யும்.

### 3. உதிரி பாகங்கள் விற்பனை.

விவசாயிகளின் டிராக்டர்களை முறையாகப் பராமரித்து நல்ல நிலையில் வைத்திருக்கவும் நியாயமான விலையில் தேவைப்பட்ட அளவு தரமுள்ள உதிரி பாகங்களை சீராக வினியோகம் செய்ய வேண்டியதின் அவசியத்தை முன்னிட்டும், இக்கழகம் உள்நாடு மற்றும் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட உதிரி பாகங்களை தேவையான அளவில் இருப்பில் வைத்து அதனுடைய விற்பனை நிலையங்கள் வாயிலாக வினியோகம் செய்கின்றது. இப்பொழுது இக்கழகம் சென்னை, பொன்னேரி, மதுராந்தகம், திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, பண்ருட்டி, மாயூரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 10 இடங்களில் தனது விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது.

1979–80-ம் ஆண்டிற்கான இக்கழகத்தின் உதிரி பாகங்களின் விற்பனை ரூ. 128.42 இலட்சமாகும். இக்கழகம் 1980–81-ம் ஆண்டில் ரூ.175 இலட்சம் மதிப்புள்ள உதிரி பாகங்களை விற்பனை செய்ய உத்தேசித்துள்ளது.

உதிரி பாகங்களின் விற்பனையோடு மட்டுமல்லாமல், இக்கழகம் பல்வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட டிராக்டர்களையும், பவர் டில்லர்களையும் விற்பனை செய்து வருகின்றது.

## II. கடந்தகாலப் பணிகள்.

### தவணை முறை விற்பனைத் திட்டம்.

இக்கழகம், தவணைமுறைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு டிராக்டர்களையும் விசை நீரிறைப்பான்களையும் வினியோகிக்கும் திட்டமொன்றைத் துவக்கியது. தவணை முறைத் திட்டம் செயல்படுத்தப்பட்ட 1968–69-ம் ஆண்டிலிருந்து 1970–71-ம் ஆண்டு வரை இக்கழகம் சுமார் 11,000 விசை நீரிறைப்பான்களையும், மற்றும் 350 டிராக்டர்களையும் ரூ. 350 இலட்சம் முதலீட்டில் விவசாயிகளுக்கு வினியோகித்தது. நிலவள வங்கிகளும் வணிக வங்கிகளும் இத்துறையில் ஈடுபட்டு பொருளுதவி செய்ய முற்பட்டதன் காரணமாக, இக்கழகத்தால் இத்திட்டம் கைவிடப்பட்டது.



## III. நிகழ்காலப் பணிகள்.

### 1. பொறியியற் பணிகள்:

#### (அ) டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர் விற்பனைத்திட்டம்:

1973-ம் ஆண்டு வரை, இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை விற்பனை செய்வதே இக்கழகத்தின் முக்கிய பணியாக இருந்துவந்தது. வெளிநாடுகளிலிருந்து டிராக்டர்களை இறக்குமதி செய்வதை நிறுத்தியவுடன் இக்கழகம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் நான்குவிதமான டிராக்டர்களை வினியோகம் செய்யத் துவங்கியது. 1980-ம் ஆண்டு மார்ச் திங்கள் வரை ரொக்க விற்பனையின் மூலம் ரூ. 581.81 இலட்சம் மதிப்புள்ள 2804 டிராக்டர்களையும், தவணை முறைத் திட்டத்தின்கீழ் 350 டிராக்டர்களையும் விற்பனை செய்துள்ளது. 1979–80-ம் ஆண்டு மட்டும் ரூ. 56.60 இலட்சம் மதிப்புள்ள 99 பவர் டில்லர்களையும், 46 டிராக்டர்களையும் விற்பனை செய்துள்ளது.

#### (ஆ) உதிரி பாகங்கள் விற்பனை:

விவசாயிகளின் டிராக்டர்களுக்கு நியாயமான விலையில் தேவைப்பட்ட அளவு தரமுள்ள உதிரி பாகங்களை, சீராக வினியோகம் செய்யவேண்டியதின் அவசியத்தை உள்ளிட்டும் இக்கழகம் உதிரி பாகங்களை தேவையான அளவில் இருப்பில் வைத்து சென்னை, பண்ருட்டி, பொன்னேரி, மதுராந்தகம், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, மாயூரம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய விற்பனை நிலையங்கள் மூலம் வினியோகம் செய்து வருகின்றது. உதிரி பாகங்களின் தேவை அதிகரிக்குமானால் மேலும் அம்மாதிரியான விற்பனை நிலையங்கள் வருங்காலத்தில் மாநிலம் முழுவதும் திறக்கப்படும். 1980–81-ம் ஆண்டில் ரூ. 175.00 இலட்சம்மதிப்புள்ள உதிரிபாகங்களை விற்பனை திட்டமிடப்பட்டுள்ளது.

#### (இ) டிராக்டர்களை வாடகைக்கு விடும் மற்றும் பழுதுபார்க்கும் கூடங்கள்.

இக்கழகம், டிராக்டர்களை வாடகைக்கு விடும் பணியினை 1971-ம் ஆண்டில் 64 டிராக்டர்களுடனும், 71 பவர் டில்லர்களுடனும் துவங்கியது. மற்ற நிறுவனங்களின் டிராக்டர்களையும் தனிப்பட்டோரின் டிராக்டர்களையும் நியாயமான செலவில் பராமரிக்கும் பணியினை தனது கிளைக்கூடங்கள் வாயிலாக மேற்கொண்டு வருகின்றது. தனியார் நிறுவனங்களின் போட்டியினாலும், ஆண்டில் சில சமயங்களில் மட்டுமே வாய்ப்பு இருப்பதாலும், இப்பணியினால் ஏற்படும் பொருள் இழப்பு தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. இப்பணியினால் பொருள் இழப்பு

ஏற்பட்ட போதிலும், விவசாயிகளுக்கு சேவை செய்யும் பொருட்டு இப்பணி தொடரப்படுகிறது. இப்பொழுது இப்பணியினை சிறிது சிறிதாக நிறுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கட்டுப்படியாகாத 39 டிராக்டர்களையும் 31 பவர் டில்லர்களையும் விற்பனை செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சர்க்கரை ஆலை போன்ற நிறுவனங்களுடன் முன்பே ஏற்பாடுகள் செய்து கொண்டு அத்தகைய வாய்ப்பு இருக்கும் இடங்களில் மட்டும் டிராக்டர்களை வாடகைக்கு விடும் பணி செயல்படுத்தப் பட்டு வருகின்றது.

2. வேலை வாய்ப்பு பெறாத வேளாண்மைப் பொறியியற் பட்டதாரிகளுக்கு வேளாண்மை சேவை நிலையங்களை அமைக்க பயிற்சி அளிக்கும் திட்டம்:

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது பொறியியல் பட்டதாரிகளுக்கும், தகுதிபட்டயம் பெற்றோருக்கும், வேளாண்மைப் பட்டதாரிகள் மற்றும் முன்னாள் ராணுவத்தினர் போன்ற தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், வேலை வாய்ப்பை தோற்றுவிப்பதாகும். மேலும் வேளாண்மைத் துறையில் வாய்ப்புள்ள கிராமப்புறப் பகுதிகளில் ஏற்படும் பணியில் அவர்களை ஈடுபாடு கொள்ளச் செய்ய ஊக்கம் ஊட்டுவதும் இத்திட்டத்தின் மற்றொரு நோக்கமாகும்.

இந்திய அரசு 1972-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் தேதியிலிருந்து இத்திட்டத்தை துவங்கி பணவுதவி அளித்து வருகின்றது. இதுவரை, 297 நபர்களுக்கு இக்கழகம் இத்திட்டத்தின்கீழ் பயிற்சி அளித்துள்ளது. அதில் 211 பயிற்சியாளர்கள் மாநிலத்திலுள்ள பல்வேறு கிராமப்புறப் பகுதிகளில் வேளாண்மைச் சேவை நிலையங்களைத் துவக்கியுள்ளனர்.

1979-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில், மத்திய அரசு இத்திட்டத்தை மாநில அரசின் பொறுப்பில் விடுவதாகவும், 1979–80 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தினால் ஏற்படும் செலவினங்களை மாநில அரசே மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவித்துள்ளது.

3. பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் திட்டம்;

1972-ம் ஆண்டு இக்கழகம் பிரசித்திபெற்ற பூச்சிக் கொல்லி மருந்துகளில் முக்கியமான பி.எச்.சி. 10% மற்றும் எண்ட்ரின் 20% இ.சி. போன்றவைகளை தயாரிக்க ஆரம்பித்தது. ஆரம்பத்தில்



இந்நிறுவனம் பூச்சிக்கொல்லி மருந்துகளை தனியார் நிறுவனங்களின் உதவியால் தயாரித்து வந்தது. ஆனால் இப்பொழுது இந்நிறுவனம் தனது சொந்தத்தில் ரூ. 9.79 இலட்சம் முதலீட்டில் அம்பத்தூரில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த தொழிற்சாலை தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியை 1976-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் ஆரம்பித்தது. பெருகி வரும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தேவையை ஈடுகட்ட ரூ. 4 இலட்சம் செலவில் தனது இரண்டாவது ஆலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கழகத்தினால், இந்திய தர நிர்ணயக் கழகத்தின் விதிமுறைகளுக்குட்பட்ட தரம் உயர்ந்த பூச்சிக் கொல்லி மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு, இக்கழகத்தின் கிளை நிலையங்கள் மூலமும் வேளாண்மைத் துறை இயக்குநரின் விற்பனைக் கூடங்கள் மூலமாகவும் வினியோகிக்கப்படுகின்றன.

1978–79 ஆண்டிலும் 1979–80 ஆண்டிலும் விற்பனை செய்யப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1978–79 | | 1979–80 | |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| | அளவு | மதிப்பு | அளவு | மதிப்பு |
| 1. மருந்து பொடி தயாரிப்பு. | 4081 மெ.டன் | 35.50 | 2005 மெ.டன் | 19.59 |
| 2, மருந்து திரவ தயாரிப்பு. | 11910 லிட்டர் | 3.08 | £9323 லிட்டர் | 11.40 |

980–81-ம் ஆண்டில் 9,000 மெ.டன் பொடி மருந்துகளையும் 2000 லிட்டர் திரவ மருந்துகளையும் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய பூச்சிக் கொல்லி மருந்து கழகத்தின் பதிவுச் சான்றிதழ் கிடைத்தவுடன் பி. எச். சி. 50% W.D.P. டி.டி.டி. 50% W.D.P டி. டி. டி. 25% ஈ.சி. மேலும எண்டோசல்பான் 35 ஈ. சி. போன்றவற்றை 1980–8 ம் ஆண்டில் தயாரிக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

மேற்கூறியவற்றுடன் இக்கழகம் ஐதிராபாத்தில் அமைந்துள்ள இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட்டின் தயாரிப்புகளான எண்டோசல்பான் பி.எச்.சி. 50% W. D. P., டி. டி. டி. 50% மேலும் டி.டிடி. 25% போன்றவைகளை விற்பனை செய்து

வருகின்றது. அந்த நிறுவனத்தின் தயாரிப்புகள் ரூ. 20,62 இலட்சம் மதிப்பிற்கு 1978–79-ம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டது. 1979–80-ம் ஆண்டில் ரூ. 3.17 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

4. மீன்பிடி வலைத் தயாரிப்புத் திட்டம்:

மீன் பிடித்தலை நவீனமாக்கும் முயற்சியில் இயந்திரங்களின் மூலம் தயாரிக்கப்பட்ட வலைகளின் தேவையை ஈடுகட்டும் பொறுப்பை இக்கழகம் மேற்கொண்டுள்ளது. இதற்காக இக்கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலை, உறுதிவாய்ந்த நைலான் நூலினாலும். பாலி எதிலின் நூலினாலும் ஆண்டொன்றிற்கு 60 மெ.டன் மீன்பிடி வலைகளைத தயாரிக்கும் திறன் வாய்ந்தது.

மீன் பிடிவலைகளைத் தயாரிக்கும் நான்கு இயந்திரங்களைக் கொண்ட இத்தொழிற்சாலை 1976-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் துவக்கப்பட்டது. இத்தொழிற்சாலையின் உற்பத்தித்திறனாகிய 50 மெ. டன்னிலிருந்து 60 மெ. டன்னாக உயர்த்தும் பொருட்டு) 1978–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் மற்றொரு இயந்திரமும் வாங்கப்பட்டது. இந்த கழகத்தினால் தயாரிக்கப்பட்ட மீன்பிடி வலைகள் அதனுடைய தரத்தாலும், விலையாலும் விற்பனையில் அதிக மதிப்பைப் பெற்றுள்ளன. மிக நுண்ணிய நைலான் வலையிலிருந்து மிகக் கெட்டியான நூல்களைக் கொண்ட மீன்பிடி வலைகள் வரை இங்கு தயாரிக்கப்படுகின்றன.

மேற்கூறியவற்றுடன் இக்கழகம் மீன்பிடி படகுகளுக்கு ஏற்பவும் மீன்பிடி வலைஞர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறும் வலைகளை தயாரித்து விற்பனை செய்வதிலும் முன்னோடியாக உள்ளது இந்தியாவில் மீன்பிடி தொழிலில் தேவைகளை ஈடுகட்டுவதில் இக்கழகம் நன்மதிப்பை பெற்றுள்ளது.

மீன்பிடி வலைகளின் உற்பத்தி ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருகிறது. இக்கழகம் 1976–77–ம் ஆண்டில் 6.5 மெ. டன்னும் 1977-78ம் ஆண்டில் 18.5 மெ. டன்னும் மற்றும் 1978–79ம் ஆண்டில் 19 மெ. டன் அளவுள்ள மீன்பிடி வலைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு வகையான 59 தயார் நிலை மீன்பிடி வலைகளையும் உருவாக்கியது.



இதனுடைய உற்பத்தி விபரங்கள் :

| விபரம். | 1976–77 | 1977–78 | 1978–79 | 1979–80 |
| --- | --- | --- | --- | --- |
| | | (புள்ளிகள் மெ. டன்னில்) | | |
| 1. நைலான மீன்பிடி வலைகள். | 4.4 | 12.00 | 11.5 | 6.99 |
| 2. பாலி எதிலின் வலைகள். | 2.1 | 6.5 | 7.5 | 9.5 |
| 3. தயார்நிலைமீன்பிடி வலைகள் (எண்ணிக்கையில்). | — | 24 | 35 | 25 |
| 4. மொத்த விற்பனை (ரூபாய் இலட்சத்தில்). | 6.97 | 18.68 | 22.11 | 18.55 |
| 5. மொத்த லாபம்.. | 3.07 | 7.84 | 10.16 | 6.10 |
| 6. நிகர லாபம்.. | (–)0.55 | (+)3.36 | (+)2.09 | (+)1.39 |

5. இலைபுரத மாவு திட்டம் :

இக்கழகம் இலைபுரத மாவு தயாரிக்கும் தொழிற்சாலையை உடுமலைப்பேட்டையில் நிறுவியுள்ளது. இலைபுரத மாவு லுசரின் என்ற புல் வகையின் மூலம் தயாரிக்கப்படுகின்றது. கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் தேவையான முக்கிய உணவாக இது தயாரிக்கப்படுகின்றது. இது இங்கு நல்ல முறையில் விற்பனை செய்யப்படுகின்றது. கடந்த 1978-79–ம் மற்றும் 1979-80–ம் ஆண்டில் முறையே ரூ. 1.45 இலட்சம் மற்றும் ரூ. 2.37 இலட்சம் அளவிற்கு இலைபுரத மாவு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1980–81ம் ஆண்டில் ரூ. 4.16 இலட்சம் மதிப்புள்ள 450 மெ. டன் அளவு இலைபுரத மாவு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

6. உர வினியோகம்:

இக்கழகம் எந்தெந்த புதிய வகைகளில் விவசாயிகளுக்குச் சேவை செய்ய இயலும் என ஆராயும் பொழுது பூச்சி கொல்லி மருந்து தயாரித்து விற்பனை செய்வதை முதலாவதாக மேற்கொண்டது. அடுத்ததாக விவசாயிகளின் முக்கியத் தேவையான உரத்தை வழங்கும் பணியில் முற்பட்டுள்ளது.

ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இக்கழகத்தின் விற்பனைக் கூடங்களின் மூலமாக புகழ்பெற்ற பல்வேறு நிறுவனங்களின் உர விநியோக உரிமை பெற்று உரங்களை விநியோகம் செய்ய ஆரம்பித்துள்ளது. 1979 ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் மெசர்ஸ் சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட உரத்தை சுமார் 10,000 மெ. டன் அளவிற்கு 1979-80-ம் ஆண்டில் விநியோகம் செய்துள்ளது. இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட உரத்தின் மதிப்பு ரூ. 143.23 இலட்சம் ஆகும். 1980-81-ம் ஆண்டில் 45,000 மெ. டன் அளவு உரத்தை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 7. எண்ணெய்ப் பிழிந்தெடுக்குப் திட்டம், போச்சப்பள்ளி :

இக்கழகம் சூரியகாந்தி வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காக எண்ணெய் சம்பந்தப்பட்ட எல்லா தொழில்களையும் மேற்கொள்ளக்கூடிய முழுமையான தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இது தொழிற் துறையில் பிற்பட்ட மாவட்டமாகிய தர்மபுரி மாவட்டத்திலுள்ள போச்சம்பள்ளி என்ற ஊரில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் வியாபார மூலதனம் ரூ. 56.00 இலட்சம் ஆகும். இத்தொழிற்சாலை நாளொன்றிற்கு 50 மெ. டன் அளவு எண்ணெய் வித்துக்களைப் பிழிந்தெடுக்கவும், 20 மெ. டன் எண்ணெய்யைச் சுத்திகரிக்கவும், 50 மெ. டன் பிண்ணாக்கைக் கரைத்து எண்ணெய் எடுக்கவும் திறன் கொண்டது. 1978ம் ஆண்டு, செப்டம்பர் திங்களிலிருந்து இத்தொழிற்சாலை தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியை துவங்கியது.

தேவையான சூரியகாந்தி வித்துக்கள் கிடைக்கும் என்று தெரிவித்த புள்ளி விவரத்தின் அடிப்படையில் இத்தொழிற்சாலை துவக்கப்பட்டது. ஆனால் இக்கழகம் தனக்குத் தேவையான சூரியகாந்தி எண்ணெய் வித்துக்களை, தமிழ்நாடு முழுவதிலுமிருந்து கொள்முதல் செய்ய முற்பட்ட போது இத்தொழிற்சாலையின் உற்பத்தித் திறனில் 10 சதவிகித அளவிற்குக்கூட எண்ணெய் வித்துக்கள் கிடைக்கவில்லை. ஆதலால், வணிக நிலவரங்கள் தனக்குச் சாதகமாக இருக்கும் பொழுதெல்லாம், இக்கழகம் கடலை எண்ணெய்யை சுத்திகரிக்கும் பணியினை மேற்கொண்டும், கடலை பிண்ணாக்கிலிருந்து கரைத்து எண்ணெய் எடுக்கவும், இத்தொழிற்சாலையை இயக்கி வருகின்றது. இத்தொழிற்சாலையைக் கொண்டு பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய்யைப் பிழிந்தெடுக்க முடியுமா என்பதையும் இக்கழகம் ஆராய்ந்து வருகின்றது. அதற்கு சில உபகரணங்கள் கூடுதலாகத் தேவைப்படுகின்றன.



இவ்வாலை 1978–79 ம் ஆண்டில் 475 மெ. டன் அளவுள்ள சூரியகாந்தி வித்துக்கள் பிழிந்தெடுத்ததற்கு மாறாக 1979-80 ம் ஆண்டில் 1100 மெ. டன் அளவுள்ள வித்துக்களைப் பிழிந்தெடுத்தது. 1978–79 ம் ஆண்டில் 850 மெ. டன் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கப்பட்டு 275 மெ. டன் எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாறாக 1979–80ம் ஆண்டில் முறையே 1200 மெ. டன் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டு 1050 மெ. டன் எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டுள்ளது.

## 8.(கரைத்து) எண்ணெய்யை எடுக்கும் தொழிற்சாலை, நாமக்கல்:

இக்கழகம், செக்குப் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட பொருட்களை தயாரித்து விற்பனை செய்யும் கூட்டுறவுத்துறை இணையகம், நாமக்கல் என்ற நிறுவனத்திடமிருந்து எண்ணெய் கரைத்தெடுக்கும் தொழிற்கூடம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இத்தொழிற்சாலையின் மூலதனம் ரூ. 21 இலட்சம் ஆகும். இத்தொழிற்சாலை நாளொன்றிற்கு 15 மெ. டன் அளவுள்ள அரிசித் தவிட்டிலிருந்தும், அல்லது 25 மெ. டன் அளவுள்ள எண்ணெய்ப் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய்யைக் கரைத்தெடுக்கும் திறன் கொண்டது.

எனினும் இத்தொழிற்சாலையின் கொதிகலன் தொடர்ந்து சரியாக இயங்காத காரணத்தால், இக்கழகம், 1978–79ம் ஆண்டில் 1,575 மெ. டன் அளவுள்ள எண்ணெய்ப் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய்யை கரைத்து எடுத்தபோதிலும் 1979–80-ம் ஆண்டில் சுமார் 175 மெ. டன் அளவுள்ள எண்ணெய்ப் பிண்ணாக்கு மட்டுமே கரைத்து எடுக்க முடிந்தது.

சென்ற ஆண்டு முழுவதிலும் எண்ணெய் எடுக்க உதவும் பிண்ணாக்கின் விலை அதிகமாக இருந்த காரணத்தால், கரைத்து பிரித்தெடுக்கும் தொழில் நமது செலவுகளை ஈடுகட்டும் அளவில் லாபகரமாக இல்லை. இந்த நிலைமையால் இத்தொழிற்கூடம் தொடர்ந்து இயங்கவில்லை.

ஆதலால் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் கரைத்தெடுப்பதைப்பற்றி ஆராய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அரிசித்தவிடு கிடைப்பது ஒரு பிரச்சனையாக இருக்கிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து அரிசித் தவிட்டைப் பெறுவது ஒன்றே இதற்கு வழியாகும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசித் தவிட்டை ஒப்புக்கொள்ளப்பட்ட விலைக்கு தருவதென்றும், அதற்குப் பதிலாக வேளாண் தொழில்கள் கழகம் ஒப்புக்கொள்ளப்பட்ட விலைக்கு

அவற்றிலிருந்து எண்ணெய்யைக் கரைத்து எடுக்கவும் அதில் வரும் லாபத்தை இரு நிறுவனங்களும் ஒப்புக்கொள்ளப்பட்ட விகிதத்தில் பிரித்துக் கொள்ளவும், இந்த இரு நிறுவனங்களுக் கிடையே உடன்படிக்கை ஒன்று உருவாகி வருகின்றது. இந்த உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் இத்தொழிற்கூடம் தனது முழு உற்பத்தித் திறனுடன் வேலை செய்யும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

## IV. வருங்காலப் பணிகள் :

நடைமுறையில் இருந்துவரும் திட்டங்களை ஒருங்குமுனைப் படுத்திக் கொண்டே இக்கழகம் வருங்காலத்தில் இனி. செயல் படுத்தப்பட வேண்டிய திட்டங்களையும் பரிசீலனை செய்து வருகின்றது. கீழ்க்காணும் திட்டங்கள் பல்வேறு வகையான செயலாக்க நிலைகளிலும் மற்றும் பரிசீலனையிலும் உள்ளன.

### 1. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள புணக்குளத்திலிருக்கும் தாவர எண்ணெய் தொழிற் தொகுதி :

இக்கழகம், காதி மற்றும் கிராமப்புறத் தொழில்கள் வாரியத் தினரால் பட்டுக்கோட்டையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருந்த எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்கூடத்தை ஏற்றுக் கொண்டது. தொழிற்கூடம் அமையவிருக்கும் இடத்தினருகிலேயே மூலப்பொருள் கிடைக்கும் வாய்ப்பினைக் கருதியும் பிற்பட்ட மாவட்டங்களுக்கு அளிக்கப்படும் அரசு சலுகையைப் பெற வேண்டியும் இக்கழகம் இத்தொழிற்கூடம் நிறுவ வேண்டிய இடத்தை தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டையி லிருந்து புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள புணக்குளம் என்ற இடத்திற்கு மாற்றியுள்ளது. இத்தொழிற்கூடம் நாளொன்றுக்கு 60 மெ. டன் பிண்ணாக்கிலிருந்து அல்லது 30 மெ. டன் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் திறன் கொண்டது. இயந் திரங்களை நிறுவும் பணியும் கட்டுமான பணியும் நடந்தேறி வருகின்றன. இத்தொழிற்கூடம் 1980 ம் ஆண்டு டிசம்பர் திங்களில் தனது உற்பத்தியைத் துவக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.



### 2. பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கான மூலப் பொருள் தயாரிக்கும் திட்டம் :

முதலில் கூறியபடி, இக்கழகம், பென்சின் ஹெக்ஸாக்குளோரைடு 26 % காமா ஐஸோமர் என்ற மூலப்பொருளை தயாரிக்கும் கூட்டு முயற்சி ஒன்றில் ஈடுபட்டுள்ளது. மெஸர்ஸ் இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட் என்ற இந்திய அரசுத் துறை நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து இத்திட்டத்தை தொடங்கும் பணியில் தென்மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், ஆந்திரம் ஆகியவை ஈடுபட்டுள்ளன. ஆந்திராவிலுள்ள கோவூர் என்ற இடத்தில் இது அமையப்பெறும். இத்தொழிற்சாலை 1981 ம் ஆண்டு மத்தியில் தனது உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3. பழங்கள் பதப்படுத்தும் ஆலை :

தக்காளி, மாம்பழம் மற்றும் அன்னாசி ஆகியவற்றைப் பக்குவப்படுத்துவதற்காக, பழங்கள் பதப்படுத்தும் தொழிற் சாலை ஒன்றை மதுரை மாவட்டத்தில் நிறுவ உத்தேசிக்கப் பட்டுள்ளது. தக்காளிச் சாறு, தக்காளி குழம்பு, மாம்பழக்கூழ், மாம்பழச்சாறு, மாம்பழத்துண்டுகள், அன்னாசிப் பழச்சாறு, அன்னாசிப்பழத் துண்டுகள் முதலியவை தயாரிக்கப்படும். இப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் வாய்ப்பினைப் பெற்றுள்ளன. தேசிய வர்த்தக கழகத்துடன் (State Trading Corporation) கூட்டு முயற்சியில் இத்தொழிற்சாலையை அமைக்கும் வாய்ப்புகள் பற்றிப் பரிசீலனை செய்யப்படுகின்றது.

### 4. ஆலோசனைப் பிரிவு :

இந்த நிறுவனத்தின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு பெற்ற முதுநிலை அலுவலர்களுக்கு அத்திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்தவே தங்களுடைய நேரத்தை செல விட முடிகின்றது என்றும் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களை சரியான முறையில் செயல்படுத்தவும், புதிய திட்டங்களை உருவாக்க வேண்டிய போதிய கால அவகாசம் கிடைக்கவில்லை என்றும் அனுபவ ரீதியாக இந்த நிறுவனம் உணர்ந்துள்ளது. மேலும் பல்வேறு வேளாண்மைத் தொழில்களைப் பற்றிய விவரங் களை வேளாண் தொழில் முனைவர்கள் இக்கழகத்தின் மூலம் அறிய முற்பட்டனர். இத்தகைய தேவைகளை ஈடுசெய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் புதிய திட்டங்களைச் செயல் படுத்தவும் மற்றவர்களுக்கு நல்ல ஆலோசனைகளைத் தெரிவிக்க

வும் முதுநிலை அலுவலர்களைக் கொண்ட ஆலோசனைப் பிரிவு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று உரைக்கப் பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு ஆலோசனைப் பிரிவு ஒன்று துவக்கப் பட்டுள்ளது.

1. கூடுதல் வேளாண்மை இயக்குநர்............ 1

2. தொழிற்துறையின் முதுநிலை அலுவலர்...... 1

3. இந்திய தொழில் நுட்பக்கழகம்

அல்லது இந்திய நிர்வாகக் கழகத்திலிருந்து 1

தேவையான அளவு எழுத்தர்களுடன் கூடுதல் வேளாண்மை இயக்குநர் தற்போது பொறுப்பேற்று நடத்துகின்றார். மற்ற இரண்டு அலுவலர்கள் விரைவில் இந்த ஆலோசனைப் பிரிவில் சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த ஆலோசனைப் பிரிவு அதன் செயலாக்கத்திற்குத் தேவையான அளவிற்கே அதன் அலுவலர்களைக் கொண்டு தனது பணியினைத் துவக்கியுள்ளது.

5. இலை புரத மாவு உணவுப் பொருள் தயாரிக்கும் திட்டம்:

பல சுய தொழில் தொடங்குவோர், பொள்ளாச்சி, பழனி, கோவில்பட்டி, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் இத்திட்டத்தை துவக்க முன்வந்துள்ளனர். தேவையான ஆலோசனைகளும் உதவிகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.



## இணைப்பு III.

[320ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க]

### தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகம்.

தமிழ்நாட்டில் பெரிய அளவில் பயிரிடத்தக்க தரிசு நிலங்களைத் தேர்ந்தெடுத்து அவைகளை இலாபகரமாக பயிர் செய்வதற்கு கொண்டு வரும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகம் டிசம்பர் திங்கள் 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகம் 5-12-74-ல் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பொதுத்துறை நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடி ஆகும். மாநிலத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களில் பயிர் இடத்தக்க தரிசு நிலங்களை தேர்ந்தெடுத்து பண்ணைகளை அமைத்து, அதன் மூலம் உணவுப்பயிர் மற்றும் வணிகப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கும் குறிக்கோள மட்டுமன்றி இந்நிறுவனம் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளைத் தனது பண்ணைகளில் வேலை வாய்ப்பினை அளித்து குடி அமர்த்தும் மற்றும் ஒரு சமூகநல திட்டத்தையும் உருவாக்கியுள்ளது. இக்கழகத்திற்கு 1,300 இலங்கை அகதி குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் குறிக்கோள் அளிக்கப்பட்டுள்ளது. அக்குறிக்காளை சான்று இக்கழகம் தற்போது வரை 1,043 இலங்கை அகதி குடும்பங்கட்கு மறுவாழ்வு அளித்துள்ளது. இம்மறுவாழ்வு அளிக்கப்பட்ட குடும்பங்களில் 252 குடும்பங்கள் தங்களுடைய விருப்பத் துணிவாற்றலால் பண்ணைகளிலிருந்து தாமாக விலகி விட்டனர் விலகிய 252 குடும்பங்களையும் கணக்கில் கொண்டு 1980-81-ஆம் ஆண்டில் மறுவாழ்வு அளிக்க வேண்டியக் குடும்பங்களின் எண்ணிக்கையின் குறிக்கோள் 509 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இக்கழகம் நிறுவனம் செய்யப்பட்டுள்ள பெரிய அளவுள்ள பண்ணைகளில் இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதோடுமல்லாமல் அதிக அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

2. கழகம் தனது பணிகளை 1975-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி உள்ளது. இப்பண்ணைக் கழகத் திட்டங்களுக்குத் தேவையான தகுதியுள்ள நிலங்களை கண்டு பிடிக்கும் ஆரம்பப் பணியும், நிலத்தடி நீர் வசதி பற்றிய ஆய்வுகளும் உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட்டது, இப்பணிகளை ஒட்டி இந்நிலங்களை பண்படுத்துதல், நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்துதல் ஆகிய மேம்பாட்டுப் பணிகளை செய்து அந்நிலங்களில் பயிர் விளைச்சல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஜூன் திங்கள் 1.79-ஆம் ஆண்டு வரை இக்கழகம் 2,183,15 ஹெக்டர் பரப்பளவுள்ள நிலங்களைப் பெற்றிருந்தது. இந்தப் பரப்பளவுள்ள

நிலங்களில 1,752 ஹெக்டர் பரப்பளவுள்ள நிலங்கள் பயன்படுத்தப்பட்டு சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டன. கூடுதலாக 1971.02 ஹெக்டர் பரப்பளவுள்ள நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலங்களும் மேம்பாடு செய்யப்படும் மேம்பாடு செய்யப்பட்ட எல்லா நிலங்களும் தீவிர சாகுபடி திட்டங்கள் கீழ் கொண்டு வரப்படும். 3,630 ஹெக்டர் பரப்பளவுள்ள நிலங்கள் சாகுபடிக்கு கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது பயிர் செய்யப்படும் நிலங்களின் தகைத்திறம் 210 சதவிகிதத்திற்கு உயர்த்தப்படும். கழகம் பல்வேறு மாவட்டத்தில் நிறுவனம் செய்யப்பட்டுள்ள பண்ணைகளின் விவரம், நிலங்களின் வகுப்பு முறை பண்படுத்தப்பட்ட நிலங்கள் ஆகிய விபரங்கள் இணைப்பு 1-இல் அளிக்கப்பட்டுள்ளன. பண்படுத்தப்பட்ட நிலங்களை பயன்படுத்துதல். விளைவிக்கப் பெற்ற பயிர்கள் ஆகிய விபரங்கள் இணைப்பு 2-இல் அளிக்கப்பட்டுள்ளன.

3. முசரவாக்கம் திட்டம் நீங்கலாக கழகத்தின் எல்லா திட்டங்களும் வணிக வங்கிகளிடமிருந்து நிதி உதவிப் பெற்று நடத்தப்பட்டு வருகின்றன. வேளாண்மறுநிதி மற்றும் அபிவிருத்திக் கழகம், பம்பாய் இவ்வணிக வங்கிகளுக்கு மறுநிதி உதவி அளிக்கும் வேளாண் மறுநிதி மற்றும் அபிவ்'ருத்திக் கழகத்தின் விதிகள் கட்டுப்பாடுகளின் படி தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகம் கடன் சமபங்கு விகிதம் 1:4 ஆக நிறைவுப்படுத்த வேண்டும். இக்கருத்தை ஒட்டி மாநில அரசு ரூ. 102.96 இலட்சம் பங்களிப்பு மூலதனமாக (மத்திய அரசு மறுவாழ்வு அமைச்சகம் இலங்கை அகதிகட்கு மறுவாழ்வு அளிப்பதற்காக அளிக்கப்பட்டுள்ள ரூ. 77.96 இலட்சம் உட்பட) அளித்துள்ளது. முசரவாக்கம் பண்ணை, அகதிகள் கூட்டுறவு மற்றும் மேம்பாடு வங்கியின் நிதி உதவி பெற்று நடத்தப்பட்டு வருகிறது. வங்கிகளிலிருந்தும் மற்ற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களிலிருந்தும் பெற்ற கடன்களுக்கு அரசு உத்திரவாதம் கொடுத்துள்ளது.

4. இப்பண்ணை கழகத்தின் நிதி நிலைமை (அதாவது) பங்கு அளிப்பு மூலதனம், கழகத்தில் வைக்கப்பட்டுள்ள மற்றும் முதலீடுகள், வங்கிக் கடன்கள் பயிர்ச் செலவுகள், வங்கிக் கடன் திருப்பி அளித்தல் ஆகிய விபரங்கள் இணைப்பு 3—இல் கொடுக்கப்பட்டுள்ளன. கழகத்தின் இலாப நட்டக் கணக்கு இணைப்பு 4—ல் கொடுக்கப்பட்டுள்ளது.



5. இக்கழகம் தனது ஆரம்ப கால முதலே நட்டத்திலேயே நடந்து வருகிறது. அதற்கான முக்கிய காரணங்களில் சில பின் வருமாறு :

(அ) பல ஆண்டுகளாக தரிசாகக் கிடந்த நிலங்களை சீர் திருத்தி மற்றும் நில அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு இப்போதுதான் முதன் முதலாக பயிரிடுவதற்கு தகுதியாகக் கொண்டு வந்ததால், இக் கன்னி நிலங்களில் ஒப்பிடக்கூடிய அளவுக்கு அதிக மகசூலைப் பெற முடியவில்லை. இந்த நிலங்கள் நல்ல விளைச்சல் தரும் நிலையை அடைய சில ஆண்டுகள் பிடிக்கும்,

(ஆ) கழகப் பண்ணைகளில் இலங்கை அகதி தொழிலாளிகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். இவர்கள் தோட்டப்பணிகளில் தொழிலாளர்களாக பணிபுரிந்து வந்தவர்கள் ஆகையால் இவர்களை நெல், மக்காச்சோளம், கேழ்வரகு, பயறு, காய்கறி ஆகியப் பயிர் விளைச்சல் செலவிற்கேற்ற சரியான வகைமுறை நுண்ணறிவுக்கேற்ற பணிகளிலும் செம்மையான நீர்ப் பாசன தனிச் செய்முறைத் திறத்திலும் பயிற்சி அளக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

(இ) தானியங்களின் தேக்கம் அதனால் ஏற்பட்ட பொது விலைச் சரிவும் மற்றும்

(ஈ) முதலீடுகளுக்கு ஆன வட்டிச் செலவுகளும் ஈட்டுறுதிக் கட்டணமும் ஆகும்.

6. கழகத்தின் இக்கட்டான நிதி நிலவரத்திற்கு துணைப் புரியும் பொருட்டும் தேவைக்கு குறைவான வங்கி உதவியை ஈடு செய்யும் பொருட்டும் மாநில அரசு கழகத்திற்கு ரூ. 25 இலட்சம் வழி மற்றும் வருவாய் வகை முன் பணமாக 1979 டிசம்பர் திங்களில் உதவி அளித்துள்ளது. கழகம் வங்கிக்கடன் பெற்று ஆழ்குழாய் கிணறுகள் போடுவதற்கு துளைப்பான் கருவிகள் வாங்கியது. இக்கருவியை பயன்படுத்தி கழகம் போதுமான அளவுக்கு ஆழ்குழாய் கிணறுகளை தனது பண்ணைகளில் அமைத்துள்ளது. இக்கருவிகள் தற்போது உபயோகமற்ற நிலையில் இருப்பதால் அவைகளை விற்பனை செய்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதனால் கழகம் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையும் வட்டித் தொகையும் குறையும். மற்றும் கருவிகளை உபயோகப் படுத்துவதன் மீதான பணியாளர்களின் செலவு மற்றைய இதர கட்டணச் செலவுகள் நடப்பாண்டில் குறைவாகும்.

7. நகரத்தில் உருவாகியுள்ள காய்கறிகளின் பற்றாக் குறையைத் தீர்க்க கழகத்தைச் சார்ந்த நெய்வேலி, முசரவாக்கம் (காஞ்சிபுரம்) பண்ணைகளில் காய்கறிகள் பயிரிடப்படும் ஒரு பெரிய திட்டம் நடைமுறையில் கொண்டு வரப்பட்டது. இப் பண்ணைகளில் உற்பத்தியான காய்றிகள் நெய்வேலி, காஞ்சிபுரம்

மற்றும் சென்னை நகரத்திலும் விற்பனை கூடங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வந்தன. நடப்பாண்டில் (1980-81)-இல் இன்னும் அதிக அளவில் காய்கறிகளை விளைவித்து விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கழகம் மேலும் தனது நிதி நிலையை செம்மையாக்க கீழ்குறிப்பிட்டுள்ள செய்முறைகளை நடைமுறையில் கொண்டுவர கருத்தில் கொண்டுள்ளது:—

(அ) தண்ணீர் அளவு வசதிக்கேற்றாற்போல்] பயிர் திட்டங்களை மாற்றி அமைப்பதும் மற்றும் இயலுமானால் புஞ்சை பயிர்களை இலாபகரமாக செய்தல்.

(ஆ) சிறுதுளி சிதறும் சாதனம் (Snrinkler Irrigation) மற்றும் சொட்டு சொட்டாக (Drip Irrigation) நீர் விழும் சாதனங்களை பயன்படுத்தி நீர்ப்பாசனம் செய்து நஞ்சை பயிர்களை விளைவிக்கும் நிகழ் முறைகளை பயன்படுத்துதல், பண்ணைகளில் உள்ள குட்டை நீரை பயன்படுத்துதல், ஆகிய முறைகளை நடைமுறையில் கொண்டு வந்து நீர்ப்பாசன வசதிகளை செம்மையான முறையில் பயன்படுத்தி பயிர்களை இலாபகரமாக உற்பத்தி செய்வது.

(இ) எல்லைக் கீற்று (Border Strip) நீர்ப்பாசன முறையை நடைமுறையில் கொண்டு வந்து நீர்ப்பாசன வசதியை மேலான முறையில் பயன்படுத்தி அதிக விளைச்சல் பெறும் திட்டத்தை புழக்கத்தில் கொண்டு வரப் பட்டுள்ளது.

(ஈ) பயிரிடும் திட்டத்தில் பயிர் முன்னேற்றம் திட்டமிடப் பட்டு தொழிலாளர் உபயோகத்தை அதிகம் பயன் படுத்தி அதிக இலாபத்தை பெற திட்டமிடப் பட்டுள்ளது. பல ஆண்டு நீடித்துப் பலன் தரும் பழத் தோட்டங்கள், தாவரங்கள் (அதாவது) தென்னை, சவுக்கு (நீர் பற்றாக்குறை இடங்களில்) ஆகியவற்றை திட்டங்கள் கீழ்கொண்டுவரப்பட்டு நிலையான வருமானம் பெறுவதற்கும் அதிக அளவில் தொழிலாளர் களைப் பயன்படுத்துவதற்கும் வகைமுறைகள் ஏற்படுத் தப்படும். இரண்டாம் அம்சமாக நிலையான வருமானத்தைத் தரக்கூடிய அதிகமான அல்லது குறைவான தொழிலியல் அளிப்புக்கு வாழை, கரும்பு மரவள்ளி முதலிய பயிர் திட்டங்களை புழக்கத்தில் கொண்டுவரப்படுதல். மூன்றாவது அம்சமாக குறுகிய காலப் பயிர்கள் நுகர்வதற்காகவும், விதைக் காகவும், மிளகாய், பருத்தி, காய்கறி உற்பத்தி செய்தல் மற்றும் நுகர் பொருள்களாக மக்காச் சோளம், உளுந்து, எள், நிலக்கடலை ஆகிய பயிர்களை உற்பத்தி செய்தல்.



ஆராய்ச்சி, மேம்பாடு திட்டங்கள் கீழ் செயல்முறை பண்ணைகளை நியமனம் செய்து விளைச்சல் தரும் பொருள்களை (செயற்கை உரம், இயற்கை உரம் ஆகியவற்றை) வளர்ச்சி வளங்களுக்கு பெரிதும் துணை நலமான அளவுகளை ஆராய்தல், அந்த ஆராய்ச்சி பலன்களை நடைமுறையில் அதிக அளவில் பயன் படுத்தி செம்மையான பயன்பெறுவதற்கு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்துதல்.

8. காய்கறி வளர்ச்சி திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி மேம் பாடு திட்டங்களை செயல்படுத்துவதால் பண்ணைகளில் மண் வளம் செழுமையாகப் பெருகவரும் காலத்தில் ஒரு நல்ல பயிர் வளர்ச்சிக்கு வழிவகை ஏற்படும். மேலும் கழகத்தின் நிதி நிலை வரவிருக்கும் ஆண்டுகளில் திடப்படுவதோடு மேம்பாடு பெறும் என் எதிர்பார்க்கப்படுகின்றது.

## இணைப்பு

பல்பண்ணைகளின் விபரம் மற்றும் நிலங்களின் வகுப்புமுறை 30—5—80-ல் உள்ளபடி

பண்ணைகளின் விபரம்

| நிலங்களின் வகுப்பு முறை. | நெய்வேலி தென்னூற்காடு. | பூசரவாக்கம் செங்கை மாவட்டம். | காஞூர் செங்கை மாவட்டம். | தியாகராசபுரம் தஞ்சை மாவட்டம். | சக்கரமங்கலம் தஞ்சை மாவட்டம். | செல்லூர் தஞ்சை மாவட்டம். | வெள்ளாள விடுதி புதுக்கோட்டை மாவட்டம். | திராப்பிடுங்கு புதுக்கோட்டை மாவட்டம். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| | (பரப்பளவு ஏக்கரில்.) | | | | | | | | |
| 1. பயிரிடக் கூடியப் பரப்பு (பண்படுத்தபடாமை) | 2,865.14 | 145..0 | 450.04 | 93.69 | 92.37 | 265.11 | 576.67 | 115.72 | 4,704.84 |
| 2. பண்படுத்தப்பட்ட பரப்பு. | 2,849.37 | 145.10 | 87.77 | 193.69 | 92.37 | 265.11 | 576.67 | 115.72 | 4,380.81 |
| 3. பண்படுத்தப்பட வேண்டிய பரப்பு. | 16.77 | .. | 362.27 | .. | .. | .. | .. | .. | 379.04 |
| 4. நிகரப் பயிரிடக் கூடியப் பரப்பு. | 2,849.37 | 145.10 | 87.77 | 193.69 | 92.37 | 265.11 | 576.67 | 115.72 | 4,325.80 |
| 5. தற்போதைய தரிசு நிலங்கள். | 952.79 | 48.25 | 45.55 | 65.60 | 4.23 | 246.28 | 182.12 | 47.80 | 1,592.62 |
| 6. பயிரிடப்பட்ட நிலத்தின் பரப்பு. | 1,895.58 | 9 .85 | 42.22 | 128.09 | 88.14 | 418.83 | 394.55 | 67.92 | 2733.18 |



## இணைப்பு 2.

பண்படுத்தப்பட்ட நிலங்களை பயன்படுத்தல், விளைவிக்கப்பெற்ற பயிர்களின் விபரங்கள்.

(பண்ணைகளின் பெயர்கள்).

| விளைவிக்கப் பெற்ற பயிர்களின் விபரங்கள் (1) | நெய்வேலி. (2) | பூசரவாக்கம். (3) | காஞூர். (4) | தியாகராசபுரம். (5) | சக்கரமங்கலம். (6) | செல்லூர். (7) | வெள்ளாள விடுதி. (8) | திராப்பிடுங்கு. (9) | மொத்தம். (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (பரப்பளவு ஏக்கரில்.) | | | | | | | | |
| பூசணி | 9.41 | .. | .. | .. | .. | .. | .. | .. | 9.41 |
| கீரை வகை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| அவரை | 2.05 | .. | .. | .. | .. | .. | .. | .. | 2.05 |
| மூங்கில் | 4.52 | .. | .. | .. | .. | .. | .. | .. | 4.52 |
| வாழை | 104.44 | 5.95 | .. | .. | .. | .. | 57.74 | .. | 168.13 |
| பாகல் | 15.51 | 3.10 | .. | .. | .. | .. | .. | .. | 18.61 |
| உளுந்து | 14.52 | .. | .. | .. | .. | .. | 41.58 | 33.52 | 89.62 |
| துவரை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| கத்தரி | 26.81 | 5.85 | 9.05 | .. | .. | .. | .. | .. | 41.71 |
| வெண்டை | 20.02 | 1.35 | 11.20 | .. | .. | .. | .. | .. | 32.57 |

இணைப்பு 2—ன் தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முந்திரி | .. | .. | 10.00 | .. | .. | .. | .. | .. | 10.00 |
| சவுக்கு | 19.43 | .. | .. | .. | .. | .. | .. | .. | 19.43 |
| மிளகாய் | 205.03 | 1.10 | 0.75 | .. | .. | .. | 18.60 | .. | 225.48 |
| கொத்தவரை | 17.64 | 1.60 | 2.00 | .. | .. | .. | .. | .. | 21.24 |
| கொத்தமல்லி | .. | .. | .. | .. | .. | .. | 2.66 | .. | 2.66 |
| பருத்தி | 78.19 | .. | .. | 17.00 | 15.08 | 1.83 | 30.56 | 26.00 | 168.66 |
| முட்டைகோஸ் | .. | 1.45 | .. | .. | .. | .. | .. | .. | 1.45 |
| காராமணி | 10.82 | 2.50 | 0.97 | .. | .. | .. | .. | .. | 14.29 |
| பச்சைபயறு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| புல் | 93.50 | .. | .. | .. | .. | .. | .. | .. | 93.50 |
| தட்டைபயறு | 1.01 | .. | .. | .. | .. | .. | .. | .. | 1.01 |
| மக்காசோளம் | 35.95 | .. | .. | .. | .. | .. | .. | .. | 35.95 |
| பழவகை | 32.00 | .. | .. | .. | .. | .. | .. | .. | 32.00 |
| பப்பாளி | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| பரங்கி | 3.12 | .. | .. | .. | .. | .. | .. | .. | 3.12 |
| வெங்காயம் | .. | 0.90 | 2.90 | .. | .. | .. | 5.40 | .. | 9.20 |
| கேழ்வரகு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| பீர்க்கு | 12.30 | 1.20 | 2.00 | .. | .. | .. | 42.32 | .. | 57.82 |
| முள்ளங்கி | 0.50 | 0.50 | 1.85 | .. | .. | .. | .. | .. | 2.85 |
| சூரியகாந்தி | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கரும்பு | 400.28 | 37.50 | .. | 111.09 | 73.06 | 17.00 | 52.50 | 7.40 | 698.92 |
| தக்காளி | 15.55 | 21.25 | .. | .. | .. | .. | .. | .. | 36.80 |
| நெல் | 4.11 | .. | .. | .. | .. | .. | .. | 1.00 | 5.11 |
| மரவள்ளி | 624.19 | .. | .. | .. | .. | .. | 85.80 | .. | 709.99 |
| சேனை | 6.14 | .. | .. | .. | .. | .. | .. | .. | 6.14 |
| பீன்ஸ் | .. | 1.05 | 1.50 | .. | .. | .. | .. | .. | 2.55 |
| சர்க்கரைவள்ளி | 7.54 | .. | .. | .. | .. | .. | .. | .. | 7.54 |
| அவரை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| கீரைகள் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| நிலக்கடலை | 91.20 | 8.15 | .. | .. | .. | .. | 57.30 | .. | 156.65 |
| தர்பூஸ் | 3.00 | 1.50 | .. | .. | .. | .. | .. | .. | 4.50 |
| புடலை | 1.55 | 1.00 | .. | .. | .. | .. | .. | .. | 2.55 |
| நாற்றுக்கால் | | 0.90 | .. | .. | .. | .. | .. | .. | 0.90 |
| தேங்காய் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| செங்கரும்பு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| சேப்பங்கிழங்கு | 12.20 | .. | .. | .. | .. | .. | .. | .. | 12.20 |
| பருப்பு வகைகள் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| பீன்ஸ் | 20.50 | .. | .. | .. | .. | .. | .. | .. | 20.50 |
| சணப்பை | 2.90 | .. | .. | .. | .. | .. | .. | .. | 2.90 |
| சுரக்காய் | 0.65 | .. | .. | .. | .. | .. | .. | .. | 0.65 |
| எலுமிச்சை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| | 1,896.58 | 96.85 | 42.22 | 128.09 | 88.14 | 18.83 | 394.55 | 67.92 | 2.733.18 |

## இணைப்பு 5.

### 5–12–74 முதல் 31–3–80 வரை உபயோகப்படுத்தப்பட்ட பங்கு மூலதனமும் மற்ற வருவாய்கள் விபரத்தின் அட்டவணை.

| வ. எண். | வருவாய் விபரங்கள். | தொகை. | செலவின் விபரங்கள். | உண்மை செலவுகள். | வங்கியின் கடன் வசதி. | தமிழ்நாடு அரசு பண்ணைக் கழகத்தின் பங்கு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| | பங்கு மூலதனம் : | | 1. முதலீட்டுப் பணிகள்: | | | |
| 1. | தமிழக அரசின் பங்கு மூலதனம் | 25.000 | பாரதீய ஸ்டேட் வங்கி | | | |
| 2. | இந்திய மறுவாழ்வு அமைச்சரகத்தின் பங்கு மூலதனம் | 77.960 | அ. நெய்வேலி | 34.384 | 65.740 | 28.644 |
| 3. | அரசின் வழிவகை (வேய்ஸ் அண்டு மீன்ஸ்) முன்பணம் | 25.000 | ஆ. திராப்பிடுங்கி<br>கனரா வங்கி | 5.841 | 4.212 | 1.629 |
| 4. | அரசின் உதவி | 3.250 | துளைபோடும் | | | |
| 5. | வேளாண்மை இயக்குநரின் அலுவலகத்திலிருந்து பெற்றவை | 1.630 | இயந்திர சாதனங்கள்<br>அலகாபாத் வங்கி | 55.025 | 43.072 | 11.947 |
| 6. | கோவில்களிலிருந்து பெற்ற கடன் | 5.000 | காலூர்<br>யுனைடெட் கமர்ஷியல் வங்கி. | 8.668 | 6.229 | 2.439 |
| | | | அ. தியாகராசபுரம் | | | |
| | | | சக்கரமங்கலம் | 5.744 | | |
| | | | ஆ. வெள்ளாளவிடுதி | 17.064 | 14.613 | 8.195 |
| | | | அகதிகள் வங்கி | | | |
| | | | முசரவாக்கம் மற்ற திட்டங்கள் | 5.841 | 4.500 | 1.341 |
| | | | தேர்வாய்கரடிபுத்தூர் | 0.540 | .. | 0.540 |
| | | | ரூபநாரயணநல்லூர் | 0.170 | .. | 0.170 |
| | | | திருநெல்வேலி | 1.910 | .. | 1.910 |
| | | | லாரி | 0.130 | .. | 0.130 |
| | | | | 195.317 | 138.372 | 56.945 |
| | | | 2. பயிர்ச் செலவுகள்: | | | |
| | | | பாரதீய ஸ்டேட் வங்கி | | | |
| | | | நெய்வேலி | 179.307 | 132.688 | 46.619 |
| | | | யுனைடெட் கமர்ஷியல் வங்கி | | | |
| | | | தியாகராசபுரம் | 21.935 | | |
| | | | சக்கரமங்கலம் | | 49.390 | |
| | | | வெள்ளாளவிடுதி | 17.749 | .. | .. |
| | | | காலூர் | 1.125 | .. | 1.125 |
| | | | முசரவாக்கம் | 14.153 | .. | 14.153 |
| | | | திராப்பிடுங்கி | 5.025 | .. | 5.025 |
| | | | திருநெல்வேலி | 0.570 | .. | 0.570 |
| | | | ரூபநாராயணநல்லூர் | 0.093 | .. | 0.093 |
| | | | | 239.957 | 182.078 | 67.585 |

| எண். | வருவாய் விபரங்கள். | தொகை. | செலவின் விபரங்கள். | உண்மை செலவுகள். | வங்கியின் கடன் வசூ. | தமிழ்நாடு அரசு பண்ணைக் கழகத்தின் பங்கு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | 3. கோவில் வருவாயின் செலவினங்கள்: | | | |
| | | | அ. செல்லூர் முதலீட்டு செலவுகள் | 0.575 | .. | 0.575 |
| | | | ஆ. செல்லூர் பயிர்ச் செலவுகள் | 3.878 | .. | 3.878 |
| | | | | 4.453 | | 4.453 |
| 7. | இதர இனங்கள்: | | 4. நிர்வாக சம்பந்தமான செலவினங்கள் : | | | |
| | அ. விற்று முதல் | 143.168 | சம்பளமும் மற்ற செலவினங்களும் | 64.873 | | |
| | ஆ. வட்டி வரவுகள் | 9.330 | செலுத்திய வட்டி | 28.481 | | |
| | இ. சந்தைக்குழுவிடமிருந்து வைப்புத் தொகை | 25.000 | குத்தகை | 8.262 | | |
| | ஈ. குடிநீர் வடிகால் வாரியத் திட்டத்திலிருந்து முன் பணம் | 5.000 | பணியாளர்கட்கு முன்பணம் | 0.923 | | |
| | | | | 102.539 | | |



| எண். | வருவாய் விபரங்கள். | தொகை. | செலவின் விபரங்கள். | |
|---|---|---|---|---|
| 8. | வங்கிக் கடன்கள் : | | 5. திருப்பி செலுத்தப் பட்டது | |
| | அ. நடுக்காலக்கடன் | 138.372 | கனரா வங்கிக்கு திருப்பி செலுத்தப் பட்ட நடுத்தரக் காலக்கடன் .. .. | 7.540 |
| | ஆ. பயிர்க்கடன் | 182.078 | அகதிகள் வங்கிக்கு திருப்பி செலுத்தப் பட்ட நடுத்தரக் காலக்கடன் .. .. | 3.375 |
| | | | பாரதீய ஸ்டேட் வங்கிக்கு திருப்பி செலுத்தப்பட்ட பயிர்க்கடன் .. .. | 48.527 |
| | | | யுனைடெட் கமர்ஷியல் வங்கிக்கு பயிர்க்கடன். | 32.957 |
| | | 640.868 | | 92.399 |
| | | 640.868 | சுருக்கம் 1 | 195.317 |
| | | | 2 | 239.957 |
| | | | 3 | 4.453 |
| | | | 4 | 102.539 |
| | | | 5 | 92.399 |
| | | | இறுதி இருப்பு | 6.203 |
| | மொத்தம் .. | 640.868 | | 640 868 |

## இணைப்பு 4.

### இலாப நட்டக் கணக்கு அட்டவணை.

| ஆண்டு | பயிரிட்ட நிலம் ஹெக்டேரில். | பெறப்பட்ட உற்பத்தியின் மதிப்பு. | நிலத்தில் இருந்த பயிரின் மதிப்பு. | தேய்மானம் | பண நட்டம் | இறுதி நிலைமை (பத்தி 5+6) இலாபம் | இறுதி நிலைமை (பத்தி 5+6) நட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | |
| 1974–76 (5–12–74 முதல் 31–3–76 வரை) | 273.28 | 3.200 | 5.257 | 0.800 | 8.890 | .. | 9.690 |
| 1976–77 (1–4–76 முதல் 30–6–77 வரை) | 481.72 | 25.120 | 11.293 | 9.070 | 16.050 | .. | 25.120 |
| 1977–78 (1–7–77 முதல் 30–6–78 வரை தணிக்கைக்குட்பட்டது) | 1,238,48 | 22.530 | 40.160 | 10.220 | 44.110 | .. | 54.330 |
| 1978–79 (1–7–78 முதல் 30–6–79 வரை தணிக்கைக்குட்பட்டது) | 1,444.09 | 56.108 | 23.167 | 10.500 | 57.921 | .. | 68.421 |
| 1979–80 (1–7–79 முதல் 30–6–80 வரை தணி | | | | | | | 80.867 |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli), Limited, Madras 1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private), Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponnaiamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 5/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Book-sellers, Erode-1.
22 Vela Book Company, No. A Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem -1.
25 Sri Vidya, 63, Teppakulam High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bogchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras.